# லட்சியப்
# பாதை



A/511

# லட்சியப் பாதை

— நவீனம் —

546 A/308

க. நாராயணன்
"தாய்நாடு" ஆசிரியர்
எழுதியது

355

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
தி.க. சண்முகம் நூலகம்

தாய்நாடு பதிப்பகம்
புதுக்கோட்டை

தாய்நாடு வெளியீடு, 4

முதற் பதிப்பு: 1947

உரிமை: ஆசிரியருக்கே

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்.
நூல்வரிசை எண்: 471
நன்கொடை எண்: 471

விலை ரூ. 3/-

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

இதன் ஆசிரியர் எழுதிய
வேறு நூல்கள்:

வாழ்க்கைத் தோணி — நவீனம்

சிற்பியின் சிலை — நாடகம்

கபிலர் — நாடகம்

கொந்தளிப்பு — நாடகம்

இளவரசி — நாடகம்

# சமர்ப்பணம்

வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதலை விரும்பி, மக்கள் பண்பட்டுவராத முப்பது ஆண்டுக்கு முன்பே, உயர்ந்த லட்சியத்தை அமைத்துக்கொண்டு, அதற்காக இன்றுவரை போராடி, அதில் வெற்றியும் பெற்றுவிட்ட

தலைவர்

**வ. ரா. அவர்களுக்கு**

# பதிப்புரை

லட்சியப் பாதையிலே, ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் வாசித்த நான்கு நண்பர்கள் வாழ்க்கையில் இறங்கும் பொழுது சூழ்ப்புற நிலைமைக்கும் மனக்கருத்துக்கும் ஏற்றபடி லட்சியத்தை வகுத்துக் கொள்ளுகின்றனர். கடைசியில் ஒவ்வொருவருடைய லட்சியமும் மற்றவர்களுடைய லட்சியத்திற்கு நேர்மாருன வழியில் செல்லுவதால் ஒருவருக்கொருவர் வாழ்க்கையில் மோதிக் கொள்ளுகின்றனர்.

அவர்கள் பால்ய நண்பர்களாக இருந்தாலும் தங்கள் லட்சியத்திற்காகப் போராடும் பொழுது நண்பர்கள் என்பதை மறந்து ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்த முற்படுகின்றனர். இதைச் சித்தரிப்பதுதான் லட்சியப்பாதை.

இதில் வரும் பாத்திரங்கள் தங்களுடைய அனுபவங்களை நமக்கு முன்னுல் நின்று சொல்லுகிருர்கள். வாசகர்கள்தான் இதற்கு நீதிபதி ஆவார்கள். பாத்திரங்கள் தங்கள் கதைகளைச் சொல்லும் பொழுது அனுதாபத்துடனும், சுவையுடனும், உணர்ச்சியுடனும் கதை செல்லுகிறது.

இந்தக் கருத்தும் இந்த முறையும் தமிழ் நாட்டுக்குப் புதியது. தமிழ் மக்கள் இதை ஆர்வமுடன் வரவேற்று மேலும் பல நூல்களை எழுத ஆசிரியருக்கு ஊக்கமளிக்க வேண்டுகிருேம்.

தாய்நாடு பதிப்பகத்தார்.

# என்னுடைய லட்சியம்

மனிதன் வாழக் கற்றுக்கொண்டால் மட்டும் போதுமா? எதற்காக வாழ்கிறான்? அவனுக்கு வாழ்க்கையில் ஒரு நோக்கம் — லட்சியம் — வேண்டுமல்லவா?

பரந்த உலகில் வாழும் பல்வேறு இனங்களுடைய மக்கள் அனைவருக்கும் சுயேச்சையான பல கருத்துக்கள் உண்டு. இதில் பலருடைய மேல்வாரியான அபிப்பிராயங்கள் ஒன்றுபடும் பொழுது அவர்கள் ஒரு காரியத்தைச் சேர்ந்து செய்கிறார்கள். அப்படிச் சேர்ந்து செய்யும் மக்களுக்கு அடிப்படையான கருத்துக்கள் ஒன்றுபட்டிருக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கருத்துக்கள் உண்டு.

ஒரு மனிதன் தனக்கு அறிவு நிறம்பப் பெற்று சுயேச்சையாக—தன் கருத்துக் கிசைந்தபடி நடக்கும் வரையில் பிறருடைய நோக்கங்களையும்-நடவடிக்கைகளையும் கவனிக்கிறான். அப்படிக் கவனிக்கையில் அவனுக்கு இயற்கையாக எழுந்த கருத்துடன் அவற்றை ஒப்பிட்டு தன் மனதிற்கிசைந்த ஒரு லட்சியத்தைத் தீர்மானிக்கிறான். பிறகு சூழ்நிலை எவ்வளவு மாறினாலும் அவனுடைய லட்சியம் மறைவதில்லை. அதை அடைவதற்கு கடைசி வரை வாழ்க்கையில் போராடுகிறான். உறுதியுள்ள மனிதனாக இருந்தால் அதை அடைந்தே தீருகிறான். இல்லையேல் அந்த லட்சியத்திற்கு தன்னுடைய உயிரையே பணயம் வைக்கிறான்.

மேற் சொன்னபடி லட்சியம் ஒவ்வொருவருக்கும் உண்டு, ஆனால், எல்லோரும் தங்கள் தங்கள் லட்சியத்தை அடைய முடிவதில்லை. காரணம் அவர்களுக்கு அதை அடைய துணையோ,

சுற்றுச் சார்புகளோ, பொருளாதாரமோ இடம் கொடுப்பதில்லை. ஆகவே, அவர்கள் தங்கள் லட்சியத்தை ஒதுக்கிவைத்துவிட்டு வயிறு வளர்ப்பதற்காக அடிமைத் தொழிலில் இறங்கி, தன்னுடைய லட்சியத்திற்கு மாறுபட்ட காரியங்களையும் செய்து விலங்கினும் கேடாக வாழ்கின்றனர். அவர்களைக் குறைசொல்ல முடியாது. அவர்களுக்கு நல்ல லட்சியங்கள் இருந்தாலும், நாடும், சூழ்ப்புற நிலையும் அவர்களுக்கு எதிராக நிற்கையில் என்ன செய்வது?

சிலர் முயற்சியின் காரணமாக, விடாப்பிடியின் காரணமாக, சூழ்ப்புறக் கோட்டையையும் உடைத்து வெளியே வருகின்றனர். அவர்களுடைய லட்சியங்கள் பிறருக்கு மாறுபட்டதாக இருந்த போதிலும், நல்ல நோக்கமாக இருந்தால் மக்கள் அவர்களுடைய போக்கை ஆதரிக்க முன் வருகின்றனர். அவர்களுடைய துணை கொண்டு தங்களுடைய லட்சியத்தை அடையவும் முற்படுகின்றனர்.

ஒருசிலர் தன்னல மற்றவர்களாகவும் தியாகிகளாகவும் இருக்கின்றனர். அவர்கள் மக்களுக்காகவே வாழ்வதாக எண்ணுகின்றனர். என்ன ஏற்பட்டாலும் அதைத் துச்சமாகக் கருதி தங்களுடைய அபிப்பிராயத்தையே மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றனர். அவர்கள் தான் இன்றைய நாட்டின் நிலையையும் மக்கள் சமுதாயத்தின் குறைகளையும் அறிந்து அதைப் போக்குவதே தங்களுடைய லட்சியமாகக் கொள்ளுகின்றனர்.

அவர்கள் தங்களுடைய கருத்தை வெளியிட்டதும், மக்கள் அனைவரும் குறைகளைத் தீர்த்துக் கொள்ள அந்த லட்சிய வாதிகளை ஆதரித்து அவர்களைப் பின்பற்றவும் தயாராகின்றனர். ஆகவே, மக்களுடைய பலத்துடன் அந்த லட்சிய வாதிகள் தங்களுடைய லட்சியத்தை அடையவும், முடியாவிட்டால் அதற்காகவே தங்களுடைய உயிரைத் தியாகம் செய்யவும் தயாராகின்றனர். அப்படி உயிரைத் தியாகம் செய்யும்பொழுதோ அல்லது

அதற்காகப் பல இன்னல்களை அடையும் பொழுதோ மக்களுடைய அமோகமான ஆதரவைப் பெறுகின்றனர். அப்பொழுதுதான் அந்த லட்சியமும் உயர்ந்ததாகிறது.

மக்கள் பலருடைய மேல்வாரியான கருத்துக்கள் ஒன்றுபடும்பொழுதுதான் அவர்கள் சேர்ந்து வாழ முடியும். அந்தக் கருத்து எல்லோருடைய பொது லட்சியமாக இருக்கும். அந்த லட்சியத்திற்கு எதிராக ஒருவன் அந்த மக்கள் கூட்டத்திடையே தோன்றினால் நிச்சயம் அவன் தோற்கடிக்கப்படுகிறான். ஏனெனில், அவனுடைய லட்சியம் மக்களுடைய பொதுவான லட்சியத்தை மறுத்து தன்னலம் உடையதாகவும் மக்களுடைய பொதுவான வாழ்க்கைக்கு மாறுபட்டு இருப்பதாலும்தான்.

ஆகையால் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையின் லட்சியத்தை அடைய வேண்டுமானால் பலருடைய லட்சியங்களுக்கு இசைந்ததாகவும், தன்னலமற்றதாகவும் இருக்கவேண்டும். அப்படியிருந்தும்கூட அவன் லட்சியத்தை அடைவதில் தோற்றுவிடுவானாகில் அது அவனுடைய குற்றமன்று. அடிமை நாட்டு மக்கள் அனைவருடைய குற்றம்தான் அது.

மக்கள் அனைவருக்கும் ஏற்ற லட்சியம்—மக்கள் சமுதாயத்தின் வேண்டுகோளை நிறைவேற்றும் லட்சியம்—மக்களுடைய பின்பலத்துடன் அடைய முடியாவிட்டால் அந்த நாட்டு மக்கள் அனைவரும் விழிப்படையவில்லை; அல்லது அந்த லட்சியத்தை மக்கள் அறியாமையாலோ, கோழைத்தனத்தாலோ, தன்னலத்தாலோ ஏற்கவில்லை என்பதுதான் பொருள்.

இன்று நிதர்சனமாக, நமது நாட்டிலே பார்க்கிறோம். காங்கிரஸ் பொதுலட்சியமான விடுதலைக்காக கடந்த அறுபது வருஷங்களாகப் போரிட்டு வருகிறது. விடுதலை வேண்டாதவன் மனித சமுதாயத்திலே இல்லை. அடிமையை விரும்பி அழைப்பவன் மனிதனாக இருக்க மாட்டான். அப்படியானால் காங்கி

ரஸ் தனது லட்சியத்தை அடைய ஏன் பல ஆண்டு கள் ஆகின்றன ?

இங்கேதான் ஒரு சிக்கலான பிரச்சினை. மக்கள் பலருடைய கருத்தை ஒரு லட்சிய வாதி பிரதிபலிக் கிருன். அவனுக்கு என்று ஒரு கூட்டம்—ஒரு சூழ் நிலை ஏற்படுகிறது. இதே மாதிரி பல லட்சியங் களுடைய பல மக்கட் கூட்டங்கள் தோன்றுகின்றன. ஒரு கூட்டத்தாருக்கும், மற்றொரு கூட்டத்தாருக்கும் பொதுப்படையான காரியத்தில்கூட லட்சியம் ஒன்று படுவதில்லை. அந்தச் சமயத்தில் இரு கூட்டங்களும் தங்களுடைய லட்சியங்களை அடைய ஒன்றுக் கொன்று மோதிக் கொள்ளுகின்றன. இதனுலும் லட்சியம் தடைபடுகிறது.

கடைசியில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் மனிதர்கள் வாழ்ந்தும் அவர்களுடைய கருத்துகள் ஒன்று படாததால் முட்டி மோதிச் சாகின்றனர். ஆனுல் ஒரு இனம், ஒரு நாடு சில பொதுப்படையான லட்சியங்களை அடைய முடியும். ஆனுல் அந்த இனத் தாருக்குள்—அந்த நாட்டினருக்குள்—பாகுபாடு, ஏற்றத்தாழ்வு, சுயநலம், அறிவின்மை முதலியன இருக்கும் வரையில் ஒன்றுபட்டு வாழ முடியாது என்பது துணிபு. மேற்சொன்ன கருத்துக்களைக் கொண்டு அமைத்ததுதான் 'லட்சியப்பாதை' இந்த லட்சியப்பாதை ஒரு சிலரையாவது என் லட்சி யத்திற்குத் திருப்ப வேண்டும். அதுவே என்னுடைய லட்சியம்.

புதுக்கோட்டை, க. நாராயணன்.
21—1—47.

# லட்சியப் பாதை

## சந்திரன்

தேவநேசனைக் கடைசியாகக் கப்பலடியில் சந்தித்து வந்தது முதல் என் மனம் சரியான நிலைமையில் இல்லை. கடந்துபோன சம்பவங்கள் மீண்டும் வந்து மனதிலே தோன்றுகின்றன. மன நிம்மதிக்காக என்னுடைய அறையில் வந்து உட்கார்ந்தேன். வேலையில் மனம் ஈடுபடவில்லை. நிம்மதியற்றுப் படுக்கையில் படுத்தேன். சுவரிலே தொங்கிக்கொண்டிருந்த புகைப்படம் என் கவனத்தை இழுத்தது.

அந்தப் படத்திலுள்ளவர்கள் அனைவரும் என்னுடைய உயிர் நண்பர்கள். அந்தப் படமெடுத்த காலத்தில் நாங்கள் பள்ளித்தோழர்களாயிருந்தோம். மெட்ரிகுலேஷன் பரீட்சை நடந்த சமயத்தில் இப்படம் பிடிக்கப்பட்டது. இப்பொழுது ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்பொழுது உலகத்தையே நன்ருக அறியாத நாங்கள், எங்களுடைய பிற்கால வாழ்க்கையிலே புரட்சிகரமான இந்த மாறுதல்கள் ஏற்படுமென்று எப்படி அறிந்து கொண்டிருக்க முடியும்?

இந்தப்படம் பிடித்த பின்பு ஒவ்வொரு நண்பருக்கும் இதன் பிரதி வழங்கப்பட்டது ஆனல் அந்தப்படங்கள் அவர்களுடைய இல்லங்களிலே இப்பொழுது தொங்கிக் கொண்டிருக்குமா? புகைபிடித்து, அழுக்கடைந்து ஒரு

மூலையிலே தொங்கிக் கொண்டிருக்கலாம்; அல்லது எத்தனையோ நாட்களுக்கு முன்பு குழந்தைகளோ, வேலைக் காரர்களோ அதைத்தவறுதலாக உடைத்து, எனது நண்பர்களுக்குத் தெரியாமல் குப்பைத் தொட்டியில் கொண்டுபோய் எறிந்திருக்கலாம்.

இல்லையானால், பள்ளியை விட்டுப் பிரிந்ததும், இந்த உயிர்த்தோழர்களுக்கு வாழ்க்கையில் இந்த மாறுதல் ஏற்படுமா? ஒவ்வொருவரின் வாழ்க்கையும் நேர்மாறான வழியில் விசித்திரமாக நடந்து, முடிவில் இந்தக் கோர மான சம்பவத்தை அடைந்திருக்குமா?

நான், தேவநேசன், மணிவாசகன், மாணிக்கம் நால்வரும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில்தான் வாசித்து வந்தோம். பரீக்ஷை நெருங்கியதும் நண்பர்களின் ஞாப கார்த்தமாய்ப் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். பரீக்ஷை முடிந்ததும் அவரவர்களுடைய ஊர்களுக்குப் பிரிந்து சென்றோம்.

நான் மேலும் படிக்க நினைக்கவில்லை. அதிகம் படிக்க ஆவல்தான். ஆனால் அதற்குரிய உதவிகிடைக்கவில்லை. எனக்கு எப்பொழுதுமே ஆர்வமுள்ள எழுத்துத் தொழிலில் ஈடுபட்டேன்.

எழுத்தாளனைப் பற்றிச்சொல்ல ஆரம்பித்தால், சில உண்மைகளைப் பற்றிச் சொல்லாமல் மேலே போக முடியாது. ஆரம்பத்தில் நான் எழுதிய கவிதை, கட்டுரைகள் பல்வேறு பத்திரிகைகளுக்குப் போய், அந்த ஆசிரியர் களின் ஆசீர்வாதம் பெற்று எனக்கே திரும்பி வந்தன. நான் எழுதிய கட்டுரைகளைவிட, எவ்வளவோ மோசமான வியாசங்களும், சிறு கதைகளும் பத்திரிகைகளில் வெளி

வந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என் மனதில் வேதனை அலைபாயத் தொடங்கியது.

பிரபல எழுத்தாளர்கள் எவ்வளவு மோசமான கட்டுரைகளை எழுதியனுப்பினாலும், அவற்றைப் பிரித்துக் கூடப் பார்க்காமல், அதைப் பிரசுரிக்கும்படி ஆசிரியர்கள் அனுமதி கொடுத்து விடுகிறார்கள். இம்மாதிரி 'சில்லரை வேலைகள்' எழுத்தாளர் உலகத்திலே அபரிமிதமாக நடக்கின்றன.

நானும் இரண்டு ஆண்டுகள் மிகுந்த பொறுமையுடன் இருந்தேன். நான் அனுப்பிய கட்டுரைகளில் பல எனக்குத்திரும்பி வருவதுகூட இல்லை. அவற்றைப் பிரசுரிக்க முடியாவிட்டால், திருப்பியனுப்பும்படி தபால் முத்திரைகளை அனுப்பியும், அந்த ஆசிரியர்களின் குப்பைத் தொட்டிக்கே அவை போய்விடும்.

ஒரு நாள் தற்செயலாக 'சுதேசிக்கொடி' என்ற பத்திரிகையைப் பார்த்தேன். துள்ளிக்குதித்தேன். சந்தோஷம் தாங்காமல் பத்திரிகையை எடுத்துக்கொண்டு வீதிவழியாக ஓடி வந்தேன். காரணம் என்ன? என்னுடைய கவிதையொன்று பத்திரிகையிலே முதன் முதலாக அச்சிடப்பட்டு அன்றுதான் வெளி வந்தது. அதன் தலையங்கமே "கவிதை"தான்.

இரண்டு மூன்று நாட்களாக நண்பர்களின் ஆசியும் கவிதையைப் புகழ்ந்து எழுதிய கடிதங்களும் வந்து குவிந்தன. அவற்றில் எனது பள்ளித் தோழர்களாகிய, மாணிக்கம், மணிவாசகன், தேவநேசன் முதலியோருடைய கடிதங்களும் இருந்தன.

அதன் பிறகு ஆறு மாதங்களில் நான் பிரபல எழுத்தாளனாகிவிட்டேன். என்னுடைய கவிதைகள், கதைகள் பிரசுரிக்கப்படாத பத்திரிகைகளே இல்லை. முன்பு அனுப்பி திரும்பி வந்தவைகள், இப்பொழுது நன்கு வரவேற்கப்பட்டு பிரசுரமாயின. கட்டுரைகள் வேண்டிப் பலகடிதங்கள் வந்தன. என் கவிதையைப் பிரசுரித்த "சுதேசிக்கொடி" யிடமிருந்தும் ஒரு கடிதம் வந்தது. அதைப் பிரித்தேன்; ஆசிரியரே அதை எழுதியிருந்தார்.

என் கவிதையை வாசகர்கள் மிகவும் புகழ்ந்து எழுதுகிறார்களாம். ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், கோரிக்கைகளும் அவருக்கு வந்து குவிகின்றனவாம். என்னை அவர் நேரில் பார்த்ததில்லை யாகையால் காரியாலயத்திற்கு வந்து அவரைச் சந்திக்கும்படி எழுதியிருந்தார். முடியுமானால் எனக்கு உதவி ஆசிரியர் வேலை தருவதாகவும் எழுதியிருந்தார்.

என்னுடைய கட்டுரை, கவிதைகளைச்சீர் தூக்கி, ஆராய்ந்து, முதன் முதலில் வெளியிட்ட பத்திரிகை 'சுதேசிக்கொடி'; என்னை ஒரு எழுத்தாளனாக்கியதும் 'சுதேசிக்கொடி'; என் வாழ்வுக்குப்புத்துயிரளித்து, எழுத்தாளருலகத்திற்கு வழிகாட்டியதும் அதுதான். ஆகையால் அதன் ஆசிரியரின் வேண்டுகோளுக் கிணங்கி, அன்றே புறப்பட்டு காரியாலயத்தை அணுகினேன்.

என்னை அன்புடன் ஒரு பெரியவர் வரவேற்றார். வயது ஐம்பது இருக்கும். அவர்தான் 'சுதேசிக்கொடி' பத்திரிகையின் ஆசிரியர், சுந்தர முதலியார். மிகவும் இனிமையாகப் பேசினார். நல்ல முறையில் வரவேற்றார். எங்கள் சம்பாஷணையின் முடிவிலே, மாதம் ஐம்பது

ரூபாய்ச் சம்பளத்தில் உதவி ஆசிரியர் வேலை தருவதாகச் சொன்னார். நானும் நன்றியறிதலுடன் ஒப்புக் கொண்டேன்.

ஒரு நாள் ஆசிரியர் என்னை அழைத்து, ஒரு கையெழுத்துப் பிரதியைக்காட்டி "இதைப் பிரசுரிக்கலாமா?" என்று கேட்டார். அதை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதை நல்ல கருத்துடன் யாரோ எழுதியிருக்கிறார்கள். ஆனால் இதற்குமுன் அவர்கள் எழுத்துத் தொழிலில் ஈடுபட்டதில்லை என்பதை அந்த 'வசன காவியம்' எடுத்துக்காட்டியது. அதை எழுதியவர் 'அரசி' என்ற புனைப் பெயருள்ளவர்.

அதில் :

## கவி — கவிதை

"கவி ஒரு மலைச்சிகரம்—கவிதையொரு நதி. கவி என்னும் சிகரத்திலிருந்து, கவிதை நதி ஊறி ஓடி வருகிறது. இடையிடையே மேடு பள்ளங்கள் தோன்றுகின்றன. மேட்டிற்குப் பக்கத்திலே, நீர் தேங்கி நிற்கிறது. அதில் தோன்றும் இன்ப அலைகள் என் இதயத்தில் தோன்றி மறைகின்றன. வாசனை நிறைந்த பூக்கள். அழகிய செடிகொடிகள்; கண்கவரும் பொருள்கள்; களிப்பூட்டும் படகுகள் அனைத்தும் அதிலே மிதந்து வருகின்றன. தெளிந்த பிரவாகமாகிய தேங்கிய அந்தக் கவிதை நீரில் நான்-மூழ்கி மூழ்கி எழுவேன். ஆயினும் எனக்குத் திளைப்பதில்லை—நானும் சளைப்பதில்லை. எத்தனையோ நீர்வீழ்ச்சிகள்—பார்த்தால் இதயம் நடுங்கும். ஓடிவரும் கவிதை நீர், அதிலே உருண்டு விழுந்தோடும்.

மின்னல்போன்ற பதங்கள் — இடிபோன்ற சப்தம்; தூரத்திலே நின்ருல் அதன் இன்னிசை கேட்கும். தேங்கிய நீரில் பூக்கள் மிதக்கும். நான் அவற்றை நீந்திப் பிடிப்பேன். சிகரத்திலிருந்து வரும் பிரவாகம் தங்கி நிற்பதில்லே. அது ஓடிக்கொண்டே இருக்கிறது. யுவர்கள், யுவதிகள், இளைஞர்கள்-ஏன்? மானிடர் அனைவருமே அதில் மூழ்கி எழுவார்கள். ஒருவராவது கவிதை நதியை வெறுப்பதில்லே. முடிந்த மட்டும் நீந்துகின்றனர் இளைஞர்கள். சளைக்கு மட்டும் ஆடுகின்றனர் குழந்தைகள். நாடு-நகரம்-வனம்-காடு அனைத்தையும் பார்க்கிறது கவிதை ஆறு. ஆண்டவனையும் நீராட்டுகிறது. ஆண்டியையும் நீராட்டுகிறது. அதற்குப் பாகுபாடு இல்லே. எல்லோரும் விரும்பும் அந்தக் கவிதை ஆறுதான் வேண்டும். அதை உற்பத்தி செய்யும் அந்தக் கவிச்சிகரத்திற்கு நாம் சீரிய முறையிலே நன்றி செலுத்துவோம்''

நான் படித்து முடித்தேன். என்னுடைய முகத்தையே—அதில் தோன்றி மறையும் குறிகளையே பார்த்துக் கொண்டிருந்தார் ஆசிரியர்.

"ஏன் சரிதானே" என்று கேட்டார் ஆசிரியர்.

"யார் எழுதியது?" என்று கேட்டேன்.

"மங்கையர்க்கரசி, எனது மகள். நன்கு படித்திருக்கிருள்; கவிதை கட்டுரை எழுதுவாள். ஆயினும் அதை நான் பிரசுரிப்பதில்லே. உங்களுடைய கவிதைகள் பிரசுரமானதிலிருந்து, அவற்றை ஆர்வத்துடன் படித்துவருகிருள். இம்மாதிரிக் கவிதைகளை—ஆற்றைப்போல் பெருகி ஓடச் செய்யும் கவிதைகளை இயற்றும் கவிச் சிகரங்களை

வரவேற்பதாக இதில் எழுதியிருக்கிருள். 'இதையாவது பிரசுரியுங்கள் அப்பா' என்ருள்.

"உங்களுடைய கவிதைகளைப் படித்த பின்பே மங்கையர்க்கரசி இதை எழுதினுளாம். ஆயினும் இதைப் பிரசுரிப்பதா என்று யோசித்தேன். இந்த யோசனையை மங்கையர்க்கரசி உங்களிடம் ஒப்புவிக்கச் சொன்னுள்" என்ருர் சுந்தர முதலியார்.

அவள் எழுதியது நன்ருகத்தான் இருக்கிறது. ஆனுல் அவள் எப்படி இருப்பாள்? நம்முடைய கவிதை மீது இவ்வளவு ஆர்வம் அவளுக்கு எப்படி உண்டாயிற்று? நான் சாதாரண மனிதன்தான். ஆனுல், என்னை இன்று வரை பார்த்திராத மங்கையர்க்கரசி, எனது கவிதை மூலம் நான் எப்படியிருப்பேனென்று கற்பனை செய் திருந்தாளானுல் அவள் நிச்சயம் ஏமாறுவாள். நானும் அவளைப் பார்த்ததில்லை. என் மனம் அவளுடைய உரு வத்தைச் சித்தரிக்க ஆரம்பித்தது.

அவளைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கி இருந்தேன். 'கல கல' வென்று நகைப்பதுபோல் சப்தம் கேட்டது. திகைத்துத் திரும்பினேன். ஆனுல் ஒருவரையும் காண வில்லை, மனதிலேயே மங்கையர்க்கரசியை உருவகப்படுத்தி எனது பாடல்களை அவள் பாடிச் சிரித்து விளையாடுவது போல நினைத்துக்கொண்டிருந்தேன். அவள் என் கற்பனை யிலே சிரித்ததை நான் உண்மையாக நினைத்துத்திரும் பினுல் அவள் எப்படிக் காணப்படுவாள்?

சிந்தனை செய்து செய்து மனம் அலுப்படைந்து விட்டது. ஆனுல் மங்கையர்க்கரசியைப் பார்க்கவேண்டு

மென்ற ஆவல் மட்டும் அதிகரித்தது. அவளைப் பார்த்து அவளுடன் பேசும்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன்.

"தந்தி" என்று சப்தம் கேட்டது.

பியூன் ஒரு தந்தியைக் கொண்டு வந்தான். அது ஆசிரியர் பெயருக்கு வந்திருந்தது. ஆசிரியர் அன்று அவசரவேலையாக மாயவரம் போயிருந்தார். தந்தியைப் பிரித்துப் பார்த்தேன்.

"இன்று விடுதலை யடைந்தேன். நாளைக் காலையில் எழும்பூர் ஸ்டேஷனில் சந்திக்கவும்"

—தேவநேசன்.

இது யார்? எனது நண்பன் தேவநேசனா அல்லது வேறு ஆளா? தந்தியை ஆசிரியர் வீட்டிற்கு அனுப்பி விட்டேன்.

மறுநாட்காலை பத்து மணியிருக்கும். ஆசிரியர் சுந்தர முதலியாரும், எனது நண்பன் தேவநேசனும் காரியாலயத்திற்குள் நுழைந்தனர்.

## தேவ நேசன் 2

பள்ளியில் படிக்கும் பொழுது உலகத்தையே அறிய மாட்டேன். கலாசாலை நிகழ்ச்சிகள் இப்பொழுது கற்பனையிலே ஒரு இன்பத்தை எழுப்புகிறது. உலக வியவகாரத்தில் புகுந்து அதன் வெப்பத்தையும் குளிர்ச்சியையும் தாங்க முடியாமல் தவிக்கும் பொழுது, பள்ளிக்கூட ஞாபகங்கள் மனதிற்கு ஒரு 'குதுகுதுப்பை' உண்டாக்குகிறது.

நண்பர்களை விட்டுப் பிரிந்து ஊருக்கு வந்தேன். என் தந்தை 'சுதேசிக் கொடி' என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். பத்திரிகை விஷயங்கள் மாணவர்களுக்குப் புறம்பானவை என்றும், நாவல் முதலியன படிக்கக்கூடாதென்று கட்டளை யிடுவது போலவே பத்திரிகைகளையும் பார்க்கக்கூடாதென்றும் கலாசாலை ஆசிரியர்கள் கட்டளையிட்டு வந்தனர். 'சுதேசிக் கொடி' பத்திரிகை தேசீய சமாசாரங்களைப் பற்றி எழுதுவதால், அதை நான் படித்த கலாசாலைக்குள் நுழையக் கூடாதென்றும் நிர்வாகிகள் தடை செய்திருந்தனர்.

சுதேசிக் கொடியில் என்ன எழுதுகிறார்கள் என்பது பள்ளியில் வாசித்த காலத்தில் எனக்குத் தெரியாது. நான் ஒரு பத்திரிகை ஆசிரியரின் மகனாக இருந்தும் வெளி உலகத்தையே அறியாதவனாக இருந்தேன். காரணம் என்னவென்றால் ஆங்கிலம் நன்றாகப் படிக்க வேண்டுமென்று, பாதிரிகள் நடத்தும் கலாசாலையில் பயின்று வந்தேன். அந்தக் கலாசாலையில் பாடங்களைத்

தவிர வேறு எதையும் படிக்கக்கூடாது. 'சுதேசிக் கொடியும்' அங்கே வரக்கூடாது. அந்தக் கலாசாலையில் வாசிப்பவர்கள் அனைவரும் மாணவர் விடுதிகளில் தான் தங்கி யிருக்க வேண்டும். இந்த நிலைமையில் வெளி உலகத்தில் நடப்பதை நான் எப்படி அறிந்துகொண் டிருக்க முடியும்?

அன்று ஒரு நாள் நடந்த சம்பவம் — அதை இன்று நினைத்தாலும் வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. லாகூரில் காங்கிரஸ் கூடியிருந்த சமயம். நேரு இந்தியா விற்குப் பூரண சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று பிர மாதமாகப் பேசி யிருந்தார். மகாத்மா காந்தியைப் பற்றிப் பத்திரிகைகளில் படங்களையும் போட்டு அனு பந்தங்கள் வெளியிட்டிருந்தனர். அந்தச் சமயம் தேசத் தில் எங்கு பார்த்தாலும் ஒரு பரபரப்பு.

நான் 'சுதேசிக் கொடி'யைப் புரட்டிக்கொண்டே "காந்திக்கும், நேருவுக்கும் காங்கிரஸில் என்ன சம்பளம்? அவர்கள் பெரிய துஷ்டர்களாமே? அவர்களை நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாதென்று எங்கள் பாதிரி உபாத்தியா யர்கள் சொல்லுகிறார்களே" என்று தந்தையிடம் கேட் டேன்.

நான் பேசியதைக் கேட்ட என் தந்தை என் அறியா மையைப் பற்றி ஆச்சரியப்பட்டார். எனக்குக் காங்கிரஸ் வியவகாரங்கள் நன்கு தெரியுமென்று நினைத்திருந்தாராம். அன்று முதல் விடாமல் தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்து வரும்படி கட்டளை யிட்டார். சில தேசீயப் புத்தகங்கள் கொடுத்துப் படிக்கும்படியும் சொன்னார்.

நாடு முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த காலம் — காங்கிரஸ் தொண்டர்களனைவரும் தங்களைத் தியாகத்திற்குத் தயாராக்கிக் கொண்டு, காந்தியின் கட்டளையை எதிர்பார்த்திருந்த நாள் – அதுதான் மகாத்மாவின் தண்டி யாத்திரை. பத்திரிகைகளை அடிக்கடி பார்ப்பதாலும், காங்கிரஸின் அன்றாட நிகழ்ச்சிகளைக் கவனிப்பதாலும் முதலில் காங்கிரஸ் கேட்பது நியாயம் என்பதையும், உலகத்தின் போக்கையும், இந்தியாவின் அடிமைத்தனத்தையும் அறிந்த பொழுது காங்கிரஸில் அங்கத்தினனாகச் சேர்ந்து விட்டேன்.

என் உணர்ச்சி என்னையும் மீறியது. 'இந்தியன்' என்ற பெயருக்கு அடிமை என்ற பொருளா ? கருப்பு மனிதன் வெள்ளையனை விடத் தாழ்ந்தவனா ? வெள்ளையன் மட்டும் ஆளப் பிறந்தவன், மற்றவன்....?

ஒவ்வொரு இந்தியனும் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தால்...அது எதற்காக ? நிலைமை எனக்கே வெட்கத்தை உண்டாக்கியது. லண்டனில் ஒரு நாள் மாபெருங் கூட்டத்தில் இந்தியாவைப் பற்றியும் இந்திய மக்களைப் பற்றியும் மிகவும் இழிவாகப் பேசி யிருந்தார்கள். சுயமதிப்புள்ள ஒவ்வொரு இந்தியனும் சுதந்திரப் போரில் குதித்து, தலைவனுக்குக் கீழ்ப் படிந்து, சுதந்திரப் போரை வெற்றிகரமாக முடிக்க வேண்டாமா ?

என்னைப் போன்ற எத்தனையோ இளைஞர்கள் பள்ளிக் கூடங்களை விட்டு, சுதந்திரப் போருக்கு ஆயத்தமாகி விட்டனர். வக்கீல்கள், வியாபாரிகள், மாணவர்கள், உபாத்தியாயர்கள் – ஏன் ? அரசாங்க உத்தியோகஸ்தர்

களில் கூட சிலர் வேலைகளை உதறி எறிந்து, சுதந்திரப் போரில் ஈடுபட்டனர்.

தினசரி இச் சம்பவங்களை காதினால் கேட்டும், பத்திரிகைகளில் பார்த்தும் நான் எப்படிச் சும்மா இருக்க முடியும்? — அதிலும் ஓர் ஆசிரியன் மகன் — உணர்ச்சியைத் தூண்டி எழுதும் "சுதேசிக் கொடி"யைச் சேர்ந்தவன், என் அந்தராத்மா என்னைச் சுதந்திரப் போரில் ஈடுபடும்படி தூண்டியது.

எனது முடிவைத் தந்தையிடம் தெரிவித்தேன். அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். "காந்தி என்றால் யார்?" என்று கேட்டவன், இன்று சத்தியாக்கிரகம் செய்யப் புறப்படுவதாக இருந்தால் ஆச்சரியமாக இருக்காதா?

தஞ்சாவூரில் பிரபல வக்கீலாக இருந்தவர் 'உமாபதி' என்பவர். அவரும் என் தந்தையும் பால்ய சிநேகிதர்கள். உப்புச் சத்தியாக்கிரகத்தின் பொழுது வக்கீல் தொழிலை விட்டு, ராஜாஜியின் பின்னால் வேதாரண்யம் செல்லப் போவதாக அவர் என் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார்.

அவருடன் என்னையும் அனுப்ப தந்தை முடிவு செய்தார். சத்தியாக்கிரக நாளை எதிர்பார்த்திருந்தோம். ராஜாஜியின் தலைமையின் கீழ் தொண்டர்களனைவரும் புறப்பட்டு வேதாரண்யம் சென்று உப்புக் காய்ச்சப் போவதாக அறிவிக்கப்பட்டது.

மறு நாளே நான் தஞ்சைக்கு வந்து சேர்ந்தேன். வேதாரண்யத்தின் புனித யாத்திரைக்கு இன்னும் ஒரு வாரமே பாக்கி யிருந்தது. அது வரை உமாபதி அவர்

களுடைய வீட்டிலேயே தங்கி யிருக்க முடிவு செய்து விட்டேன்.

உமாபதி என்பவர் உயர்ந்த குணமும், இரக்க சிந்தையும் உள்ள அறிஞர். காந்திப் பைத்தியம் முற்றிலும் பிடித்தவர். என்னை அன்புடன் வரவேற்றார். இருவரும் அவருடைய 'ஆபீஸ்' அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

"அப்பா!" என்று ஒரு இனிமையான குரல் கேட்டது.

ஒரு யுவதி. வயது பதினாறு இருக்கலாம். எங்கள் அறைக்குள் நுழைந்தாள். நல்ல சிகப்பு; ஒற்றை நாடியான — ஆனால் 'தளதள'வென்று ஒளிரும் தேகம். நீண்ட பின்னல். அழகான நெற்றி. புன்சிரிப்புத் தவழும் முகம். வேகமாக அறைக்குள் நுழைந்தவள் என்னைக் கண்டதும், திடுக்குற்றுப் பின்னடைந்து, வெளியே கதவின் மறைவில் நின்று கொண்டாள்.

"புனிதவதி! சும்மா வா அம்மா! இவர் நமக்கு வேண்டியவர் தான், அன்னியரல்ல" என்றார் உமாபதி.

'புனிதவதி!'— என்ன அழகான பெயர்! ஐந்தெழுத்துக்கள் கொண்ட அருமையான பெயர். அவளுடைய உருவம், சினிமாவில் காட்டி மறைத்தது போன்ற அந்த அழகிய உருவம், என் மனதில் ஒரு இன்ப உணர்ச்சியை எழுப்பிற்று.

உமாபதி அவர்கள் அழைத்தபோது கூட அவள் உள்ளே வரவில்லை. வெளியில் நின்றுகொண்டே "அம்மா சாப்பிட அழைக்கிறாள்" என்றாள். "இன்னொரு இலை

கூடப் போடச் சொல்லு. நாங்கள் இருவரும் இதோ வருகிறோம்'' என்றார் உமாபதி. வெளியில் நின்றபடியே அவள் மறைந்து விட்டாள்.

மத்தியானம் நல்ல வெயில். மாடி வீட்டில் உட்கார்ந்து சுதேசிக் கொடியைப் புரட்டிக்கொண்டிருந்தேன். ஒரு பக்கத்தில் "கவிதை'' என்னும் தலைப்பில் ஓர் அருமையான கவிதை காணப்பட்டது. அதை எழுதியவர் என் நண்பனாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் "சந்திரன்'' என்ற பெயர் அடியில் காணப்பட்டது. அடடா! கவிதை என்றால் அதைத்தான் சொல்ல வேண்டும். அவன் ஆத்மீக உண்மைகளை ஆழ்ந்த கவிதைகளாகச் செய்திருக்கிறான். கவி மலர்கள் அவனையறியாமலே பூத்துச் சொறிந்திருக்கின்றன. அவன் கண்டதெல்லாம் கவிதையாகப் பூத்திருக்கிறது. நினைத்ததெல்லாம் கவிதையாக மலர்ந்திருக்கிறது.

சந்திரனுக்கு அவனுடைய கவிதையைப் புகழ்ந்து ஒரு கடிதம் எழுதி மடித்தேன். புனிதவதி எதிரே வந்தாள். (எனக்குப் பக்கத்தில் இருக்கும் அறைக்குச் சாமான் எடுக்க வந்ததாகவும், நான் அங்கு இருந்ததை முதலில் எதிர்பார்க்கவில்லையென்றும், திடீரென்று என்னை மறுபடியும் சந்திக்க நேரிட்டாலும், திரும்பிச் செல்லாமல் வந்த வேலையை முடித்துக் கொண்டு சென்றதாகவும் பின்னால் ஒரு தடவை என்னிடம் தெரிவித்திருக்கிறாள்.)

நான் திடுக்கிட்டுப் புனிதவதியை நோக்கினேன். என்னையே பார்த்துக் கொண்டு வந்த அவள் என் கண்களைச் சந்தித்ததும் தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்

டாள். அவள் என்னைக் கடந்து செல்லும் பொழுது, மெல்லிய, வாழையிலைபோன்ற, காற்றில் படபடவென் றசைந்தாடும் அவளுடைய சேலைத் தலைப்பு என்மீது மெதுவாகப் பட்டுப் பறந்தது. ஏதோ தவறுதலான செய்கையைச் செய்துவிட்டது போல எனது இருதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

அவள் அறைக்குள் சென்று மறைந்து விட்டாள். ஆனால் அவளுடைய பிரகாசமான முகம் மட்டும் என் மனக்கண்ணைவிட்டு மறையவில்லை. அவளுடைய அந்தக் கண்கள் – அதை எப்படித்தான் சொல்லுவேன்? நீலோத் பலமென்றும் கயற்கண்களென்றும் கவிஞர்கள் வர்ணிக் கின்றனர். அவைகளல்ல இந்தக் கண்கள். இவற்றிலே குளிர்ச்சியின் தன்மை காணப்பட்டது. 'கடைக்கண் பார்வை', 'கூர்மையான பார்வை' என்று சொல்லு கிறார்கள். இந்தப் பார்வையிலே சாந்தமும், தெளிவும் கூடிப் பிரகாசித்தன.

அவள் மறுபடியும் அறையிலிருந்து வெளியே வந்தாள். ஒருவாறு என்னைச் சமாளித்துக் கொண்டு "அப்பா எங்கே?" என்று அவளிடம் கேட்டேன். நான் இம்மாதிரி பேச ஆரம்பிப்பேனென்று அவள் எதிர் பார்த்திருக்க மாட்டாள். அது அவளுக்கு அதிர்ச்சியை உண்டாக்கி யிருக்கலாம். ஏனெனில் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு பதிலளிக்கச் சிறிது நேரம் பிடித்தது.

"அப்பா ஏதோ அவசர வேலையாக வெளியே போயிருக்கிறார்கள்" என்று என்னைத் திரும்பிப் பார்க் காமலே சொல்லிவிட்டுச் சென்றாள். இரண்டொரு

நாட்கள்தான் இப்படி இருந்தோம். பிறகு இருவரும் சகோதர பாவனையில் பேசிக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நண்பர் உமாபதி அவர்கள் "சுதேசிக் கொடி"யைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் நாற்காலியைப் பிடித்துக் கொண்டு அந்தப் பத்திரிகையையே பார்த்துக் கொண்டு நின்றாள் புனிதவதி. நான் அவர்களுக்கு எதிரே உட்கார்ந்து புனிதவதியின் முக வசீகரத்தைப் பருகிக் கொண்டிருந்தேன்.

"அப்பா! சந்திரன் என்பவர் எழுதிய இந்தக் கவிதையைப் படித்தீர்களா? மிகவும் நன்றாக எழுதியிருக்கிறார்" என்றாள் புனிதவதி.

"இல்லையே! நான் இன்னும் படிக்கவில்லை. சந்திரன் என்பவர் பெரிய கவிஞரா?" என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் நான் கொஞ்சம் பெருமையுடன் "எனது பால்ய நண்பன்தான் சந்திரன். மிகவும் அழகான கவிதைகள், கதைகள் எழுதுவான்" என்றேன்.

அவள் என் முகத்தைப் பார்த்தாள். அவளுடைய விழிகள் விரிந்து சுருங்கின. "அவனை உனக்குத் தெரியுமா?" என்று புனிதவதியிடம் கேட்டேன். அவள் வெட்கம் மிகுந்த குரலில் "தெரியாது" என்று பதில் அளித்தாள்.

இருவருக்கும் இடையே இருந்த வெட்கத் திரை மறைந்து விட்டது. அவள் என்னை 'அண்ணா'வென்றே அழைத்தாள். நான் அவளைப் புனிதவதிஎன்றே அழைத்து வந்தேன். இருவரிடையிலும் சகோதர பாவத்தில் நேசம் வளர்ந்து வந்தது.

சத்தியாக்கிரக யாத்திரைக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. அன்று மாலை நானும் உமாபதி அவர்களும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு வந்தோம். அன்று இரவு முழுவதும் காங்கிரஸ், காந்தி, தொழிலாளர், விவசாயி இவர்களைப் பற்றியே சர்ச்சைகள் நடந்தன. என்னுடன் இதைப்பற்றி சர்ச்சையிடுவதற்கு அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள்?— புனிதவதிதான்!

அவளுடைய ஒவ்வொரு கேள்வியிலும் நல்லகருத்துக்கள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிவந்தேன். என்னுடைய ஒவ்வொரு விடையும் அவளுக்குத் திருப்தியளித்திருக்க வேண்டும். ஏனெனில் அவளுடைய முகம் என்றுமேயில்லாத சோபையுடன் அன்று விளங்கியது.

அவள் காங்கிரசுக்கு விரோதமான கருத்தையே முதலில் கொண்டிருந்தாள். காங்கிரஸ் என்றால் புரட்சி செய்யும் பயங்கர இயக்கம் சம்பந்தமான ஒரு ஸ்தாபனம் என்றே அவள் கருதினளாம். அவளுடைய தந்தை காங்கிரசில் சேர்ந்தது பற்றி மிகவும் பீதி யடைந்திருந்தாள். ஆனல் என்னுடைய பேச்சின் மூலம் உலகம் பூராவையும் அறிந்து கொண்டு விட்டவள் போல் புன்முறுவல் செய்தாள். காங்கிரஸ் மீது தோன்றிய பயம், முற்றிலும் போய் விட்டதாக என்னிடம் தெரிவித்தாள்.

"அப்படியானல் இன்னும் இரண்டு நாட்களுக்குள் அப்பாவுடன் சத்தியாக்கிரகம் செய்யத்தான் போகிறீர்களா?"

"அதைப்பற்றி உனக்கு இன்னும் சந்தேகமா?"

"சந்தேகத்திற்காகச் சொல்லவில்லை. தங்களைப் போன்ற ஒரு நண்பர் எனக்கு எப்பொழுதும் கிடைத்துக்

கொண்டிருப்பார்களா? நமது அடிமைத்தனத்தைப் பற்றி ஒன்றுமே அறியாத நான், ஆங்கிலம் படிப்பதும், மேல் நாட்டாரைப்போல் உடை யணிவதும் நாகரீகம் என்று கருதிவந்தேன். ஆனல், இந்தப்பழக்க வழக்கங்கள்தான் அடிமைக்குழியில் நம்மை ஆழ்த்துகின்றன என்று காரணம் காட்டி, இந்தியாவின் புனிதத்தன்மையை விளக்கி இன்றுள்ள சர்வதேசநிலைமையை எடுத்துக்கூறினீர்கள். இல்லையானல் எனக்கு ஒன்றுமே தெரியப்போவதில்லை அப்பாவிடம் இவ்வளவு தூரம் பேசவும் முடியாது.

"அண்ணு! மகாத்மா காந்தியைப்போன்ற உத்தம மனிதர் உலகத்திலேயே இல்லை யென்றுதான் நினைக்கிறேன்." என்ருள். அவள் இன்னும் நன்ருகக் காங்கிரஸின் சரித்திரத்தை அறிய விரும்பினுள்.

"அவருடைய மனைவிதான் கஸ்தூரிபாய் அம்மையார். பொறுமையுள்ள கற்பரசி. ஒவ்வொரு பெண்களும் அந்த அம்மையாரைப்போல் நடக்கவேண்டுமென்பதுதான் என் எண்ணம்" என்றேன்.

"அண்ணு! இன்று இந்தப் புனிதவதி தங்களிடம் உறுதி கூறுகிருள். மகாத்மாவின் மனைவி, அன்னை கஸ்தூரிபாயைப் போல பதியின் மனம் கோணுமல், அவருடைய சுக துக்கங்களைப் பகிர்ந்து, பொறுமையுடன் நான் வாழ்வேன். இது சத்தியம் அண்ணு!"

அவளுடைய பேச்சிலே கம்பீரம் தொனித்தது வீரமங்கை லட்சுமிபாயைப் பற்றியும், சந்த் பீபியைப் பற்றியும், புத்தகங்களில் படித்திருக்கிறேன். ஆனல் அவர்களுடைய வீரத்தையும் உறுதியையும் அன்று புனிதவதியிடம்தான் கண்டேன்.

அவளுடைய தேசபக்தி மாசற்றது; உண்மையானது. அவளைப்போன்ற பெண்கள் சிலர் வழிகாட்டினாலும், பாரத நாட்டின் மாதர்வர்க்கம் உலகத்திற்கே வழிகாட்டியாகி, சுதந்திரப்போரில் ஆண்களுடன் ஒன்று சேர்வார்கள்.

தூக்கம் கண்களை அழுத்த, புனிதவதியின் பேச்சுக்களும், அவளைப்பற்றிய கற்பனைகளும் மெதுவாக என்னை விட்டு மறைந்தன.

மறுநாட் காலை புனிதவதி ஓடிவந்து "அண்ணா! அத்தான் இன்று மத்தியானம் வருகிறாராம். தந்தி வந்திருக்கிறது," என்றாள்.

"அத்தானா! அது யார்?" என் மனம் என்னையே கேள்வி கேட்டது. நான் ஒன்றும் புரியாதவன் போல் அவளையே உற்றுப் பார்த்தேன்.

"உங்களுக்குத் தெரியாதா அண்ணா? நீங்கள் படித்த வருஷம் அதே வகுப்பில்தான் அவரும் வாசித்திருக்கிறார். அதன் பின்பு வேலைக்குத் திரிந்து கஷ்டப்பட்டார். அவருக்கு இஷ்டமான வேலையாக ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வேலைக்குச் சிபார்சு செய்து, சென்ற ஆண்டில்தான் அவரைத்தேர்ந்தெடுத்தார்கள். அவர் வேலூருக்குச் சென்று பயிற்சி பெற்று, சென்ற வாரம் ஊருக்கு வந்ததாக முதலில் கடிதம் வந்திருந்தது. எங்கள் பதில் கடிதத்தில், அப்பா சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக எழுதியிருந்தோம். அதனால் உடனே புறப்பட்டு வருவதாகத் தந்தி வந்திருக்கிறது," என்றாள்.

"இவ்வளவு தூரம் சொல்லிவிட்டு, அந்த 'அத்தானின்' பெயரைத் தெரிவிக்க வில்லையே?"

"அவருடைய பெயர் மாணிக்கம்."

"மாணிக்கமா? என்னுடைய நண்பனல்லவா மாணிக்கம். அவன் உனக்குச் சொந்த உறவினனா?"

"ஆம். என் மாமாவின் ஏகபுத்திரர்தான். ஆனால் பெரிய முரடர். எனக்கு அவருடைய நடவடிக்கைகள் ஒன்றும் பிடிக்காது"

"அத்தான் என்கிறாயே! பிடிக்காது என்றால் அவன் உன்னைவிட்டு விடுவானா?"

அவளுடைய முகத்திலே திடீரென்று ரோஜா போன்ற சிவந்த நிறம் உண்டாகியது. அவள் வெட்க மிகுதியால் தலைகுனிந்தாலும், உள்ளத்திலே தோன்றிய ஒரு எண்ணத்தை என்னிடம் சொல்லுவதற்கு வாயெடுத்தாள்போலும். ஆனால் அதற்குத் தடையாக புனிதவதியின் அம்மா அவளைக்கூப்பிட்டார்கள்.

ஏதேனும் முக்கியமான விஷயத்தைப் பற்றிப்பேச ஆரம்பிக்கையில்தான் வேற்றுமனிதர்கள் குறுக்கிட்டு விடுகிறார்கள். பூனைகள் குறுக்கிட்டால் பின்னால்தான் காரியம் அபஜெயமாகும். மனிதர்கள் குறுக்கிட்டாலோ உடனே அந்தக்காரியம் நின்றுவிடும். இது வாழ்க்கையின் அனுபவம். பாவம்! புனிதவதி தன் இதயத்தைத் திறந்து காட்ட நினைத்திருப்பாள். இந்த நேரத்திலா அவளுடைய அம்மா குறுக்கிட வேண்டும்?......

அவள் சென்றதும் என்மனம் காரணமில்லாமல் துடித்தது. மாணிக்கத்தின் மீது பொறாமைபோன்ற ஒரு எண்ணம் புகைபோல் படர்ந்தது. மாணிக்கம் எனது பால்ய நண்பன். இரண்டு ஆண்டுகளாகப் பிரிந்திருந்த

வன். புதிதாக இன்று மத்தியானம் இருவரும் சந்திக்கப் போகிறோம். அப்படியிருக்க அவனுடைய வருகையினால் மனதிலே கலக்கம் ஏற்படுவதேன்?

மாணிக்கம் புனிதவதிக்கு அத்தான். அவளையடைய அவனால் முடியும் — அவனுக்கு உரிமையும் உண்டு. அதற்காக என்மனம் ஏன் பொறாமை கொள்ளவேண்டும்? மனதிற்கு, நண்பனான மாணிக்கம் பகைவனைப்போல் காட்சியளிக்கிறான். இந்த பொறாமைக்குணம் என்னைப் போன்றவனுக்கு நல்லதா? அதை வேரோடு பிடுங்கி எறிந்து, நட்பை மாணிக்கத்திடம் நிலைநாட்ட வேண்டாமா?

வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. கொஞ்ச நேரத்தில் மாணிக்கம் மட்டும் உள்ளே வந்தான். எதிர் பாராமல் என்னைச் சந்தித்ததும், ஆனந்தம் பொங்க "தேவநேசா!" என்றான்.

## மாணிக்கம் 3

மாணவர் விடுதியில் காலை ஒன்பது மணி முதல் பத்து மணிவரை வாசித்துக் கொண்டிருப்பேன். வீதியிலே, கடைகளுக்கும், கோர்ட்டுகளுக்கும் காரியாலயங்களுக்கும் செல்லும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களை ஜன்னல் வழியாகப் பார்ப்பேன். கையிலுள்ள புத்தகத்தில் மில்டனையும் தாம்சனையும் வர்ணித்திருக்கும். அல்லது அவர்கள் எழுதிய பாடல்களுடன் ஷேக்ஸ்பியரும் சேர்ந்து எங்களை வதைப்பார். வாய் படித்துக்கொண்டேயிருக்கும். மனம் சிந்தனையில் ஆழ்ந்து விடும். இதனால் படிப்பின் மீதே ஒரு வெறுப்பு ஏற்பட்டது. கலாசாலையை விட்டு வெளியேறும் அந்தக் கடைசி பரீக்ஷையின் நன்னாளை எதிர் நோக்கினேன்.

எல்லோரையும் போல உடையணிந்து ஆபீசுக்குப் போக வேண்டும். அதைக் காட்டிலும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராகி மோட்டார் சைக்கிளில் ஏறி, வீதி வீதியாகச் சுற்றவேண்டும். பாதசாரிகள் பயந்து ஒடுங்க, 'பீட்' போலீஸ் சலாம் போட, குழந்தைகள் 'அதோ போலீஸ் இன்ஸ்பெக்டர்' என்று சொல்லிக்கொண்டு வீட்டிற்குள் ஓட, எனது திறமையை இந்த வேலையில் நன்கு காட்ட வேண்டும்; குற்றவாளிகளை இழுத்து வந்து சவுக்கால் விளாச வேண்டும்....என் கற்பனைக்கு அளவே இல்லை.

ஒருவாறு பள்ளிப் படிப்பை முடித்தேன். வீட்டிற்கு வந்ததும் வேறு வழிகளில் மனம் ஈடுபடவில்லை. போலீஸ்காரனாக வேண்டும் என்ற ஒரே எண்ணம் தான்

என் சிந்தனையில் பதிந்திருந்தது. அதற்காகப் 'பெரிய, பெரிய மனிதர்களின்' தயவை நாடி அலைந்தேன்.

ஒரு நாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'போலீஸ் சூப்பரிண்டண்டை' வந்து பேட்டி காணு மாறு எழுதியிருந்தது. சந்தோஷம் என்னால் தாங்க முடியவில்லை. அப்பொழுதே போலீஸ் இன்ஸ்பெக்டராகி விட்டது போல் தோன்றியது. துள்ளிக் குதித்தேன்.

எனக்கு விவாகம் செய்து வைக்கும்படி அம்மா, அப்பாவிடம் வற்புறுத்தி வந்தாள். நான் ஒரு வேலையில் அமர்ந்து நல்ல பெயர் எடுக்கும் வரை விவாகப் பேச்சையே எடுப்பதில்லை யென்று அப்பா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

அம்மா இரண்டொரு இடங்களில் பெண் பார்த் திருந்தாள். அதற்காக என்னை ஏதேனும் ஒரு வேலையில் அமரும்படி வற்புறுத்தி வந்தாள். அவள் பார்த்திருந்த பெண்களில் ஒருவரையாவது எனக்குப் பிடிக்கவில்லை. என் மனதிலே நிலை பெற்றிருந்த புனிதவதியின் ஞாபகமே அடிக்கடி உண்டாயிற்று.

படிப்பை விட்டதும் இரண்டு மூன்று தடவை அவர்கள் வீட்டிற்குப் போயிருக்கிறேன். அவளுடைய அழகு ஒரு தனி சோபை கொண்டது. அவளுடைய அழகிலே மயங்கியிருந்த நான், அவளிடம் பேச ஆவல் கொள்ளுவேன். அவள் பாடங்களில் வரும் சம்பவங் களைப் பற்றியே பேசுவாள்.

உலகம் என்றால், என்னவென்பதையே அறியாத அவள் மகாகவி தாகூரின் "கீதாஞ்சலியை" எடுத்து வைத்துக் கொண்டு பிரமாதமாய்ப் புகழுவாள்.

"கடவுள் நம்பிக்கை எப்பொழுதும் என்னிடம் கிடையாது. ஆனால் நீயோ கடவுளையே நேரில் கண்டவள் போல, 'இறைவா, கடவுளே' என்று தாகூரைப் போல் உளறுகிறாயே" என்றேன்.

"உனக்குக் கடவுளிடம் நம்பிக்கையில்லை. அதேபோல கடவுளுக்கும் உன்னிடம் நம்பிக்கையில்லை. அதனால்தான் கடவுள் உன் கண்களுக்குத் தோன்றுவதில்லை" என்று சொல்லிவிட்டு "இனி மேலாவது புத்தகங்களை அலக்ஷியம் செய்யாமல் 'கீதாஞ்சலி'யைப் போன்ற உயர்ந்த புத்தகங்களைப் படி" என்றாள்.

"அதிலே கடவுளைக் கண்டதாக தாகூர் எழுதியிருக்கிறாரோ?" என்று சொல்லிச் சிரித்தேன்.

"நீ படித்தாலல்லவா உனக்குத் தெரியும்? இதோ படிக்கிறேன் கேள்" என்று சொல்லிவிட்டுப் புத்தகத்தைப் புரட்டினாள். என்மீது அவளுக்குக் கோபமும் இல்லை. ஏளனமும் இல்லை. பக்தியுடன் அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

> "நான் கண்டது இணையற்ற பொருள். ஒளிக் கடலில் விரிந்த இத்தாமரையில் மறைந்த தேனைப் பருகினேன். தன்யனானேன். எண்ணிறந்த உருவங்கள் ஆடும் இந்த அரங்கில் நானும் விளையாடினேன். இங்கு அரூபமான இறைவனை நான் கண்டு கொண்டேன்"

நான் இடை மறித்துச் சிரித்தேன். அவள் பயித்தியக்காரி போல என்னை நிமிர்ந்து பார்த்தாள். "புனிதா! நீ சொல்லுவது சரிதான். இது ஒருவன் இறக்கும் பொழுதுசொல்லும் வார்த்தையாக உன் குருதேவர் எழுதி

யிருக்கிறார். அவன் உலகத்திலுள்ள இன்ப துன்பங்களை அனுபவித்து இதைச் சொல்லுகிறான். நமக்கோ வாலிப வயதுதான். பள்ளியை விட்டு விட்டோம். உலக வியவகார அரங்கத்தில்இப்பொழுதுதான் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். நீயோ பழுத்த ஞானி போல கடவுளைப் பார்த்ததாகச் சொல்லுகிறாயே! நீ சரியான புத்தகப் புழுதான்.'' என்றேன்.

"உன் குருதேவர் என்கிறாயே? எனக்கு மட்டுமா குருதேவர்? உனக்கு இல்லையா?'' என்று கேட்டாள்.

"அவருடைய கவிதை இப்பொழுது யாருக்கு வேண்டும்? நம்மைப் போன்ற இளைஞர்களுக்கு இந்த நேரத்தில், 'தேவா, கடவுளே', என்பதெல்லாம் வேண்டியதில்லை. 'டென்னிசன்' என்ற ஆங்கிலக் கவிஞன் சொல்லுகிறான்!

"என் காதலி ரோஜா மலரானால்
நான் பனித்துளியாகி அந்த மெல்லிய
சிவந்த பூவிற்குள் விழுவேன்.
அவள் அழகை நான் பருகும்பொழுது,
என் அழகிய காதலி என்னைப் பார்த்து
புன் முறுவல் செய்வாள்.''

புனிதா! இந்த மாதிரி கவிஞர்கள் எழுதிய கவிதைதான் நமக்கு வேண்டும்'' என்றேன்.

"ஏது! உனக்கு அதிகமாகப் பித்துப் பிடித்து விட்டதே! மாமியிடம் சொல்லி உனக்கு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்துவிடச் சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமையாக இரு'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

கண்ணகியின் சிலம்பு உடைபட்டு, மாணிக்கங்கள் தெரிக்கும் பொழுது கூட இந்தக் கலகலப்பு ஓசை கேட்டிருக்காது. புனிதவதியின் சிரிப்பு அப்படியிருந்தது. கபடம், சூது அறியாதவள். யாரையும் நம்பிவிடும் சுபாவம் அவளுக்குண்டு.

"புனிதவதி! நீ சிரிக்கும்பொழுது தோன்றும் வெண்ணிறப் பற்களும், கன்னங்களில் விழும் குழிகளும் எவ்வளவு அழகாக இருக்கின்றன தெரியுமா! நான் மட்டும் ஒரு கவியாக இருந்திருந்தால்—"

"ஏன்? உங்கள் நண்பர் ஒருவர்தான் கவியாக இருக்கிறாரே! அவரிடம் சொன்னால் எழுதித்தருகிறார்."

"யார்? சந்திரனா?"

"ஆமாம், சந்திரன் என்றுதான் தேவநேச அண்ணாவும் சொன்னார்." அந்த நேரத்தில் தேவநேசன் வந்தான்.

"ஆம் மாணிக்கம். உனக்குத் தெரியாதா? சந்திரன் சுதேசிக் கொடியில் கவிதையொன்று எழுதியிருக்கிறானே, நீ படிக்கவில்லையா?" என்று கேட்டான்.

"கவிதை தானே! படித்தேன். அதைப் போன்ற கவிதைகளையே இனி எழுதும்படியும், அவற்றை நான் விரும்புவதாகவும் அவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்" என்றேன்.

புனிதவதி தேவநேசனை நோக்கி "அண்ணா! நாளைக் காலையிலேயே புறப்பட வேண்டுமாம்; அப்பா சொன்னார்" என்றாள்.

"எங்கே? சத்தியாக்கிரகம் செய்யவா?" என்று நான் குறுக்கிட்டுக் கேட்டேன். இது தேவநேசனுக்கு விபரீத

மாகப்பட்டதோ என்னவோ தெரியவில்லை. அவன் என்னை ஆச்சரியத்துடன் நோக்கினன். அதற்குள் புனிதவதி, "அண்ணுவும் தான் அப்பாகூடச் செல்லுகிருர்" என்ருள்.

"ஏனப்பா! உனக்குக் கூடவா இந்தப் பைத்தியம் பிடித்துவிட்டது. பேசாமல் ஏதேனும் ஓர் உத்தியோகத்தைப் பார்த்துக் கொண்டிருக்காமல், காந்தி என்றும், காங்கிரஸ் என்றும் சொல்லிக்கொண்டு வாழ்நாளை வீணுக்காதே" என்றேன்.

"உனக்குப் பிடிக்காவிட்டால் நீ பேசாமலிரு மாணிக்கம். இந்த மாதிரி பேசாதே. உன் பேச்சு இதயத்தைச் சுடுகிறது. உன் போன்ற சிலர் இந்த நாட்டில் இருந்தால் போதும்; எத்தனை பேர் தியாகம் செய்தாலும் அது விழலுக் கிறைத்த நீராகவே முடியும்" என்ருன் தேவநேசன்.

"அத்தான்! காங்கிரசையும், காந்தியையும் இந்த மாதிரி ஏளனம் செய்யாதே. காந்தி மகாத்மா புனிதமான உத்தமர். காங்கிரஸ் தொண்டர்கள் தியாகிகள். உயிரை வெறுத்துச் சுதந்திரப் போரில் குதித்தவர்கள்" என்று குறுக்கிட்டுப் பேசினுள் புனிதவதி.

"அடடா! என்ன தியாகம்! கேட்க வேண்டாம். புனிதவதி! நான் சொல்லுவது உனக்கு கசப்பாகத்தான் தோன்றும். அதற்காகத்தான் உன்னைப் 'புத்தகப் புழு' என்று சொல்லுகிறேன். உலகமே அறியாதவள் நீ. நான்கு அணுக் கொடுத்துக் கதர்த்தொப்பி வாங்கித் தலையில் வைத்துக் கொண்டால், உங்களைப் போன்றவர்களின் மனதை, மிக எளிதில் மாற்றிவிடலாம். இந்த வேஷமெல்லாம் உலகத்தில் நான்கு பேருக்குத் தெரிவதற்காகத் தான் புனிதவதி. நான் காங்கிரஸ்காரர்களை நம்புவதே கிடையாது" என்றேன்.

புனிதவதி இடைமறித்து "அப்படியானல் அப்பாவும் கூட"......

"எல்லோரையும் தான் சொல்லுகிறேன். இதுவரை கூச்சல் போட்டவர்கள் எதைச் சாதித்திருக்கின்றனர்? இனி இவர்கள் என்ன சாதிக்கப் போகிருர்கள்?"

அதுவரை நின்றிருந்த தேவநேசனுடைய கண்கள் கலங்கின. அவன்முகம் துக்கத்தில் ஆழ்ந்தது. திடீரென்று அந்த இடத்தைவிட்டு அவன் அப்பாற் போய்விட்டான்.

## புனிதவதி 4

-மாணிக்கம் பெயருக்கு மட்டும் பொருத்தம் உள்ளவர் தான். ஆனால் அவருடைய குணங்கள் மாணிக்கம் போன்று இல்லை. அதனால் நான் அவரை விரும்புவதே கிடையாது. அவர் வலிய வந்து என்னிடம் பேசினாலும் நான் அவரிடம் அலக்ஷியமாகவே நடந்துகொள்வேன். அவர் முரட்டுப் புத்தியும் பிடிவாத குணமும் உள்ளவர். எதிரி எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் அவனைத் தாழ்வாகவே மதித்து நடத்துவார்.

அன்று எங்களுக்குள் வளர்ந்த பேச்சு நீடிக்கவே, காங்கிரஸ்காரர்களைப் பிரமாதமாகத் திட்டிவிட்டார் மாணிக்கம். அவருடைய பேச்சு, அண்ணாவின் மனதை நோகச் செய்துவிட்டது. அண்ணா வேறு ஒன்றும் சொல்லாமல் வெளியே போய்விட்டார்.

எனக்கு அது அச்சத்தை உண்டாக்கியது. அந்த நேரத்தில் அண்ணாவின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? மாணிக்கம் கொஞ்சங்கூட விவேகமில்லாதவர்.

அன்று மாலை ஆறு மணியிருக்கும். மாடிமீது உட்கார்ந்திருந்தேன். என்மனம் பல வேறு சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தது. தேவநேச அண்ணா அப்பொழுது மேலே வந்தார்.

"புனிதவதி! தனியாக இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டார்.

"அண்ணா! அத்தான் உங்களிடம் மிகவும் குரூரமாகப் பேசிவிட்டார் என்று நினைக்கிறேன். உங்களுடைய

பொறுமையை அந்தப் பேச்சு சோதனை செய்யுமுன்பே, என் இதயத்தை அது 'குத்தி' விட்டது. ஆனால் நீங்கள் அவருடைய பேச்சைப் பொருட்படுத்த மாட்டீர்களென்றே நினைக்கிறேன்" என்றேன்.

"புனிதவதி! அவன் அறியாமையினால் தான் பேசியிருக்கவேண்டும். மேலும் அவன் என்னுடைய நண்பர்களில் ஒருவன் தானே! நாங்கள் நான்கு பேர்கள் ஒன்றாக ஒரே வகுப்பில் வாசித்தோம். நானோ காங்கிரஸ்காரனாகி விட்டேன். மாணிக்கம் போலீஸ்காரனாகி விட்டான். சந்திரன் எழுத்தாளனாகி விட்டான். ஆனால் மணிவாசகனைப் பற்றி ஒன்றும் தகவல் தெரியவில்லை.

"மனிதர்களின் செயல்கள் அவர்களுடைய சூழ்நிலையை ஒத்துத்தானிருக்கும். அவரவர்கள் தாங்கள் மேற்கொண்ட வேலைகளையே பிரதானமாக நினைத்துப் பேசுவார்கள். இது வழக்கம்தான். அவன் பேசியதைப்பற்றி நான் அவன்மீது குற்றம் சாட்டவில்லை. பெண்களின் முன்பு சூரத்தனம் பேசும் இம்மாதிரி ஆடவர்களை நான் எப்பொழுதும் லக்ஷியம் செய்வதில்லை.

"அவன் என்னுடைய நண்பன். அப்படியிருக்க, எனக்கு எதிராக, எனக்கே புத்தி சொல்லும் பாவனையில் பேசுவதற்குக் காரணம் உனக்குத் தெரிந்திருக்கலாம். அவனுடைய இரண்டொருநாள் நடவடிக்கைகளிலிருந்தே அவனை நன்றாக அறிந்துகொண்டேன்.

"புனிதவதி! மாணிக்கம் உன்னைக் காதலிக்கிறான். அதற்குத் தடையாக நான் விளங்குகிறேனென்று அவன் உணர்ந்து வருகிறான். நீ அவனுடைய காதலுக்கு இடம் கொடுக்காமல் அலக்ஷியம் செய்வதும் என்னால்தான்

என்று அவன் நினைத்துவிட்டான். புனிதா! உண்மை மையைச் சொல்லுகிறேன். இன்று சொல்லாவிட்டால் இனி எப்பொழுதுமே அதைச் சொல்ல முடியாதென்று எண்ணுகிறேன்.

"நான் சத்தியாக்கிரகத்திற்காகவே புறப்பட்டு இங்கு வந்தேன். பூரண தியாகம் செய்ய வேண்டு மென்பதே என் லக்ஷியம். நான் உணர்ச்சி வசப்படாமலிருக்கவும், நன்னெறியில் நடக்கவுமே, உன் அப்பாவிடம் அனுப்பப் பட்டேன். ஆனால் என் சக்திக்கு மீறி என்னை ஒரு பொருள் கவர்ந்து விட்டது. வாலிப வயதுதானே இது! நான் தான் என்ன செய்ய முடியும்? உன் கண்களி லிருந்தும், குரலிலிருந்தும் பாய்ந்தோடும் மெல்லிய உணர்ச்சியானது எனது திடத்தைக் குறைத்து, ஒரு கணத்தில் என்மீது வெற்றியும் பெற்றுவிட்டது.

"ஆனால், நான் இந்தக் காதலை விரும்பவில்லை. அனேக வாலிபர்கள், காதலையே வாழ்க்கையின் கலச மென்று நினைக்கிறார்கள். அது கலசமுமல்ல, அஸ்தி வாரமுமல்ல - என்னைப்போன்று கடமையைச் செய்ய முயலும் வாலிபனை முறை தவறச்செய்வதுதான் இந்தக் காதல். இதனால் எல்லா வேலைத்திட்டமும் ஆட்டம் கொடுத்துவிடும்.

"ஆகையால்தான் நான் கூடியவரை விலகிநிற்க விரும்புகிறேன். அதற்காகவே உன்னைச் சகோதரி போல் பாவிக்கிறேன். அப்படியிருந்தும்........." அவர் பேசிக்கொண்டே போனார். என்னையறியாமலே என்னுடைய கை, அவருடைய கையைப் பற்றியது. நான் உணர்ச்சி மேலீட்டால் தூண்மீது சாய்ந்தவாறு

தரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் என்னுடைய கையைப் பற்றிக்கொண்டு, மறு கையால் எனது சீவி முடித்த கூந்தலை மெதுவாக வருடினார். அவருடைய பேச்சிலே நான் மதி மயங்கி நின்றேன்.

அவர்மீது எனக்குக் காதல் உண்டா என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனால் அவரைக் கண்டதும் மரியாதை – பயபக்தி என்னையறியாமலே ஏற்பட்டது.

நான் மெய்மறந்து அவருடைய பேச்சில் ஈடுபட்டது கொஞ்ச நேரம்தான். "புனிதா" என்ற சப்தம் எங்களைத் திடுக்கிடச்செய்தது. இருவரும் பரபரப்புடன் விலகி நின்றோம்.

மாணிக்கம் அங்கே தோன்றினார். நான் அவரைப் பார்த்தேன். அவர் சுட்டுவிடுவது போல என்னை நோக்கினார். பிறகு ஒன்றும் சொல்லாமல் திரும்பிப் போய் விட்டார். நாங்கள் இருவரும் தனியாக நின்று பேசிக் கொண்டிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு எப்பொழுதுமே மிகுந்த கர்வம் உண்டு. அவருடைய அகங்காரத்தின் மீது எழும்பிய காதல்ஜ்வாலைதான் அவர்மீது எனக்கு அன்பு தோன்றாமல் எரியச் செய்து விட்டது. அவர் என்னை அடைய வீணாக ஆசைப்படு கிறார். அது நிராசையாகத்தான் முடியும் என்று நினைத்து விட்டேன்.

மறுநாள் வேதாரண்ய யாத்திரை நடந்தது. கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் "கத்தியின்றி ரத்தமின்றி" என்ற பாடல் தான் அவர்களை ஊக்குவித்ததாக அப்பா பின்னால் தெரிவித்தார். அங்கங்கே போலீசார் தோன்றி தொண்டர்களைக் கைது செய்தனர். அப்பாவுக்கு ஆறு

மாதம்; அண்ணுவுக்குப் பதினெட்டு மாதம்; இருவரும் சிறை சென்றனர். அதற்கடுத்த நாளே மாணிக்கம் ஊருக்குத் திரும்பி விடுவார் என்று நினைத்தேன். ஆனால் அவர் போகவில்லை.

தேவநேச அண்ணு அன்று மாடிமீது தனியாக என்னிடம் ஏதேதோ பேசினர். நான் அப்பொழுது உணர்ச்சி வசப்பட்டவளாக செயலற்று, அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு நின்றேன்.

வெள்ளம் போய்க் கொண்டிருக்கையில் வழியில் உள்ள மேடு பள்ளங்கள் தென்படுவதில்லை. வெள்ளம் வடிந்த பின்பு அவைகள் தானகவே தெரிகின்றன. அது போலவே அவர் பேசிய பொழுதும் என் மனதிலே விருப்பு, வெறுப்புத் தோன்ருமல் அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனல் அவர் சிறை சென்றதும், அவருடைய பேச்சுக்களால் என் மனதில் தோன்றிய எண்ணங்கள் அனேகம். அவருடைய பேச்சி லிருந்து, அவர் என்னை மனப் பூர்வமாகக் காதலிக்கிருர் என்பதை அறிந்தேன்.

தேவநேச அண்ணுவைச் சந்திக்கு முன்பு, நான் பாலைவனம் போன்ற பரந்த நிலத்தில், காதல் என்னும் சோலைக்காக அலைந்து திரிந்தேன். மாணிக்கம் போன்றவர் களுடைய துணை கிடைத்தாலும் அவர்களால் எனது வறண்ட இதயத்துக்கு ஜீவனளிக்க முடியாதென்று எண்ணினேன். ஆனல் தேவநேச அண்ணு இருண்டி ருந்த எனது இதயத்திற்கு ஒளி கொடுத்தார்.

மாணிக்கம் என்னிடம் அடிக்கடி பேச்சுக் கொடுக்க வருவார். நான் அவரைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.

என்னுடைய அலக்ஷிய பாவம் அவருடைய மனதை இன்னும் வைராக்கிய முள்ளதாக மாற்றியிருக்க வேண்டும். இரண்டொரு நாள் தங்கிய பின்பு ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் புறப்படும் பொழுது என்னிடம் வந்து "புனிதா! போய் வரட்டுமா?" என்று கேட்டார். அவருடைய கேள்வியில் ஏக்கம் இருந்தது. அவருடைய கண்கள் கருணையுடன் பிரகாசித்தன. முகபாவம், அவருடைய ஏமாற்றத்தைக் காட்டியது. நான் "சரி" என்று தலையை ஆட்டிவிட்டுப் பேசாமல் அறைக்குள் போய் விட்டேன்.

நான் தேவநேச அண்ணாவை என் இதயக் கோவிலிலே வைத்துப் பூஜிக்க ஆரம்பித்தேன். வெளி உலகத்தைப் பற்றிய கவலை எனக்கில்லை. உலகமனைத்தும் ஒன்றிரண்டு வந்தாலும், 'காந்தி'யைப் போன்ற எனது இதய மூர்த்தியின் சிறிது நேர மௌனத்திற்கு ஈடாகுமா?

மாணிக்கத்தின் பேச்சிலே ஆக்ரோஷம் இருந்தது. இவருடைய பேச்சிலே அன்பு கலந்திருந்தது. அந்த ஆக்ரோஷத்தில் உடம்பு வேகும். இந்த அன்பிலே உள்ளம் குளிரும். இந்த நிலையில் தனது இதய மூர்த்தியை விட்டுப் பிரிவதால் எவ்வளவு வேதனை மனதிற்கு உண்டாகும் என்பதை என்னைப் போன்ற பெண்கள் தான் சொல்ல முடியும்.

எங்களுடைய காதலில் வெறும் சிற்றின்ப உணர்ச்சி காணப்படவில்லை. அதிலே வாழ்க்கையின் நோக்கமும், கடமையும் கலந்திருந்து, இருண்டிருந்த என் எதிர் கால வாழ்வில் ஒளி காணப்பட்டது.

## மணிவாசகன் 5

"ஏதேனும் ஒரு பேங்கில் சேர்ந்தால் ஆறு மாதங்களுக்குப் பின்பு நல்ல சம்பளம் கிடைக்குமாம்" என்றார் என் தந்தை.

"அப்பா! உத்தியோகம் பார்க்க வேண்டுமென்ற அவசியம் இப்பொழுது என்ன? ஒருவரிடம் கைகட்டி வேலை செய்ய என் மனம் இடம் கொடுக்கவில்லை" என்றேன்.

"வேறு என்னதான் செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

"ஏதேனும் தொழில் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் அப்பா" என்றேன்.

என் தந்தை ரூபாய் வட்டிக்குக் கொடுத்து வாங்கும் லேவாதேவித் தொழில் செய்து வந்தார். இதன் மூலம் நிறையச் சம்பாதித்து நான்கு மாளிகைகள் கட்டியதோடு, ஒவ்வொரு பேங்கிலும் ஏராளமாக ரூபாய் போட்டிருக்கிறார். அந்தத் தொழிலையே பார்த்து வரும்படி என்னிடம் சொன்னார். எனக்கு இந்தத் தொழில் அடியோடு பிடிக்கவில்லை.

"நவீனத் தொழில்கள் செய்யவேண்டும். காலத்தை வீணாக்கக் கூடாது. இந்தியாவிலேயே என்றும் கண்டிராத பெரிய தொழிற் சாலையை ஏற்படுத்த வேண்டும். அதிலே ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும்." இது என்னுடைய நீண்ட நாள் கனவு.

அப்பா முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. மேலும் அந்த நேரத்தில் உலகம் முழுவதிலுமே பொருளாதார மந்தம் ஏற்பட்டிருந்தது. உற்பத்தியான சரக்குகள் விற்கப் படாமல் கிடந்தன. தொழிலாளர்களின் சம்பளம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. முதலாளி களின் முதலும் கரைந்து கொண்டே வந்தது.

இந்த நெருக்கடியான காலத்தில் எனது விருப்பப்படி நெசவுத் தொழிற்சாலை யொன்று, விரிவான முறையில் நவீனசாதனங்களுடன் அமைக்க, அப்பா விரும்பவில்லை. ஆயினும் எனது லட்சியத்திலே நான் உறுதியாக நின்றேன். என்னுடைய விருப்பத்தை அறிந்த பல நண்பர்கள் என் யோசனையை ஆதரித்து வரவேற்றார்கள். ஆனால் ஒரு தொழிலை ஆரம்பிக்கு முன்பு அதே தொழிலை நடத்தும் பெரிய ஸ்தாபனம் ஒன்றில் ஆறு மாத காலமாவது அமர்ந்து வேலை பார்த்து, அதன் நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்று யோசனை கூறினார்கள்.

ஆமதாபாத்தில் எங்கள் சொந்தக்காரரில் ஒருவர், பிரபல ராம்ஜி சேட் மில்லில் வேலை பார்த்து வந்தார். அவர் தயவால் அங்கு சென்று வேலைக்கமர்ந்தேன்.

ஒரு ஆண்டு கழிந்தது. தொழிற்சாலைக்கு வேண்டிய நவீன சாதனங்களுக்கு, அயல் நாடுகளுக்கு 'ஆர்டர்' கொடுத்தேன். பருத்தி பயிரிடுவதற்கென்று சேர்ந்தாற் போல பெரிய நிலப்பரப்பு ஒன்று வாங்கினேன். தொழிற் சாலை சாதனங்கள் வந்து சேர்ந்ததும் ஆலை ஒன்று நிர்மாணம் செய்தேன். தந்தையின் பணம் அனைத்தும் தொழிற்சாலைக்குச் செலவிடப் பட்டது. பைசாவும் காலணவுமாக வட்டி சேர்த்து பணக்காரராகிவிட்ட என்

தந்தையின் சொத்துக்கள் ஏராளமான ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களைக் காப்பாற்றி வருவதை நினைக்கையில் என் மனம் குதூகலித்தது.

ஆனால் என் தந்தை என்னைப்பற்றி அடிக்கடி நொந்து கொள்வார். பணத்தைச் 'செட்டு' செய்து சேர்த்து வைக்காமல், இருக்கும் பணத்தையும் காலியாக்கிக் கொண்டு வருவதைப் பற்றி வருந்துவார். அடிக்கடி என்னிடமும் சொல்லுவார்.

தொழிலையோ ஆரம்பித்தாகி விட்டது. அவர் சொல்லுவதற்காக நடுவில் அதை எப்படி நிறுத்துவது? தந்தை சொல்லுவதைப் பார்த்தால் தொழிற்சாலையே வேண்டாம் என்பதுதான் கருத்து. அப்படியானால் எனது லட்சியக் கனவு எப்படி நிறைவேறுவது?

முதலிலே ஆலை நன்றாக வேலை செய்தது. எல்லாப் பகுதிகளிலும் உரிமை வியாபாரிகளை (Agents) நியமித்தேன். சரக்கும் நன்றாக விற்பனையாகிக் கொண்டிருந்தது. அதனால் குதூகலமடைந்த நான், சிறிது சிறிதாக வியாபாரத்தைப் பெரிதாக்கி உற்பத்தியை அதிகரிக்கச் செய்தேன். அந்தச் சமயம் பொருளாதார மந்தம் உலகமெங்கும் வியாபாரிகளை ஒரு குலுக்குக் குலுக்கியது. எத்தனையோ பேர் மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுந்தனர். ஆனால் நான் சிறிது அசைந்து தான் கொடுத்தேன். அசைந்து கொடுத்தவனுக்கே ஏராளமான நஷ்டமென்றால் பள்ளத்தில் விழுந்தவர்களுக்குக் கேட்கவா வேண்டும்?

ஆலையில் உற்பத்தியான சரக்குகள் விற்பனையாகாமல் கிடந்தன. மிகவும் கஷ்டமான நேரம். விற்பனையாகாமல் சரக்கு குவிந்து விட்டதால் ஆலையை நடத்துவதற்கு

மேலும் முதல் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எப்படியும் ஐம்பதினுயிரம் ரூபாயாவது வேண்டியிருந்தது. இதைக்கொண்டு எப்படியாவது சமாளித்து விடலாம். பொருளாதார மந்தத்தைச் சிறிதாவது நாம் அசைத்துக் கொடுத்து விடலாம் என்று நினைத்தேன்.

இதே சமயத்தில்தான் மகாத்மா காந்தி தண்டி யாத்திரை செய்தார். நமது நாடு அப்பொழுது தேசிய உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழுந்த நேரம். அன்னியத் துணிகளும், ஆலைத் துணிகளும் பகிஷ்கரிக்கப் பட்ட நேரம். அதனுலும் எனது ஆலை உற்பத்தி சிறிதளவு தடைபட்டது.

நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று என் மூளையைக் குழப்பிக் கொண்டேன். ரூபாய் வேண்டும். அதற்காக எங்கெல்லாமோ அலைந்தேன். ரூபாய் கிடைப்பதே அரிதாக இருந்தது. ஒன்றும் தோன்ருமல் வீட்டிற்குச் சென்று கவலையுடன் படுக்கையில் படுத்தேன். அம்மா மெதுவாக அருகே வந்து உட்கார்ந்தாள். அவளைக் கண்டதும் கவலையை மறைப்பது போல முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டேன்.

"தம்பி! உனக்கு அப்பா தஞ்சாவூரிலே பெண் பார்த்திருக்கிருர்" என்ருள் சிரித்துக் கொண்டே.

"எனக்கா?"

"ஆமாம், உனக்குத்தான்."

"இப்பொழுது எனக்குத் தேவையில்லை."

"பின் எப்பொழுது தேவை?"

"நான் இப்பொழுது கலியாணம் செய்ய வேண்டுமென்ரு கேட்டேன்?"

அம்மா என் முகத்தையே பார்த்துக்கொண்டு அசையாமல் இருந்தாள். என் உள்ளத்தில் தொழிற்சாலையைப் பற்றிய கவலையின் நெருப்பே எரிந்து கொண்டிருந்தது. "ஆலையை மீட்க வேண்டும், அதற்கு லட்சம் ரூபாய், குறைந்தால் அதில் பாதியாவது வேண்டும்." இதுவே என்னுடைய தாரக மந்திரமாக இருந்தது.

வீடு பற்றி எரியும்பொழுது யாராவது சுருட்டுபற்ற வைக்க நெருப்புக் கேட்பார்களா? இப்பொழுது யார் கலியாணத்தைப் பற்றி அக்கரையுடன் கேட்டார்களாம்?

பையன் படித்து விட்டான். ஒரு தொழிற்சாலைக்கே முதலாளியாகி விட்டான். கலியாணத்தையும் செய்து வைத்து, இந்தக் கண்களால் பார்த்துவிட்டால் — இதுதான் பெற்றோர்களின் நினைப்பு.

படிப்பு, அழகு, குணம், பணம் முதலிய அனைத்தும் நிரம்பிய ஒரு பெண்ணைத் தேடிக்கொண்டிருந்தார் என் தந்தை. ஒரு நாள் தஞ்சைக்குச் சென்றிருந்தார். அங்கே பிரபல வக்கீல், உமாபதி என்னும் பணக்காரர்; சிறந்த தேசீய வாதி. அவருடைய பெண் அழகான ரூபவதியாம். பெயர் புனிதவதி. இதைத் தெரிந்துகொண்டு அவருடைய வீட்டிற்குச் சென்றாராம்.

அந்த வக்கீல் அப்பொழுது வீட்டிலில்லை. அவர் காங்கிரசில் சேர்ந்து சிறைக்குச் சென்று விட்டார். அவருடைய மனைவியிடம் அப்பா கலியாணப் பேச்சை ஆரம்பித்திருக்கிறார். அந்த அம்மாளுக்கு எங்கள் மீது பூரண திருப்தி ஏற்பட்டதாம். அதன் பின்பு இருவருமே (என் தந்தையும், அந்த அம்மாளும்) திருச்சி மத்திய சிறையில் இருக்கும் உமாபதி அவர்களைப் பேட்டி கண்டார்களாம்.

உமாபதி அவர்களும் இதற்குச் சம்மதித்து விட்டார். சிறைக்குச் சென்ற இரண்டாவது மாதம் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டு விடுதலையானார். வெளியே வந்ததும் பேட்டி கண்ட பத்திரிகை நிருபர்களுக்கு, காங்கிரசின் கொள்கைக்கு எதிராக, அறிக்கை யொன்று வெளி யிட்டார்.

"சத்தியாக்கிரகத்தாலும், சிறைக்குச் செல்லுவ தாலும், கதர் அணிவதாலும் சுதந்திரம் கிடைத்துவிடப் போவதில்லை. ஆகையால் நான் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டு விடுதலையானேன்" என்று பறை சாற்றினார்.

அவரிடம் சொத்து ஏராளமாக இருந்தது. ஆகையால் நான் பெண்ணைப் பற்றிக் கவலைப்படாமல், 'அவருடைய பெண்ணை மணந்து கொண்டால், தொழிற்சாலைக்கு ரூபாய் ஏதேனும் கொடுத்து உதவி செய்வாரா?' என்று கேட்டேன். ஆனால் அவரிடமிருந்து இலவசமாகவோ, பெண்ணிற்கு ஸ்திரீ தனமாகவோ நான் கேட்கவில்லை. ஆலைக்கு ரூபாய் கொடுத்தால் வட்டியுடன் ஏதாவது ஒரு விகிதத்தில் லாபம் தருவதாகச் சொன்னேன். அதற்கும் பெண் வீட்டார் சம்மதித்து விட்டார்களாம். நான் அன்று வரை பெண்ணைப் பார்த்து என் சம்மதத்தைத் தெரிவிக்க வில்லை. ஏனெனில் எனக்கு வேண்டியது ரூபாய் தான். அது இவ்வளவு தூரம் சுலபமாகக் கிடைக்கும் பொழுது யார்தான் வேண்டாமென்று மறுப்பார்கள்.

என்னுடன் பள்ளியில் வாசித்த எனது நண்பன் மாணிக்கம் புனிதவதிக்கு மாமன் மகனும். அவன் கூட

அவளை விவாகம் செய்துகொள்ள விரும்பினனும். ஆனல் புனிதவதி அதற்கு மறுத்து விட்டதாக அறிந்தேன்.

விவாகம் நிச்சயமாயிற்று. எனது நண்பர்களில் தேவநேசன் மட்டும் சிறைக்குச் சென்று விட்டதால் கலியாணத்திற்கு வரமுடியாமல் போய் விட்டது. ஆனல் மற்றெரு சிநேகிதனுகிய சந்திரன் இவ்வளவு தூரம் பெரிய கவியாக மாறி விடுவானென்று நான் நினைக்கவேயில்லை.

அன்று ஒரு நாள் ஆலையின் மானேஜர் வைத்திருந்த 'சுதேசிக் கொடி'ப் பத்திரிகையைப் பிரிக்கும் பொழுது 'கவிதை' என்னும் தலையங்கத்தில் காணப்பட்ட கவிதை என்னைப் பரவசப் படுத்தியது. அது ஒரு தேசியப் பாட்டு. அதிலே ஒரு வரி:— "நமது நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்காமல் சோம்பேறிகளாய் இருப்பதால் அன்னிய நாட்டுச் சாமான்களை ஆதரித்து நமது அடிமை வாழ்வை இன்னும் நன்றாக அமைத்துக் கொண்டோம்." என்ற செய்யுள் என் லக்ஷியத்திற்காகவே பாடப்பட்டது போன்றிருந்தது.

என்னுடைய சிந்தனையையும் போக்கையும் சந்திரனுடைய கவிதை எடுத்துக் காட்டியதால் அந்தக் கவிதையைப் புகழ்ந்து அவனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அன்று முதல் அவன் எழுதி, அச்சில் வெளிவந்த கவிதைகளை எனக்குத் தவருமல் அனுப்பி வந்தான். சிநேகிதர்களிலே சந்திரனைப் போன்ற உத்தமன் எனக்குக் கிடைத்தது நான் செய்த பாக்கியமேயாகும். அவனுடைய வற்புறுத்துதலினுல்தான் நான் தமிழை நன்கு பயின்று வந்தேன்.

தேவநேசன் சிறைக்குச் சென்றதாக பத்திரிகைகளில் படித்தேன். ஆனால் எனக்கு என்னமோ சிறைக்குச் செல்லுவ தெல்லாம் பிடிக்கவில்லை. மாமனாரின் உப தேசமோ என்று கேட்டு விடாதீர்கள். அதற்கு முன்பே இந்தக் கொள்கை எனக்கு உண்டு. நமது நாட்டில் தொழிலைப் பெருகச் செய்து, அதன் மூலம் அன்னியச் சாமான்களை நிறுத்திவிட முயல வேண்டும். கிடைத்த அதிகாரங்களையும், பதவிகளையும் கைப்பற்றிக் கொண்டு கிடைக்காதவற்றிற்குப் போராட வேண்டும்.

ஆனால் இன்று அப்படி நடக்கவில்லை. அரசாங்கத் தார் ஒரு சில அதிகாரங்கள் தர முன் வருவதை மறுத்து பூரண சுதந்திரம் ஒருங்கே கிடைக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி போராடுகிறார். இந்த வழி சுதந்திரத் தைக் கொஞ்சம் தள்ளிப் போட்டுக் கொண்டே வரும் என்பதே என் அபிப்பிராயம். ஏனெனில் ஆங்கி லேயர் பூரண சுதந்திரத்தையும் ஒரே தடவையில் நம்மிடம் ஒப்படைத்துவிட்டுக் கப்பலேறி விடமாட்டார் கள் என்பது எல்லோரும் அறிந்ததே.

என் கலியாணத்திற்குத் தேவநேசனுக்கு மட்டும் அழைப்பு அனுப்ப முடியாமல் போய்விட்டது. சந்திரன் சுதேசிக் கொடியின் வாயிலாகத் தனது வாழ்த்தைத் தெரிவித்ததுடன், எனது ஆலையின் படங்களையும் பத்திரிகையில் வெளியிட்டு, அதைப்பற்றி ஒரு கட்டுரை யும் வெளியிட்டான்.

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பலவண்மைகள் செய்வோம்"

என்று பாரதியின் கவிதையையும் அதிலே போட்டு, "பாரதியாரின் ஆவலைப்பூர்த்தி செய்வதே மணிவாசகனின் லட்சியம்' என்றும் எழுதியிருந்தான்.

மாணிக்கம் மட்டும் விவாகத்தின் பொழுது வந்திருந்தான். ஆனால் அவன் முகத்தில் தெளிவோ சந்தோஷமோ காணப்படவில்லை. புனிதவதியின் சம்பந்தமாக, அவனுடைய காதல் ஏமாற்றத்தையே அவன் முகம் எடுத்துக் காட்டியது. என்னுடன் கூட அவன் கலகலப்பாகப் பேசவில்லை. விவாகத்தின் மறுநாளே அவன் ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

நான் புனிதவதியைப் பற்றி முதலில் அலக்ஷியமாகவே இருந்து விட்டேன். பணத்தின் மீது குறியாக இருந்ததால் மணப்பெண்ணைப் பற்றிச் சிந்திக்க அவகாசமில்லை. எதிர்கால வாழ்வில் என்னுடன் சம அந்தஸ்து வகித்து, எனது கஷ்ட நஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ளப் போகும், வாழ்க்கைத் துணைவியைப் பற்றி ஏன் பராமுகமா யிருந்தேனென்று தெரியவில்லை.

அன்று—முதல் நாள் இரவு, படுக்கை அறை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. நான் அறையின் நடுவிலே போடப்பட்டிருந்த மஞ்சத்தின் மீது உட்கார்ந்து எதிரே எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய கனவு காணும் மனம், அப்பொழுதும் என்னுடைய தொழிற்சாலையைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்தது.

புனிதவதி ஒரு தட்டில் சந்தனம், பூ, பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களை வைத்து, அதைக் கையிலே ஏந்திக் கொண்டு, ஒய்யாரமான நடையில்

என் அறைக்குள் புகுந்தாள். மின்சார விளக்கின் கீழே, நன்கு அலங்கரிக்கப்பட்ட அறையில், ஜரிகைத் தலைப்புள்ள நீலப்புடவை யணிந்து, லலிதமான நடையுடன் அவள் என்னை நோக்கி வந்தது ஒரு தெய்வ மாது தேவலோகத்திலிருந்து வருவதுபோல இருந்தது.

களங்கமற்ற முகம்—அந்த முகத்திலே ஆழ்ந்த வருத்தத்தாலோ, வாழ்க்கையின் ஏமாற்றத்தாலோ ஏற்பட்ட ஒரு குறை ரேகைபோலத் தென்பட்டது. அவளுடைய கண்களோ, 'டால்' வீசும் ஜரிகைப் புடவையின் தலைப்பையும் மிஞ்சிவிட்டது. அவள் என் முன்பு ஒரு பதுமைபோல நின்றாள். நானும் உணர்ச்சி வசப்பட்டவனாய், அவளுடைய மேனியின் தெய்வீக சௌந்தர்யத்தை என்னுடைய இரு கண்களாலும் பருகிக் கொண்டிருந்தேன்.

பதினெட்டு மாதத் தண்டனை எனக்கு எவ்வித வியப்பையும் அளிக்கவில்லை. இதை நான் எதிர்பார்த்துத் தான் இருந்தேன். ஆனால் இரண்டு மாதங்களுக்குள் நான் திடுக்கிடும்படி ஒரு காரியம் நடைபெற்றது. வக்கீல் உமாபதியை, ராஜாஜிக்கு அடுத்தபடி ஓர் உயர்ந்த மனித ராக நினைத்திருந்தேன். ஆனால் அவர் கூடு விட்டுக் கூடு பாய்வார் என்று கனவிலும் கருதவில்லை.

சத்தியாக்கிரகத்திற்கு முன்பு, பொதுக்கூட்டங்களில் அவர் பேசிய ஆர்வமும், அவருடைய தேசீய சேவை களும், என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. புனிதவதியை நினைத்து என் மனம் சபலமுறும்போது, அவருடைய வீர கர்ஜனைகளே என்னைத் தட்டி எழுப்பியது.

ஆனால் அவர் திடீரென அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டு விடுதலையானதுடன், அறிக்கையும் வெளி யிட்டது எனக்கு வியப்பை அளித்தது. மனிதனுடைய மனம் ஒரே லக்ஷியத்தைக் கொள்ளாவிட்டால் அவனுடைய வாழ்க்கைப் பயனற்றுப் போகும். மேலும், உறுதியில் லாததும் சரியான லக்ஷியமற்றதுமான மனம், வாழ்க்கை யில் நடைபெறும் எதிர்பாராத சம்பவங்களால் வெகு சீக்கிரம் மாறிவிடுகிறது என்பதையும் கண்டேன். இதனால் என் மனம் இன்னும் உறுதியே அடைந்தது.

சுதந்திரம், தேசியசேவை இவற்றையே மேற் கொண்ட என்னுடைய எதிர்கால வாழ்வு எப்படி நடக் கும் என்பதைக் கற்பனைக் கண்ணால் பார்க்க ஆரம்பித்

தேன். இருள் சூழ்ந்த சிறையிலே — கள்ளுக்கடை முன்னே—பல்லாயிரக் கணக்கான மக்களின் பொதுக் கூட்டத்திலே — தொண்டர்களின் நடுவே — கிராமவாசி களிடையே இருப்பதுபோல ஒரு கனவு. ஆனால், இதற்கு முன்னால் புனிதவதியை மணந்து கொள்ள வேண்டுமே? அவள் என்னுடன் மேற் சொன்ன வழிகளில் ஒத் துழைப்பாளா?

அவள் என்னை உள்ளன்புடன் காதலிக்கிறாள். என் மனதிலும் அவள் இடம் பெற்றுவிட்டாள். தேசிய சேவைக் கென்று கிளம்பிய என் மனதை அவள் சிதறச் செய்துவிட்டாள். அவளுடைய பேச்சும், பார்வையும்,— அன்று ஒரு நாள் அந்தி நேரத்தில், மாடி வீட்டில், கருமை யான இருள் படர்ந்த அந்த நேரத்தில், அவளிடம் என் இதயத்தைத் திறந்து விட்டேன். நான் சொல்ல முடிந்த தெல்லாம் சொன்னேன்.

அன்று அவளுடைய கர ஸ்பர்சம்—மனம் அதையே நினைத்து ஏங்குகிறது. சிறையிலே பொழுது போகா விட்டால் படிப்பேன். அதிலும் சிரத்தை யில்லாவிட் டால் புனிதவதியைப் பற்றிய கற்பனை தான். சிலநாட் களில் இரவு முழுவதும் தூக்கமே வராது. கொசுக் கடி – புழுக்கம்; இந்த நேரத்தில் புனிதவதியின் ஞாப கத்தால் நேரம் போவதே தெரியாது. காவலாளர்கள் மாறுவதற்கு அறிவிக்கப்படும் மணி ஓசை மட்டும் சிற்சில சமயங்களில் என் சிந்தனையைக் கலைத்துவிடும்.

ஒரு நாள் இரவு நல்ல தூக்கம். புனிதவதி எதிரே வந்தாள். கற்பனையிலல்ல — கனவில் தான். அவள் மட்டும் வந்திருந்தால் ஆவலுடன் ஓடி அவள் கையைப்

பிடித்திருப்பேன். ஆனால் அவள் இன்னும் சில பெண்களுடன் வந்திருந்தாள். "புனிதவதி!" என்று அழைத்தேன். இடுப்பில் குடத்துடன், மற்ற மங்கையர்களுடன் சேர்ந்து நடந்து வரும் அவள் என்னைப் பார்த்து புன் முறுவல் செய்தாள். கிணற்றருகே வந்ததும் கால் வழுக்கி கிணற்றில் விழுந்து விட்டாள். "அண்ணா" என்ற சப்தம் கேட்டது. சுற்றி நின்ற பெண்கள் கைகளை நெறித்துக்கொண்டு அலறுகின்றனர்.

உடனே அவளைத்தூக்க ஓட முயன்றேன். கால்களை எடுத்து வைக்க முடியவில்லை. என்னுடைய பாதம் தரையில் ஒட்டிக்கொண்டது போலிருந்தது. எவ்வளவோ முயன்றும் அடி எடுத்து வைக்க முடியவில்லை. எங்கிருந்தோ ஒருவன் வேகமாக ஓடிவந்தான். அவசரத்தில் அவனுடைய முகத்தை நான் கவனிக்கவில்லை.

திடீரென்று அவன் கிணற்றுக்குள் குதித்தான். கொஞ்ச நேரத்தில் புனிதவதியைத் தோளில் சாத்திக் கொண்டே மேலே ஏறி வந்து நேராக எங்கேயோ போய் மறைந்துவிட்டான். நான் "புனிதவதி! புனிதவதி!" என்று கத்தினேன். உடனே விழித்துக்கொண்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்தேன்.

கண்டது கனவுதான். ஆனாலும் என்மனம் என்னையறியாமல் வேதனையுற ஆரம்பித்தது. அடிக்கடி புனிதவதியின் தோற்றமே தென்பட்டது. வழக்கமாக எனக்கு வரும் "சுதேசிக்கொடியை"ப் பிரித்தேன்.

"தொழிற் தலைவன்" என்ற மகுட மிட்டு ஒரு கட்டுரை காணப்பட்டது. அதில் மணிவாசகனுடைய வாழ்க்கைச் சரித்திரம் நன்கு எழுதப் பட்டிருந்தது.

பள்ளியை விட்டுப் பிரிந்ததிலிருந்து மணிவாசகனைப் பற்றி ஒரு விபரமும் அறிய முடியாமலிருந்தேன். ஆனால் இந்தக்கட்டுரையிலிருந்து அவனைப்பற்றிய விபரங்கள் அறிந்து கொண்டேன்.

மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறான் மணிவாசகன். எப்படி யாவது நமது தாய் நாட்டில் தொழில் அபிவிருத்தி யடைய அவன் பாடுபடுகிறான். அவன்—இன்றுமட்டு மல்ல—பள்ளியில் படிக்கும் காலத்திலேயே இம்மாதிரி விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து, திட்டமிட்டுக் கொண்டிருப்பான்.

ஆனால் இதென்ன?—“எமது ஆசி” என்று ஆசிரியர் எழுதியிருக்கும் தலையங்கம் எனக்குத் திகைப்பை ஊட்டியது. அந்தத் தலையங்கத்தில் காணப்பட்ட ஒரு பெயர்தான் இதற்குக்காரணம். புனிதவதிக்கும், மணி வாசகனுக்கும் விவாகம் நடந்தேறியதற்கு ஆசிரியர் தன்னுடைய ஆசியைத் தெரிவித்திருக்கிறார். புனிதவதி! என்ன அருமையான, புனிதமான பெயர்? ஆனால் மணி வாசகனை விவாகம் செய்துகொண்டது என்னுடைய புனிதவதியா?

இல்லை! இல்லை! உலகத்திலே இன்னும் எத்தனையோ புனிதவதிகள் இருக்கலாம். அவர்களில் ஒரு பெண்ணைத் தான் அவன் மணம் முடித்திருக்கிறான். என் புனித வதியோ—அதோ நிலா முற்றத்திலே, கட்டிலில் உட் கார்ந்து, நிலவின் வெம்மையால் அவள் உள்ளம் புழுங்கி, என்னை நினைத்து உருகுகிறாள். அவள் கண்களிலே நீர் நிறைந்து காணப்படுகிறது. அவள் எனக்காக, என் வரவை நோக்கிக் காத்திருக்கிறாள்.

ஆனால் மற்றொரு பக்கத்தில் காணப்படும் மணத் தம்பதிகளின் புகைப்படம்—? சந்தேகமேயில்லை. இவள் என் புனிதவதிதான். தஞ்சை நகர் பிரபல வக்கீல் உமாபதி அவர்களுடைய புத்திரி என்றால் என் புனிதவதிதானே! இல்லை, என் புனிதவதி இல்லை. அவள் மணிவாசகத்தின் புனிதவதியாகிவிட்டாள். உண்மையாகவே இத் திருமணம் நடந்திருக்குமா? ஒன்றுமே புரியவில்லையே! தலை சுற்றியது. படுத்து விட்டேன்.

அவளுடைய வதனம், அவளுடைய நடை, அவளுடைய குரல்—நினைத்தாலே மனதில் அவை இன்ப உணர்ச்சியை எழுப்புகின்றன. அந்தோ! அவள் மணிவாசகத்திற்கு வாழ்க்கைத்துணைவியாகிவிட்டாள். கற்பனைகள் எத்தனை? மனக்கோட்டை கட்டுவதில் எனக்கு நிகர் நான்தான். ஆனால் அவையனைத்தும் ஒரே வினாடியில் பொடி சூரணமாகி விட்டன. அழகான கற்பனைக்கோட்டையை நிர்மாணித்த அந்த இடத்திலே, அகன்ற பாழ்வெளியே காணப் பட்டது. பார்வை செல்லும் தூரம் வரை ஒரே ஞான சூன்யப் பிரதேசம்தான். பாலை வனத்திற்குக்கூட அதை ஒப்பிடலாம்.

மனம் ஏதோ வேதனையால் துன்புற ஆரம்பித்தது. ஒரு வேலையும்செய்ய மனமின்றி வாளாவிருந்தேன். பேசாமல் ஓய்வுற்றிருந்தாலும் மனம் இருப்பதில்லை. அது எங்கெல்லாமோ பறந்து விடுகிறது. நடந்த சம்பவங்களை நினைக்க, நினைக்க மனம் அல்லலுறுகிறது. இன்பங்கள் என் இதயத்தைவிட்டு ஏகுகின்றன. கவலைகள் நெஞ்சைக் கவ்வுகின்றன. ரோஜா மடிந்தாலும் முட்கள் மடிவதில்லை. அது இன்னும் உரம் பெறுகிறது. அதைப்போலவே வாழ்க்கையில் இன்பதுன்பங்கள் ஏற்பட்டாலும், இன்பம்

முடிந்தாலும், துன்பம் மட்டும் நீங்காமல் இதயத்தைத் துளைக்க ஆரம்பித்து விடுகிறது. புனிதவதியை என் மனதிலிருந்து அகற்றப் பெரும் பாடு பட்டேன். அதனால் உண்டான அதிகமான துக்கமே மனதில் நிலைத்தது.

அப்பாவுடைய இரண்டு கடிதங்களுக்கும் பதில் எழுதவில்லை. மனம் நிம்மதியற்றிருக்கும் பொழுது எந்த வேலையில்தான் ஈடுபட முடியும்?

1931 ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். நானும் வெளியே வந்தேன். தஞ்சைக்குச் சென்று இருவர் முகங்களைக்காண ஆசை உண்டாயிற்று. ஒன்று உமாபதி யவர்கள். மற்றொன்று புனிதவதியின் புன்சிரிப்புத்தவழும் களங்கமற்ற முகம்.

உமாபதி அவர்களுடைய நட்பும் பாசமும் மறக்க முடியவில்லை. ஆனால்.நான் உறவினனாக மட்டும் இருந்திருந்தால் அவரைப் போய்ப்பார்க்கலாம். அவருக்கு நான் அப்படி ஒன்றும் நெருங்கிய உறவினனல்ல. அரசியல் மூலம்தான் அவரிடம் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

தேசத்திற்கே துரோகம் செய்யும் வகையில், தேசீயக் காங்கிரசைப் படுகுழியில் தள்ளும் இவர்களுடைய நட்பு இனி எதற்கு? காங்கிரசைப் பொறுப்புடன் நடத்தி வரும் தலைவர் மகாத்மாதான். அவர் தேசீயத் தொண்டர்களுக்குச் சேனாதிபதி. அவருடைய ஆணைக்கு ஒவ்வொரு வீரனும் அடங்கி நடக்கவேண்டுமே யொழிய, சேனாதிபதிக்கே புத்தி சொல்லக்கிளம்பி விட்டால் பின், சேனாதிபதியால் எப்படி எதிரிகளுடன் சண்டை செய்து வெற்றி

யடைய முடியும்? உமாபதியின் விபரீதப் போக்கு எனக்கு அருவருப்பை உண்டாக்கியதால், அவரைப் பார்க்க என் மனம் வெறுத்தது. இனி புனிதவதிதான் பாக்கி. அவள் தஞ்சையில்தான் இருக்கிறுளென்பது என்ன நிச்சயம்?

நான் அவளை நினைத்துக்கொண்டிருந்த அதே நேரத்தில் புனிதவதி, உப்பரிகையின் மாடத்திலே, மில் முதலாளியாகிய மணிவாசகத்துடன் காதல் பேச்சுகள் உரையாடிக்கொண்டு இருப்பாள். நான் மூட்டைப் பூச்சிகளின் தொந்தரவால் தூக்கம் வாராமல், சென்னைக்குச் செல்லும் ரயில் வண்டியில் மூன்றும் வகுப்பில் உட்கார்ந்திருக்கிறேன்.

நேரே சென்னைக்குப் புறப்பட்டு வருவதாக அப்பாவுக்கு ஒரு தந்தியை அனுப்பிவிட்டு, சென்னைக்குச் செல்லும் ரயில் வண்டியில் பிரயாணம் செய்தேன். வண்டி மாயவரத்தில் நிற்கும் பொழுது பிளாட் பாரத்தில் ஏராளமான ஆட்கள் நின்று கொண்டிருந்தனர். அரசியல் கைதிகள் விடுவிக்கப் பட்டார்கள் என்றதும் அவர்களுக்கு மாலையிட்டு உபசரிக்க, வண்டி வரும் சமயத்தில் அங்கு கூடியிருந்தனர்.

நான் மெதுவாக எட்டிப் பார்த்தேன். என்னுடன் இரு நண்பர்களும் விடுதலையாகி என் வண்டியிலேயே வந்து கொண்டிருந்தனர். எல்லோருக்கும் மாலை போட்டு தேசியப் பாட்டுக்களைக் கோஷமிட்டனர். அந்தக் கூட்டத்திலிருந்து, என் தந்தையும் வண்டியில் என்னுடன் வந்து ஏறிக்கொண்டார். மாயவரத்திற்கு அவர் வந்திருக்கும் பொழுது நான் விடுதலையாகி வெளிவந்த செய்தி கேட்டு என்னை எதிர் நோக்கிக் காத்திருந்தாராம். மறுநாட் காலை இருவரும் காரியாலயத்திற்குச் சென்றோம். அங்கே சந்திரன் உட்கார்ந்திருந்தான்.

## சந்திரன்

7

நான் ஒரு பத்திரிகாசிரியனாகி விட்டேன். தேவ நேசனோ காங்கிரஸ் தொண்டனாகி விட்டான். மாணிக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டராகி விட்டான். மணிவாசகனோ மில் முதலாளியாகி விட்டான். நாங்கள் நால்வரும் ஒரு பள்ளியில், ஒரு வகுப்பில், ஒரே குருவிடம் பாடம் கற்றுக் கொண்டிருந்தாலும், எங்களுடைய போக்கு ஒவ்வொருவருக்கும் நேர் மாறாக அமையுமென்று அப்பொழுது சிந்தனைகூடச் செய்திருக்க மாட்டோம். ஒவ்வொருவனும் அவனுடைய வாழ்க்கையை, சூழ்ப்புற நிலைமைக்கும், காலத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வாறு, ஒரு லக்ஷியத்திற்காக அமைத்துக் கொள்ளு கிறார்கள். அந்த லக்ஷியத்தை நோக்கியே அவர்களுடைய வாழ்க்கை, வாழ்நாள் முழுவதும் இயங்குகிறது.

எழுத்துத் தொழிலிலும் நான் ஒரு லக்ஷியத்தையே கைக் கொண்டேன். நாட்டிற்கு நன்மை யுண்டாகும் விதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சாலைகள், விடுதலை வேண்டிப் பாடுபடும் காங்கிரஸ், தேசியத்தை ஆதரிக்கும் பத்திரிகைகள், கிராமங்களிலே தொண்டு செய்யும் சங்கங்கள், இவற்றைப் போற்றி, பத்திரிகை மூலம் உற்சாகம் காட்டி ஆதரிப்பதே எனது லக்ஷியம்.

இதே லக்ஷியம் தான் மங்கையர்க்கரசிக்கும் பிடித் திருக்கிறது. ஆரம்பத்தில் அவள் நாவலும் கதைகளும் மட்டுமே படித்து வந்தாள். ஆனால் அவளுடைய தந்தையும் தமையனும் தேசிய வாதிகளாயிருப்பதாலும், "சுதேசிக் கொடி" தேசியப் பத்திரிகை யானதாலும், நான் மேற்

சொன்ன முறையிலே பத்திரிகையை நடத்துவதாலும்; அவளும் ஒருவாறு சுதந்திர மாளிகைக்குச் செல்லும் பாதையிலேயே போகும்படி திருப்பப் பட்டாள்.

முதலில் நான் ஏதேனும் தலையங்கம் எழுதி வெளியிட்டால், அதைப் பார்த்து அபிப்பிராயம் கூறுவாள். ஆனால் இப்பொழுது அவள் அப்படியில்லை. அவளே சில சமயங்களில் தலையங்கம் எழுதி விடுகிறாள்.

சமீபத்திலே நடந்த பெண்கள் மகா நாட்டிலே பெண்களின் உரிமையைப் பற்றியும், தேசிய விடுதலையைப் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறின. சரோஜினி தேவியின் கர்ஜனையும், விஜயலட்சுமி பண்டிட் செய்த அபாரமான பிரசங்கமும் பெண்கள் உலகத்தைக் கவர ஆரம்பித்தது.

"பெண்கள் சமீபத்திலே நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் எவ்வளவு பெரிய பங்கு எடுத்துக் கொண்டார்கள் தெரியுமா? பெண்கள் உலகம் விழிப்படைய வேண்டுமானால், அவர்களுடைய உரிமையை அவர்கள் அடைய வேண்டுமானால் தாங்களே வலிய வந்து தொண்டில் ஈடுபட வேண்டும். அதிகாரங்களைக் கைப்பற்ற வேண்டும். பெண்கள் காங்கிரஸ் போராட்டத்தில் ஏராளமான அளவில் கலந்து கொண்டால் அது தனது லக்ஷியத்தை சீக்கிரம் அடைந்துவிடும். பெண்களின் துணையில்லாமல் ஆடவர்களே சுதந்திரத்தைப் பெற்று விட முடியாது." அடேயப்பா! அன்று நடந்த பிரசங்கங்கள் — அதை நினைத்துப் பார்க்கும் பொழுது, சுதந்திர உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் ஏன் உண்டாகாது? இதைப்பற்றியே நான் தலையங்கம் எழுதினேன். ஆனால் மங்கயர்க்கரசிக்கு இது பிடிக்கவில்லை.

எனது தலையங்கத்திற்குப் பதில் வேறு ஒன்று அவளிடம் போல் எழுதினாள்.

அவளுடைய கட்டுரை புரட்சி மனப்பான்மையிலேயே எழுதப் பட்டிருந்தது. தேசியக் காங்கிரசின் கொள்கை அவளுக்குப் பிடிக்கவில்லையாம். பெண் மக்கள் காங்கிரசில் சேர்ந்து வேலை செய்வதில் பிரயோசனமில்லையாம். அவர்கள் துணிந்து புரட்சிகளில் ஈடுபட வேண்டுமாம். அதைப் பார்த்து ஆண்கள் வெட்கித் தலை குனியும்படி நேரிடுமாம்.

அதற்குச் சில உதாரணங்களும் எழுதியிருந்தாள். ஜான்ஸிராணி லட்சுமிபாய் ஆங்கிலேயரை எதிர்த்துக் கோட்டையைக் காவல் காக்கவில்லையா? சந்த்பீபி வீரமகள் இல்லையா? நூர்ஜஹான் மொகலாய சாம்ராஜ்யத்தையே நிர்வாகம் செய்யவில்லையா? அவளுடைய கேள்விகளும், எழுத்துக்களும் எனக்கு விளையாட்டைப்போல் தோன்றினாலும் தேவநேசனுக்கு அடியோடு பிடிக்கவில்லை. அவள் இனி தலையங்கம் எழுதக்கூடாதென்றும், இப்படி எழுதினால் பத்திரிகையின் கொள்கை கெட்டு விடுவதுடன், காங்கிரசின் கட்டுப்பாட்டை மீறி நடப்பதாகுமென்றும் கண்டித்தான்.

ஆயினும் மங்கையர்க்கரசியின் பிடிவாதம் மாறவில்லை. அவள் தன்னுடைய போக்கிலேயே சென்று கொண்டிருந்தாள். அதற்காக எங்களிடையே உள்ள நட்புக் குன்றவில்லை. அது மேலும் வளர்ந்துகொண்டே இருந்தது.

ஒரு நாள் திடீரென்று தேவநேசன் என் முன்பு வந்து நின்றான். அவனை நிமிர்ந்து நோக்கினேன். அவன் சொன்னான் "சந்திரா! இயந்திரத் தொழிலைப்பற்றி நான்

உன்னிடம் கூறும் பொழுதெல்லாம் நீ என்னுடைய கருத்தை ஆதரிப்பதேயில்லை. இயந்திரத் தொழிலினால் தொழிலாளரும் விவசாயிகளும் நிரம்பிய நமது நாடு எவ்வளவு சீர்கேடடைகிறது தெரியுமா? மகாத்மா சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் பொன்மொழி என்பது அனுபவத்திற்குப் பிறகுதான் தெரியவருகிறது. கோயம் புத்தூரிலே ஒரு பெரிய ஆலையில் வேலை நிறுத்தமாம். இன்றைய தினசரிகளை நீ பார்க்கவில்லையா?'' என்றான்.

"ஆமாம். வேலை நிறுத்தம் தான். ஆனால் இந்த வேலை நிறுத்தம் தொழிலாளருக்கே பெரிய ஆபத்து என்பது தான் என்னுடைய நோக்கம். நமது நாடு இயந்திரத் தொழில் அபிவிருத்தியில் மேன்மையடையாமல், வறுமையில் வதங்கிக் கிடக்கிறது. இந்த நிலையில், மணிவாசகனைப் போன்ற இரண்டொரு தைரியசாலிகள் முன்வந்து, பணத்தை வாரி இறைத்து, ஆலைகளை அமைத்து, ஆயிரக் கணக்கான ஏழைத் தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கின்றனர். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம் ஒழிவதுடன், இந்தியத் தொழில் அபிவிருத்தியடையும். இந்தியாவின் இன்றைய நிலையை அறிந்து கொள்ளாத அந்தப் பாமரத் தொழிலாளருக்கு இது எப்படி விளங்கப்போகிறது?

"தன் வயிற்றைக் கழுவினால் போதுமென்றே அவர்கள் நினைக்கிறார்கள். லாப நஷ்டத்தைப் பற்றியோ, நாட்டின் முன்னேற்றத்தைப்பற்றியோ அவர்களுக்கு அக்கறையில்லை. ஆயிரக்கணக்கான பேருக்கு ஒரு மில் முதலாளி சம்பளம் கொடுத்து அவர்களுடைய குடும்பத்தைப் போஷிக்கிறானே என்ற காருண்யம் கூட இல்லாமல்,

இன்னும் அதிகச் சம்பளம் தர வேண்டுமென்று வேலை நிறுத்தம் செய்தால், இருப்பதை எல்லாம் முதலாளிகள் இவர்களுக்கே கொட்டி யளந்துவிட்டு, வியாபார முன்னேற்றத்திற்குப் போதிய ஆதாயமில்லாமல் சீக்கிரம் ஆலையை மூடிவிட வேண்டியதுதான்" என்றேன்.

என் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த தேவநேசனுக்குச் சிறிது கோபம் உண்டாயிற்று. எங்களுடைய தர்க்க வாதமும் பலத்தது.

"சந்திரா! நீ ஒரு பத்திரிகாசிரியனாக இருப்பதற்குத் தகுதியற்றவன். இதைச் சொன்னதற்காகக் கோபித்துக் கொள்ளாதே. ஒரு பத்திரிகை—தேசியக் கொள்கையை இறுதி லக்ஷியமாகக்கொண்ட "சுதேசிக் கொடி"ப் பத்திரிகை—இம்மாதிரி முதலாளிகளின் தூண்களாகி விட்டால் பிறகு தொழிலாளரின் கதி என்ன? வேலை நிறுத்தம் ஏன் அவர்கள் செய்கிறார்கள்? காரணம் அறியாமல் பேசாதே!

"அரைவயிற்றுச் சோற்றுக்குக் கூட வழியில்லாததால் அவர்கள் முதலாளிகளுடன் போராட வேண்டியதிருக்கிறது. ஜெயில் கூடங்களைப்போன்ற சிறிய அறைகளில் குழந்தை குட்டிகள் டஜன் கணக்கில் இருக்க, மூச்சு முட்டித் திணறும் அறைகளில் வாசம் செய்து கொண்டு, ஆலைகளில் நாள் முழுவதும் வேலை செய்து பத்து அணச் சம்பளம் வாங்கி, அவன் யாரைத்தான் காப்பாற்ற முடியும்? சுகாதாரக் குறைவினால் ஏதேனும் தொத்து நோய்கள் அவர்களைத் தொடருமானால் எமனிடம் சரணாகதி யடைவதைத் தவிர, வைத்தியம் என்பதே அவர்களுடைய அகராதியில் இல்லை. ஏனெனில் டாக்ட

ருக்கு ரூபாய் கொடுக்க வேண்டுமல்லவா? அவர்கள் உழைத்துக் கொடுக்கப் பிறந்தார்களேயன்றி, அதன் பலனை அனுபவிக்கப் பிறக்கவில்லை போலும். இங்கிலையில் அவர்கள் வாழ்வதா? சாவதா?

"எல்லாம் போகட்டும். சாப்பாடாவது கொஞ்சம் நல்ல சாப்பாடாக இருக்கக் கூடாதா? நன்ருகச் சாப்பிட்டால் தானே நன்ருகவும் வேலை பார்க்க முடியும். இதற்காக முழுவயிறுக்கும் சோறு போடும்படி அவர்களுடைய முதலாளிகளை—பிரத்தியக்ஷ தெய்வங்களை—அணுகினல் அது குற்றமா? "போலீஸ்காரர்களைக் கையாளாக உபயோகித்து தொழிலாளர்களை அடக்குவோம்" என்று முதலாளிகள் கொக்கரிக்கிருர்களாம். போலீசாரைத் தொழிலாளர்கள் பார்த்ததே யில்லையா? போலீசார் ஏற்பட்டதே தொழிலாளரை அடக்கி, முதலாளிகளுக்கு லாபம் வாங்கிக் கொடுக்கத்தானு? அவர்கள் ஒன்றுமறியாத பாமரத் தொழிலாளரைச் சவுக்கினல் அடித்துத் தொந்தரவு செய்வதுதான் நியாயமா? பசிக்கொடுமை தாங்காது கருணை செய்யும்படி கையேந்தி நிற்க, அந்தக் கைகளிலே பிரம்பு கொண்டு அடிப்பதா? எந்த நேர்மையான அரசாங்கத்திலும், மக்களால் ஆளப்படும் நாட்டிலும் இந்த அநீதி நடக்குமா?

"இச் செய்கையை ஆக்ஷேபித்து அவர்கள் வேலை நிறுத்தம் செய்தால், அதை ஆதரித்து 'சுதேசிக்கொடி' போன்ற பத்திரிகைகள் எழுதாமல், வேலை நிறுத்தத்தைக் கண்டித்து எழுதி, முதலாளிகளுக்கு மறைமுகமாக உதவி செய்வதா?"

தேவநேசன் மூச்சு விடாமல் பேசினான். காங்கிரஸ் காரர்களில் தேவநேசனைப் போன்றவர்களும் சிலர் இருக்கின்றனர். நியாயம் என்பது ஒன்று இருக்கிறது என்பதை அவர்கள் நினைப்பதேயில்லை. தங்கள் கக்ஷியையே எடுத்து வக்கீல் வாதம் செய்கிறார்களே யொழிய, இருசாராரின் நிலைமையையும் ஒத்திட்டுப் பார்ப்பதென்பது அவர்களுக்கு வழக்கமில்லை போலும். இம்மாதிரி மனிதர்களுடன் பேசுவதில் பயனில்லை. ஆகையால் அன்று சுதேசிக் கொடிக்கு தலையங்கம் எழுதுவதைப் பிறகு யோசனை செய்து எழுதலாமென நினைத்து, பகல் போஜனத்திற்கு வெளியே சென்றிருந்தேன்.

திரும்பி வந்து பார்க்கும்பொழுது எழுத்துக்கோர்ப்பவன் (Compositor) அச்சின் மாதிரிப் பிரதி (Proof) ஒன்று கொண்டு வந்தான். அதைப் படித்ததும் திகைத்தேன். அதில் எழுதியிருந்தது அனைத்தும் சற்று முன்பு தேவநேசன் என்னிடம் பேசிய சொற்றொடர்கள்தான். நானும் அதை ஆக்ஷேபிக்கவில்லை. தலையங்கம் அச்சிடப்பட்டு 'சுதேசிக்கொடி' வெளிவந்தது.

இரண்டு தினங்களில் கோயம்புத்தூரிலிருந்து ஆசிரியரின் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. ஆசிரியருக்கு கோவை ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் எழுதியிருந்தார். 'சுதேசிக்கொடி'ப் பத்திரிகையின் தலையங்கத்தைப் பார்த்தோம். எங்களை முழுமனதுடன் ஆதரிக்கும் ஒரே பத்திரிகை அதுதான். முன்பு நீங்கள் எழுதிவந்த தலையங்கங்களைப் பார்த்ததும், வேலைநிறுத்தம் செய்வது சரியல்ல என்று நினைத்தோம். ஆனால் தொழிலாளரின் தலையிலே கைவைக்க முதலாளிகள் ஏற்பாடு செய்ததை அறிந்தும் நாங்கள் வேலை நிறுத்தம் செய்யாமலிருக்க முடியவில்லை.

"இன்று எங்கள் வேலை நிறுத்தத்தை 'சுதேசிக் கொடி' போன்ற தேசியப் பத்திரிகைகள் ஆதரித்ததும், எங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளவு கடந்து விட்டது. எல்லோரும் உறுதியுடன் வேலைநிறுத்தம் செய்கிறோம். 'திலகர்' மில் என்று, தேசத்தியாகி,— மக்களுக்காக—தொழிலாளரின் நலனுக்காக—உழைத்த மாபெருந் தலைவரின் பெயரை வைத்து, கொள்ளை லாபம் அடிக்கும் முதலாளிகளிடம் லாபத்திற்காக இராப்பகலாக உழைத்து, உழைத்து ஓடாய்ப்போன எங்களுக்கு, வயிறு நிறைய உண்டு, உறங்குவதற்கு வசதி செய்யும்படி கேட்டால் அது குற்றமா? உலகமக்களின் கண்களைக் கட்டுவதற்காக 'திலகர் மில்' என்று பெயர் வைத்துவிட்டு, திலகரின் கொள்கைக்கு மாருக வேலை செய்வதுதான் நியாயமா?"

"முதலாளிகள் எங்கள் கோரிக்கைக்கு இணங்குவதாகக் காணேம். இப்பொழுது ஒரு வாரத்திற்குமேல் வெற்றிகரமாக வேலைநிறுத்தம் செய்து வருவதால், ஏற்கனவே உள்ள வியாபாரப் போட்டியில் வேலைநிறுத்தமும் சேர்ந்து கொண்டதால் நிலைமையை முதலாளிகளால் சமாளிக்க முடியாமல் போயிருக்கிறது. இன்னும் பாக்கியுள்ள தொழிலாளர்களையும் சேர்த்து, தீவிரமாக வேலை நிறுத்தம் செய்வதற்கு ஒரு மகாநாடு நடத்தத் தீர்மானித்திருக்கிறோம். அதற்குத் தலைமை தாங்கத் தகுதியுள்ள, தங்கள் மகன்—வருங்காலத் தலைவராகப் போகும்—தேவநேசனை அழைக்கிறோம்" என்று எழுதியிருந்தார்கள்.

இக்கடிதத்தை முதலில் தேவநேசனே பார்த்தான்; குதித்தான். என்னிடம் ஓடிவந்து கடிதத்தைப் படிக்கும்படி சொல்லிக் கொடுத்தான். மங்கையர்க் கரசியிடம்

போய்க் கடிதத்தைக் காட்டினான். அவளோ தேவநேசனை கேலி செய்ய ஆரம்பித்தாள்.

"என்ன அண்ணா! கோயம்புத்தூரிலே நடக்கும் தொழிலாளர் மகாநாட்டுக்குப் போய் இந்திய முதலாளிகளுடன் சண்டைபோடுவதில் லாபமேயில்லை. நமது ஒரே லக்ஷியம் சுதந்திரம்தான். இது அகில இந்தியாவுக்குமே பொருந்தும். நாம் அந்த லக்ஷியத்திற்காகப் பாடுபடுவதை விட்டு, இந்தியாவின் ஒரு மூலையிலே, ஒரு பகுதியில் நடக்கும் சிறிய வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்கப் போகிறாயே? வீணாக நமது வாழ்நாள்—சக்தியெல்லாம் விரைய மாகாதா?

"நாற்பதுகோடி மக்களின் அடிமை வாழ்வைப்போக்க வேலை செய்யாமல் ஒரு சில ஆயிரம் தொழிலாளரின் நலனுக்காகச் செய்வதில் ஒன்றும் பலன் இல்லை. தொழிலாளர் அனைவருக்கும் நியாயம் கிடைக்க வேண்டுமானால் அது தேசிய அரசாங்கத்தில்தான் முடியும்" என்றாள்.

தேவநேசன் இதைக்கேட்டுச் சிரித்தான். "உன் எண்ணங்களும், செய்கைகளும் புரட்சித் தன்மையில், உயர்ந்த எண்ணங்களாகவே இருக்கின்றன. நீ வருங்காலத்தில் இந்தியப் பெண்களின் தலைவியாக விளங்கத் தகுதி வாய்ந்தவள். ஆனால் உன் மனதிலே சுழன்றோடும் புரட்சித் தன்மையை விட்டு ஒழி. அது உன்னைக் கெடுப்பதுடன் நமது தேசியக் கொள்கைக்கும் எதிரானது. தேசியத் தொண்டு நான் மட்டும் செய்யவில்லை. லக்ஷக்கணக்கான தொண்டர்கள் நமது அரும் பெரும் தலைவர் மகாத்மாவின் கீழ் வேலை செய்கிறார்கள். என்னைப்போல ஒவ்வொரு தொண்டனும், சில ஆயிரம் தொழிலாளருக்காவது வேலை

செய்து வெற்றிபெற்ருல், அந்த வெற்றி எல்லாத் தொழிலாளருக்குமே கிடைக்கும். ஆகையால் உனது யோசனையை நான் விரும்பவில்லை,'' என்று தேவநேசன் சொல்லிவிட்டு, சுந்தர முதலியாரிடம் சென்ருன்.

அவர் அன்புடன் அவனுக்கு ஆசி கூறினர். மகாநாடு வெற்றியடையும்படி பிரார்த்தித்தார். தேவநேசனும் கோயம்புத்தூருக்குப் பிரயாணமாளுன்.

அன்று முதல் தொழிலாளரின் பத்திரிகையாகி விட்டது "சுதேசிக்கொடி". சமயோசிதம் போல் எழுதாமல், ஒரே கொள்கையுடன் எழுதவேண்டுமென்ற தன்மையுடன் தொழிலாளரை ஆதரித்து எழுதலானேன். தேவநேசன் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்து எழுதியது முதல், அவர்களுடைய சங்கம், தொண்டு, வேலைத்திறன், தொழிலாளர் இயக்கம் முதலியவற்றை ஆராய்ந்து ஏராளமான கட்டுரைகள் வெளிவந்தன. பத்திரிகையின் செல்வாக்கும் அதிகரித்ததுடன், பத்திரிகையின் அபிப்பிராயத்தக்கும் அரசாங்கம் செவிசாய்க்க ஆரம்பித்தது.

*  *  *  *

மங்கையர்க்கரசியின் நிலைமைதான் எனக்கு மனதில் வேதனையை உண்டாக்கியது. அவளை மணந்து கொள்ள என் மனம் அவாவுற்ருலும், அவளுடைய நிலைமையும் நடவடிக்கையும் என்னைச் சிறிது பின் வாங்க வைத்தது.

சில வடநாட்டு அரசியல் வாதிகளுடன் கடிதம் மூலம் அவள் தொடர்பு வைத்திருந்தாள். ஒரு தடவை மங்கையர்க்கரசி பெண்கள் மகாநாட்டிற்குச் சென்று திரும்பிய பொழுது, இரண்டு வடநாட்டுப் பெண்களையும் தன்னுடன்

இழுத்து வந்தாள். ஒருத்தி பெயர் ஹம்ஸாவாம், மற்ருெருத்தி பெயர் ரேணுகாவாம். இரு பெண்களுக்கும் வயது இருபத்திரண்டு. ஆனால் விவாகம் இன்னும் ஆகவில்லை. இருவருமே வங்காளத்தைச் சேர்ந்த ஒரே ஊரில் வசிக்கும் தோழிகளாம்.

ஹம்ஸாவின் தமையன்மார் இருவர். மூத்தவர் அரசியலில் ஈடுபட்டு, சிறை புகுந்து, காங்கிரஸ் தொண்டராகி, கிராமங்கள் தோறும் பிரசாரம் செய்துகொண்டு திரிகிருராம். இளையவரோ, ரயில்வே சதிவழக்கொன்றில் ஈடுபட்டு அந்தமான் தீவிற்கு அனுப்பப்பட்டு விட்டாராம். ஹம்ஸாவிற்கு இளைய சகோதரன்மீது அளவுகடந்த பிரியமாம். எவ்வளவோ முயன்றும், பணத்தைத் தண்ணீரைப் போல் செலவு செய்தும் அவனுடைய தண்டனையைக் குறைக்க முடியவில்லையாம். அதுமுதல் ஹம்ஸா அரசாங்கத்தின்மீது சீற்றம் கொண்டு சதி வேலைகளில் ஈடுபடுவதாகக் கேள்வி.

ரேணுகாவின் ஒரே சகோதரனை விபுலன் பெரிய புரட்சிக்காரனும். எத்தனையோ சதி வேலைகளில் ஈடுபட்டுச் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டவனும். அவனுடன் ரேணுகாவும் ஹம்சாவும் சேர்ந்து சதிவேலைகள் செய்கிருர்களாம். இவற்றை எல்லாம் நான் பின்னுல்தான் அறிந்துகொண்டேன்.

ஒரு நாள் மங்கையர்க்கரசிக்கு வந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு அவளுடைய அறைக்குள் நுழைந்தேன். "ஹலோ! குட்மார்னிங்!" என்ருள் ஹம்சா. அவளைத்தொடர்ந்து ரேணுகாவும் கூறினுள். மங்கையர்க்கரசி எங்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

நான் ஒரு மணி நேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். இந்தியாவுக்கோ, காங்கிரசுக்கோ தேவையில்லாத, முற்றிலும் புரட்சித்தன்மை வாய்ந்த திட்டங்களைப்பற்றி வெகுநேரம் பேசினார்கள். சுருங்கச் சொன்னால் அவை, முற்றிலும் சதிவேலைகள் தான்.

"இவை நமது நாட்டிற்குத் தேவையில்லை. வேண்டுமானால் இவற்றை உங்கள் மாகாணத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். சென்னை மாகாணம்—அதிலும் எங்கள் தமிழ்நாடு நிர்மாணத் திட்டத்திலும், அஹிம்சையிலும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையிலும் முன்னணியில் நிற்கிறது. எந்த நேரத்திலும் சுதந்திரத்திற்குச் செல்லும் பாதையில் தலைமை வகித்துச் செல்ல, எங்களுடைய மாகாணம் தயாராக இருக்கிறது. ஆகையால் இவற்றைவிட்டு, தேசத்திற்குப் பயன்படக்கூடிய வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்" என்றேன்.

உடனே ஹம்ஸாவிற்குக் கோபம் வந்து விட்டது. "உங்களைப் போல் நான்கு 'புல்லுருவிகள்' இருந்தால் போதும். நாடு சுதந்திர மடைந்த மாதிரிதான். சுதந்திரத்திற்காக—பலாத்காரத்தால் பறிபோன சுதந்திரத்தை மீட்க—பலாத்காரத்தை உபயோகித்தால் அது குற்றமா? ஆங்கிலேயர் அவர்கள் நாட்டிலே குற்றங்கள் செய்தால் அவர்களுக்கு வெறும் சிறைத்தண்டனை, அதே குற்றத்தை நாம் நமது தாய் நாட்டில் செய்தால்—அடிமை இந்தியாவில் செய்தால்—தூக்குத் தண்டனை, அல்லது திவாந்தர சிக்ஷையா? என்ன அநியாயம் பாருங்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டப் பாடுபடும் 'பெரிய மனிதன்' ஒருவன் வங்காளத்திற்கு ஒரு நாள்

வந்திருந்தான். அவனைக் கொன்று அன்னியர் மீதுள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளவே எனது இளைய சகோதரன் சதிவேலையில் இறங்கினான். அதற்காகவே அந்தமான் தீவிற்கும் அனுப்பப்பட்டான். இது அக்கிரமமில்லையா? தனது குடும்பத்தையோ, சுற்றத்தாரையோ காப்பதற்காக அவன் அவ்வாறு செய்யவில்லை. நமது நாடு அன்னியர்களால் சுரண்டப்படுவதை—ஏழைமக்கள் பஞ்சத்தாலும் வறுமையாலும் வாடுவதை—நிறுத்தி சுதந்திரம் வாங்கவே பாடுபட்டான். அதற்குப் பிரதிபலனா இத்தண்டனை?"

அவள் வேகமாகப் பேசிக்கொண்டே போனாள். வாயிலிருந்து சொற்கள் வெடித்தன. முகத்தில் கோபத்தின் அறிகுறிதென்பட்டது. இவள் ஒரு காலத்தில் இராஜபுத்திர வம்சத்தில் வீரமகளாய்த்தான் பிறந்திருக்க வேண்டும். அன்று நான் அவர்களுடைய நடவடிக்கை பற்றி அதிகமாகச் சந்தேகப்பட்டேன். அது இன்று உண்மையாகிவிட்டது. இவர்களுடன்தான் மங்கயர்க்கரசி கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்கிறான்.

இதைக் குறித்து அவளை நான் கண்டித்தபொழுது அவள் கோபமோ துக்கமோ அடையவில்லை. என் நிலைமைக்கு இறங்குவதாகச் சொன்னாள். என்னைப் போன்ற கோழைகள்பலர் இருப்பதால்தான் அவர்கள் எடுத்த காரியம் வெற்றிபெறுவதில்லையாம். அவள் போக்கு எனக்கு முற்றிலும் பிடிக்கவில்லை. அன்று முதல் அவளுடைய சிநேகிதத்தை அறுத்தெறியவும் முனைந்துவிட்டேன்.

## புனிதவதி 8

ஒருவர் நினைத்தபடி எதுவும் நடப்பதில்லை என்பதற்கு நானே உதாரணம். நான் எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டியிருந்தேன். போலீஸ் இலாகாவில் இன்ஸ்பெக்டராக வேலைபார்க்கிறார் மாணிக்கம். தேவநேச அண்ணாவோ சிறையில் வாடி வதங்குகிறார். அந்தோ! பாவம். என்னிடத்திலேயே அவருடைய உள்ளத்தை ஒப்படைத்திருந்தார்.

நானும் அவரைத்தான் விவாகம் செய்து கொள்ளுவது என்று முடிவு செய்திருந்தேன். எனக்குமேல் பெற்றோர்கள் இருப்பதால், இந்த விஷயத்தில் அவர்களுடைய அனுமதி அவசியம் தேவை என்பதை நான் உணர முடியவில்லை. தூரப்பார்வைக்கு அடிவானம் பூமியைத் தொட்டுக்கொண்டு நிற்பது போலத்தான் தோன்றுகிறது. அதுபோலவே என்வாழ்க்கையின் ஒரு பாகத்தில் அவருடன்சம்பந்தம் உண்டு; அதுதான் விவாகம் என்று நினைத்திருந்தேன். ஆனால் போகப்போக அடிவானத்திற்கும் பூமிக்கும் சந்திப்பில்லாமல் எட்டிப்போவது போலவே நாங்கள் இருவரும் வெகு தூரம் விலகினோம். முன்பு நான் கனவு கண்டேன். அது வெறும் கனவாகிவிட்டது. விதி என்னை வேறோரிடத்தில் தள்ளிவிட்டது.

என் கணவரோ மில்முதலாளி. ஆயினும் அவருடைய வாழ்க்கையின் பெரும்பகுதி ஆலையிலேயே கழிந்து விடுகிறது. தொழிலாளரைக்காட்டிலும் அவர் அதிக நேரம் உழைக்கிறார். என் தந்தையிடமும் ஏராளமாகப் பணம்

வாங்கி ஆலையிலேயே கொட்டியிருக்கிறார். ஆயினும் அவருக்கு ஓய்வே யில்லை. பலனும் கிட்டவில்லை.

வீட்டிற்கு இரவு எட்டு மணிக்குத்தான் வருவார். ஆகாரம் அருந்துவார். கணக்குப்பிள்ளைகள் இருவர் காகிதக் கட்டுகளுடன் தயாராக நிற்பார்கள். அவற்றை வாங்கி வாசித்துக்கையெழுத்திட்டு, மறு நாள் பார்க்க வேண்டிய வேலைகளைப்பற்றியும் அவர்களுக்கு உத்தர விடுவார். அதற்குள் மணி பதினொன்றுக்கு மேலாகி விடும். பிறகு தனியாக அவருடைய அறைக்குள் சென்று கணக்குகள் எழுதுவார். இரவு எப்பொழுது வந்து படுக்கையில் படுப்பாரோ தெரியாது. அதற்குள் நான் நன்றாகத் தூங்கிப்போய் விடுவேன்.

மறு நாள் அதிகாலையில் அந்தக் குறிப்பிட்ட நேரத் திற்கு வேலைக்காரன் வந்து அவரை எழுப்பி விடுவான். எழுந்ததும் குளிப்பதற்கு வெந்நீர் தயாராக இருக்கும். காலை வேலைகள் ஏழு மணிக்குள் முடிந்துவிடும். ஒன்பது மணிவரை ஏதேதோ கணக்குகள் எழுதுவார். பின்பு காரில் ஏறிச்சென்று பதினொரு மணிக்கு வீடு திரும்புவார். சாப்பிட்டதும் ஆலைக்குப் போனால் இரவு எட்டு மணிக்குத் தான் திரும்பி வருவார். மாதத்தில் ஏழுநாட்கள் பம்பாய், ஆமதாபாத், டெல்லி, சென்னை முதலிய ஊர்களுக்குச் சென்று விடுவார்,

ஆலையில் இயந்திரங்கள்கூட இவரைப்போல் வேலை செய்ய முடியாது. இவருடைய வேலைத்திறனையும் உழைப் பையும் கண்டு இயந்திரங்கள்கூடப் பபப்படும். எனக்குத் தோன்றுவது என்ன வென்றால், தேவநேச அண்ணா காட்டிலே தெளிந்த, பால் போன்ற தண்ணீருள்ள ஜீவ

நதி. ஆனால் என் கணவரோ, நகரங்களிலே வண்டலும், அசுத்தமுமாக, நுறைத்துப் பொங்கியோடும் ஆறுதான்

இந்த வாழ்க்கை எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்க வில்லை. தேவநேசனைப் போன்ற அன்பான மனிதரை மணந்துகொண்டு, ஆடம்பரமின்றி, அமைதியுடன் இல் வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது என்னுடைய நீண்ட நாள் கனவு. அது பயன் படாமல்போய்விட்டது. கன்னி யாக இருக்கும் பொழுது கற்பனையில் நினைத்த வாழ்க்கை யானது, பூரணசந்திரோதயத்தின் பொழுது பூம்பொழிலி லிருந்து வீசும் வசந்தத்தைப் போல இருந்தது. ஆனால் என் அனுபவத்தில் ஏற்பட்ட இந்த வாழ்க்கை, கோடை காலத்தில் நடுப்பகலில் ஏற்பட்ட கோரமான தீயைப் போல இருக்கிறது.

என் சிநேகிதிகள் நல்ல இடத்தில் எனக்கு வரன் கிடைத்ததாகவும், நான் இந்திராணி போன்று உயர்ந்த நிலையில் வாழ்வதாகவும் பேசிக் கொண்டார்கள். ஆனால் எனக்கு ஏனோ இந்த வாழ்வு பிடிக்கவில்லை. எந்த நேரமும் பணம், பணம் என்று கதறும் ஒரு கணவரிடம் என்னைப் போன்ற பெண் எதைத்தான் எதிர் பார்க்கமுடியும்?

'திலகர்' மில்லில் வேலை நிறுத்தம் கடுமையாக நடந்தது. கலகங்கள் நிகழும் போல் தோன்றியது. ஆதாரமற்ற வதந்திகள் ஏதேச்சையாக உலாவின. கோயம்புத்தூர் மில் முதலாளிகள் அனைவரையும் தொழி லாளிகள் தாக்கப் போவதாகவும், தொழிலாளரின் குறை கள் நிவர்த்திக்கப்பட வில்லையானல், முதலாளிகள் சுடப் படுவார்களென்றும் வதந்திகள் என்னுடைய காதுக்கு எட்டின.

அவரை வெளியே போக வேண்டா மென்றும், வீட்டிலேயே தங்கியிருக்கும் படியும், வேலைக்காரர்களுக்குச் சம்பளம் கூட்டிக் கொடுக்கும்படியும் அவரிடம் வேண்டிக் கொண்டேன். அவர் என் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க வில்லை. பேசாமல் சிரித்துவிட்டுச் சென்று விட்டார்.

நான்கைந்து தினங்கள் சென்றதும் இன்னும் இரண்டு 'மில்'களில் வேலை நிறுத்தம் தொடர்ந்தது. எங்கு பார்த்தாலும் தொழிலாளரின் கூட்டங்களும், கோஷங்களும் வானத்தைப் பிளந்தன. எனக்குப் பயம் அதிகரித்தது. மறுபடியும் அவருடைய தற்காப்பை வேண்டி, அவ்ரிடம் மன்றாடினேன்.

அவர் சொன்னார்: "நான் யாருக்குமே பயப்படப் போவதில்லை. என் நண்பன் மாணிக்கம் கோயம்புத்தூருக்கு நேற்றுத்தான் மாற்றப்பட்டு வந்திருக்கிறான். அவனிடம் நேரில் சென்று சகல நடவடிக்கைகளையும் சொன்னேன். அவன் சிறிது பணத்தாசை கொண்டவன். கொஞ்சம் ரூபாயை அவன் முன்பு வீசி எறிந்தால், எனக்காக எதையும் செய்யக் காத்திருப்பான். இப்பொழுது கூட ஆலை சம்பந்தமாக எல்லா விஷயத்தையும் தான் பார்த்துக் கொள்ளுவதாகச் சொல்லி யிருக்கிறான்.

"எனது ஆருயிர் நண்பன் சந்திரன் தான் 'சுதேசிக் கொடி'ப் பத்திரிகையை நடத்தி வருகிறான். அந்தப் பத்திரிகை சமீப காலம் வரை எங்களுடைய இயந்திரத் தொழிலை ஆதரித்து வந்த போதிலும், போன வெளியீடு முற்றிலும் மாறுபட்டு, தொழிலாளரின் நலன்களையே எடுத்துச் சொல்லியிருக்கிறது. 'வேலை நிறுத்தம் செய்ய

வேண்டாமென்றும், இயந்திரத் தொழில் வளர்ந்தால் தான் நாடு சுபிட்சமடையுமென்றும், சிறு குழந்தையாக இருந்து வளர்ந்து வரும் இயந்திரத் தொழிலை தொழிலாளர் நலன் என்று கூறி, வீண் கூச்சலிட்டு நசுக்கி விட வேண்டாமென்றும், பத்திரிகையை இயந்திரத் தொழிலபிவிருத்தி சம்பந்தமாக உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றும்' வேண்டிக்கொண்டு சந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்.

"சந்திரன் என் வேண்டுகோளின்படி நிச்சயம் எழுதுவான். மாணிக்கம் எனது நட்பிற்காகவும், பணத்திற்காகவும் சொல்லுகிறபடி ஆடுவான். அதற்கெல்லாம் நீ கவலைப்படாதே. உனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் அனுவசியமாகத் தலையிடாதே" என்றார். ஆயினும் என் மனம் வரப்போகும் பெரிய அபாயத்தை முன்கூட்டி உணர ஆரம்பித்தது.

போலீஸ் தொழிலிலும் மில் சொந்தக்காரர்களைப் போல மிகவும் ஆபத்தான கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனல் தேவநேச அண்ணுவின் வாழ்க்கை—? அவருடைய வாழ்க்கை கரடுமுரடு நிறைந்த ஒரு பிரதேசம் எனலாம். அதைக் கஷ்டத்துடன் கடந்துவிட்டால் சிம்லா உச்சியைப் போன்ற, குளிர்ச்சி பொருந்திய அருமையான இடத்தில் ஆனந்தமாகப் பொழுது போக்கலாம். இதைத்தான் நினைத்திருந்தேன் நான். கரடு முரடான பிரதேசத்திற்கு அப்பால் இனிமையான ஒரு சோலை தென்பட்டால் வாழ்க்கைக்கு எவ்வளவு மனோகரமாயிருக்கும்? அந்தச்சோலையைத் தேடித்தானே தேவநேச அண்ணு சிறைக்குப் போயிருக்கிருர்?

அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு லக்ஷியம் இருக்க வேண்டும். அந்த லக்ஷியத்திற்காகவே அவர்கள் பாடுபடு கிறார்கள் என்று நினைத்தேன். என் கணவர்கூட நாட்டின் தொழி லபிவிருத்திக்குத் தான் பாடுபடுகிறார். பெரிய பெரிய ஆலைகள் ஏராளமாக உண்டாக வேண்டுமென்றும், நவீன சாதனங்கள் அமைக்கப் பெற்ற இயந்திரங்கள் இந்தியாவிலேயே தயார் செய்யப்பட வேண்டுமென்றும் கனவு காண்கிறார். அது அவருடைய லக்ஷியம் தானே! ஆனால் என்னுடைய லக்ஷியப் பாதை எங்கே யிருக்கிறது? எந்த லக்ஷியத்தை நோக்கி என் வாழ் நாள் இயங்குகிறது?

என் நிலைமையை நினைத்து மனதிற்குள் நானாகவே சிரித்துக் கொண்டேன். பெண்களுக்கு என்று லக்ஷியம் வேறு இருக்கிறதா? இருக்கலாம். ஆனால், அது மண வாழ்க்கைக்குப் பின்பு கணவனுடைய நடவடிக்கைக்குத் தகுந்தபடிதான் உருவாக வேண்டும். என் வாழ்க்கையோ லக்ஷியம் ஒன்றுமின்றி சோம்பிக் கிடக்கிறது.

விவாகத்திற்கு முன்பு நான் பெரிய மனக்கோட்டை கட்டியிருந்தேன். ஒரு தேசிய வாதியை மணந்து, நாட்டுத் தொண்டிலும் சுதந்திரப் போரிலும் கலந்து முடிவில் நிகரற்ற பெயரும், புகழும் அடையலாமென எண்ணி னேன். ஆனால் என் மனக்கோட்டை தகர்ந்து விட்டது. நான் ஓர் இயந்திர முதலாளிக்கு அடிமையாக்கப் பட்டேன், எனது லக்ஷியம் எங்கே?

என் மனம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. வெளியே தெருவில் தொழிலாளர்கள் "மகாத்மா காந்திக்கு ஜே! காங்கிரஸ் வாழ்க! முதலாளித்துவம் வீழ்க! பணப்பேய் ஒழியட்டும்? தொழிலாளர் வாழ்க! வேலை நிறுத்தம்

வெற்றி பெறுக!'' என்ற கோஷங்களுடன் கத்திக் கொண்டு சென்றனர். நான் ஜன்னலைத் திறந்து எட்டிப் பார்த்தேன்.

எங்கள் வீதி வழியாக ஒரு பெரும் கூட்டம் வந்து கொண்டிருந்தது. அத்தனை பேரும் ஆலைத் தொழிலாளி கள். முன்னால் இரு தொண்டர்கள் காங்கிரஸ் கொடியும் செங்கொடியும் பிடித்து வர, பின்னால் கூட்டம் கூட்டமாக தொழிலாளர்கள் வந்து கொண்டிருந்தனர். எங்கேயோ தொழிலாளர் மகாநாடு நடக்கிறதாம். அதில் தலைமை வகிக்கப் போகும் சென்னை வாசி ஒருவரை ஊர் வலமாக அழைத்துச் செல்லுகிறார்களாம். அது யார் சென்னை வாசி? மகா நாட்டிற்குத் தலைமை வகிக்கும் ஆற்றலுள்ளவர் ராஜாஜி, கிரி, வேதரத்தினம் போன்றவர் கள் தான். ஆனால் இவர் யார்?

அதோ! ஏராளமான பூமாலைகளைத் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டு செல்லும் அவரா தலைவர்? அவர்— அவருடைய முகம் எங்கேயோ பார்த்த ஞாபகம்......ஒரு சமயம் அவராயிருக்குமா? தேவநேச அண்ணாதானா? அவர் சிறையிலல்லவா இருப்பார்? இன்னும் தண்டனைக் காலம் முடிவடைந்திருக்காதே? ஒரு சமயம் அப்பாவை அனேக தடவை நிபந்தனையின்றி விடுதலை செய்ததுபோல அண்ணாவையும் விடுதலை செய்திருந்தால்......?

சிறிதுநேரம் யோசித்தேன். "தலைவர் தேவநேச னுக்கு" என்று ஒரு குரல் எழும்பியது. உடனே பல குரல்கள் "ஜே!" என்று சப்தமிட்டன. ஆம்! தேவநேச அண்ணாதான். இன்னுமா சந்தேகம்? என் மனம் ஏன் இப்படிப் பொங்கிப் பூரிக்கிறது? தலை வலி வேறு; நிற்க

முடியவில்லை. ஆனால் மறுபடியும், மறுபடியும் "தேவ நேசனுக்கு ஜே!" என்ற கோஷங்கள் ஒலித்தன. அந்தக் கூட்டம் தெருக் கோடியில் போய் மறையும் வரை, அதற்கப்புறமும் கூட, அந்தக் கோஷம் ஒலித்துக் கொண்டே இருந்தது.

எவ்வளவு நேரம் மயக்கமுற்று விழுந்திருந்தேனோ தெரியாது. எழுந்து பார்த்தேன். வீட்டில் யாரையும் காணவில்லை. வேலைக்காரனை அழைத்தேன். அவன் பெயர் 'சாயனு'. ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவன். எங்கள் வீட்டில் வெகு காலமாக விசுவாசத்துடன் வேலை பார்த்து வருகிறான்.

சாயனு என் முன்பு வந்து நின்றான். அவனுடைய நரைத்த தாடி மீசையும், குறு குறுப்பான கண்களும், அவன் வளைந்து ஒடுங்கி பணிவுடன் நின்றதும், அவனைச் சரியான — நம்பிக்கையுள்ள வேலைக்காரன்தான் என்று நம்பும்படி செய்தது.

"அம்மா! கூப்பிட்டீர்களா?" என்றான்.

"ஐயா எங்கே?"

"தொழிலாளர் மகாநாட்டைக் கலைப்பதற்காக, இன்ஸ்பெக்டர் மாணிக்க முதலியார் வீட்டிற்குப் போயிருக்கிறார்."

"சரி! நான் ஒரு கடிதம் தருகிறேன். அதைக் கொண்டு போய் மகா நாட்டுத் தலைவர் தேவநேசனிடம் கொடுத்து விட்டு வருகிறாயா?"

"யார்? அவர் நமது எதிரியாயிற்றே?"

"உங்களளவில் இருக்கலாம். அவர் என்னுடைய தமையனார்!"

"அப்படியா? ஐயோ பாவம்! நம்ப ஐயா அவர் மேலே தான் போலீசிலே பிராது கொடுத்திருக்கிறார். மைத்துனர் என்று தெரிந்துமா அப்படிச் செய்கிறார்?"

"அவர் என்னுடன் பிறக்காதது ஒன்று தான் குறை. ஆனால் என்னிடம் எவ்வளவு அன்பு செலுத்துகிறார் தெரியுமா? மேலும் என் தந்தையின் பிரதம சிஷ்யர்."

"எம்மா உங்களுக்கு இந்த வம்பு? அவர் விஷயத்திலே நீங்கள் தலையிட்டால், அது ஐயாவுக்குப் பிடிக்காதே!"

"அதற்காகத் தான் உன்னை யழைத்தேன். ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதைக் கொண்டு போய்க் கொடு. ஒருவருக்கும் நான் கொடுத்தனுப்பியதாகத் தெரியக் கூடாது."

"சரி" என்று சாயனா தலையை அசைத்தான். உடனே ஒரு கடிதம் எழுதினேன். ஆரம்பத்தில் "சகோதரனுக்கு" என்றுதான் எழுதினேன். நடுவிலே மனம் வேறு பாதையில் திரும்பியது. ஆயினும் சிரமத்துடன் அந்த மனதை ஒழுங்கான வழியிலே திருப்பிவிட்டுக் கடிதத்தைப் பூர்த்தி செய்தேன். சாயனாவும் அதை எடுத்துக் கொண்டு மறைந்தான்.

போலீஸ் வேலையென்றால் அனேகர் பயங்கர மென்றும், ஆபத்து என்றும், சிலர் கஷ்டமென்றும், சிலர் ஆனந்தமான, உல்லாசமாகப் பொழுது போக்கும் வேலை என்றும் நினைக்கின்றனர். என்னளவில் நான் இன்று வரை கஷ்டமான, தொந்தரவு பிடித்த வேலை என்று தான் எண்ணுகிறேன். சிரமம் அதிகம். ஓய்வு கிடையாது. பலவித வழக்குகளும், சண்டை சச்சரவுகளும் — ஏன்? இன்றைய சமூகத்தின் ஊழல்கள் அனைத்தையுமே எங்கள் போலீஸ் நிலையத்திற்கு வந்தால் பார்க்கலாம்.

ஓய்வு என்பதே இல்லாத இந்த வேலை ஆரம்பத்தில் எனக்குச் சிறிது சிரமத்தைத் தான் கொடுத்தது. ஆனால் கோயம்புத்தூருக்கு மாற்றியதிலிருந்து சிறிது ஓய்வு கிடைத்தது. அது மட்டுமல்ல. வாழ்க்கையின் உயர்ந்த படியை எட்டிப் பார்க்கும் ஒரு பரம ரகசிய வழியையும் இங்கே வந்ததும் தெரிந்து கொண்டேன். அது என்ன வழி தெரியுமா? சீக்கிரமாகப் பணம் சேர்த்துப் பெரிய மனிதனாகும் வழி.

இந்த வழியை நானாகவும் அறிந்துகொள்ள வில்லை. என்னைச் சுற்றியுள்ள, பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சிலர் தான் இதைக் கற்றுக் கொடுத்தார்கள்.

ஒரு நாள் வேலைகளை முடித்துவிட்டு, சிறிது ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக, சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு, சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தேன்.

ஒரு 'பெரிய' மனிதர் ஆடம்பரமாக உடையணிந்து கொண்டு காரில் வந்திறங்கினர். கூடவே இரண்டு காரிய தரிசிகளும் வந்தனர்.

என்னைக் கண்டதும் வணக்கம் செய்தார். நானும் பதில் நமஸ்காரம் செய்து, பக்கத்திலிருக்கும் நாற்காலியில் உட்காரும்படி சொன்னேன். காரியதரிசிகளில் ஒருவர் என்னிடம் வந்து "ஐயாதான் 'திலகர்' மில் முதலாளி" என்றான். "அப்படியா!" என்றேன். திலகர் மில் முதலாளி புன்சிரிப்புடன் மறுபடியும் அஞ்சலி செய்தார்.

"உங்களுடைய பெயர் .... ....?

"ராவ் பகதூர் பஞ்சநதம்"

"ஓகோ! உங்கள் மில்லிலே எத்தனை பேர் வேலை பார்க்கின்றனர்?"

"ஆயிரத்து ஐநூறு ஆட்கள்."

"சரிதான்"

உடனே அவர் காரியதரிசிகளைப் பார்த்துக் கண் சிமிட்டினர். இருவரும் வெளியே போய்விட்டார்கள்.

"இப்பொழுது வேலை நிறுத்தம் ஏற்படக் காரணம் என்ன?"

"பொருளாதார நெருக்கடியால் வியாபாரம் க்ஷீணித்து, உற்பத்தி பெருகி விட்டது. தயாரான சரக்குகள் வியாபாரமாகாமல் குவிந்து கிடக்கின்றன. வியாபார்த்தில் போட்டி ஏற்பட்டு விட்டது. நஷ்டமடைந்து வரும் முதலாளிகள் தொளிலாளரின் குறைகளை நிவர்த்-

திக்க முடியவில்லை. சில புரட்சி நபர்கள் காங்கிரஸ் தேசிய வாதிகள் என்று சொல்லிக்கொண்டு, தொழிலாளர்களையும் வேலை செய்ய வொட்டாமல் தடுத்து, முதலாளிகளுக்கும் நஷ்டத்தை விளைவிக்கின்றனர். இவர்களுடைய தொந்தரவுதான் இன்று பொறுக்க முடியாமல் போய்விட்டது. தங்களைப் போன்ற உத்தியோகஸ்தர்கள் சிறிது மனது வைத்தால் .........''

"இதற்கு நான் என்ன செய்வது?"

"நீங்கள் வேறொன்றும் செய்ய வேண்டாம். அமைதிக்குப் பங்கம் உண்டாகும்படியான காரியங்களில் பிரவேசிப்பவர்கள் என்று சொல்லி அவர்களைக் கைதுசெய்து விடவேண்டும். பெரிய ஊர்வலங்களோ கூட்டங்களோ நடத்தக்கூடாது என்றும் தடைவிதித்து விடவேண்டும்.''

"இவையெல்லாம் நான் செய்யும் வேலையில்லையே ஐயா! மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டால், நான் தடியை எடுத்துக்கொண்டு உத்தரவை நிறைவேற்றச் செல்வேன். அவ்வளவுதான்.''

இடையிலே ராவ்பகதூர் பஞ்சநதத்தின் காரியதரிசி வந்தார். இருவரும் காதிற்குள் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டார்கள். அவன் ஒரு (cover) கவரை பஞ்சநதத்திடம் கொடுத்து விட்டுச் சென்றான். அந்தக் 'கவரை'ப் பெற்றதுமே என்னை நோக்கிப் புன்முறுவல் செய்தார் பஞ்சநதம். அசட்டுச் சிரிப்புடன் என்னை நோக்கி, இந்தக்கவரை நான் வீட்டிலேயே மறந்து, வைத்து வந்து விட்டேன். ஞாபகம் வந்ததும் எடுத்து வரும்படி ஆள் அனுப்பினேன். ஒன்றுமில்லை!...அது...அது...''

என்று அசட்டுச் சிரிப்பொன்று சிரித்துக் கொண்டே அந்தக் 'கவரை' என்னிடம் நீட்டினர்.

என்மனம் வேகமாக அலைபாயத் தொடங்கியது. கைகள் நடுங்கின. இதுதான் என் வாழ்க்கையில் முதல் தடவையாக லஞ்சம் வாங்குவது! லஞ்சம்...... அது யாருக்குத் தெரியப் போகிறது? நாம் அவனுக்குச் செய்யும் முக்கியமான உதவிக்குத்தானே இதைப் பெறுகிறோம். பின்பு லஞ்சம் வாங்குவது ஏன் பாவமாகிறது? சிறிது நேரத்தில் என்னைச் சமாளித்துக்கொண்டேன்.

"நீங்கள் கஷ்டப்பட வேண்டியது ஒன்றுமில்லை. மாஜிஸ்ட்ரேட் உத்தரவை நிறைவேற்றினல் போதும். நீங்கள் சொன்னது போல அமைதிக்குப் பங்கம் விளைவித்தானென்றும், ஆக்ஷேபகரமான பிரசங்கங்கள் நடந்ததென்றும் சொல்லிக் கைது செய்யலாமல்லவா?"

ராவ் பகதூர் பஞ்சநதம் இன்னும் ஏதேதோ சொன்னர். அவை என் காதுகளில் விழவேயில்லை. ஏன் இந்த ரூபாயைக் கைநீட்டி வாங்கினேம் என்று என் மனம் திகிலடைந்தது. திருப்பிக் கொடுத்து விடலாம் என்று இரண்டு மூன்று தடவை முயன்றேன். ஆனல் அந்தக் காகிதப்பைக்குள் எவ்வளவு ரூபாய் வைத்திருப்பார்?...... என் மனம் இதை அறியுப்படி என்னைத் தூண்டியது.

'கவரை'ப் பிரித்தேன். பத்து நூறு ரூபாய் நோட்டுக்கள். ஆஹா! ஆயிரம் ரூபாயா?...... இந்த ஆயிரம் ரூபாயை நானகச் சம்பாதிக்க வேண்டுமானல் என் சம்பளத்திலிருந்து மாதம் எவ்வளவுதான் மீதப் படுத்த முடியும்? கஷ்டப்பட்டுச் சேர்த்தாலும் இம்மாதிரி ஆயிரம் ரூபாயை ஒரே தடவையில் பார்க்க முடியுமா?

'பணம், பணம்' என்று உலகமே கதறுகிறது. பணத்தினால் எதையும் சாதிக்கலாம். பணம் பாதாளம் வரையில் பாயுமென்று பழமொழிகூட உண்டு. பஞ்சநதம் என்னிடம் கேட்கும் உதவியைச் செய்ய என்னால் முடியுமோ, முடியாதோ, அதைப்பற்றிக் கவலையில்லை. செய்வதாக மட்டும் ஒப்புக் கொண்டால் அந்த ஆயிரம் ரூபாய் என்னைச் சேர்ந்து விடும். ஏன் சம்மதித்து ரூபாயை வாங்கக்கூடாது?

என்மனம் சிந்தனையில் சிக்குண்டது. கையில் இருக்கும் 'அந்தக்கவரை'த் திருட்டுப்பார்வையுடன் பார்த்துக் கொண்டே சுற்றுமுற்றும் ஒருதடவை பார்த்தேன். ஒருவரும் காணப்படவில்லை. நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டாலும் என் மனதை நானே தேற்றிக் கொண்டேன். ஏனெனில் ஒரு இடத்தில் திருடவோ, மோசடி செய்யவோ போகவில்லை. நாம் செய்யும் வேலையில் ஓரளவு முயன்று ஊக்கத்துடன் வேலையின் கடமையைச் செய்வதற்காக அந்த ஆயிரம் ரூபாயும் சன்மானம் என்று நினைத்துக்கொண்டால்......?

"என்னங்க!.... பயப்படவேண்டாம். இது சகஜந் தானே!......ஏன்?......ரூபாய் கொஞ்சம் என்று நினைக்கிறீர்களா? இதைச் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள். வேலை முடியட்டும். கவனித்துக் கொள்ளுகிறேன்." என்று தயங்கித்தயங்கிப் பேசினார் பஞ்சநதம்.

'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என்று நினைத்துக் கொண்டு, பணத்தை என் சட்டைப் பைக்குள் திணித்தேன். "நாளை வாருங்கள். எல்லாம் பேசிக்கொள்ளலாம்," என்றேன். பஞ்சநதம் உவப்புடன் என்னை

நோக்கி "உங்கள் கிருபையில்லா விட்டால் நாங்கள் லக்ஷக்கணக்கில் போட்டிருக்கும் முதலை இழந்து, தொழிலாளிகளிடம் சரண்புக வேண்டியது தான்" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அதன் பிறகு நாட்கள் ஐந்து மறைய வில்லை. அதற்குள்ளாக ஐயாயிரம் ரூபாயா? ஏன் முதலாளிகள் இப்படி அசடுகளாக இருக்கிறார்கள்?...அசடுகள் அல்ல. எவ்வளவு தொகை கொடுத்தாலும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். இல்லையானால் இவர்கள் முதலாளிகளாக வந்திருக்க முடியுமா? இப்படிச் செலவு செய்த ரூபாய் அனைத்தும் வசூல் செய்வதென்றால், ஏழைத் தொழிலாளிகளின் ஒரு நாள் சம்பளத்தில் கை வைத்தால் போதும்.

ஐயோ பாவம்! ஒரு ஏழைத் தொழிலாளி, தன் வயிற்றுக்குச் சரியான ஆகாரம் கிடைப்பதற்கு ஒரு அணா கூட்டித்தரும்படி முதலாளியிடம் கேட்கிறான். முதலாளி இணங்காததால் வேலைக்கு வராமல் நின்றுவிடுகிறான். அவன் வேலையிலிருந்து நின்றுகொண்டதற்காகவும், அணா ஒன்று அதிகமாகக் கேட்டதற்காகவும், அவனை அடித்துச் சிறையிலே தள்ளும்படி ஏற்பாடு செய்ய எனக்கு ஆயிரம் ரூபாய் முன் பணமா? இது அநியாய மில்லையா?

அநியாயம், அநியாயமில்லை; இதைப்பற்றி நான் ஏன் யோசிக்கவேண்டும்? நான் சன்மானம் வாங்குகிறவன்தானே. கொடுப்பவனாக இருந்தாலல்லவா, "ஒரு அணாவுக்கு ஆயிரம் ரூபாயா?" என்று கூக்குரல் போடவேண்டும். இரண்டாவது மனிதருக்குத் தெரியாமல் கொடுத்த ரூபாயைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு,

அடுத்த வேலையைக் கவனிக்காமல் இதைப்பற்றி யோசித்து மண்டையை ஏன் உடைத்துக்கொள்ள வேண்டும்?

திலகர் மில், காந்திமில், மீனாட்சிமில், டெக்ஸ்டைல் மில் இவற்றின் முதலாளிகளெல்லாம் என் வீட்டு வாசலில் நின்று நான் சொல்லுவதற்கெல்லாம் தலையை ஆட்ட ஆரம்பித்துவிட்டார்கள். நானும் கையைக் கட்டிக்கொண்டு சும்மாவா இருந்தேன்? நான்கு பேர்வழிகளைச் சந்தேகத்தின்மீது கைது செய்தேன். ஆக்ஷேபகரமான பிரசங்கம் செய்ததற்காக மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். பொதுஜன அமைதியைக் குலைத்ததாகக்குற்றம் சாட்டப்பட்டு ஒருவன் கைது செய்யப்பட்டான்.

அவர்கள் நிரபராதிகள்தான். ஆனால் நான் வாங்கிய பணம் ஜீரணமாக வேண்டாமா? சூது, களவு, பொய், வஞ்சகம், வியபசாரம் இவைகளைத்தானே நாங்கள் தினமும் பார்க்கிறோம். இவற்றிலே கைதேர்ந்தவர்கள் தானே நாங்கள்! ஆயுள் முழுவதும் கஷ்டப்பட்டாலும் சம்பாதிக்க முடியாத ரூபாய் ஒரே நிமிஷத்தில் எங்களை வந்து அடையும் பொழுது அதற்குப் பிரதிபலனாக நாங்கள் ஏன் ஒன்றும் செய்யக்கூடாது?

புண்ணியக் கதைகளான பாரதத்தில் கூட, தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்ற நினைப்பால், பொய் என்பதே சொல்லியறியாத தருமர்கூட ஒரு பொய் சொல்லி விட்டார். ஒரு பொய் என்றாலும், ஆயிரம் பொய் என்றாலும் அது பஞ்சமகாபாதகத்தைச் சேர்ந்ததுதானே.

உலகத்தின் போக்கு நமக்கு நன்றாக விளங்குகிறது. ஒவ்வொருவனும் சுயநலக்காரனாகவே எனக்குத் தென்

படுகிறான். அவன் தன்னுடைய பாதையின் வழியே சென்று லக்ஷியத்தை அடைய ஆசைப்படுகிறான். அதே மாதிரி நானும் செல்லாவிட்டால் லக்ஷியப்பாதையை விட்டு, வழி தவறியவனாவேன்.

எனக்கு லக்ஷியம் ஒன்றுதான். வாழ்க்கையிலே உயர்ந்த பதவியை அடைந்து, நன்றாகச் சம்பாதித்து, ஆனந்தமாக வீட்டைக்கட்டி, கலியாணத்தைச் செய்து, சுக போகத்துடன் வாழவேண்டுமென்பதுதான். அதற்குப்பாதை பதவியும், பணமும்; பதவியிருக்கிறது. பணம் என்னைத் தேடி வருகிறது. இனி லக்ஷியத்தை அடைந்த மாதிரிதான். பின்பு ஏன் கவலைப்படவேண்டும்?

நான் ஒருவருக்கும் லஞ்சம் கொடுக்கப் போவதில்லை. தேவநேசனைப்போல ஜெயிலுக்கும் போக வேண்டாம். சந்திரனைப்போல எழுதிக்குவித்து என்னதான் சம்பாதித்து விடமுடியும்? மணிவாசகன் ஆலை முதலாளியாகி விட்டான். முதலாளிகளைப் பற்றிச்சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில், இம்மாதிரி வேலை நிறுத்தம் போன்ற சமயங்களில், இந்த முதலாளிகள் எங்கள் வீட்டுத் திண்ணைகளைத்தானே ஆக்கிரமித்துக் கொள்ளுகிறார்கள்! என் உதவியை விரும்புகிறவர்கள் எனக்குக் கீழ்ப்பட்டவர்கள் போலத்தான்.

மேலும், இந்த முதலாளிகளுக்கு ஆலையின் லாபநஷ்டத்தைக் குறித்து வருத்தம்; தொழிலாளர் நடவடிக்கையால் கஷ்டம், துயரம்; பணத்தைப் பற்றிய பயம்; வியாபாரப் போட்டியினால் துயரமும், சிரமமும்; இவர்களனைவரும் ஆலை வைத்து முன்னுக்கு வரவா? இயந்திரத்

தொழில் நடத்துவதற்குப் பிறந்தவன் அந்த மேல் நாட்டான்தான். இவர்கள், பாவம், கற்றுக் குட்டிகள்தானே!

ஆனால் இந்த மணிவாசகன் மட்டும் ஏன் என் தயவை நாடி இன்னும் வரவில்லை? நண்பனிடமா இதற்கெல்லாம் போவது என்று நினைக்கிறானோ? இதைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டே இருந்தேன். மணிவாசகன் எதிரே வந்து நின்றான்.

"உனக்கு ஆயுசு நூறு அப்பா!"

"என்னைப்பற்றித்தான் நினைத்தாயோ?"

"ஆமாம். உன்னைப்பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டேன். ஆனால் எங்கே நேரம் ஒழியாது? வீட்டில் யாவரும் சௌக்கியம்தானே?"

"வீட்டில் யாவரும் சௌக்கியந்தான்"

"நான் இந்த ஊருக்கு மாற்றப்பட்டு வந்தது புனித வதிக்குத் தெரியாதோ?"

"தெரியும். நேற்றுதான் அவளிடம் நான் சொன்னேன்."

"வரவில்லை என்று கூட நினைத்திருப்பாள். அவளை பார்த்து. வெகுநாட்களாகி விட்டன. ஆனால் இந்த ஊருக்கு வந்தாலும் வந்தேன், ஆலை முதலாளிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டு விடுகிறார்கள். உனக்குத் தெரியுமா திலகர் மில் பஞ்சநதத்தை?"

"தெரியும். ராவ்பகதூர் பஞ்சநதம் எனது நண்பர் தான்."

"அவர் இங்கே வந்து காலில் விழுந்து கெஞ்சுகிறார். அதுமட்டுமல்ல. ரூபாய் இரண்டாயிரம் வரை தந்து விட்டார். அத்துடன் காந்திமில், மீனாட்சிமில், டெக்ஸ் டைல் மில், எல்லோரும் அவர் பின்னால் வர ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் மனமுவந்து தருகிறேனென்று சொல்லுவதை நான் எப்படி வேண்டாமென்று மறுக்க முடியும். நேற்றுவரை, 'முக்கியமானவர்கள்' என்று கருதப்படும் ஆறு நபர்களைக் கைது செய்து விட்டேன்.

"நான் உனக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன் கேள். காற்றுள்ள பொழுது தான் தூற்றிக்கொள்ள வேண்டும். ரூபாய் சம்பாதிப்பதற்கும் இதுதான் வழி. யாராயிருந்தாலும் சரி; தொகை கொடுக்காமல் என்னிடம் எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாது. இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் நான் சம்பாதிக்காமல், எப்பொழுது தான் சம்பாதிக்கப் போகிறேன்? என்ன நான் சொல்லுவது, சரிதானா?"

மணிவாசகன் நான் சொன்னதை ஆமோதிப்பவன் போல, "ஆமாம், ஆமாம். வழி கிடைக்கும் பொழுது அதில் செல்லாமல், தவறிச்சென்று ஏமாற்றமடைவதா?" என்றான்.

"நீ இங்கு வந்தது என்னைப் பார்த்துப் போகத் தானே? விசேஷம் ஒன்றுமில்லையே? ஆலை எப்படி நடக்கிறது? வியாபாரம் நன்றாக நடக்கிறதா?"

"ஆலையைப்பற்றி மற்ற முதலாளிகள் கூடச் சொல்லியிருப்பார்களே! என்னுடைய ஆலையில் கலவரங்கள் ஒன்றுமில்லை. ஆனால் மற்ற ஆலைகளில் வேலை நிறுத்தம் செய்தவர்கள் ஒன்று சேர்ந்து மகாநாடு ஒன்று நடத்தப்போவ

தாகவும், அதற்குக் கோவைத் தொழிலாளர் அனைவரும் திரண்டு வரும்படியும், பஞ்சாலைத் தொழிலாளிகள் முக்கியமாக இந்த மகாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இன்று மாலை தான் மகாநாடு நடக்கப் போகிறது. முன் ஜாக்கிரதையாகவே இன்றைக்கும் நாளைக்கும் எனது ஆலைத்தொழிலாளருக்கு விடுமுறை கொடுத்துவிட்டேன்.''

"மகா நாட்டிற்கு யார் தலைமை வகிக்கப் போகிறார்களாம்? அவரைப்பிடித்து மாட்டிவிட்டால் கூட்டமே நடக்கவொட்டாமல் செய்து விடலாம்! பரதேசிப் பயல்கள் சார்!......காலணாக் காசுக்குச் சாகிறவர்கள் மகாநாடு நடத்துகிறார்களாம், மகாநாடு!''

"யாரோ தேவநேசனாம்! சென்னையிலிருந்து வந்திருக்கிறானாம் தலைமை வகிக்க!''

"நமது 'கிளாஸ் மேட்' தேவநேசனா சார்?''

"அவன் தான் காங்கிரஸ் உப்புச் சத்தியாக் கிரகத்தில் சேர்ந்து, சிறையில் அடைபட்டுக் கிடக்கிறானாமே!''

"தேவநேசன் என்றால் அவன் ஒருவன்தானா இருக்கிறான்? யாரேனும் ஒரு பஞ்சப்பயல் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கலாம். அதற்கென்ன மணிவாசகா? நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ மத்தியானம் வா. இருவரும் மகாநாடு கூடும் இடத்திற்குப் போவோம்''

"நான் எதற்கு?'',

"ஓகோ, பயப்படுகிறாயா? ரொம்ப நல்லது! நீ அங்கே வரவேண்டாம். நான் மட்டும் போகிறேன்.

ஆனால் பார்த்துக்கொள், நான் எவ்வளவு கஷ்டப்படுகிறே னென்று. இதற்குப் பிரதிபலனாக மத்தியானம் வரும் பொழுது வெறும் கையுடன் வராமல் காணிக்கையுடன் வா! இல்லையேல் வேலை யொன்றும் நடக்காது. முன்பே சொன்னேனல்லவா காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று. நண்பனிடமா இதைக் கேட்பது என்று எனக்குப் புத்திசொல்ல வந்து விடாதே! பிள்ளையாரிடம் போய் வரம் கேட்கப் போனாலும் அதற்குத் தேங்காய் உடைத்துத்தானாக வேண்டும்.''

மணிவாசகன் முகத்தில் அனேகவிதமான தோற்றங் கள் மாறிமாறித் தோன்றின. அவன் மனதிலே தோன்றும் வெவ்வேறு விதமான சிந்தனைகளின் தோற்றம் தானே இவை?

"வேறொரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இங்கே யிருந் தால், நீ அவர் கேட்பதைக் கொடுப்பாயல்லவா? சினே கிதன் என்பதற்காக நான் உனக்குச் செய்யவேண்டியது, பணத்தை வாங்கிக் கொண்டு படுத்துக் கொள்ளாமல், காரியத்தை முயன்று முடிக்க வேண்டியதுதானே? வேறென்ன செய்வது?'' என்றேன்.

'அதற்கென்ன' பகல் இரண்டுமணிக்கு வந்து சந்திக் கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சரியாக இரண்டு மணிக்கு மணிவாசகத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தேன். ரூபாய் ஐந்நூறு கொண்டு வந்து கொடுத்து'' நண்பா! நான் உனது பால்ய நண்பன். எது கொடுத்தாலும் திருப்தியுடன் வாங்கிக் கொண்டு காரியத்தைமுடிக்க வேண்டும்'' என்றான்.

மணிவாசகனை அங்கேயே இருக்கும்படி சொல்லி விட்டு, மகாநாட்டுப் பந்தலுக்கு விரைந்து சென்றேன். அப்பொழுதுதான் கூட்டம் ஊர்வலமாக வந்து கொண் டிருந்தது. அங்கே சென்று போலீஸ் பந்தோபஸ்துகளை நியமித்துவிட்டு, பிரதம மாஜிஸ்ட்ரேடிடம் சென்றேன். அவரிடம் மகாநாட்டில் ஆக்ஷேபகரமான பிரசங்கங் களோ, கலவரங்களோ நிகழ்ந்தால், முக்கியமானவர்களைக் கைது செய்து மகாநாட்டைக் கலைப்பதற்கு உத்தரவு வாங்கினேன்.

நான் வேலை செய்தபடியே நடந்தது. அதாவது முக்கியமான பங்கெடுத்துக் கொண்ட சிலருக்கு ஆசை வார்த்தை சொல்லி, அதிகச் சம்பளம் கொடுக்கும்படியும் ஏற்பாடுசெய்து மகாநாட்டில் கலந்து கொள்ளாமல் செய்துவிட்டேன். இன்னும் சிலருக்குப்பணம் கொடுத்து வெளியூர்களுக்குப் போகும்படி சொல்லி விட்டேன். இன்னும் சிலரைப் பயமுறுத்தி வைத்தேன். இன்னும் சிலரைக் கைது செய்தேன். மகாநாட்டில் பெரிய குழப்பங் கள் நடக்கப்போகிறது என்ற வதந்தியையும் பரப்பினேன். அதனால் அநேகர் பயந்து வராமல் நின்று விட்டனர். ஆகவே என் முயற்சி பலித்துவிட்டது.

மகாநாடு பெரிய பந்தலில் கூடிற்று. எங்கே பார்த் தாலும் தொழிலாளரே காணப்பட்டனர். பொதுமக்கள் வராமல் ஏற்கனவே எனது போலீசார் அவர்களை விரட்டி விட்டனர். தொழிலாளரின் கோஷங்களே எங்குபார்த் தாலும் கேட்டது.

தலைமை வகிப்பவர் மகாநாட்டுப் பந்தலிலே வந்து உட்கார்ந்தார். அவரை உற்றுப் பார்த்தேன். நண்பன்

தேவநேசன்தான். இவன் சிறையிலிருந்து எப்பொழுது விடுதலையானான்? ஆனால் பாவம்! இவன் ஏன் வாழ்நாளை இப்படி வீணாக்கிக் கொள்ளுகிறான்?

பல மாலைகள் தலைவரை அலங்கரித்தன. வாழ்த்துச் செய்திகள் ஏராளமாசப் படிக்கப்பட்டது. மகாநாடு தேசிய வணக்கத்துடன் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது. இடையிடையே கரகோஷம். அனேகர் பேசினார்கள்.

முதலாளித்துவம் ஒழிய வேண்டும். தேசியக்கொடியுடன் செங்கொடியும் உயரவேண்டும். அன்னியர் ஆட்சி ஒழியவேண்டும். சுதந்திரம் வேண்டும். இம்மாதிரிப் பேச்சுக்களை ஒவ்வொரு பிரசங்கியின் வாயிலிருந்தும் கிளம்பியது. சர்க்கார் போக்கைக் கண்டிப்பதும், முதலாளிகள் தொழிலாளருக்குப் போதுமான சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் போலீசாரின் அட்டகாசங்களைக் கண்டிப்பதாகவும், லஞ்சப்பேயை ஒழிக்கவேண்டுமென்றும், தேசத் துரோகிகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

இந்தச் சமயத்தில் ஒரு ஆந்திர மனிதன் கூட்டத்தை இடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அவனைக் கையைப் பிடித்து இழுத்து வெளியே நிறுத்தினேன்: "கூட்டத்தை இடித்துக் கொண்டு உள்ளேபோய் என்ன செய்யப் போகிறாய்" என்று கேட்டேன்.

அவன் பெயர் "சாயனா"வாம். மணிவாசகன் வீட்டில் வேலைபார்க்கிறானாம். மகாநாட்டுத் தலைவர் தேவநேசனுக்குக் கடிதம் கொண்டு வந்தானாம்.

"கடிதத்தைக் கொடு" என்றேன். அவன் என்னை ஏற, இறங்கப் பார்த்தான். "இந்தக் கடிதத்தை அவரிடம் நேரில் கொடுக்க வேண்டும்" என்ருன். "மகாநாடு நடந்து கொண்டிருக்கும் பொழுது கூட்டத்தை இடித்துக் கொண்டு போனுல், கூச்சல்களும் கலவரங்களும் தோன்றலாம். ஆகையால் கடிதத்தை என்னிடம் கொடுத்து விட்டுப்போ, மகாநாடு முடிந்து அவர் வெளியே வந்ததும் கொடுத்து விடுகிறேன்." என்றேன்.

அவன் என்னைக் கூர்ந்து நோக்கியபடியே நின்ருன். "ஏன் தயங்குகிருய்? நான் ஓர் அரசாங்க உத்தியோகஸ்தன் தானே. என்னை நம்பு. உன்ஞல் மகாநாட்டிற்குக் கேடு உண்டாகக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன்," என்றேன்.

அவன் என்னை நம்பிவிட்டான். கடிதத்தைக் கொடுத்தான். இது புனிதவதியின் கையெழுத்தல்லவா? ஆசையும் ஆவலும் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கும்படி தூண்டின. ஆயினும் மனதை அடக்கிக் கொண்டு அவனைப் போய் வரும்படி சொன்னேன்.

அவன் தயக்கத்துடன் சிறிது தூரம் சென்ருன். பிறகு திரும்பிப் பார்த்தான். நான் அவனையே பார்த்துக் கொண்டு நின்றேன். அவன் போய்விட்டான்.

சற்று நேரத்தில் நான் சொல்லியிருந்தபடி ஆயுதம் தரித்த போலீஸ்காரர்கள் வந்திருந்தனர். முதலில் மகாநாட்டுப் பந்தலுக்கு வெளியே கூடி நின்று, கூட்டத்தை இடித்துக் கொண்டு, வாசலையும் மறைத்துக் கொண்டு நிற்கும் கூட்டத்தைக் கலைந்து போகும்படி சொன்னேம். அவர்கள் மறுத்ததுடன் வாயில் வந்தபடி போலீசாரைத்

திட்ட ஆரம்பித்தார்கள். எங்கள் சேவகன் ஒருவன் சாட்டையால் ஒரு மனிதனை அடித்து விட்டான். உடனே கலவரம் கிளம்பியது. கூக்குரல்களும், நிந்தனைகளும் வானளாவியது. அடிதடி நடக்க ஆரம்பித்து விட்டது. போலீசார் எல்லோரும் தொழிலாளர்களைத் தடியும், துப்பாக்கியும் வைத்துக்கொண்டு கலைத்துவிட்டு, தலைவரையும், இன்னும் கலகக்காரர்கள் என்று சந்தேகித்த முக்கியமான பதினைந்து பேரையும் கைது செய்து அழைத்துக் கொண்டு சென்றோம்.

நான் தான் தேவநேசனைக் கைது செய்தேன். அவன் என்னைப் பார்த்ததும் "மாணிக்கம்!" என்று கத்தினான். அப்பொழுது நான் அவனை நிமிர்ந்து பார்த்திருந்தால், அவனைக் கைது செய்யும் தைரியம் எனக்கு வந்திருக்காது. குனிந்த தலை நிமிராமல் அவன் கைகளில் விலங்கிட்டேன்.

"ஏன் என்னைக் கைது செய்கிறாய்?" என்று தேவநேசன் கேட்டான். மாஜிஸ்ட்ரேட் உத்தரவை அவன் முன்பு நீட்டினேன். நான் என் கடமையைச் சரிவரச் செய்வதற்காகவும், நண்பன் என்றும் பாராமல் உத்தியோகத்தில் ஒழுங்குடன் வேலை பார்ப்பதற்காகவும் என்னைப் பாராட்டுவதாகச் சொன்னான். இதெல்லாம் இந்தக் காங்கிரஸ் காரர்களுக்குப் பழக்கம் தானே!

தன்னைக் கைது செய்ய வேண்டாமென்றும், தானே என் பின்னால் வருவதாகவும் சொன்னான். நான் இஷ்டப் பட்டிருந்தால் அம்மாதிரியே செய்திருக்கலாம். ஆனால் அவனைக் கைது செய்து மணிவாசகன் வீட்டு வழியாக அழைத்துச் செல்ல வேண்டும். இந்தக் காட்சியைப் புனிதவதி பார்க்க வேண்டும். இந்த ஆசையால் தான் அவனைக் கைது செய்தேன்.

தேவநேசன் விலங்கிடப்படுவதை வெறுத்தான். அனுகரீக அரசாங்கம் தான் இம்மாதிரிக் கைது செய்து அழைத்துச் செல்லுவதை அனுமதிப்பது வழக்கம் என்றான். அன்னிய ஆட்சியும், அவர்களின் நேர்மையற்ற ஆபாசமான சட்ட திட்டங்களும் ஒழிய வேண்டு மென்றும், அதற்காகவே தான் பாடுபடுவதாகவும் சொன்னான்.

இவனுடைய பேச்சும் புத்திமதியும் எனக்கெதற்கு? நான் அதைக் கேட்கவே இஷ்டப்படவில்லை. கைதிகளை அழைத்துக்கொண்டு நடந்தோம். தொழிலாளர் கூட்டம் ஒன்று எங்களை வழி மறித்தது. கல்லும், மண்ணும் எங்கள் மீது வாரி இறைக்கப்பட்டன. ஆனால் எங்களுடன் கைது செய்யப்பட்டு வருபவர்களும் கல், மண் வீச்சால் கஷ்டப்படுவார்களே என்று நினைத்துப் பார்க்கவில்லை அந்த மக்கள். எங்களுடைய தற்காப்பை முன்னிட்டு கூட் டத்தை நோக்கிச் சுட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதில் இருவருக்குப் பலத்த காயம். மற்றவர்கள் ஓடி மறைந்தனர்.

போலீஸ் வண்டி (Police Van) மணிவாசகன் வீட் டெதிரே நான் சொல்லியிருந்தபடி நிறுத்தப்பட்டிருந்தது. வாசற்படியில் மணிவாசகனும், அவனுக்குச் சற்று பின்னால் உள்ளே தள்ளி, புனிதவதியும் நின்று கொண் டிருந்தார்கள்.

வண்டியின் கதவைத் திறந்து, அவர்களை அதில் ஏற் றும்படி சொல்லிவிட்டு, மணிவாசகத்திடம் சென்றேன். "காயா, பழமா?" என்று கேட்டான். "காய் என்பதே

என் அகராதியில் இல்லை. அதோ பார் தேவநேசனை. அவன்தான் மகாநாட்டிற்குத் தலைவன்," என்றேன்.

புனிதவதி என்னைப் பார்த்ததும் "அத்தான்!" என்றாள். "செளக்கியமா புனிதவதி?" என்று கேட்டேன். அவள் பதிலின்றி தலையை அசைத்தாள். முகம் வெளுத்திருந்தது. முன்னைக் காட்டிலும் இப்பொழுது அதிகம் மெலிந்து உருமாறிப் போயிருந்தாள்.

நான் 'அதோ பார் தேவநேசனை' என்று மணிவாசகத்திடம் சொல்லும் பொழுது, அவள் வண்டியைப் பார்த்தாள். தேவநேசன் என்ற சப்தம் கேட்டு தேவநேசனும் எங்கள் பக்கம் திரும்பினான். புனிதவதி அசைவற்று நின்றாள். கண்களிலே கண்ணீர் தேங்கி நின்றது.

"நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வண்டியருகே வந்தேன். தேவநேசன் வண்டியில் ஏறிக் கொண்டிருந்தான். கதவை அடைத்து விட்டு டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து புனிதவதியை இறுமாப்புடன் பார்த்தேன். ஒரு சமயம் புனிதவதியும் தேவநேசனும் சேர்ந்து என் ஆசையில் மண்ணைப் போடவில்லையா? என் மனக் கோட்டைகளைத் தகர்த்தெரியவில்லையா? இவ்வுலகத்தில், என் வாழ்க்கையிலே மனப்பூர்வமாகக் காதலித்த ஒரே பெண் எனது அத்தை மகள் புனிதவதிதான். அந்தக் காதலை வேருடன் களைந்தெறிவதற்குக் காரணமான தேவநேசன், அவனுக்கு உடந்தையான புனிதவதி, இவ்விருவரின் கர்வத்தைக் குலைக்க இந்த மாதிரிச் சந்தர்ப்பம் தானே நல்லது.

எங்கள் வண்டி வேகமாகப் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தது. நான் வாங்கிய நாலாயிரத்து ஐநூறு ரூபாயும் எனக்கே சொந்தமாகியது. பூரண திருப்தியுடன் மற்ற அலுவல்களைப் பார்க்கத் தொடங்கினேன்.



## தேவநேசன் 10

கோயம்பத்தூருக்கு வந்தது முதல் நான் தொழிலாளர்களுடன் தொடர்புகொண்டு விட்டேன். தொழிலாளர்கள் இங்கே வாழ்வதைப் பார்க்க நெஞ்சம் குமுறுகிறது. சிறிய சிறிய அறைகளில் பலர் வாழ்கின்றனர். போதிய வருவாய் இல்லாமலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் பலர் வருந்துகின்றனர். அத்துடன் வேலைநிறுத்தத்தாலும் சொல்லொணுதக் கஷ்டம் அனுபவிக்கின்றனர்.

ஆட்டு மந்தைகளைப்போல் தொழிலாளர்கள் நடத்தப்படுகின்றனர். தொழிலாளர்களினுல்தான் இவ் வுலகம் இயங்குகிறது என்பதை முதலாளிகள் இன்னும் அறிந்தபாடில்லை. தொழிலாளர் சிந்துவது இரத்தக் கண்ணீர். அதைப் பார்த்தும் தொழிலாளரின் குறைகளை நிவர்த்தி செய்யாமல் கல் மனதுக்காரர்களாய் இருக்கின்றனர் முதலாளிகள்.

கோயம்பத்தூர் பஞ்சாலைத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் நடந்து வந்தது. ஆனுல், சில துரோகிகளினுல் எல்லாத் திட்டங்களும் கவிழ்ந்து விட்டன. முதல் துரோகி மணிவாசகன். அவன் பள்ளியில் படிக்கும் பொழுதே முதலாளியாவதற்குத்தான் கனவு கண்டுகொண்டிருந்தான். அவன் கனவு நிறைவேறிவிட்டது. ஆனுல் அவன் தொழிலாளருக்குத் தந்தையாகவும் இருப்பான் என்று நினைத்திருந்தேன். அவனே அந்த ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சும் ஓனுயாகிவிட்டான். அதனுல்தான் அவனை நேரில் சந்திக்

கும்பொழுதுகூட அவன் முகத்தைப் பார்க்க நான் விரும்பவில்லை.

அடுத்த துரோகி மாணிக்கம். முதலாளிகளிடம் ஏராளமாக லஞ்சம் வாங்கியிருக்கிறானாம். லஞ்சம் வாங்கிப் பிழைப்பதற்காகவே அந்த முரடன் வாழ்கிறான் போலும்; கேவலம்! ஒரு ஏழையின் அரைவயிற்று உணவுக்குத் தீமை செய்வதற்காக ஆயிரக்கணக்கில் லஞ்சமா?

ஏ பாரதமாதா! இந்தத் தொழிலாளரின் துன்பம் தாங்காது நீ கண்ணீர் வடிக்கிறாய். அவர்கள் துயருறும் அதே சமயங்களில் உனது அடிமைத்தளையும் இறுகிக் கொண்டே வருகிறது. என்று உனது விலங்குகள் அகற்றப்படுமோ அன்றைக்கே எங்கள் கண்ணீரும் துடைக்கப்படும். அன்றுதான் ஏழை மக்களைத் துன்புறுத்திய துரோகிகளையும், தொழிலாளர்களைக் கொடுமைப் படுத்திய முதலாளிகளையும், அவர்களுக்கு உதவிசெய்வதற்காக லஞ்சம் வாங்கித் தின்ற அரக்கப்பேய்களையும் தூக்கிலிடும் நன்னாள். அந்த நாள் என்றாவது நிச்சயம் வரப்போகிறது. அன்று தான் நாங்கள் இவ்வுலகில் பிறந்ததன் பயனை அடைவோம்.

இவர்களைத்தவிர இன்னும் சில புல்லுருவிகளும், கோடாலிக்காம்புகளும் தொழிலாளர்வர்க்கத்தில் தோன்றியிருக்கின்றனர். வேலைநிறுத்தத்திற்கு யார் யார் அடிகோலினார்களோ, யார் யார் கூலியை உயர்த்தவேண்டுமென்று கோஷித்தார்களோ, யார் யார் தொழிலாளர் மகா நாட்டை நடத்தப் பாடு பட்டார்களோ, அவர்களை இன்ஸ்பெக்டர் மாணிக்கம் நேரில் வரவழைத்து சாம பேத தான தண்டங்களால் தன் பக்கம் இழுத்து, வேலைநிறுத்தம் வெற்றியடையாமல் செய்து விட்டான்.

இம்மாதிரி துரோகிகளே ஒரு ஸ்தாபனத்தில் இருந்தால், அந்த ஸ்தாபனமோ அந்த ஸ்தாபனத்தின் லக்ஷியமோ எப்படி நிறைவேறும்? பற்பல சிந்தனைகளினாலும் வேலை நிறுத்தம் வெற்றியடையாமல் போனதாலும், மகாநாடு கலவரத்தில் முடிந்ததாலும் எனக்கு மனவேதனை அதிகரித்தது. வேலை நிறுத்தம் செய்தவர்களில் மன்னிப்புக்கேட்டுக் கொண்டவர்கள் தவிர பாக்கிப் பேர்களுக்கு வேலை கொடுக்க முதலாளிகள் மறுத்து விட்டதால், அவர்களின் உரிமை என்மனதைத் துளைத்தது.

எனக்கு முன்புள்ள பிரச்சினை மலைபோல் தோன்றியது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம் பட்டினி, வியாதி, லஞ்சம், அடக்குமுறை—அப்பப்பா! கொடுமையிலும் கொடுமை. இதை நான் ஒரு வழிகண்டு தாண்டிவிட்டால் அந்த மலைக்கு அப்பாலுள்ள சுதந்திரம் என்ற சொர்க்க போகமான இடத்திலே, வாழ் நாள் முழுவதும் சுகமனுபவித்துக்கொண்டிருக்கலாம்.

ஆனால் இந்த மலையை எப்படிக்கடப்பது? 35 கோடி மக்கள் நிறைந்த இந் நாட்டிலே மகாத்மா, நேரு போன்ற பெரிய தலைவர்களின் கீழ், நிர்மாணத்திட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றினால் இந்தமலை தானாகவே மறைந்து விடும், சுதந்திர நாடு நமக்குக்கிடைக்கும்.

பயங்கரமான இரும்புக் கம்பிகளுக்குப் பின்னே உட்கார்ந்து யோசனையில் ஈடுபட்டிருந்தேன். மாணிக்கமும், இரு 'கான்ஸ்டேபில்' களும் வந்தார்கள்.

"தேவநேசா! சௌக்கியமா ?" என்று கேட்டான் மாணிக்கம். "பெரிய சிறையிலிருந்து, சிறிய சிறைக்கு வந்திருக்கிறேன். எந்தச் சிறையில் வாழ்ந்தாலும் எங்

களுடைய துன்பமும், உங்களுடைய அட்டகாசமும் சுதந்திர இந்தியாவில்தான் மறையும்” என்றேன்.

“ஆரம்பித்து விட்டாயா உன் பிரசங்கத்தை! அதை நான் கேட்கவில்லை; பேசாமல் ஒரு கலியாணத்தைச் செய்துகொண்டு நீ வாழலாமே! ஏன் இந்தச் செப்படி வித்தையெல்லாம் செய்யவேண்டும்? என்றுதான் கேட்கிறேன் என்றான்.”

“செப்படி வித்தையா? எதைச் சொல்லுகிறாய்?”

“புனிதவதியுடன் தொடர்புகொண்டிருப்பதைதான்”

“சீ! வாயை மூடு”

“நான் வாயைமூடுவதற்கு நீ சொல்லவேண்டியதில்லை உன் பகல் வேஷம் எனக்குத் தெரியாதா? புனிதவதியின் கலியாணத்திற்கு முன்பு நீயும் புனிதவதியும் தஞ்சாவூரில் அவர்கள் வீட்டு மாடியில், ஒரு நாள் மாலை இருட்டில் கைகோர்த்து நின்றதை நானே நேரில் பார்த்தேன். அன்றே புனிதவதியின் மீது எனக்கிருந்த ஆசையை விட்டொழித்தேன். ஆனால் உங்களுடைய சிநேகம் மட்டும் இன்னும் மறையவில்லை போலும். சிறையிலிருந்து வெளிவந்ததும், புனிதவதியைத்தேடி இங்கு வந்ததுமன்றி, பாமரமக்களும், அறிஞர்களும் உன்னைத் தெரிந்து கொள்வதற்காக காங்கிரஸ் காரனென்று பறைசாற்றிக்கொண்டாய்.

“பிறர் கண்ணில் மண்ணைத் தூவி தன் காரியத்தைச் சாதிப்பதற்காக மகாநாட்டுத் தலைவனாகி, புனிதவதி உன்னைப் பார்ப்பதற்காக, மணிவாசகத்தின் வீட்டு வழியாக ஊர்வலமாகச் சென்றாய். அவளும் உன்னைப்பார்த்தாள். பாவம்! பழைய நினைவுகள் அவளைச் சித்திரவதை செய்து

விட்டனவாம். அன்று இரவு உன்னை அங்கு வரும்படி சொல்லியிருந்தான்.

"ஆனால் அந்த அழைப்பு என் மூலமாக அனுப்பப் படவேண்டியிருந்ததால், அந்த அழைப்புக்குப்பதிலாக உன்னை அரசாங்க விருந்தினனாக்கி, அன்றே கைது செய்து விட்டேன். உன்னுடைய காதலுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அப்படித்தானே ?

"உங்கள் காங்கிரசிலே பிறர் மனைவியை இச்சிக்கும் படியும் அதற்காகச் சிறைக்குச் செல்லுவதற்குத் தயா ராகும்படியும் சட்டம் வகுக்கப் பட்டிருக்கிறதோ ? நான் என் கடமையைச் செய்தேன். அதை அட்டகாச மென்கிறாய்; அநாகரீக மென்கிறாய்: நீ செய்வது அனி யாயமா, அட்டகாசமா? அல்லது நான் செய்வதுதான் அட்டகாசமா ? சொல்."

"நீ இங்கே நின்று வாயில்வந்தபடி பேசுவதுதான் அட்டகாசமாயிருக்கிறது."

"உண்மையைச் சொன்னால் யாருக்குமே கசக்கத் தான் செய்யும். நீ மட்டும் அதற்கு விதிவிலக்கில்லை."

"நீ என்ன உண்மையைச் சொல்லி விட்டாய்? அதற்கு அத்தாட்சி என்ன?"

"புனிதவதியின் கடிதம்தான்."

"பொய். முழுப்பொய். இப்படித்தான் இருக்கும் உன் உத்தியோகமும். நடந்தவற்றையும் நடக்காதவற்றை யும் ஒன்று சேர்த்து, ஜோடித்து, பொய் வழக்குகள் புனையும் உன்னைப் போன்ற போலீஸ்காரனுக்கு, இது மிகவும் அற்பமானபொய்தான்."

"கடிதத்தைக் காட்டினால்......?"

"எங்கே, காட்டு."

ஒரு கடிதத்தை என் முன்பு வீசி எறிந்தான் மாணிக்கம். அது என் பாதங்களில் வந்து வீழ்ந்தது. கோபத்தினால் நடுநடுங்க, அவன் பேசிய—இகழ்ச்சிசெய்த வார்த்தைகளினால், உள்ளம் பதற, அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். உண்மையாகவே அது புனிதவதி எழுதிய கடிதமாகத்தான் இருந்தது.

அதில் :-

அன்புள்ள சோதர!

வாழ்க்கையின் பாதையிலே ஏராளமான பள்ளங்களும், மேடுகளும், கல்லும், முள்ளும் நிரம்பியிருக்கின்றன. ஆண்கள் வலிமை மிக்கவர்கள். அவர்கள் திட மனதுடன் தைரியமாக நடந்து சென்று விடலாம். ஆனால் பெண்களோ மென்மையானவர்கள். பயங்கரமான அந்தக் கொடிய வழியிலே அவர்களால் நடக்க முடியாது. அவர்களுக்கு ஆண் துணை அவசியம் வேண்டும். ஆனால் அந்தப் பெண்கள், தங்கள் பாதுகாப்புக்கு ஏற்ற—மனதிற்குப்—பிடித்த மணவாளனை வாழ்க்கைத் துணைவராகத் தெரிந்தெடுக்க உரிமை வேண்டும். அது இல்லாவிட்டால் அவள் வாழ்வதும், இறப்பதும் ஒன்றுதான்.

என் வாழ்க்கையின் பயங்கரப் பாதையைக் கடக்க, உங்களைத்தான் துணைவராக அடைய எண்ணியிருந்தேன். மாணிக்க அத்தான் அவருக்குத் துணையாக என்னை அடைய மனக்கோட்டை கட்டியிருந்தார். ஆனால் விதி என்னை ஓர் ஆலை முதலாளியின் கையிலே தள்ளி விட்டது. அது

முதல் என் வாழ்க்கை, பூனையிடம் அகப்பட்ட கிளியைப் போலவும் தாமரை இலைத் தண்ணீரைப் போலவும் ஆகிவிட்டது. மேகத்தால் மறைக்கப் பட்ட சந்திரனைப் போல் ஆகிவிட்டேன். மழை யின்றி வானத்தை எதிர் நோக்கி வதங்கிக் கிடக் கும் பச்சைப் பயிர் நான். உங்கள் வரவு கோடைக் கால மழையைப் போல எனக்கு உற்சாக முண் டாக்குகிறது.

நீங்கள், தாங்க முடியாத ஏராளமான மாலை களைத் தாங்கி, எங்கள் வீட்டு வழியாக பவனி செல்லும் பொழுது, என் மனம் உங்களைக் கண்டு பொங்கிப் பூரித்தது. கழிந்து போன—பழைய—சம்பவங்கள் நினைவிற்கு வந்தன. உங்களை அடைய முடியாமல் அதிர்ஷ்ட மற்றவளானதற்கு வருந்து கிறேன். ஆயினும் நான் பிழைத்திருக்க வேண்டு மானால், சதா இருதயத்தைத் துளைத்துக் கொண்டி ருக்கும், இருதய அந்தரங்கமான இரண்டொரு சங்கதிகளை உங்களிடம் வாய் விட்டுச் சொல்ல வேண்டும்.

நீங்கள் இன்று இரவு எங்கள் வீட்டிற்கு வாருங்கள். விருந்தும் எங்கள் வீட்டிலேயே வைத் துக் கொள்ளவேண்டும். அதற்கான ஏற்பாட்டை யும் செய்து வைக்கிறேன். உங்கள் லட்சியம் என் கணவருடைய போக்கிற்கு மாருக இருக்கலாம். அது அவர்களுடைய பிறப்புரிமைச் சுதந்திரம். அதனால்—அதை நினைத்து—நீங்கள் வராமலிருந்து விடாதீர்கள். நீங்கள் இருவரும் பால்ய நண்பர் கள் என்பதை ஒருவரை யொருவர் சந்திக்கும் பொழுது மறந்து விடாதீர்கள். உங்களுடைய வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

அன்புள்ள சகோதரி,
புனிதா.

இந்தக் கடிதம் அவளுடைய கையெழுத்துத்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தக் கடிதமும், மாணிக்கத்தின் சூழ்ச்சியால் தயாரிக்கப்பட்டிருக்குமோ? மாணிக்கமும், மணிவாசகனும் இது சம்பந்தமாக ஒன்று சேர்ந்து வேலை செய்யலாம். புனிதவதியிடம் நயமான வார்த்தைகளைக் கூறிக் கடிதம் எழுதச் சொன்னால்....? இந்தக் கடிதத்தில் கூட வித்தியாசமாக எதுவும் எழுதப் படவில்லையே! புனிதவதி சந்தேகிக்கும்படி ஒன்றும் இல்லை. ஆகையால் கடிதம் நீட்டியதும் அவள் கையெழுத்துப் போட்டிருக்கலாம்.

"மாணிக்கம்! உன் போலீஸ் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று?"

"எது?"

"இந்தக் கடிதம் மணிவாசகத்தின் தூண்டுதலின் பேரில் தயார் செய்யப்பட்டு, என் மீது கேவலமான அவச் சொற்களை உண்டாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டதோ?"

"அப்படி நீ நினைத்தால் அது தவறு. மணிவாசகத்திற்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது."

"என்னைப் பற்றிக் கவலையில்லை. புனிதவதி அபலை. இந்த அபாண்டங்களை அவள் பொறுக்க மாட்டாள். இது தெரிந்தால் அவள் தன்னுடைய உயிருக்கே தீங்கு விளைவித்துக் கொள்ளலாம். அது பாவம்!"

"இந்தக் கடிதம் புனிதவதி எழுதியதென்று அவளே ஒரு காலத்தில் உனக்குச் சொல்லுவாள். அப்பொழுது தான் நீ உண்மையை அறிந்து கொள்வாய். சந்தேகம்

மலைபோல் உன் மனதில் வளர்ந்திருக்கிறது. ஆகையால் நான் சொல்லுவதை இப்பொழுது நீ ஒப்புக் கொள்ள மாட்டாய்.''

மாணிக்கம் இதைச் சொல்லிவிட்டு கடிதத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டான். இதே கடிதத்தை வைத்துக் கொண்டு புனிதவதியைக்கூட அவன் மிரட்டலாம். போலீஸ்காரர்களின் அகராதியில் இரக்க மென்பதுதான் கொஞ்சம்கூட இல்லையே!

என் மீது வழக்கு ஆரம்பமாயிற்று. அரசாங்கத்தை நிந்தித்துப் பேசியதாகவும், அமைதிக்குப் பங்கம் உண்டாக்கியதாகவும் வழக்கு. நமது நாட்டில் ஆங்கிலேயர் ஏற்படுத்தியிருக்கும் தற்காப்புச் சட்டங்களைப் பற்றித் தான் சொல்ல வேண்டிய தில்லையே! அதுவும் போலீஸ் வழக்கு—அதுவும் காங்கிரஸ்காரன் மீது என்றால் சொல்லவா வேண்டும்? இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை எனக்குக் கிடைத்தது,

முன்பே சிறைக்குச் சென்று பழக்கந்தானே! சந்தோஷத்துடன் தண்டனையை ஏற்றுக் கொண்டேன். நீதிபதி எழுந்து சென்றதும் நியாயஸ்தலத்தின் வாசலில் கூடியிருந்த தொழிலாளரின் கோஷங்களைக் கேட்க வேண்டுமே! "தேவநேசனுக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!'' என்பதுதான் அந்தக் கோஷம்,

மக்களின் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் மாந்திரீகம் உண்டு என்றால், அது தான் மூன்று எழுத்துக்களாலான மகாத்மாவின் பெயர். அதுதான் பாட்டாளி மக்களுக்கும், சுதந்திரம் வேண்டி நிற்கும் அனைவருக்கும் தாரக மந்திரம். ஊக்கமும் உற்சாகமும் மக்களிடையே பரவ வேண்டுமானால் "காந்திக்கு ஜே'' என்றால் போதும். உடனே

ஜன சமுத்திரம் திரண்டு எழுந்து "ஜே" என்று கோஷித்து விடும்.

அதன் பின்பு அவர்களை அடக்குவதென்றால் அரசாங்கத்தினால் முடியவே முடியாது. அதிகமாகப் பிரகாசிக்கும் பௌர்ணமிச் சந்திரனைக் கண்டு பொங்கி எழுந்து, கோபத்துடன் கரையில் வந்து மோதி சீறி விழுந்தாலும், அந்த அலைகளினால் நிலவின் ஒளி மங்கவா போகிறது? ஜன சமுத்திரத்தின் ஆவேசத்தை இவர்களால் எப்படி அடக்க முடியும்?

இந்த சமுத்திரத்தின் ஆற்றலை சரியான வழியில் உபயோகித்து, நாட்டின் சுதந்திரத்தைச் சீக்கிரம் சம்பாதித்துக்கொடுக்க், பாரத நாட்டில் பிறந்த ஒருவன் தைரியத்துடன் வந்து தலைமை ஏற்க வேண்டும். இந்தச் சிந்தனையிலேயே மறுபடியும் மூழ்கி விட்டேன்.



எங்களுடைய ஆலை முன்போல் வேலை செய்யவில்லை. சொற்பத் தொழிலாளரே வேலை செய்கின்றனர். உற்பத்தி அதிகமில்லை. வேலை நிறுத்தம் செய்தவர்களில் அனேகர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். கலவரம் கொஞ்சம் ஓய்வு பெற்று இருந்தது. ஆனால் வேலையின்றி வாடும் ஏழைத்தொழிலாளரின் கதி.......?

அவர்கள் வீதி வீதியாகக் கோஷமிட்டுச் செல்லு கின்றனர். கூட்டங்கள் கூடுகின்றனர். தங்களுக்குத் துரோகம் செய்தவர்களைத்தீர்த்துக் கட்டுவதாகவும் பேசு கின்றனர். ஒருவர் அல்லது இருவராக இருந்தாலல்லவா அரசாங்கமோ, போலீசாரோ நடவடிக்கை எடுக்க முடியும். பெரியகூட்டங்களில் கூடியிருக்கும் தொழிலா ளர்கள் அனைவருமே கர்ஜனை செய்யும் பொழுது அரசாங்கத்தாரால் என்ன செய்யமுடியும்?

ஆகையால் அவர் ஆலையைவிட்டு வெளிவருவதே அபூர்வம். வீடு உண்டு அல்லது ஆலை உண்டு; வேறு எங்கும் போவதில்லை.

ஒரு நாள் காலை பத்து மணியிருக்கும். அவர் ஆலைக்குச் சென்றுவிட்டார். அறையிலே உட்கார்ந்து மேஜைமீது கிடந்த பத்திரிகையைப் புரட்டினேன். தெருவிலே "மகாத்மா காந்திக்கு ஜே! புரட்சி ஓங்குக!" என்ற கோஷம் செவிகளில் கலகலத்துச் சென்றது. அன்று ஒரு நாள் இதே வீதியில் தேவநேச அண்ணா செல்லும்பொழுது கோஷங்களும், ஊர்வலமும், ஆரவார

மும்,......அந்த ஞாபகங்கள் மனதில் தோன்றின. ஆனால் தேவநேச அண்ணா இப்பொழுது சிறையிலே வாடி வதங்கிக்கொண்டிருப்பார்.

அன்று நான் அனுப்பிய கடிதம் அவருக்குக் கிடைத்திருக்குமா? சிந்தனையில் என்மனம் ஊர்ந்து சென்றது. கதவை யாரோ "டக், டக்" என்று தட்டினார்கள். வீட்டுக்காரராக இருந்தால் அவர் தட்டும் விதம் எனக்கு நன்றாகத் தெரியும். ஒருவரும் கதவைத் திறக்காவிட்டால் என் பெயரைச் சொல்லி அன்புடன் அழைப்பார். ஆனால் இது யாரோ முரட்டுஆசாமியாக இருக்கவேண்டும். ஒரு சமயம், வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களில் யாரேனும், அவர் வீட்டிலில்லாத சமயத்தில் வஞ்சம் தீர்க்க வருகிறார்களோ? வந்தாலும் வரட்டும். நான் பயப்படமாட்டேன். கதவைத் திறப்பேன். கலகம் செய்யும் தொழிலாளர் யாரேனும் எதிர்பட்டால் "தேவநேசன் தங்கைதான் நான்" என்று சொல்லுவேன். உடனே அவர்கள் என்னை வணங்கிப் போய்விடுவார்கள். அல்லது அவருடைய யோகக்ஷேமத்தைப்பற்றி விசாரிக்க உட்கார்ந்து விடுவார்கள்.

அட்டா! தொழிலாளர் தலைவணங்கும் அண்ணாவின் அந்தப் பெயருக்குத்தான் என்ன மகத்துவம்? அந்தப் பெயரைக்கூட உச்சரிக்க எனக்கு உரிமையில்லையா? ஆமாம்! உலகமக்களின் வாழ்விற்காக—எந்த நேரமும் இரத்த வியர்வை சொட்டும் தொழிலாளரின் நன்மைக்காகப்—பாடுபடும் தேவநேசன் எங்கே? அவர்களின் உரிமையைப் பறித்து, போதிய கூலி கொடுக்காமல், உழைப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு, அவர்களின்

கோரிக்கையைக் காலின் கீழே போட்டு நசுக்கும் ஆலை முதலாளியாகிய மணிவாசகனின் மனைவி எங்கே?

லக்ஷியம்தான் ஒன்று? அதுவும் இல்லை. தேவநேச அண்ணாவுக்கு முதலில் வேண்டியது சுதந்திரம். எதற்கு என்பீர்களா? தேசத்திற்குத்தான் என்று மொத்த மாகப்பதில் சொல்லாதீர்கள். தேசத்தை வாழ்விக்கச் செய்யும்—அதை இயங்கச் செய்யும்—சக்தி வாய்ந்த தொழிலாளரின் பிறப்புரிமைச் சுதந்திரம், பேச்சுச்சுதந் திரம்—அதுதான் அவர் வேண்டும் உண்மையான சுதந் திரம். அதற்காகவே அவர் பாடு படுகிறார். அதற்கு அடிப்படை வேலையான அன்னியர் ஆட்சியை வேரறுக்க நினைக்கிறார். அதுதான் அண்ணாவின் லக்ஷியம்.

ஆனால் எங்கள் வீட்டுக்காரரின் லக்ஷியமே வேறு. நாடு வறுமையில் வாடக்கூடாது. பஞ்சம், பட்டினி கூடாது. இதற்கு முக்கியமான காரியம் நாட்டிலே பொருளாதாரம் சீர்கேடடைந்திருக்கிறது. பொருளா தார முன்னேற்றம் வேண்டுமானால் நாட்டிலே இயந்திரத் தொழிற்சாலைகள் ஏராளமான அளவில் ஆரம்பிக்கப் படவேண்டும். அன்னியச் சாமான்களுடன் போட்டி போடவேண்டும்.

நமது நாட்டிலுள்ள பணக்காரர்கள் இயந்திரத் தொழிலில் அதிகப்பங்கு எடுத்து, அதைமுன்னேற்றத் திற்குக்கொண்டுவரவேண்டும். எந்தவகையிலும் மேல் நாட்டையே எதிர்பார்த்திருக்கக்கூடாது. இதுதான் அவருடைய லக்ஷியம். அதற்காகவே உழைத்தார்.

அவருடைய நோக்கத்தைப்பற்றி என்னிடம் அடிக் கடி சொல்லுவார். நான் மௌனமாகக் கேட்டுக்கொண்

டிருப்பேன். "நான் சொல்லுவது சரிதானு?" என்று கேட்பார். "ஒருவகையில் உங்களுடைய லக்ஷியமும், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் லக்ஷியமும் ஒன்ருகத்தானே இருக்கிறது" என்றேன் ஒரு நாள்.

"ஆமாம்! அவர்கள் அன்னிய ஆட்சி ஒழிய வேண்டுமென்றும், தேசீய அரசாங்கத்தின்கீழ் மக்கள் சுபீட்சத்துடன் வாழவேண்டுமென்றும், சொல்லுகிருர்கள். நானே அன்னியர்களின் வியாபாரக்கொள்ளை ஒழியவேண்டுமென்றும், மக்கள் தங்களுக்குத் தேவையானதை இந்தியாவிலே உற்பத்திசெய்து அந்நியநாட்டினரின் சுரண்டலை ஒழிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறேன்" என்ருர்.

"இந்தக் கொள்கை தான் எனக்கும் பிடித்திருக்கிறது" என்றேன் நான். "அதற்காகவே உன்னைக் கல்யாணம் செய்துகொண்டேன். கணவனின் நோக்கத்தை அறிந்து, அதன்படி நடக்க முயற்சிப்பவளே உத்தம மனைவி" என்று சொல்லி அன்பு கலந்த பார்வையுடன் என்னை நோக்கினுர். நானும் அவருடைய பார்வையில் சிக்குண்டு நின்றேன்.

"புனிதா! எனது லக்ஷியம் நிறைவேறுமா?" என்று கேட்டார். நான் பதில் பேசாமல் இருந்தேன்.

"எனக்குப் பகலும் இரவும் இதே ஏக்கம்தான். இதில் வெற்றிபெற்ருல்தான் என் ஆத்மா சாந்தியடையும். இல்லையேல் நான் பரதேசியாகி, வாழ்க்கையை வெறுத்து வெளியேற வேண்டியதுதான்" என்ருர்.

நான் அவருடைய சோகம் ததும்பிய சொற்களைக் கேட்டேன். என்னுடைய நெஞ்சு அதைப் பொறுக்கவில்லை. வெப்பம் கலந்த பெருமூச்சுதான் வெளிவந்தது.

கண்கள் நீரைக்கக்கின. "புனிதா! நீ ஒரு கோழை. ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதற்குப் பதிலாக, அழுகிருயே! சரி போ!" என்ருர். அந்த ஞாபகம் மட்டும் மின்னல் போல் இன்னும் பளிச்சிட்டு மறைகிறது.

எவ்வளவு நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தேனே தெரியாது. மறுபடியும் கதவு 'பட், பட்' என்று பலமாகத் தட்டப்பட்டது. "யார்?" என்று கேட்டுக்கொண்டே ஓடிப்போய்க் கதவைத் திறந்தேன்.

ஆசாமி மாணிக்கம் அத்தான்தான். போலீஸ் உடையில் காக்ஷியளித்தார். இவர் ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தார்? திகைப்புடன் அவருடைய முகத்தை நோக்கினேன். "புனிதா!" என்று சிரித்துக்கொண்டே என்னை அழைத்தார். என்னை யறியாமல் கால்கள் நடுங்கின. இருதயம் உறைந்து பனிக்கட்டி போலத் தோன்றியது. திகைப்புடன் பின்னல் இரண்டடி தள்ளி நின்றேன்.

"என்னை நீ எதிர்பார்க்கவில்லையல்லவா?" என்று சொல்லிக்கொண்டு, மேஜையருகில் சென்று நாற்காலியில் உட்கார்ந்தார். நான் கல் சிலை மாதிரி அசையாமல் அந்த இடத்திலேயே நின்றேன்.

"என் நிற்கிருய், நான் இங்கு வருவதை நீ விரும்பவில்லையா? மணிவாசகன் எங்கே?"

"அவர் வெளியே போயிருக்கிருர்."

"எப்பொழுது?"

"கொஞ்ச நேரத்திற்கு முன்பு."

"புனிதா! நான் இங்கு வருவதை நீ விரும்பவில்லை என்று நினைக்கிறேன். விரும்பியிருந்தால் எனக்குக் கிடைக்

கும் வரவேற்பு அதிகம். ஆயினும் உனக்காக நான் இங்கு வரவில்லை. என்னுடைய நண்பன்தான் மணிவாசகன். ஆகையால் நான் நண்பன் வீட்டிற்குத்தான் வந்தேன்.''

அவர் என்னைப் பார்த்துக்கொண்டே சொன்னார். ஆயினும் நான் அவரை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

"புனிதா! ஏன் பேசாமல் நிற்கிறாய்? நீதான் மணிவாசகனை மணந்து கொண்டாயே, இன்னும் எனக்கு ஏன் பயப்படுகிறாய்? உன் வாயால் நீ "வா" என்று சொல்லாவிட்டாலும், 'போ' என்றாவது சொல்லிவிடு. போய்விடுகிறேன்'' என்றார்.

அவரிடமிருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக என்னை விட்டு அகன்றது. பாம்பின் விஷப்பற்களைப் பிடுங்கிவிட்டாலும். அது நமது அருகில் வரும்பொழுது, பாம்பு என்ற ஒருவித பயம் நம்மை நடு நடுங்கச் செய்கிறதல்லவா? அதே மாதிரிதான் மாணிக்கத்தைப் பார்த்ததும் ஏற்பட்டது. ஆனால் அவர் சொல்லிய கடைசி வார்த்தை என் மனதை இளகச் செய்து விட்டது.

அவரை "வாருங்கள்" என்றால் குறைந்தா போகும்? பின்பு ஏன் சொல்லவில்லை. மாமன் மகன்தானே! அத்தான் என்று கூப்பிட்டால் என்ன? கூப்பிடலாம். அப்படிக் கூப்பிட்டால் யோகக்ஷேமங்களைப்பற்றி சாவகாசமாக உட்கார்ந்து விசாரிக்க ஆரம்பித்து விடுவார். நானும் பதில் சொல்லும்படியாக இருக்கும். அதே நேரத்தில் என் கணவர் வந்து, நாங்கள் இருவரும் தனித்து பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டால்—?

மணிதனுக்குச் சந்தேகத்தால்தான் சங்கடங்கள் விளைகின்றன. நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருப்பதைப்

பார்த்தால் அதுவும் எங்கள் பழைய நட்பில் — மாமன் மகன், அத்தையின் மகள் என்ற முறையில் — பார்ப்பவருக்குச் சந்தேகம் மலைபோல் வளருவதற்கு வேறு சாதனம் வேண்டியதில்லை யல்லவா?

வேலை நிறுத்தங்களாலும், தொழில் உற்பத்திக் குறைவாலும் தீராத கவலைக்கு உட்பட்டிருக்கும் என் கணவருக்கு இந்தச் சந்தேகமும் எழுந்தால்......? அதற்காகவே திகைத்துப் பின் வாங்கி நின்றேன். ஆனால் மாணிக்கம் அதன் பின்பு கூறிய ஒரு வார்த்தை என் மனதைச் சுட்டது.

அவர் சொன்னார், "நான் உனது மாமன் மகன்தான். ஆயினும் என்னை நீ வெறுத்தாய். இன்னும் கூட வெறுக்கிறாய். நான் உனக்குப் பிடிக்கவில்லை. தேவநேசன் ஊர் சுற்றும் பேர்வழியாக இருந்த போதிலும் அவனைத் தெருவில் கண்டால்கூட இரவு வந்து தங்கும்படி வேண்டிக் கடிதம் எழுதுவாய். ஏனோ அப்படி?"

அழகிய தாமரைத் தடாகத்தில் தண்ணீர் முழுவதையும் இறைத்து விட்டால், பின்னப்பட்ட கொடிகளும், பாசியும் சேறும்தான் மிஞ்சும். அது போலவே மாணிக்க அத்தானிடம் நல்ல ஒழுக்கங்கள் மறைந்ததும் துவேஷமும், பொறாமையுமே தலை தூக்கி நின்றன.

அவருடைய பிரசங்கத்தில் அண்ணாவைப் பற்றிய துவேஷத்தைப் பார்த்தீர்களா? இதைக் கேட்டதும் நானே சிறிது நேரம் திகைத்தேன். அவருடைய அம்பு போன்ற மொழிகள் எனது புண்பட்ட இதயத்தை மேலும் நோகச் செய்தன.

"நானு கடிதம் எழுதினேன். தனியாக இருக்கும் சமயம் பார்த்து இங்கு வந்ததுமன்றி, அநியாயமான வார்த்தைகளைப் பேசிப் பழி சுமத்தப் பார்க்கிறீர்களோ?" என்றேன்.

"பழியா? இதுவா பழி? அப்படியானுல் நீ கடிதமே எழுதவில்லையா?" என்று அவர் ஆச்சரியத்துடன் என்னைக் கேட்டார். நான் திகைப்புடன் கனவு கண்டீர்களோ?" என்று கேட்டேன்.

"இருக்கலாம், கனவுதான். அன்று தேவநேசனும் தொழிலாளரும் இந்த வீதி வழியாக ஊர்வலம் வந்தது கனவு. மகாநாடு நடந்ததும் அதற்குத் தேவநேசன் தலைமை வகித்ததும் கனவு. நீ அவனைப் பார்த்ததும் கனவு. கடிதம் எழுதியதும் கனவு. உங்களுடைய வேலைக்காரன் 'சாயனு' அதைக் கொண்டு வந்ததும் கனவு. நான் தேவநேசனைக் கைது செய்து, உங்கள் வீட்டிற்கு முன்பு கொண்டு வரும் பொழுது நீ அவனைப் பார்த்ததும், காதல் மிகுதியால், கணவனுக்கு எதிரில் கண்ணீர் விட்டதும் கனவு. பின்பு நீயும் கனவு, நானும் கனவு, எல்லாம் கனவுதான். இல்லையா புனிதவதி?"

நான் கண்களைக் கசக்கிக்கொண்டு அழுதேன்.

"ஏன் அழுகிருய்? அடேயப்பா! இந்தப் பெண்கள் குற்றங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்குக் கண்ணீர் என்ற ஆயுதத்தைப் பிரயோகிக்க எப்பொழுதும் தயாராக இருக்கிருர்கள். புனிதா! அழுது என்னை ஏமாற்றிவிடலா மென்று எண்ணுதே!" என்று சொல்லிக் கொண்டே மேஜைமீது கிடந்த பத்திரிகையைப் புரட்டினுர்.

"உங்களை ஏமாற்ற நான் யார்? நீங்கள் ஏன் வீணாக இப்படிப் பழி சுமத்துகிறீர்கள்? நான் நன்றாக வாழ்வது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

"நீ நன்றாக வாழ வேண்டுமென்று தான் மனப்பூர்வமாக எண்ணுகிறேன். அனாவசியமாகப் பழைய காதலை நினைத்து, தேவநேசனுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டு, கொண்ட கணவனை வஞ்சிப்பது உனக்குப் பாவமில்லையா? உன் வாழ்க்கை வீணாகி விடாதா? உன்னை முன்பே வெறுத்து விட்டேன். ஆனால் நண்பனை நீ வஞ்சிக்கிறாய். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள். இதை எச்சரித்துப் போகவே வந்தேன்.

எனக்குக் கோபம் அளவு கடந்தது, "மறுபடியும், மறுபடியும் என் அவச்சொற்களைக் கூறுகிறீர்கள்? என்றேன் பொங்கிவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

"அவச் சொற்களை நான் கூறவில்லை புனிதவதி! உண்மையைத்தான் சொல்லுகிறேன். இதோ பார்! இதுகூட நீ எழுதிய கடிதமில்லை என்று சொல்லுவாய் போலிருக்கிறதே?" என்று சொல்லிவிட்டு ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டினார்.

ஆ! அந்தக் கடிதம் தேவநேச அண்ணாவுக்கு அன்று எழுதிய கடிதமல்லவா? சாயனாவிடமல்லவா கொண்டு போய்க் கொடுத்து வரும்படி கூறினேன். இவருக்கு இந்தக் கடிதம் எப்படிக் கிடைத்தது. போலீஸ்காரரல்லவா! இந்த மாதிரி வேலைகள் செய்வது தானே இவர்களுக்கு வழக்கம். அந்தக் கடிதத்தைப் பார்த்தபடியே பிரமித்துப் போய்விட்டேன்.

"சொல் புனிதா! இது நீ எழுதியது தானே? ஏன் பேசுகிறாயில்லை? இதுகூடக் கனவுதானோ?

"அத்தான்! உங்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். அபாண்டமான பழிகளைச் சுமத்தி ஒரு அபலையின் வாழ்க்கையைக் கெடுக்க வேண்டாம். தயவு செய்து வெளியே போங்கள். வீணாக என் வாழ்க்கையில் தலையிடாதீர்கள்."

"உன் வாழ்க்கையில் நான் ஏன் தலையிடுகிறேன்? நீயும் தேவநேசனும் அன்றொரு நாள் மாடிமீது நின்று அந்தி வேளையில் ரகசியம் பேசிய, அப்பொழுது முதல் உன்னை வெறுத்து விட்டேன். அதன் பிறகு உன்னைப் பற்றிக் கிஞ்சித்தும் நினைத்துப் பார்க்கவில்லை. நீ எப்படிக் கெட்டுப் போனாலும் அதற்கு நான் வருந்தப் போவதில்லை. ஆனால் உன்னை ஒரு பத்தினி என்று நினைத்துத் திரிகிறானே ஒரு பேதை—மணிவாசகன்—அவன் எனக்கு உயிர்த் தோழன். உன்னால் அவனுடைய புகழ் குன்றுவதைக் காண நான் சகிக்க மாட்டேன்.

"அவனிடம் இக்கடிதத்தைக் காட்டி அவனை எச்சரிக்கவே வந்தேன். ஆனால் அவன் இல்லை. நீ எதிர்ப்பட்டாய். உனக்குப் புத்திமதி சொன்னால் ஒரு சமயம் நீ திருந்துவாய். இதன் மூலம் உங்களுக்குள் ஏற்படும் மனக் கசப்புகள், உண்டாகாமல் தடுத்துவிடலாம், என்று எண்ணினேன். ஆனால் உன் பிடிவாதம் என் புத்திமதியைத் தடை செய்து விட்டது. நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, எழுந்து வாசற்படிக் கதவை நோக்கி நடந்தார்.

"அத்தான்! அத்தான்! இந்தப் பெண்ணிடம் கொஞ்சமாவது இரக்கம் காட்டுங்கள். அவர் ஒரு சந்தேகப் பிராணி. இந்தக் கடிதத்தைப் பற்றிச் சந்தேகமாகவே நினைத்து விடுவார். அதன் பின்பு இந்தக் குடும்பம் நிச்சயம் சீரழிந்து விடும். அதற்கு விதை விதைக்காதீர்கள். நீங்கள் போக வேண்டாம். இப்படி உட்காருங்கள். அவரே வந்து விடுவார். வீணாக இந்தக் கடிதத்தைக் காட்டி என் உயிரைப் போக்காதீர்கள். மானமிழந்து உயிர் வாழ மாட்டேன்."

"பயமுறுத்தாதே புனிதவதி! அவன் வந்ததும் நான் வருகிறேன்."

"இல்லை. இங்கேயே இருங்கள். அவர் வந்ததும் சிநேகப் பான்மையில் அவரிடம் பேசுங்கள். இந்தக் கடிதத்தைக் காட்டாதீர்கள். இந்த ஊரில் உங்களுக்கு ஒரு தங்கையிருந்து, நீங்கள் மூன்று வருஷங்களுக்குப் பின்பு இந்த ஊருக்கு வந்தும், நீங்கள் அவளைப் பார்க்காதிருந்தால், உங்களைப் பார்க்க வரும்படி அவள் கடிதம் எழுதுவது குற்றமா? நான் தேவநேச அண்ணாவைச் சகோதரன் போலவே நினைத்து, நடத்தி வருகிறேன். இதை நம்புங்கள். சிறிது நேரம் தங்கி, கோபத்தை மாற்றி அவர் வந்ததும் சந்தோஷமாகப் பேசிச் செல்லுங்கள்."

"ஆண்கள் இல்லாத வீட்டில் பெண்களுடன் தனித்துப் பேசிக்கொண்டிருப்பது தேவநேசனைப் போன்றவர்களுக்கே வழக்கம். நீ மட்டும் தனியாக இருக்கும் இந்த அறையில் நான் இருக்க இஷ்டப்படவில்லை."

"முடியாது. நீங்கள் கோபத்துடன் செல்லுகிறீர்கள். அதனால் குறைகள் நேரலாம். இங்கேயே இருந்து

கோபத்தை ஆற்றி, உணவருந்திச் செல்லுங்கள். தயவு செய்து இந்த ஏழைமீது கிருபை காட்டுங்கள்."

"எனக்கு இங்கே சிற்றுண்டி வேறு? வேண்டாம் புனிதவதி! அவன் வந்ததும் வருகிறேன்." அவர் சொல்லி விட்டு மேலும் நடக்க ஆரம்பித்தார். எனக்குத் தைரியம் எங்கிருந்து வந்ததோ தெரியாது. இவ்வளவு பேசியும் சிறிதும் இரக்கமின்றிச் செல்லும் அவர் பின்னுல் ஓடி அவர் கையைப் பிடித்து இழுத்தேன்.

ஆனுல் இதென்ன?....வாசற்கதவு திறக்கப்படுகிறது. ஒரு பெரிய கனவான்—யார்?......என் கணவர்தான் வருகிருர். என்ன அசந்தர்ப்பமான வேளே? பாம்பை மிதித்தவள் போல் திடுக்கிட்டேன். உடனே, உள்ளே ஓடிப் போய் ஒரு மறைவிடத்திலே நின்றுகொண்டேன். என் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. கால்கள் நடுங்கின. அவர் என்ன சொல்லப் போகிருர் என்பதை நினேக்க, நினேக்க மனம் பைத்தியம் பிடித்து விடும்போலிருந்தது.

"இந்த ஏழைமீது கிருபை காட்டுங்கள்" என்று சொல்லி மாணிக்கத்தின் கையைப்பிடித்து இழுத்ததை என் கணவர் பார்த்து விட்டார் போலும். அப்படியே ஸ்தம்பித்து நின்ருர். ஆனுல் மாணிக்கம் அவரை நோக்கி "ஹலோ மிஸ்டர் மணிவாசகன்" என்றதும், அவரும் பதிலுக்கு "ஹலோ!" என்று சொல்லிவிட்டு மேஜையருகே சென்று உட்கார்ந்தார். அவர் பின்னுல் மாணிக்கம் சென்று அமர்ந்தார்,

எனக்குப் பயத்தினுல் ஹிருதயம் நின்றுவிட்டது போலிருந்தது. மாணிக்கம் அந்தக் கடிதத்தை அவரிடம் கொடுத்துவிட்டாலும், சற்றுமுன்பு நான் நடந்துகொண்ட

விதத்தை விபரீதமாக அர்த்தம் செய்து கொண்டாலும், அவர் என்ன சொல்லுவாரோ? இனி அவர் முகத்தில் எப்படி விழிப்பது? முன்பெல்லாம் என்னைப்பற்றியும், எனது நடத்தையைப்பற்றியும் சிறிதுகூட நினைத்துப் பார்க்க அவகாசமில்லாமல், தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

அப்பொழுது முதல் இன்றுவரை அவர் சந்தேகம் கொள்ளும்படி எதுவும் நடக்கவில்லை. என்னை ஒரு நண்பன், துணைவன் என்ற நிலையில் நடத்திவந்தார். மனைவியிடம் காட்டவேண்டிய அளவற்ற அன்பையும் அவ்வப்போது என்னிடம் செலுத்திவந்தார். ஆனால் இன்று அவருடைய நிலைமை என்ன?

ஆலைக்கஷ்டத்தால் மனமுடைந்து நிற்பவருக்கு இன்று நடந்தது நல்ல வரவேற்புத்தான். அதோ அவர்கள் பேசிக்கொள்ளுவது என்ன? .....சிறிது நேரம் நின்றேன். என் கணவர் மட்டும் எழுந்து உள்ளே வந்தார். என்னைக் கண்டதும் "இங்கேயா நிற்கிறாய்? உனக்கு இவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது? கபடக்காரி! நாடகமா நடிக்கிறாய்?" என்று சொல்லிக்கொண்டே அருகில் வந்தார்.

அவருடைய பார்வையிலே வெறுப்பாகிய விஷபானம் இருந்தது. அவர் கோபத்துடன் நகைத்தார். அந்த நகைப்பு என் இருதயத்தை ரம்பம்போட்டு அறுப்பது போலிருந்தது. அவர் கண்களில் சிவப்பேறி இருந்தது. விரல்களை மடக்கிக் குத்த வருவது போல, கையை நீட்டிக் கொண்டு வந்தார். அவருடைய தோற்றம் பயங்கரமாக இருந்தது. சிறு குழந்தையாக இருக்கும் பொழுது எங்கள் பாட்டி சொன்ன இராக்ஷதன் கதையில், இராக்ஷதன் இப்படித்தான் வருவானென்று கற்பனை செய்து கொள்ளு

வது வழக்கம். அந்த இராக்ஷதனைப்போல் அவர் காக்ஷி யளித்தார்.

அவருக்கு முன்னால் ஒரு பிரம்பு கிடந்தது. பிரம்பா அது? இல்லை, இல்லை. ஆடவர்கள் பெண்களை, நினைத்த தற்கெல்லாம் சந்தேகித்து, வீட்டிலேயே சிறைவைத்து, அடித்துத் துன்புறுத்தி, அடிமையாக்கி வருகிறார்களே — அவர்களுக்கு, துணைநின்று உதவும் கொடுங்கோல் அது.

அதைக் குனிந்து கையிலெடுத்தார். அந்தப் பிரம்பை என்னை நோக்கிக் ஆட்டிக்கொண்டே "என்னை யாரென்று நினைத்தாய்?" என்று கேட்டார். பிரபஞ்சம் ஏற்படும் பொழுது உலக முழுவதும் அழிவுற்றால்கூட நிலைமை அப்படித் தோன்றாது. அதைக்காட்டிலும் படுமோசமான நிலைமையில், அவர் முன்பு, பொம்மையைப் போல் நின் றேன். உலகம் அழிந்துகொண்டே என்னிடம் வந்து விட் டது. இன்னும் கொஞ்சநேரத்தில் என்னையும் நான் நிற்கும் இடத்தையும் அழித்துக்கொண்டு போய்விடும் என்று கற் பனை செய்தேன். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கடும் புயலில் அகப்பட்டுச் சிக்கிச் சுழலும் அபலைதான் நான்.

"ஏண்டி, பதில் சொல்லுகிறாய் இல்லை?" என்று கூறிக்கொண்டே பிரம்பால் என் முதுகில், ஓங்கி, 'பளீர்' என்று அடித்தார். மறு விநாடியே மூர்ச்சையடைந்து கீழே விழுந்தேன்.

விழித்துப் பார்க்கும் பொழுது ஓர் அறையில் மெத் தையின்மேல் படுத்திருந்தேன். நெற்றியில் எனக்கு ஒரு காயம். முதுகில் இரத்தம் கசிந்து, நாலைந்து இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. முழங்காலுக்குக் கீழே கால்கள் வேதனையால் எரிந்தன. எங்கு பார்த்தாலும்

இரத்தச் சிவப்பேறின தழும்புகள் தென்பட்டன. காயங்களுக்கு ஏதோ மருந்து போடப்பட்டிருந்தது.

நடந்த சம்பவங்கள் சிறிது சிறிதாக ஞாபகத்திற்கு வந்தன. எனக்கு அருகில் யார் இருக்கிறார்கள் என்று சுற்று முற்றும் பார்த்தேன். வேலைக்காரர்களைத் தவிர வேறு ஒருவருமில்லை. சாயனு ஒரு தூண்மீது சாய்ந்து நின்று, என்னையே பார்த்துக்கொண்டிருந்தான். எனக்காக அவன் இரக்கப்படுவதுபோல அவன் முகத்தோற்றம் காணப்பட்டது.

எனக்கு அருகில் உட்கார்ந்து, வேலைக்காரக்கிழவி அழுது கொண்டிருந்தாள். "அழாதே" என்று கையால் சைகை செய்தேன். சாயனுவை அழைத்து "ஐயா எங்கே?" என்று கேட்டேன். வெளியே சென்றிருப்பதாகச் சொன்னான்.

நாலைந்து தினங்களில் எழுந்து நடக்க ஆரமபித்தேன். ஒருவாரமாகி விட்டது. ஆனால் அவர் இன்னும் வீட்டிற்கு வந்தபாடில்லை. அன்று என்னை அடித்தபொழுது சென்றவர் ஒருவாரமாகியும் வீட்டிற்கே வரவில்லை. 'ஹோட்டலில்' சாதம் எடுத்துவந்து, ஆலையில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு, அங்கேயே இரவு தங்கி விடுகிறாராம்.

சாயனு ஒவ்வொருநாளும் ஆலைக்குப்போய்வருகிறான். ஆனால் என்னைப்பற்றி அவனிடம் ஒன்று கூட விசாரிக்கவில்லையாம். அப்படியானால் இனி வீட்டிற்கே வாரமல் இருந்து விடுவாரா? இந்த மாதிரிச் சந்தேகம் சட்டென்று இதயத்தில் உதித்தது. அவர் வராவிடில் என் வாழ்க்கையின் கதி......?"

அவரும் மாணிக்கமும் என்ன பேசிக்கொண்டார்கள்? என்ன முடிவுக்கு வந்தார்கள்? மாணிக்கம் அந்தக் கடிதத்தை அவரிடம் காட்டினாரா? என்னைப் பற்றி அவர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்? பற்பல சிந்தனைகள் மனதில் தோன்றி மறைந்தன.

வேலைக்காரக் கிழவி என்னருகில் வந்து "அம்மா!" என்று அழைத்தாள். நான் அவளை நோக்கினேன். "ஐயா, வீட்டிற்கு ஏன் வருவதில்லை?" என்று கேட்டாள். "தெரியவில்லையே!" என்றேன்.

"உங்களுக்கு மட்டும் தானம்மா தெரியவில்லை. ஆனால் உலகம் அதை அறிந்து வைத்திருக்கிறது. பக்கத்து வீட்டு ஜனங்கள் அடிக்கடி அதைப்பற்றியே பேசுகிறார்கள்." என்றாள்.

"எதைப் பற்றிப் பேசுகிறார்கள்? என்ன பேசுகிறார்கள்?" என்று ஆவலுடன் கேட்டேன். அவள் என்னைத் தனியாக அறைக்குள் அழைத்துச் சென்றாள். இருவரும் தரையில் உட்கார்ந்தோம். "அம்மா! போலீஸ் இன்ஸ்பெக்டர் மாணிக்கம் உங்களுக்கு உறவினரா?" என்று கேட்டாள். "ஆமாம், மாமன் மகன்தான்" என்றேன்.

அவள் மோவாயில் கைவைத்து ஊன்றியபடி "அடடே! உங்களுக்கு அத்தானா அவர், பின்பு ஏன் ஜனங்கள் இம்மாதிரி அவதூறுகளைப் பேசுகிறார்கள்? உலகம் பார்ப்பதையெல்லாம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது," என்று திட்டினாள்.

"என்னதான் பேசிக் கொள்ளுகிறார்கள்? முதலில் அதைச் சொல்லு"

"அம்மா! அதைச் சொல்லாமலா விடப்போகிறேன். நான் சொல்லாவிட்டாலும் பக்கத்து வீட்டு ஜனங்கள் பேசிக் கொள்வது இன்றைக் கில்லாவிட்டாலும் நாளை உங்களுடைய காதில் விழாமலா இருக்கப் போகிறது?"

"சரி, விஷயத்தைச் சொல்லு"

"சொல்லுகிறேன். ஆனால் அதைத் தாங்கும் மன வுறுதி உங்களுக்கு உண்டா?"

"அவ்வளவு பெரிய விஷயமா?"

"ஆமாம், கேட்டால் உங்களுக்கு பயங்கரமாக இருக்கும்."

"பரவாயில்லை. செய்திதானே; சும்மா சொல்லு; அன்று ஐயா பிரம்பினால் என்னை அடித்த அடியைக் காட்டிலும் மோசமானது — சகிக்க முடியாதது — இந்த உலகத்திலேயே வேறு இல்லை என்றுதான் நினைக்கிறேன். சொல். அது எந்த மாதிரி பயங்கரமாக இருந்தாலும் கேட்டுச் சகித்துக் கொள்ளும் தைரியம் எனக்கு உண்டு."

"அன்று போலீஸ் இன்ஸ்பெக்டர் இங்கே தனி யாக வந்ததும், உங்கள் இருவருக்கும் வாக்குவாதம் நடந்ததும், பின்பு எஜமான் வந்ததும், உங்களைப் பிரம்பு கொண்டு அடித்ததும், எல்லா விபரமும் அடுத்த வீடு களில் பேசிக்கொள்ளப் படுகிறது. இங்கே என்ன நடக் கிறது என்பதை அறிந்து, அதை ஒன்றுக்குப் பத்தாக மாற்றி உலகம் பூராவும் பரப்புவதற்குச் சிலர் தயாராக இருக்கிறார்கள் அம்மா!"

"இது உலக வழக்கம் தானே! அது சரி. வேறு என்ன பேசிக் கொள்ளுகிறார்கள்?"

"அம்மா! மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொள்ளுங்கள். நான் சொல்லப் போகும் வார்த்தை உங்கள் மனதை நோகச் செய்பலாம்," என்று சொன்னாள்.

"ஏன்டி, இந்தப் பீடிகை எல்லாம் போடுகிறாய்? விஷயத்தைச் சொல்லு."

"சொல்லுவதற்கு என்ன அம்மா பயம்? நமது ஐயா, மில்லுக்கு ஒரு குறையும் நேராமலிருப்பதற்காக இன்ஸ்பெக்டர் மாணிக்கத்தின் தயவை நாடினாராம். ஆனால் மாணிக்கமோ உங்கள் மீது சிறு குழந்தை முதல் ஆசை வைத்திருந்தாராம். எப்படியாவது தனது ஆலையில் கலவரங்களும், வேலை நிறுத்தங்களும் நிகழாமல் தடுப்பதற்காக இன்ஸ்பெக்டர் இங்கேவந்து, உங்களுடன் காதல் உரையாடுவதை அறிந்தும் வேண்டுமென்றே அதைத்தடுக்காமல் விட்டுவிட்டாராம். ஆகவே உங்கள் மூலம் ஐயாவுடைய மில்லில் வேலைநிறுத்தம் நிகழாமலும், இன்ஸ்பெக்டரின் காமப்பசி பூர்த்தியாகியும் விட்டதாம். உலகம் நம்மைப்பார்த்து இன்று இந்தமாதிரி பேசிக்கொள்ளுகிறதம்மா; அவர்கள் இச்செய்தியை நம்புவதற்கு ஏற்றதுபோல, நீங்களும் சில நாட்களாக வீட்டைவிட்டு வெளியே வருவதில்லை. அவரும் வீட்டிற்கு வாராமல் ஆலையிலேயே தங்கிவிட்டார். இருவரும் உலக அபவாதத்திற்கு முன் தலை காட்ட முடியாமல் ஒளிந்து கொண்டிருப்பதாகப் பேசிக் கொள்ளுகிறார்கள் அம்மா!"

ஆயிரம் தேள்கள் ஒரே நேரத்தில் சேர்ந்து கொட்டியதுபோல இருந்தது உடம்பிற்கு. உலகத்தின் அறியாமைக்கு யாரால் என்னதான் செய்யமுடியும்? உலை வாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியுமா?

வீட்டில் நடந்தது என்ன? எனக்குக் கிடைத்த அடி கூட அந்த ஜனங்களுக்குத் தெரியாதா? உடம்பு முழுவதும் ரணகாயமாக — காயத்தின் மீது கட்டப்பட்ட கட்டுகளால் மனம் துன்புற்று, வெளியே செல்ல மனமின்றி உள்ளேயே அடைபட்டுக்கிடக்க, அறியாமையால் மக்கள் இப்படிப் பேசுவதா? ஐயோ! இந்த மாதிரி அவச் சொற்கள் அவருடைய காதிலும் விழுந்தால்......? எரியும் நெருப்புக்கு, அதை அணைக்க எண்ணெயையா ஊற்றுவது? நான் பெண்தானே! இம்மாதிரிப் பழியை என் உள்ளம் எப்படிச் சகிக்கும்?

இந்த உலகத்தில் இனி நான் நல்ல பெயருடன் வாழ முடியுமா? பார்ப்பவர்களெல்லாம் விரலால் என்னைச் சுட்டிக் காட்டிப் பேசிக் கொள்ளுவார்களே? எவ்வளவு நல்ல பெண்ணாகக் காலம் கழித்தாலும் அவச் சொல் மறையுமா?

தேவநேச அண்ணா என் வாழ்க்கைப் பாதையின் ஆசையில் 'மண்' போட்டதிலிருந்து எனக்குத் துன்பமும் துயரமும்தான் துணைவர்களாகி விட்டன. விவாகத்திற்குப் பிறகாவது சுகமாக இருக்கலாமென்று நினைத்ததற்கு மாறாக, மேலும், மேலும் சகிக்க வொண்ணாத துயரங்கள் கழுத்தை நெறிக்கின்றன. இவற்றை எப்படித் தாங்க முடியும்?

ஆம். ஒரு வழி இருக்கிறது. அளவுக்கு மீறிய அவச் சொற்களிலிருந்து தப்பித்துக்கொள்ள இதைக் காட்டிலும் சிறந்த வழி வேறு இல்லை. அதுதான் "தற்கொலை". ஓர் உயிரை வதைப்பது பாவமில்லையா? என்று கேட்கலாம். சட்டப்படி இது பெரிய குற்றமாகவும் இருக்க

லாம். என்னைப் போன்ற ஆதரவற்ற பெண்கள், இந்த உலகத்தில் ஒரு லக்ஷியத்தோடு வாழ முடியாவிட்டாலும் தன் கற்புக்குப் பங்கமில்லாமலும், நேர்மையாகவும் வாழ முயல வேண்டும்.

அப்படி நடந்தும் நல்ல பெயர் கிடைக்காமல், சந்தர்ப்பத்தைத் தவருகப் பயன்படுத்தி, உலகம் அவளைத் தூற்றும் பொழுது, மனம் உடைந்த அவள் வாழ்வதற்கு மார்க்கம் என்ன? "தற்கொலை". அதுதான் எங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்குச் சிறந்த சாதனம். அதன் பின்பும் உலகம் பேசினல் பேசட்டும். அது எங்கள் காதுக்குக் கேட்காதல்லவா?

எதிர்காலத்திலே அமுதம் நிறைந்த கிண்ணத்தை விதி எனக்களிக்கும் என்று நினைத்தேன். அது விஷம் நிறைந்த கிண்ணத்தையே எனக்குக் கொடுத்து என் உயிரை வாங்குகிறது. முடிவு தற்கொலைதான்.



## சந்திரன் 12

"தொழிலாளர் இயக்கம் அடக்கப்பட்டது. தலைவர் உட்பட பதினைந்து பேர் கைது செய்யப் பட்டனர்." என்ற தலையங்கத்தைத் தினசரிகளில் பார்த்ததும், என் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. அப்பொழுதே தேவநேசனைக் கோயம்பத்தூருக்குப் போக வேண்டாமென்று வற்புறுத்தினேன். அவன் என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் இம்மாதிரி இயக்கங்களையே அவன் விரும்பி வரவேற்கிறான். சிறை வாசம் என்றால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுகிறான்.

தேவநேசனைப் போய்ப் பார்த்து வரலாமென்று நினைத்தேன். மங்கையர்க்கரசியும் என்னைப் போய்வரும்படி வற்புறுத்தினாள். பல வேலைகளுக்கிடையே கோயம்பத்தூர் போய்வர முடிவு செய்தேன்.

கோயம்புத்தூருக்கு அதிகாலையில் ரயில் வண்டியில் வந்து சேர்ந்தேன். வழக்கமாகப் பிரயாணிகளை — அதுவும் நாகரீக உடையில் காணப்படும் நபர்களை அதிகாலையில், மகிச்சியுடன் வரவேற்பவர்களில் ஒருவராகிய திருவாளர் தினசரிப் பத்திரிகை என் கைக்கு வந்தது. பிரித்துப் பார்த்தேன்.

"தற்கொலை" என்ற தலைப்பின் கீழ், "மில் சொந்தக்காரராகிய மணிவாசகத்தின் மனைவி புனிதவதி என்பவர், நேற்று இரவு தற்கொலை செய்து கொண்டார். போலீசாரால் விசாரணை நடந்த பொழுது 'கணவன் — மனைவி தகராறு' என்று தெரிய வருகிறது" என்று அதில் காணப்பட்டது.

எனது நண்பனும், மில் சொந்தக்காரனுமான மணிவாசகத்தின் மனைவியா இவள்? எதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள்?

ரயிலில் முன்தினம் இரவு பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுது என் மனம் ஓயாத கற்பனையில் மூழ்கியிருந்தது. "நான் மணிவாசகத்தின் விருந்தினனாகச் செல்வேன். என்னைக் கண்டதும், நீண்ட நாள் பிரிவின் துயரத்தால் ஓடி வந்து, கை குலுக்கி அழைத்துச் செல்லுவான் மணிவாசகன்.

"அவன் மனைவியை அழைத்து 'புனிதா! நமது கலியாணத்திற்கு, நம்மைப் பற்றிப் பத்திரிகையில் புகழ்ச்சியாக எழுதினரே எனது நண்பர் — இவர் தான் அந்த ஆசாமி. சீக்கிரம் காப்பி தயாராகட்டும் என்பான். ஆலைக்கு அழைத்துச் சென்று ஒவ்வொன்றையும் காட்டுவான். இயந்திரத் தொழிலைப் போற்றி பத்திரிகையில் எழுதும்படி வேண்டிக் கொள்ளுவான். தேவநேசனைப் பற்றிய சகல விபரங்களையும் அவனிடம் சொல்லுவேன். இருவரும் சென்று சிறையிலே அவனைப் பேட்டி காண்போம்." என் கற்பனைக்கு ஓய்வேயில்லை. ஆனால் பத்திரிகையைப் பார்த்ததும் அந்தக் கற்பனை எங்கே?

மனிதன் நினைத்த படியா உலகத்தில் எல்லாம் நடந்து விடுகிறது? கோயம்புத்தூருக்கு முதல் தடவையாக இப்பொழுது தான் போனேன். அங்கு சென்றதும் எனக்குக் கிடைத்த முதல் வரவேற்புச் செய்தியைப் பார்த்தீர்களா?

சுதேசிக் கொடிப் பத்திரிகைக்கு எனது சகோதர எழுத்தாளன் ஒருவன் கோயம்புத்தூரிலிருந்து கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்தான். அவன் பெயர் சாமிநாதன். 'சாமி' என்ற புனைப்பெயருடன் ஏராளமான கட்டுரை, கதைகள் சுதேசிக் கொடியில் வெளி வந்திருக்கிறது. அவன் வீட்டிற்குச் சென்றேன்.

சாமிநாதன் என்னை ஆவலுடன் வரவேற்றான். அவன் வீட்டிலேயே தங்கியிருக்கும்படி பலமாக வற்புறுத்தினான். நானும் அதற்கு இணங்கினேன். அன்று இரவு நானும் அவனும் மாடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

"சாமிநாதா இன்று தினசரியில் 'தற்கொலை' என்ற கோயம்பத்தூர் செய்தி வந்திருக்கிறது பார்த்தாயா?"

"ஆமாம். நேற்று காலையில் நடந்த விஷயம்."

"அதன் விபரம் முழுவதும் உனக்குத் தெரியுமா?"

"ஏன் சார்! இவர்களுடைய திருமணத்தைப் புகழ்ந்து தானே ஒரு தடவை சுதேசிக் கொடியில் எழுதியிருந்தீர்கள்?"

"ஆமாம். ஆலை முதலாளியான மணிவாசகனின் விரிவான நோக்கங்கள் நமது நாட்டிலேயே யாருக்கும் கிடையாது. நமது நாட்டைப் பொன் கொழிக்கும் ஐஸ்வரிய இந்தியாவாக ஆக்க எண்ணியிருந்தான். அவனுக்குக் கடவுள் தான் துணை செய்யவில்லை."

"நீங்கள் மட்டும் தான் இப்படி அபிப்பிராயப்படுகிறீர்கள். ஆனால் இந்தக் கோயம்பத்தூர் அவரைப்பற்றி என்ன சொல்லுகிறது தெரியுமா?"

"என்னதான் சொல்லுகிறது?"

"நீங்கள் அவருடன் பழகிய காலத்தில் மணிவாசகனின் எண்ணங்கள் அப்படி இருந்திருக்கலாம். ஆனல் இப்பொழுது அவர் முற்றிலும் மாறி விட்டார். பழைய மணிவாசகனல்ல. நீங்கள் அவரை விட்டுப் பிரிந்து நீண்ட நாட்களிருக்குமா?"

"ஆமாம். நான்கு வருஷங்கள் ஆகின்றன."

"அப்படியானல் சரிதான். ஒவ்வொரு வீட்டிலும் இந்தத் தற்கொலை சம்பந்தமாக என்ன பேசிக் கொள்ளுகிருர்கள் தெரியுமா? தன்னுடைய ஆலையில் கலவரங்கள் நிகழாமல், பார்த்துக் கொள்ளுவதற்கும், தொழிலாளர் இயக்கத்திற்குக் காரணமானவர்களைப் பிடித்து, வழக்குத் தொடர்ந்து உள்ளே தள்ளுவதற்கும், போலீஸ் இன்ஸ்பெக்டர் மாணிக்கத்தின் தயவை நாடினராம். மாணிக்கம் நேற்று தற்கொலை செய்துகொண்ட புனிதவதியை ஏதோ ஒரு நாள் பார்த்து, அவள் அழகில் ஈடுபட்டு, அவளையடைய ஆசைப்பட்டாராம். இப்பொழுது அவருடைய உதவியை நாடிச் சென்ற மணிவாசகத்தைக் கொண்டு அவருடைய காதல் இச்சையைப் பூர்த்தி செய்து கொண்டாராம்.

"என்ன நடந்ததோ கடவுளுக்குத்தான் தெரியும்? ஒருவாரமாக அவள் வெளியே வருவதில்லையாம். மணிவாசகனும் ஆலையிலேயே தங்கி விடுவாராம். பற்பல விதமாக அந்தத் தெரு மக்கள் பேச ஆரம்பித்து விட்டார்களாம். கடைசியாக நேற்றுப் பத்திரிகையில் வந்த செய்தியைக் கேட்டதும் மக்களின் சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது."

"ஆச்சரியமாக இருக்கிறதே சாமிநாதா? ஒருவனுக்கு மானம் பெரிதா, தொழில் பெரிதா? இது அநியாய

யில்லையா? மேலும் மணிவாசனும் மாணிக்கமும் பால்ய சிநேகிதர்களல்லவா? மக்கள் பேசிக் கொள்ளுவது போல அவர்கள் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. எந்த விதமாக இருந்தாலும் சாதாரண விஷயங்களைக் கொண்டு, உலகம் பெரிய கதையாக்கி விடத் தயாராக இருக்கிறது. பொய்யையும் மெய்யையும் கலந்து வழக்குத் தயார் செய்யும் போலீஸ்காரர்களையும், ஒரு சிறிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, பெரிய பெரிய நவீனங்களையும், கதைகளையும் சிருஷ்டிக்கும் எழுத்தாளர்களையும் பெற்றெடுத்தது இந்த உலகம் தானே? பின்பு எப்படி உலகம் கட்டி விடுவதை நம்பாமலிருக்க முடியும்? ஆனால் நீ சொல்லுவது போன்ற ஆபாசமான—கேள்விப் பட்டு அறியாத—மனிதன் பகுத்தறிவினால் செய்ய முடியாத—செய்தியைக் கேட்டதும் இந்த உலகத்தின் மீது எனக்கு வெறுப்பு உண்டாகிறது.

"எந்த மனிதனும் காசுக்கு ஆசைப்பட்டு தன் மனைவியின் கற்பை இழக்கும்படி செய்ய விடுவானா? இதைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொள்ளும் மக்களும் தங்கள் நிலைமையைக் கொஞ்சம் நினைத்துப் பார்க்கட்டும். பிச்சை எடுத்துச் சாப்பிட்டாலும் ஒருவன் இந்த மாதிரி காரியத்தைச் செய்யத் துணியவே மாட்டான்."

"இன்று காலை ஸ்டேஷனுக்கு முன்பு இரு பிச்சைக்காரர்கள் என்னிடம் வந்து பிச்சை கேட்டார்கள். அவன் குருடன். மெலிந்து, நலிந்து, கண்கள் குழி விழுந்து, தாடியும், மீசையும், கிழிந்த சட்டையுமாகப் பார்ப்பதற்கு விகாரமாகத் தோன்றினான். அவன் மனைவி அவனை

அழைத்துக் கொண்டு ஒவ்வொருவரிடமும் வந்து பிச்சை கேட்டாள். நல்ல அழகி, ஆனால் மெலிந்து போயிருந் தாள். கவலையின் சின்னம் முகத்திலே பிரதிபலித்தா லும் இளமையின் எழில் அவள் உடம்பை விட்டு மறைய வில்லை.

"அவளுக்கு என்ன கவலை? புருஷனை அழைத்துக் கொண்டு வீதிகளில் போவோர், வருவோரிடம் கை நீட்டி வாங்கும் கேவலமான பிச்சைத் தொழிலை அவள் ஏன் செய்யவேண்டும்? ஆனால் பிழைப்புக்காகக் கற்பை யிழப்பதா? பிச்சைக்காரியானாலும், பணக்காரியானாலும் கற்பு என்பது ஒவ்வொரு மாதரிடமும், உள்ள விலை மதிக்க முடியாத பொக்கிஷந்தானே? இதைத் தவறான வழியில் உபயோகிப்பதாக தன் மனைவி மீது அந்தக் குருடன் சந்தேகப்பட்டால் மனம் சகிப்பாளா அவள். அவன் தான் அவளை ஒரு கணமேனும் தன்னுடன் இருக் கும்படி விடுவானா?

"இவர்களைவிடக் கேவலமானவர்களா மணிவாசக னும், புனிதவதியும்? மாணிக்கம் ஒரு மிருகமா? மாணிக் கத்திற்கு நினைத்துப் பார்க்கும் சுய அறிவு இல்லையா? சாமிநாதா! இனிமேலாகிலும் தெரிந்துகொள். இச் செய்தியை, வேண்டாதவர்கள் திரித்துக்கூறிப் பரவச் செய்திருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் நாள் பொறு. எல்லா விஷயங்களையும் விசாரித்து உனக்குச் சொல்லு கிறேன்." என்றேன்.

அன்று இரவு முழுவதும் உலகத்தின் போக்கைப் பற்றியும், நண்பர்களின் வாழ்க்கையைப் பற்றியும் சிந்தனை செய்து கொண்டிருந்தேன். தூக்கம் வந்தபாடில்லை.

புரண்டு புரண்டு படுத்தேன். விடியற்காலமாகத் தூங்கிப் போய்விட்டேன்.

காலையில் மணி எட்டு அடிக்கும்பொழுது விழித்துக் கொண்டேன். சாமிநாதன் உடையணிந்து, தலைவாரிக் கொண்டிருந்தான். "என்ன சாமிநாதா! என்னை எழுப்பாமல் விட்டுவிட்டாய்?" என்றேன்.

"நீங்கள் தெரிவித்தபடி தேவநேசனை எப்பொழுது பேட்டி காணலாமென்று டெலிபோனில் விசாரித்தேன். ஒரு கடிதம் முன்னால் எழுதப்பட வேண்டுமாம். அதன் பின்பு உத்தரவு வந்துவிடுமாம். இப்பொழுது ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். நீங்கள் அதில் கையெழுத்திட வேண்டியது தான் பாக்கி. இப்பொழுதே எடுத்துச் சென்று உத்தரவு வாங்கிவந்தால், மத்தியானம் தேவநேசனைப் போய்ப் பார்த்து வரலாம்." என்றான்.

"உத்தரவு வாங்க யார் போவது?"

"இதோ நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நொடியில் வந்து விடுகிறேன்," என்று சொல்லிவிட்டு, கடிதத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, வேகமாக வெளியே சென்றான்.

சுமார் பனிரெண்டு மணி யிருக்கும். உடம்பு முழுவதும் வியர்வை சொட்ட, வேகமாக உள்ளே நுழைந்தான். "உத்தரவு கிடைத்ததா? எப்பொழுது பார்க்க வேண்டும்?" என்று கேட்டேன்.

"சார்! உத்தரவு கிடைத்துவிட்டது. மூன்று மணிக்கு மேல் ஐந்து மணிக்குள் பார்க்கலாம் என்று

ஜெயில் அதிகாரி சொன்னார். ஆனால் நான் திரும்பி வரும்பொழுது வழியில் கேட்ட செய்தி திடுக்கிடத் தக்கதாக இருக்கிறது.''

"அது என்ன செய்தி?''

"உங்களுக்குத் தெரிய வேண்டிய முக்கியமான செய்தி.''

"தேவநேசனுக்கு ஏதேனும் —''

"அப்படி ஒன்றுமில்லை. தேவநேசன் சௌக்கிய மாகத்தான் இருக்கிறார்.''

"வேறென்ன?''

"இன்ஸ்பெக்டர் மாணிக்கம் உங்களுடைய நண்பர் என்று சொன்னீர்களே!''

"ஆமாம், என்னுடைய உயிர் நண்பன்.''

"மணிவாசகன் — ?''

"இருவரும் அப்படித்தான்.''

"இருவரும் அவர்களுக்குள் பரம விரோதிகளாகி விட்டார்களே!''

"இருக்கலாம். ஆனால் எனக்கு இருவருமே பால்ய நண்பர்கள் தான்.''

"மாணிக்கம் இன்று காலை மோட்டார் சைக்கிளில் செல்லும்பொழுது, யாரோ ஒரு தொழிலாளி அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டானும். ஆனால் சுட்டவன் பிடி பட்டுவிட்டான். அவனைப் போலீசார் விசாரித்ததில், அவன் மணிவாசகனுடைய ஆலையிலிருந்து மாணிக்கத் தின் தூண்டுதலால் விலக்கப்பட்டதாகவும், தொழிலாளர்

கூட்டங்கள் நடத்தியதால் இன்ஸ்பெக்டரால் சவுக்கடி, பிரம்படி பட்டதாகவும், மணிவாசகனிடம் ஏராளமாக லஞ்சம் வாங்கிக் கொண்டு, அவருடைய ஆலையையும் வேலை நடக்க வொட்டாமல் செய்து, அதனால் மேலும் பல தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கி, தொழில் குறைவால் மணிவாசகன் மனமுடைந்திருந்த சமயம் அவன் மனைவியை மாணிக்கம் கற்பழித்ததாகவும், அதனால் உயிரை வெறுத்த அந்த அபலை, தற்கொலை செய்து கொண்டதாகவும், இந்தப் பாதகனால் ஏற்பட்ட இந்த அக்கிரமங்களை நமது அரசாங்கம் விசாரிக்காது என்றும், அவனால் இன்னும் பல தீங்குகள் நேராமலிருக்கும் பொருட்டும், அந்தத் தொழிலாளியே மாணிக்கத்திற்குத் தீர்ப்பளிக்கும் வகையில், மரணதண்டனை விதித்து, அதை அவனே நிறைவேற்றுவதற்காகச் சுட்டதாகவும் சொன்னான்.

" அந்தக் கூட்டத்தில் அவன் சொன்னானும். "நான் தான் சுட்டேன். என் மனம் குளிர, மூன்று தடவை சுட்டேன். இறந்த பின்பு கூட திருப்பிப்போட்டுச் சுட்டேன். பொசுக்கிவிட்டேன் மாணிக்கத்தை. அவனுடைய அட்டகாசம் இப்பொழுது எங்கே? கொடுங்கோல் வீழ்ந்தது. பாரதநாட்டின் துரோகி நம்மிடையே யிருந்து ஒழிந்தான்" என்று கர்ஜித்தானும். போலீசார் அவனை அடித்துத் துன்புறுத்தி, உடம்பில் ஒரு இடம் பாக்கி யில்லாமல் காயப்படுத்தி விட்டார்களாம்." என்று சொன்னன் சாமிநாதன்.

சாமிநாதன் நடந்த நிகழ்ச்சிகளை வேகமாகச் சொல்லிக்கொண்டே இருந்தான். எனக்கு ஒன்றும்

தோன்றவில்லை. நேற்றுத்தான் ஒரு செய்தி—இன்று அதைவிட மிகவும் துக்கமான செய்தி. அதுவும் என் சிநேகிதர்களிடையே நடப்பது. இதை என்னவென்று சொல்லுவது? உலகம் அமைதியாக நாட்களைத் தள்ளுகிறது; ஆனால் உள்ளே புகைந்துகொண்டிருக்கிறது. நண்பர்களுக்குள்ளா இந்தப் பகையும், குரோதமும்?

"மாணிக்கத்தின் பிரேதம் இப்பொழுது எங்கே?" என்று கேட்டேன்.

"ஆஸ்பத்திரியில். ஆயினும் அவருடைய உயிரானது சம்பவம் நடந்த இடத்திலேயே போய் விட்டதாம்."

"எனது ஆப்த நண்பனல்லவா மாணிக்கம்? அவனுடைய செய்கை அவனுக்குக் கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்ததுடன் உயிருக்கும் எமனாகிவிட்டது. இதை நான் எப்படிச் சகிப்பேன்?"

இருவரும் அன்றுமாலை நான்கு மணிக்கு தேவநேசனைப் பேட்டி கண்டோம். முதலில் தேவநேசன் என்னைப்பார்த்ததும், அவனுக்குப்பேச நா எழவில்லை. கண்கள் கலங்கி விட்டன.

"அப்பா, அம்மா, மங்கையர்க்கரசி எல்லோரும் சௌக்கியமா? பத்திரிகை எப்படி நடக்கிறது?" என்று கேட்டான். பதில் சொன்னதும் "மங்கையர்க்கரசி கோயம்பத்தூருக்கு வந்ததேயில்லை. நீ கூட அழைத்து வந்திருக்கலாம்" என்றான்.

"அவளுக்கு உடம்பு சௌக்கியமில்லை. மருந்து சாப்பிட்டு வருகிறாள். உன்னைப்பார்க்க அவளுக்கு மிகவும் ஆவல்தான். ஆனால் அப்பாதான் அவளைப் போகவேண்டா

மென்றும், அதனால் உடம்பு அதிமாகப் பலஹீன மடையு மென்றும் தெரிவித்தார். ஆனால் நீ ஏன் இப்படித் தாடி மீசை வளர்க்கிறாய்? உடம்புக்கு என்ன?'' என்று கேட்டேன்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை. இங்கே க்ஷவரம் செய்து கொள்ளுவதற்குப் பதில், இப்படியே வளர்த்து விடலாம். மிகவும் மோசமானகத்தி. சிறைக்கொட்டடி யும் மிகவும் மோசமாக இருக்கிறது. அரசியல் கைதி களுக்குத் தகுந்த சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட வில்லை. வெளிஉலகத்திலே மக்களுக்கு உதவி செய்யாமல் ஏழை விவசாயிகளையும் பாட்டாளி மக்களையும் சுரண்டும் இந்த அரசாங்கமா இந்த இருட்டறையில் அடைக்கப் பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்கு வசதி செய்து தரப் போகிறது? உணவிலும் சரி, வேலையிலும் சரி, இட வசதியிலும் சரி இங்குள்ள கைதிகள் மிகவும் துன்புறு கிறார்கள்.

"அன்று நமது தமிழ்நாட்டு ஒப்பற்ற தலைவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பட்டதுன்பத்தில் நூறில் ஒரு பங்கு கூட நாங்கள் அடைய வில்லை. இன்றுள்ள நிலையே இவ்வளவு மோசமாக இருந்தால், அன்று—சிறைகள் சீர்திருத்தப்படாத அந்தக் காலத்தில் எங்கள் தலைவர் என்ன பாடு பட்டிருக்க மாட்டார்?

"அதே சிறைக் கோட்டத்தில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சிதம்பரம் பிள்ளையவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ, சுற்றிச் சுற்றிச் செக்கிழுத்தார் என்பதை நினைக்கையில் எனக்குத் தேகம் புல்லரிக்கிறது.

அவ்வளவு அனுகூலம் படைத்த அரசாங்கமா இந்தியாவை ஆள்கிறது?

"ஆனால் நமது தலைவர் மனம் கலங்கினாரில்லை. அவர் நடந்துகொண்டதல்லவா தியாக வாழ்க்கை! அது வல்லவா பொறுமை! எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே சிறையில்தான் எம். ஜி. வாசுதேவய்யாவும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தார்.

"இந்தச் சிறை எவ்வளவு மோசமாக இருந்தபோதிலும், எங்கள் தலைவர்கள் இங்கிருந்து பலகஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகி, இந்தச் சிறைக்கோட்டத்தை அவர்கள் வசித்த புண்ணிய ஸ்தலமாக்கிவிட்டிருக்கிறார்கள். இந்தச் சிறை வாசம் எனக்குக் கிடைத்தது நான் செய்திருக்கும் தவப்பலன்தான்.

"சந்திரா! தொழிலாளர் இயக்கத்தைச் சரிவர நடத்தி, அவர்களின் உழைப்புக்குப்பலன் காண எண்ணினேன். ஆனால் நாட்டில் தேசியத் தலைவர்கள் பதவிக்கு வராதவரையில் பலன் பூஜ்யம்தான் என்று நினைக்கிறேன்.

"நமது தொழிலாளர்களிலே அனேகர் நமக்குக் கெடுதல் செய்கிறார்கள். இதற்குக் காரணம் வறுமையும், அறியாமையும்தான். வறுமை, அறியாமை, ஏகாதிபத்தியம் இம்மூன்றையும் நமது நாட்டைவிட்டு ஓட்டிவிட்டால் நமது நாடு சொர்க்க பூமியாகிவிடும்.

"ஆயினும் நான் முயற்சியைக்கைவிடப்போவதில்லை. சிறைவாசம் முடிந்ததும் மறுபடியும் வெளியில் வந்து, தொழிலாளரை ஒன்று கூட்டி, பல ஊர்களிலும் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்தி, இவற்றிற்கு மத்திய சங்கம்

ஒன்று நிறுவி, திறம்பட வேலை நடத்தினால் ஏன் பலன் காண முடியாது ?

"காங்கிரஸ் இன்று பலம் பொருந்திய ஸ்தாபனமாகி விட்டது. ஓரிருவர் அதற்குள் இருந்துகொண்டு அதை என்ன செய்தாலும் அதற்காகக் காங்கிரஸ் கலைந்து போகாது. அதைப்போலவே தொழிலாளர் ஸ்தாபனத் தையும் நிறுவுதல் அவசியம். பின்பு எந்தப் புல்லுருவி களினாலும் அதை அசைக்க முடியாது.

"கோயம்பத்தூர் தொழிலாளர்சங்கத்தை நிறுவு வதற்குத் தகுந்த இடம். தென்னிந்தியாவிலே தொழில் வளம்பெருகிய நகரம் இதுதான். இன்னும் இந்த ஊர் சிறப்படையப் போகிறது. இங்கிலாந்தில் 'லங்காஷயர்' மாதிரி இதுவும். தொழிலாளர் பலரைத் தன்னிடம் வைத்திருக்கிறது. தொழிலாளருக்காகப் பாடுபடவேண்டு மானால் அதற்குச் சிறந்த நகரம் இதுதான்."

தேவநேசன் மூச்சுக்கூட விடாமல் ஆவேசமாகப் பேசிக்கொண்டே போனான். நான் குறுக்கிட்டு "விடுதலை யடைந்ததும் சென்னைக்கு ஒருதடவை வந்து, எல்லோ ரையும் பார்த்துவிட்டு வரலாம். அதன் பின்பு உன் வேலையை ஆரம்பித்தால் என்னால் முடிந்த உதவியைப் பத்திரிகை வாயிலாகச் செய்கிறேன்" என்றேன். அவனும் சம்மதித்தான். எதற்காக அவனைச் சென்னைக்கு வரும் படி கேட்டுக்கொண்டேனோ தெரியாது. ஆனால் அந்த வார்த்தைதான் அவன் வாழ்க்கைப் பாதையில் வெடி குண்டாக இருந்தது. அவன் சென்னைக்கு வராமல் கோயம்பத்தூரிலேயே இருந்திருந்தால் அவனுடைய லக்ஷியம் நிறைவேறி யிருக்கும்.

" திடுக்கிடும் சம்பவம் இரண்டு இந்த ஊரில் நிகழ்ந்திருக்கிறதே தெரியுமா?" என்று அவனைக் கேட்டேன்.

"புனிதவதி இறந்து விட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது தான் நேற்று முதல் என் உள்ளத்தை வெம்பச் செய்துவிட்டது. அவள் இறந்த காரணத்தை அறிய என் உள்ளம் ஆவலாயிருக்கிறது. சில தினங்களுக்கு முன்பு மாணிக்கம் இங்கே வந்தான். புனிதவதிக்கும் எனக்கும் தொடர்புள்ளதாகப் பொய் புனைந்து ஒரு கடிதத்தை என்னிடம் எறிந்தான். அவனை ஒரு நரி என்றும், மணிவாசகனை ஓர் ஓனாய் என்றும் நான் அப்பொழுதே அவனிடம் கூறினேன். அது உண்மையாகி விட்டது. பாடுபட்டு உழைத்துப் பணம் சேர்த்துக் கொடுக்கும் தொழிலாளருக்கு, உணவு, உடைக்குக்கூடப் போதிய ஊதியமின்றி, அட்டையைப் போல் தொழிலாளரின் இரத்தத்தை உறிஞ்சும் ஓனாயாகி விட்டான் மணிவாசகன். இப்பொழுது புனிதவதியையும்—கட்டிய மனைவியின் உயிரைக்கூட உறிஞ்சிவிட்டான் பாதகன். இதில் மாணிக்கமும் பங்கெடுத்திருப்பான் என்றுதான் என் உள்ளம் சொல்லுகிறது.

" அதற்காகவே அவன் தண்டனையும் அடைந்துவிட்டான் தேவநேசா!"

"யார்? இன்ஸ்பெக்டர் மாணிக்கமா?"

" ஆமாம். இன்று காலை யாரோ ஓர் ஆலைத் தொழிலாளி—மாணிக்கத்தால் சவுக்கடித் தண்டனை பெற்றவன்—புனிதவதியின் மரணம் கேட்டு, நெஞ்சம் துடிதுடித்து, ஒரு துப்பாக்கியால் மாணிக்கத்தைச் சுட்டுக் கொன்று விட்டான். ஏன்?—இந்தப் போலீசுக்காரருக்குக்கூட இது

தெரிந்திருக்கலாமே!" என்று பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சேவகனைச் சுட்டிக்காட்டினேன்.

"அப்படியா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் தேவநேசன்.

"ஆமாம். யாரோ ஆலைத்தொழிலாளி ஒருவன்தான் சுட்டான்" என்றான் அந்தப் போலீஸ்காரன்.

"ஏழைகளைத் துன்புறுத்தி, அவர்களை அடிமையிலும் அடிமையாக்கி, காலிலே போட்டு நசுக்கினால் அந்த அடிமைகள் என்னதான் செய்வார்கள்? அவர்களில் நூற்றுக்கு ஒருவனாவது தனது நிலைமையறிந்து, கொதித்துக் கிளம்பினால் இந்த உலகத்தையே நாசம் செய்து விடும் சக்தி தன்னிடம் இருப்பதாக உணர்கிறான்.

"தலைவனின்றி, தானே மனம் போகிற போக்கில் பழிக்குப் பழி வாங்க முயலுகிறான் அவன். அவனைக் கட்டுப்படுத்த ஒருவராலும் முடியாமல் போகிறது. இந்நிலையில் கொதித்துக்கிளம்பிய அவன் ஏதேனும் தவறுதலான—மோசமான காரியத்தைச் செய்துவிடுகிறான். மாணிக்கத்தைச் சுட்டவனும் இந்த ரகத்தைச் சேர்ந்தவனே. அவன் செய்கையைப்பற்றி நாம் வேறு என்னதான் அவனிடம் எதிர்பார்க்க முடியும்? ஆகையால் மாணிக்கம் நண்பனாக இருந்தபொழுதிலும் அவன் இறந்துபோனது என் உள்ளத்தில் ஒன்றையும் எழுப்பவில்லை. ஆனால் புனிதவதியோ—?

"பாவம், அபலை இறந்துவிட்டாள். இக் கொடுங்கோலர்களிடம் அகப்பட்டு துயருறாமல் இறந்ததேமேல். இவர்கள் இருவரும் நம்முடன் படித்தவர்கள்; நமது சிநேகிதர்கள் என்று சொல்லிக் கொள்வதே எனக்கு

வெட்கமாக இருக்கிறது. இவர்கள் உதவியை நாடிவந்த எனக்கு இந்தக் காராக்கிருகத்தைக் காட்டிவிட்டார்கள். அதிகமாக இங்கு பேசுவதும் சரியல்ல. நமது பேச்சைக் கேட்டுக்கொண்டு நிற்கும் இந்தப் போலீஸ்காரர் கொஞ்சம் காருண்யம் உள்ளவர். நாங்கள் இருவரும் அடிக்கடி பேசிக்கொள்வோம். எனது அபிப்பிராயங்களை அவர் அங்கீகரிக்கிறார். மனித உள்ளம் படைத்தவர். அதனால் தான் பேசத்தகாத சிலவற்றை இங்கே பேசிக்கொண்டிருந்தும் அவர் அதை அனுமதித்துக் கொண்டு நிற்கிறார்.

"சந்திரா! உனது வரவை நான் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தேன். ஆகையால் உன் வரவு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. சென்னைக்குச் சென்றதும் தங்கையின் உடல் நிலை பற்றியும், பெற்றோர் சௌக்கியத்தைக் குறித்தும் கடிதம் எழுது. உனது கடமையைச் சரிவரச் செய்.

"தங்கையின் நடவடிக்கை சில எனக்குத் தெரியும். ஆனால் என்னைவிட நீ முழுவிபரமும் அறிந்திருப்பாய். ஆகையால் சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கியிருக்கும்படி செய். அவற்றையும் அவள் உதாசீனம் செய்வாளானால் எனக்காகச் சற்று பொறுத்திருக்கும்படியும், நான் வந்த பிறகுதான் வெளியூர்களுக்கு அவள் செல்ல வேண்டுமென்றும் குறிப்பிடு. நான் வந்ததும் அவளை எப்படியாவது என் வழிக்குத் திருப்பி விடுகிறேன்.

"அவளுடைய போக்கு, மகாத்மா தலைமையின் கீழ் நடக்கும் போருக்கு முரணானது. அந்த வழியைக் காங்கிரஸ்காரர்கள் அனைவரும் எதிர்க்கிறார்கள். அதன்மூலம் சுயராஜ்யம் கிடைத்துவிடாது.

"சரி, நேரமாகிவிட்டது. நமக்கு அனுமதித்தநேரமும் முடிந்துவிட்டது. லக்ஷியத்தைக் கைவிடாதே. கடமையைச் செய். போய் வா" என்றான். அவன் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. பிரியமுடியாமல் பிரிந்தோம். கண் கலங்கிய தோற்றத்துடன் நின்ற தேவநேசனின் உருவத்தை இன்று நினைத்தாலும் இருதயத்திலே மின்னல் போன்ற சக்தி பளிச்சிட்டு மறைகிறது.

நான் சென்னைக்கு வந்தேன். ஆனால் மணிவாசகனைக் கோயம்பத்தூரில் சந்திக்க ஆவல் கொண்டிருந்தேன். மணிவாசகன் மீது தேவநேசன் சுமத்திய குற்றங்களாலும், புனிதவதியின் அகால மரணத்தாலும், என் மனம் மாறுதலடைந்து அவனைப் பார்க்க வெறுத்தது.

ஆனால் இதென்ன?........தேவநேசன் சொன்னது தவறா அல்லது நான் நினைத்ததுதான் தவறா? சென்னைக்கு வந்த பதின் மூன்றாம் நாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் — ஒரு உண்மையான நண்பனின் உள்ளத்தைத் திறந்து காண்பித்த அந்தக் கடிதம் என் சிந்தனையைச் சிதறவடித்து விட்டது. உண்மையிலேயே அது மணிவாசகன் எழுதியதுதானா?

அந்தக் கடிதமே ஒரு நாவல் மாதிரி இருந்தது. அவன் எழுதியிருப்பதைப் பார்த்தால், அவன் தன்னுடைய இயந்திரத் தொழிலபிவிருத்தியை மறந்து ஒரு பிரபல எழுத்தாளனாகிவிடலாம். அவ்வளவு உருக்கமாக அதை எழுதியிருக்கிறான். அதைப்படித்து முடித்ததும் அவன் நிலைமையை முற்றிலும் அறிந்து கொண்டேன். மணிவாசகனின் ஆதரவற்ற நிலைமை — முடிவிலே அவனடைந்த துயரம் — அனுபவத்தின் மூலம் கசப்பான சில உண்மை

களை அறிந்து கொள்ளலாமென்று சொல்லுவார்களே. அது உண்மைதான் என்று இப்பொழுது அறிந்து கொண்டேன்.

அவ்வளவு முக்கியமான கடிதம் என்னவென்று பார்க்க அனைவருக்கும் ஆவல் உண்டாகலாம். இதோ இந்தக் கடிதத்தை நீங்களே வாசியுங்கள்.



## அந்தக் கடிதம் 13

நண்ப,

எனது கடிதத்தை நீ எதிர் பார்த்திருக்க மாட்டாய். ஏனெனில் கோவைக்கு வந்தும், புனிதவதி இறந்த செய்தியை அறிந்தும், நீ என்னைப் பார்க்கவோ, துக்கம் விசாரிக்கவோ விரும்பவில்லை. உற்ற நண்பனாகிய நீ கூடப் பார்க்க விரும்பாத அவ்வளவு பாவியாகி விட்டேன். இந்த உலக பயங்கரமான கொந்தளிப்புக் கடலிலே நான் ஆதரவற்று, அநாதையாக மிதக்கிறேன்.

ஒரு காலத்தில் நான் பல நண்பர்களையும், வேலைக்காரர்களையும் பெற்றிருந்தேன். எனக்கு முக்கிய ஆலோசகனாகவும், நண்பனாகவும், நீ இருந்தாய். அவ்வப்பொழுது உன்னுடைய பத்திரிகை வாயிலாக 'இந்தியாவில் இயந்திரத் தொழிலபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தையும் முதலாளிகளையும் கேட்டு வந்தாய். இயந்திரத் தொழிலுக்கு உன்னால் முடிந்த உதவிகளையும் செய்து வந்தாய்.

சந்திரா! என்னை, தேவநேசனைக் காட்டிலும் மாணிக்கத்தைக் காட்டிலும் உனக்குத் தான் நன்கு தெரியும். என்னுடைய நோக்கங்களும், உதவியும் எதிர்கால இந்தியாவிற்கு மிக மிகத் தேவையென்று நேரிலும், பத்திரிகை வாயிலாகவும் பல தடவை

புகழ்ந்து கூறியிருக்கிறாய். என்னால்—உன் எழுத்துத் திறமையினால்—சிறிது தைரியமடைந்து ஊக்கத்துடன் தொழிலில் பிரவேசித்தேன்.

சிறிய பையனாக இருக்கும் பொழுது என் தந்தையும், நானும் கிராமத்திற்கு வட்டிப் பணம் வாங்கச் சென்றிருந்தோம். அங்கே ஒரு குடிசையில் சர்க்காவும், தக்களிகளும் இருந்தன. கையினால் அங்கிருந்தோர் நூற்றுக் கொண்டிருந்தனர். பக்கத்திலேயே கைத்தறி. அதில் தான் ஆடைகளை நெய்தார்கள். நான் இவற்றை வெகு ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்தேன்.

இப்படியே நூற்று ஆடைகள் நெய்வதென்றால் அதிக நேரம் பிடிக்குமே? மனிதனே சர்க்காவைச் சுற்றுவதற்குப் பதில் இயந்திரத்தால் சுற்றினால்—? ஒரு இழைக்குப் பதில் பல இழைகள் ஓடும்படி பல கதிர்கள் வைத்து ஒரே தடவையில் மின்சாரம் மூலம் இயக்கினால் என்ன? சட்டென்று மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. "இந்த மாதிரி இயந்திரங்களிலும் நூற்கப்படுமா அப்பா?" என்று என் தந்தையைக் கேட்டேன்.

"ஆமாம், நீ சொன்ன மாதிரி இயந்திரம் வாங்கிக் கொள்ளுவதற்காகத் தான் ராம்ஜீ சேட்டுக்கு நாம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். அவர் அஹமதாபாத்தில் ஒரு பெரிய பஞ்சாலை நடத்துகிறார்" என்று கூறினார்.

அடுத்த மாதத்தில் நாங்கள் ஆமதாபாத்துக்கு வரவேண்டியிருந்தது. அந்த ஆலையையும் இயந்திரங்

களையும் பார்த்ததிலிருந்து இந்தியாவில் இம்மாதிரி ஆலைகள் ஏற்பட்டால் பஞ்சம், பட்டினி தோன்றாது என்று நினைத்து வந்தேன். தக்களியும் சர்க்காவும் சுற்றிப் பஞ்சத்தை விரட்ட முடியாது என்று முடிவு செய்தேன். சர்க்காவில் பலர் சேர்ந்து கொஞ்சம் தான் நூற்கிறார்கள். ஆலையில் ஒருவன் ஏராளமாக நூற்று விடுகிறான். இம்மாதிரி ஆலைகள் மனிதர் கூடி வாழும் ஒவ்வொரு நகரங்களுக்கும் தேவை என்றும் நினைத்தேன்.

அது முதல் இயந்திரங்களைப் பற்றிய சிந்தனைகளில் ஆழ்ந்துவிடுவேன். எந்தப் புத்தகத்தைப் பார்த்தாலும், படித்தாலும் நாட்டின்பொருளாதாரம் தொழில் இவற்றிலே புத்தியைச் செலுத்தினேன்.

வகுப்புக்களில் பரீக்ஷை தேறி மேல் வகுப்புக்கு வந்த பொழுது கூட நான் சந்தோஷ மடையவில்லை இந்த படிப்புக்கும் எனது எதிர்கால வேலைத் திட்டத்திற்கும் சம்பந்தமில்லை யென்றும் அப்பொழுதே முடிவு செய்தேன். எப்பொழுது பள்ளியை விட்டு விலகலாம். எப்பொழுது கற்பனையிலே உருவாகிய தொழிற்சாலையை நிர்மாணிக்கலாம் என்பதிலே ஆவல் கொண்டேன். அப்பொழுது நான் நினைத்தபடி யெல்லாம் நடந்து வந்தது.

என்னுடைய கனவும் நிறைவேறியது. தொழிற்சாலையையும் அமைத்தேன். சந்திரா! ஒன்று சொல்லுகிறேன் கேள். உலகம் தூற்றுவதைப் போல, பணக்காரனாவதற்கோ முதலாளி யாவதற்கோ நான் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவில்லை.

முதலில் சிறிய பஞ்சாலையை நிறுவி, அதிலுள்ள நன்மை தீமைகளை அறிந்து, அதன் பின்பு, கொஞ்சம் கொஞ்சமாகத் தொழில் வளத்தைப் பெருக்கி, முடிந்தால் தென்னிந்தியாவிலே இதுவரை யாரும் கண்டிராத அளவில் பெரிய பெரிய தொழிற் சாலைகளை நிறுவி, இந்தியருக்குப் பயன்படும் எல்லாவிதப் பொருள்களையும் உற்பத்தி செய்து, அதன் மூலம் அன்னியப் பொருள்களுக்குப் போட்டி ஏற்படுத்தி சுதேசிப் பொருள்களை வாங்கும்படி மக்களைத் தூண்டி, நமது செல்வம் நமக்குள்ளே சுற்றி வரும்படியும், அது வெளி நாட்டிற்குப் போகாமல் ஏற்பாடு செய்தும், பொருளாதார நிலையை இந்திய நாட்டில் சிறிது உயர்த்தப் பாடு படுவோமானால், உலகிலே இந்தியா குபேர சம்பத்து நிறைந்த நாடாகி விடாதா? அமெரிக்கா இன்று பொன் கொழிக்கும் நாடானது எப்படி?

மக்களிடையே — அதிலும் பெரும் பான்மையோரான தொழிலாளர் விவசாயிகளிடையே இவ்விதத் தொழில் வளத்தைக் காட்டி விட்டோமானல் இயற்கையாகவே அவர்களுக்குத் தேசபக்தி ஏற்பட்டு விடுமே! இதைப் பார்த்து வட நாடும் நம்மைப் பின்பற்றி விட்டால், பிறகு அன்னியரை நாம் இங்கேயே யிருக்கும்படி வற்புறுத்தினுல் கூட இருக்க மாட்டார்களே! ஒவ்வொரு விவசாயியும், தொழிலாளியும், இந்தியாவில் பிறந்த மற்ற எவருமே "இது நமது நாடு. நாம் நமக்கே பாடு படுகிறோம்" என்பதை உணர்ந்து விட்டார்களானல் சுதந்திரம்

தானே கிட்டும். இன்று காங்கிரஸ் காரர்கள் சிறைக்குப் போய் அவதிப்பட வேண்டியதில்லை.

எவ்வளவோ திட்டங்கள் போட்டேன். எவ்வளவோ கற்பனைகள். அவை கணக்கிலடங்க மாட்டாது. இதற்காகவே எனது வாழ்க்கையையும் தியாகம் செய்தேன். நான் உனக்கு எழுதும் கடைசிக் கடிதம் இதுதான். ஆகையால் எல்லா வற்றையும் தெரிவித்து விடுகிறேன். உன்னிடம் ஒன்றும் ஒளிக்க விரும்பவில்லை.

என்னை பெற்றோர் எனக்கு விவாகம் செய்ய ஏற்பாடு செய்தும் நான் அதை வெறுத்தேன். தொழிலை எப்படி நடத்துவது என்பதிலேயே கவனத் தைச் செலுத்தினேன். பெற்றோர் என் மனதைத் திருப்ப எவ்வளவோ முயன்றும் நான் விவாகம் செய்து கொள்ளச் சம்மதிக்க வில்லை. ஏன் தெரியுமா? ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொன்றின் மீது பற்றுதலிருக்கலாம். சுபாஷ் சந்திர போஸ் ஏன் விவாகம் செய்து கொள்ளவில்லை? விவே கானந்தர் ஏன் பிரம்மச்சாரியாக வாழ்ந்தார்? அவர் கள் நமது நாட்டிற்கு ஒவ்வொரு வகையில் சேவை செய்யப் பிறந்தவர்கள். அவர்களுடைய லக்ஷியத்தை அடைவதற்கு இல்லற வாழ்க்கை இடையூறாக இருக்கக் கூடாதென்றே அவர்கள் விரும்பினார்கள். நாட்டிற்கு நன்மை செய்யவே ஆசைப்பட்டார்கள். அவர்களுடைய லக்ஷியம் நிறைவேறுவதற்காக வேறு காரியங்களில் ஈடுபடாமல், காரியத்தில் கண்ணுயிருந் தார்கள்.

அதைப் போலவே நானும் எனது லக்ஷியத்தை அடைய ஆசைப்பட்டேன். அதற்காக எனது உடைமைகள் அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தேன். ஆனால் பெற்றோரின் பிடிவாதம் என்னைத் தடை செய்தது. அதற்காக ஒரு நிபந்தனை போட்டேன்.

எனது லக்ஷியம் நிறைவேற வேண்டுமானால் பொருளாதாரம் தாராளமாக இருக்க வேண்டும். ஆகையால் பெண்ணுடன் பணம் வந்தால் போதும். பெண்ணைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆகையால் எங்கே அதிகமாகப் பணம் தருகிறார்களோ அங்கே பெண் பார்க்கும்படி கூறினேன். வரதக்ஷிணை அதிகமாகக் கொடுத்தாலும் சரி. அல்லது வியாபார நிலையத்திற்கு ரூபாய் கொடுத்து உதவினாலும் சரி. இந்த நிபந்தனைகளுக்கு ஒத்துவந்தவர் புனிதவதியின் தந்தை தான்.

நான் பணத்தையே கருதினேன். ஆனால் பெண்ணும் எனது விருப்பம்போல், மனதிற்கிசைந்த மனைவியாகக் கிடைத்தாள். நான் அவளுடைய நன்மை தீமைகளில் பங்கெடுத்துக்கொள்ளவேயில்லை. அவளைப்பற்றிய சிந்தனையே எனக்குக்கிடையாது. பெயருக்குத்தான் மனைவி புருஷன்மாதிரி இருக்கிறோமோ என்ற சந்தேகம் கூட அடிக்கடி எனக்கு உண்டாகும்.

ஆனால் என்னுடைய புனிதவதி என் வீட்டிற்கு ஒரு மகாலக்ஷிமிபோல் இருந்தாள். என் நன்மை தீமைகளில், சுகதுக்கங்களில் அவளும்

ஈடுபட்டாள். நான் சில அவசர வேலைகளாலும், நிர்ப்பந்தங்களாலும் மனத் துயர மடைந்தால் அவள் உணவு கூட உட்கொள்ளமாட்டாள்.

ஓங்கார சப்தமுள்ள அலைகள் வெளியே அட்டகாசம் செய்த போதிலும், சமுத்திரத்தில் மூழ்கிப் பார்த்தால் அடியிலே அமைதி நிறைந்த மௌனத்தைக் காண்பதுபோல், வெளியே பல தொந்தரவுகளினால் அவதியுற்ற என் மனம் வீட்டிற்கு வந்தால் புனிதவதியின் சாந்தமான முகத்தைக்கண்டு அமைதியடைந்துவிடும்.

அவள் போக்கிற்கு நேராகவே நான் நடந்து வந்திருக்கிறேன். ஒருசமயம் அவளுக்கு 'டைபாய்ட்' ஜுரம் கண்டிருந்தது. மிகவும் வேதனையுடன் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். வேலைக்காரன் தான் ஒரு டாக்டரை அழைத்து வந்திருந்தான். அவர் புனிதவதிக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்து விட்டு வெளியே வந்தார். என்னைக்கண்டதும் "சார்! ஜுரம் மிகவும் கடுமையாக இருக்கிறது. வேண்டிய மருந்துகளைக் கொடுத்திருக்கிறேன். கொஞ்சம் கவனித்துப்பார்த்துக்கொண்டால் ஜுரம் இறங்கிவிடும். பயப்பட வேண்டியதில்லை" என்றார்.

அப்பொழுதுதான் ஆலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். வேலைக்காரனை டாக்டருக்குக் காட்டி "அவனிடம் எல்லாவிபரங்களையும் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு வேகமாக வெளியே சென்றேன்.

போகும்பொழுது கூட அவளுடைய நிலைமையைப் பார்த்துப்போகவோ, அவளிடம் இரண்டொரு வார்த்தை அன்பாகப் பேசவோ இஷ்டப்படவில்லை. இனி இந்த வைத்தியருக்கு ரூபாய் கொடுக்கவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டே போய் விட்டேன்.

டாக்டர் கடைசியாக அனுப்பிய ரசீதைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். ரூபாய் 250-க்குப் 'பில்' அனுப்பியிருந்தார். பிறகு அனுப்பிக்கொள்ளலாமென்று அசட்டையாக இருந்து விட்டேன். ஆனால் மறு நாள் அதே 'பில்' வரவு வைத்து கையெழுத்திடப் பட்டிருந்தது.

புனிதவதியை விசாரித்தேன். அவளே தன்னிட மிருந்த ரூபாயைச் செலுத்திவிட்டதாகக் கூறினாள். அப்பொழுது அதைக்கேட்டு நான் சந்தோஷமே அடைந்தேன். எவருக்கும் இந்தமாதிரி மனதிற்குகந்த மனைவி தேடிப்பார்த்தாலும் கிடைக்க மாட்டாள். நான் எவ்வளவு தூரம் அவளை உதாசீனம் செய்தேனோ அவ்வளவு தூரம் என்னிடம் நேசமாகவே இருந்து வந்தாள்.

ஆயினும் விதி யாரைவிட்டது? முன்பு யாரேனும் விதி என்றால் எனக்குக் கோபம்தான் வரும். "கையாலாகாதவன் கூறும் சோம்பேறி வார்த்தையல்லவா விதி" என்றுசொல்லுவேன். ஆனால் இன்று இந்தக் கடிதத்தில் விதியை ஒப்புக்கொண்டு எழுத வேண்டியதிருக்கிறது.

ஏனெனில் அருமையான மனைவிக்கு நமது நண்பன் மாணிக்கம் விதியின் கொடுங்கோன்மை

டாக வந்து தோன்றினன். என்னுடைய கெட்ட காலம்தான் போலும் ஆலேயில் சங்கடங்கள் நேர்ந்த வண்ணமாக இருந்தன. வியாபாரம் ஆகாமல் உற்பத்திப் பொருள்கள் ஏராளமாகக் குவிந்து கிடந்தன. வேலே நிறுத்தம் மனதிற்குச் சங்கடத்தை விளேவித்தது. தாங்கமுடியாத நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மாணிக்கத்தின் மூலம் வேலே நிறுத்தத்தையாவது தடை செய்யலாம் என்ற ஆவலுடன் அவனே நெருங்கினேன். அதுதான் என் வீழ்ச்சிக்கு அஸ்திவாரமாகி விட்டது.

புனிவதிக்கு மாணிக்கம் மாமன் மகனும். அவன் அவளே விவாகம் செய்து கொள்ள விரும்பியிருந்தானும். ஆனல் புனிதவதி அதற்கு இஷ்டப்படவில்லேயாம். அந்த முரடனே தன் காதலே—காதலா அது?—காமத்தை நிறைவேற்றிக்கொள்ள சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தான். என்னுடைய தொடர்பு கிடைத்ததும் என்னேத்தேடி இங்கு வந்திருக்கிறுன். ஆனல் நான் அந்த நேரத்தில் ஆலேக்குப் போயிருந்தேன்.

புனிதவதி தனித்திருப்பதைக்கண்டதும் அவள் மனதின் எல்லேயை அறிவதற்கு, விரும்பத் தகாத சில வார்த்தைகளேப் பேசியிருக்கிறுன். அவள் வெகுண்டு அவனே வெளியே போகும்படி சொல்ல, மாணிக்கம் அவள் மீது அவதூறு கற்பித்து இதை என்னிடமும் சொல்லுவதாகப் பயமுறுத்தியிருக்கிறுன்.

என் நிலேமையை அறிந்த புனிதவதி மாணிக்கத்தின் கோளினல் எனது மனம் அவளுக்கு எதி

ராக மாறுவதுடன் விபரீதங்கள் குடும்பத்தில் நிகழ லாமென நினைத்து, அந்த முரடனிடம் இம் மாதிரி சொல்லி வாழ்க்கையைக் கெடுக்கவேண்டாமென்று கெஞ்சிக்கொண்டிருக்கும் சமயம் நான் வந்து அவர் கள் நிலைமையைப் பார்த்து விட்டேன். என்னைக் கண்டதும் புனிதவதி ஓடி மறைந்துவிட்டாள்.

அவள் அன்று ஓடி மறையாமல், நான் வந்த தும் மாணிக்கத்தின் நடத்தையைப்பற்றி புகார் சொல்லியிருந்தால் அவளுடைய வாழ்க்கை இப்படி ஆகியிருக்காது. இந்தமாதிரிச் சமயங்களில்தான் விதியை நம்பவேண்டியதிருக்கிறது. விதிதான் அவளை ஓடி ஒளியச்செய்திருக்கிறது.

அவளைப்பற்றியும், அவளுடைய நிலைமையைப் பற்றியும், அன்றுவரை விரும்பி அறியாத நான், அந்த நிலையில் அவர்களைப்பார்த்ததும், அவள் ஓடி மறைந்ததும் சந்தேகத்தை மலைபோல் எழுப்பி விட்டது. ஆயினும் கொதித்துக் கிளம்பிய கோபத் தைச் சிறிது அடக்கிக்கொண்டு மேஜையருகில் சென் றேன். மாணிக்கமும் என் பின்னாலேயே வந்து உட்கார்ந்தான்.

"மிஸ்டர் மணிவாசகன்! புனிதவதி களங்க மற்றவள். அவளை மன்னித்துவிடு. ஏதோ அறியாமல் சறுக்கி விழப்பார்த்தாள். ஆனால் என் புத்திமதியும், சந்தர்ப்பத்தில் நீங்கள் இங்கு வந்து சேர்ந்ததும் அவளைக் காப்பாற்றி விட்டது. சிறு வயது முதல் என்னை நேசித்து வந்தாள். வயதானதும் அவளை மணந்து கொள்ளும்படி வேண்டினாள். என் பெற்

ரேரும் அவளை மணந்து கொள்ளும்படி வற்புறுத்தினர். நான் ஒரு வேலையில் அமர்ந்து, முன்னுக்கு வந்த பின்னர்தான் விவாகம் செய்து கொள்ளுவேன் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன். அதுவரைக்கும் கூட அவள் காத்திருக்கத் தயாராக இருந்தாள். ஆனால் அவளுடைய பெற்றோரை விதி இங்கு கொண்டு வந்து மணம் செய்து கொடுக்கும்படி செய்து விட்டது.

"நான் இந்த ஊருக்கு வந்தது முதல் வீட்டில் வந்து அவளைச்சந்திக்கும்படி எத்தனையோ கடிதங்கள் எனக்கு எழுதினாள். ஆயினும் அதுசரியல்ல என்று நான் பேசாமலிருந்து விட்டேன். அதற்காகவே அலை விஷயமாக ஏதேனும் பேச வேண்டியிருந்தால்' உன்னை என் வீட்டிற்கு வரும்படி சொல்லுவது வழக்கம்.

"இன்று உன்னிடம் அலை விஷயமாக மிகவும் அவசரமாகக் கலந்து ஆலோசிக்கவேண்டியதிருந்தது, அதற்காகவே உன்னைத்தேடி இங்கு வந்தேன். ஆனால் உனக்குப் பதில் புனிதவதியையே இந்த அறையில் சந்தித்தேன். அப்பொழுதே ஏதோ விபரீதம் நிகழப்போகிறது என்று எண்ணினேன். அது உண்மையாகி விட்டது. சிறு குழந்தைகளாக இருக்கும் பொழுது நடந்த விஷயங்களை நினைவில் கொண்டு வந்து, என்னிடம் எத்தனையோ கேள்விகள் கேட்டாள். நான் மெதுவாக வெளியே போய்விட எண்ணினேன். இதை அறிந்த புனிதவதி என்னை வழி மறித்து, என் கையைப் பிடித்துக்கொண்டு அவளுடைய ஆசையைப் பூர்த்தி செய்யும்படி வேண்

டினாள். இது அனியாயமில்லையா? சினேகிதனுக்குத் துரோகம் விளைவிப்பதாகுமல்லவா?

"என் மனம் உடனே வெறுப்படைந்தது. அவள் செய்கையைக் கண்டித்து, கையைப்பறித்துக் கொண்டு வெளியேற எண்ணினேன். அப்பொழுது தான் நீ இங்கு வந்தாய். என் மனைவி இம்மாதிரிச் செய்கைகளைச் செய்திருப்பாளானால் உடனே அவளைச் சுட்டிருப்பேன். அல்லது அவளுடைய கழுத்தைச் சீவியிருப்பேன். இந்த மாதிரி மனைவிகள் இருந்தாலென்ன, இறந்தாலென்ன?" என்று கோபமாகக் கூறிவிட்டு எழுந்து போய் விட்டான்.

நான் அசையாமல் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தேன். தலைவலி உண்டாவது போலிருந்தது. வேதனைதாளாமல் எழுந்தேன். ஆயிரம் சக்திகள் கூடி என்னைச் சமுத்திரத்திலே மூச்சுமுட்ட அமுக்குவது போலிருந்தது. புனிதவதி இருக்குமிடம் சென்றேன். என்னைப்பார்த்ததும் அவளுடைய உடம்பு நடுநடுங்கியதைக் கண்டேன். புயலடிக்கும் பொழுது கொந்தளிக்கும் அலைகளினிடையே அகப்பட்ட கப்பலைப்போல் அவள் காட்சியளித்தாள்.

பக்கத்திலே ஒரு நீண்ட பிரம்பு கிடந்தது. குனிந்து அதை எடுத்தேன். பிரம்பைக்காட்டி புனிதவதியை என் எதிரே வரும்படி சொன்னேன். அவள் நடுங்கிக்கொண்டு நின்றாளேயொழிய அருகில் வரவில்லை. அவளைப் பார்த்ததும் புனிதமான பெயரையும், கொடிய விஷத்தையும் பெற்ற நல்லபாம்பின் ஞாபகம் வந்தது. இனி இந்தப் பாம்பை அதன்

போக்கில் விட்டுவிட்டால் அது என்னை நிச்சயம் கடித்துவிடும். கொடிய விஷமுள்ள பாம்பல்லவா அது, "கொலை செய்வார் பெண்டிர்" என்று தெரியாமலா மனிதன் சொல்லி வைத்தான்! கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

என் பலம் கொண்ட மட்டும், பிரம்பு ஒடியுமட்டும், புனிதவதியின் உடம்பில் இரத்த ஆறு பெருகுமட்டும் அடித்தேன். அவள் மூர்ச்சித்துக் கீழே விழுந்த பின்பும் அடித்தேன். அவளை அந்த நிலையிலேயே போட்டுவிட்டு, ஆலைக்குச் சென்ற நான் ஆறு நாட்கள் வீட்டிற்கே வரவில்லை.

அதற்குள்ளாக புனிதவதியின் மீது சுமத்த முடியாத, நினைத்தாலும் பயங்கரமான அபவாதத்தை ஊரிலே கிளப்பி விட்டான் மாணிக்கம். இந்தச் செய்தி எனக்கு வெந்த புண்ணிலே வேல் குத்தியதைப் போலிருந்தது. போதாதற்கு இச் செய்தி புனிதவதியின் காதுகளுக்கும் எட்டிவிட்டது. புனிதவதி, தான் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காக, நடந்த நிகழ்ச்சிகளை ஒரு காகிதத்திலே எழுதி வைத்துவிட்டு, உலக அபவாதத்தைக் கேட்கப் பயந்து தற்கொலை புரிந்து கொண்டாள்.

உடனே என் மாமாவின் (புனிதவதியின் தந்தை) தூண்டுதலால் கடன்காரர்கள் அனைவரும் என் மீது வழக்குத் தொடுத்தனர். அதன் முடிவு என்னுடைய ஆலைக்குச் சீல் வைக்கப்பட்டதுதான். என் லக்ஷியப் பாதைக்கும் முள் வேலியில் மின்சாரம் ஏற்றி அன்றுதான் குறுக்கே வைக்கப்பட்டது. புனிதவதி இறந்த

மறுநாளே தன் விதிவலியால், தன் செய்கைகளுக்காக மாணிக்கம் சுடப்பட்டு இறந்தான்.

புனிதவதி இறந்ததற்கு நானே காரணமென்றும் மாணிக்கத்தைக் கொலே செய்யத் தூண்டியது நான் தானென்றும் சொல்லி, என் மீது இரு கொலேக் குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. ஆனல் நான் ஜாமீனில் இன்று விடுதலேயானதால் இந்தக் கடிதம் உனக்கு எழுத நேர்ந்தது.

சந்திரா! என் நிலேயை அறிந்த என் தந்தை, உடல் நோயால் வைத்தியசாலேயில் துன்புற்றிருந்தவர், துக்கம் தாளாமல் இறந்துவிட்டார். அன்று நான் போலீசாரால் காவலில் வைக்கப்பட்டிருந்தேன். அதனல் உயிர் போகும் என் அருமைத் தந்தையின் முகத்தில் விழிக்காமல் போனேன். இந்தப் பாவியின் முகத்தில் எதற்காக விழிக்க வேண்டுமென்று நினைத்து, அவரும் என்னேப்பார்க்காமல் இறந்து விட்டாரோ, என்னவோ? என் தாய், தந்தையின் உயிர் போனதைக் கேட்டு, என்னேப் பிரிந்த துக்கத்தால் வருந்தி, நான் சிறையில் வைக்கப்பட்டிருப்பதை அறிந்து, தனது கதியற்ற நிலேமைக்கு வருந்தி, சுவற்றிலே மோதிக்கொள்ள, தலேயிலே காயம் எற்பட்டு, ஆஸ்பத்திரியிலே உயிருக்கு மன்ருடிக் கொண்டிருக்கிருள்.

அவளுக்குப் புண் ஆறிவிட்டது. ஆயினும் அவள் பிழைப்பது கஷ்டம் என்று டாக்டர் சொல்லுகிருர். என் இருதயம் இரும்பாக இருக்க வேண்டும். இரும்புகூட அதிக உஷ்ணத்தால் இளகிவிடுகிறது.

அப்படியானால் என் நெஞ்சு எதனால் ஆக்கப்பட்டிருக் கிறது? நண்பா! இன்று நான் நிர்க்கதியாக நிற் கிறேன். என்னுடைய பாதை இருண்டிருக்கிறது. அந்தப் பாதையில் கொடிய, பயங்கரமான மிருகங்கள் வாயைத் திறந்த வண்ணம் என்னை விழுங்கிவிடத் தயாராக இருக்கின்றன. இவற்றை எப்படி நான் தாண்டிச் செல்ல முடியும்? இவற்றிற்குப் பலியா வதைத் தவிர என்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் என் வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து ஒன்று மட்டும் நன்றாக அறிந்து கொண்டேன்.

எதிர் காலத்திலே என்னைப்போல் இயந்திரத் தொழிலபிவிருத்திக்குப் பாடுபடுகிறவர்கள் முன் வந் தால், முக்கியமாக ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். எந்தத் தொழில் ஆரம்பித்தாலும் அது பங்குதாரர்களின் கூட்டுத் தொழிலாகவே யிருக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தால்தான் தனிப்பட்ட நபரைச் சார்ந்த நன்மை தீமைகள் தொழிலைப்பாதிக் காமல் இருக்க முடியும். தனிப்பட்ட முறையில் என்னைப்போல ஏகதேச் சாதிகாரமாக ஒரு தொழிலை ஆரம்பித்தால், அவனுக்கு லாபம் கிடைத்துக் கொண் டிருக்கும் வரை, நன்மைகள் ஏற்பட்டிருக்கும் வரை தொழிலும் நன்றாக நடக்கும். நஷ்டம் வந்து விட் டால், தீமை ஏற்பட்டால் அவன் மட்டும் அதள பாதாளத்திலே வீழ்ந்து விடமாட்டான். அந்தத் தொழிலை நம்பி வாழும் ஆயிரக்கணக்கான ஏழைகளை யும் நிர்க்கதி யாக்கிவிடும். துணிந்து முதல் போட்டு தொழில் நடத்த முன்வருபவனுக்கும் அதைரிய முண்டாகும்.

நமது நாட்டில் இயந்திரத்தொழில் முன்னேற்ற மடையவேண்டுமானால் தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்து, அன்னிய நாடுகளின் இறக்குமதிப் பொருளைத் தடுத்து, அதிக வரிவிதித்து, உற்பத்தியை நாட்டில் பெருக்கி, தொழில் நடத்துபவர்களுடன் அரசாங்கமும் ஒத்துழைத்து, உற்பத்தி செய்த சரக்குகளை தேவையுள்ள இடங்களில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ஒரேமாதிரி சரக்கையே உற்பத்தி செய்து கொண்டிருக்காமல் மக்களின் தேவையை அறிந்து, அதைப் பூர்த்தி செய்ய வேண்டும். தொழிலில் பங்குதாரர்களுடன் ஒத்துழைக்கும் சிப்பந்திகளுக்கும், ஆட்டுமந்தைபோல் அன்றாடம் பிழைத்து உண்டு ஜீவித்து வரும் ஏழைத் தொழிலாளர்களுக்கும், வரும் லாபத்தில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். தொழிலாளரின் நலன் ஒன்றையே, தொழில் நடத்தும் நிர்வாகஸ்தன் மனதில் பதித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

எது எப்படி இருந்த போதிலும் பாட்டாளிப் பாமர மக்களின் மனதைப் பிரதி பலிக்கும் உண்மைத் தலைவர்கள் பதவிக்கு வந்து தேசிய அரசாங்கத்தை நடத்த வேண்டும். அதுவரை தொழிலிலே முன்னேற்றம் காண்பதென்பது கனவு தான்.

சந்திரா! உண்மையைச் சொன்னேன். தேடிப் பார்த்தால் இந்த உலகிலே உற்ற நண்பன் நீ ஒருவன் தான். என் மனதிலுள்ள பாரம் சுமையானது. உனக்கு எழுதிய கடிதத்தால் பாதி குறைந்து விட்டது. இனி என்ன நடக்கப்போகிறதோ தெரிய

வில்லை. எனக்கு விதியின் போக்கு மாறாக இருந்து, உன்னைப்பார்க்க முடியாமல் போனாலும் நானும், புனிதவதியும் குற்றமற்றவர்கள் என்பதை இந்த உலகுக்கு எடுத்துக் காட்ட நீ முற்படுதல் வேண்டும். இதைச் செய்யும்படி உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு இந்தக் கடிதத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
உன் அருமை நண்பன்
**மணிவாசகன்.**

## தேவநேசன் 14

இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை முடிந்ததும் கோயம் பத்தூர் சிறிய சிறையிலிருந்து வெளிவந்தேன். அப்பப்பா! இந்த இரண்டு மாதங்களுக்குள்தான் எத்தனை நிகழ்ச்சிகள்? நெஞ்சை உருக்கும் சம்பவங்களாக நிகழ்ந் திருந்தன. ஆலையில் வேலை செய்த ஏழைத் தொழி லாளரை மோசமாக நடத்தியதற்குத் தண்டனையாக— மணிவாசகனின் எதேச்சாதிகாரப் போக்கையும், கர் வத்தையும் குலைப்பதற்கு கடவுள் அவனுக்கு உண்டாக்கிய கஷ்டங்கள்தான் எத்தனை?

விடுதலையானதும் நேரே சென்னைக்கு வந்து சேர்ந் தேன். மங்கையர்க்கரசி நோய்வாய்ப்பட்டு சிறிது சுக மடைந்திருந்தாளாம். உடல் நலமுறவேண்டுமானால் இட மாற்றம் அவசியம் என்று டாக்டர் சொன்னாராம். மங்கை யர்க்கரசி இதைத் தன் வங்காளச் சினேகிதி ரேணுகாவுக்கு எழுதியிருந்தாளாம். ரேணுகா மங்கையர்க்கரசியைத் தன் ஊரில் வந்து ஒரு மாதம் தங்கிப் போகலாமென்றும், ஆரோக்கியமான பிரதேசமென்றும் எழுதியிருந்தாளாம். மங்கையர்க்கரசியிடமிருந்து பதில் வராததால் ரேணுகா உடனே புறப்பட்டு வரும்படி அரசிக்குத் தந்தி யனுப்பி யிருந்தாளாம். அதன் பிறகு அப்பா அவளை அழைத்துக் கொண்டு கல்கத்தா சென்றாராம். அங்கே ரேணுகாவும் ஹம்சாவும் ஹௌரா ஸ்டேஷனில் அவர்களை வரவேற்று அழைத்துக்கொண்டு தங்களுடைய கிராமத்திற்குச் சென்றார்களாம். ரேணுகா என்ற பெண் வசிக்கும் கிராமம் அவளுடைய ஜமீனைச்சேர்ந்த, இயற்கை வளம்பெற்ற

அழகிய கிராமமாம். அந்தப் பிரதேசம் மங்கையர்க்கரசிக்கு மிகவும் பிடித்திருக்கிறதாம். அப்பா இங்கே ஒரு வாரம் தங்கிவிட்டு சென்னை வந்திருந்தார்.

நான் விடுதலை யானதைப் பாராட்டி மங்கையர்க்கரசியும், அவளுடைய சினேகிதிகளும், தந்தியனுப்பி யிருந்தார்கள். என்னை வங்காளத்திற்கு வரும்படியும் மங்கையர்க்கரசியுடன் தங்கியிருந்து விட்டு அவள் திரும்பும்பொழுது நானும் திரும்பிவிடலாமென்று ரேணுகாவின் தமையன் விபுலன் வேண்டுகோள் அனுப்பி யிருந்தான். எனக்கும் நீண்ட நாட்களாக அந்தப் பிரதேசங்களைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டிருந்தது. ஆகையால் வங்காளம் போய்வர முடிவுசெய்தேன்.

மணிவாசகனின் நிலைமையைச் சந்திரனுக்கு வந்த கடிதத்தில் அறிந்தேன். அவன் இப்பொழுதுதான் தன் தவறை உணர்ந்திருக்கிறுன். மணிவாசகனைப்போன்ற எண்ணம் படைத்தவர்கள்தான் நமது நாட்டிற்குத்தேவை. ஆனுல் மணிவாசகன் சுதந்திர இந்தியாவில் பிறக்காமல் தவறி, முன்னுலே அடிமை நாட்டில் பிறந்து விட்டான்.

தேசிய அரசாங்கத்தில் மணிவாசகனைப் போன்ற முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் தேவைதான், ஆனுல் முதலில் தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமே என்னசெய்வது ? இயந்திரத் தொழிலபிவிருத்திக்கு தேசீய அரசாங்கத்தினுல் உதவி செய்ய முடியும். தேசீய அரசாங்கமெனும் அஸ்திவாரமின்றி தொழில் என்னும் மாளிகையை மணிவாசகன் கட்டினுன். அம்மாளிகையை இன்னும் அழகு படுத்தியும், உறுதியாகவும் அமைக்க ஆசைப்பட்டான். அதற்காக எதிர்காலத்திலே தேசீய

அரசாங்கத்தில் பங்கு கொள்ளப்போகும் பாட்டாளி களைத்துன்புறுத்த ஆரம்பித்தான். அதனல் அவன் எண்ணம் நிறைவேறவில்லை. அதற்குப் பிறகு பாரதியார் கூறிச் சென்றதைப்போல்

"இமய மலை வீழ்ந்தது போல் வீழ்ந்து விட்டான்
…………இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சமடர் சடசட வென்று சரிந்திட்டார்
புயற் காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே"

மணிவாசகனுடைய மாளிகை நொறுங்கியதுடன் அவனும் அதள பாதாளத்தில் மறுமுறை எழுந்திருக்க முடியாதபடி சரிந்துவிட்டான்.

அவன் சந்திரனுக்கு எழுதிய கடிதத்திற்குப் பின்பு அவனுடைய நிலைமை இன்னும் பரிதாபமாகி விட்டது. தாயார் ஆஸ்பத்திரியிலேயே மரணமடைந்து விட்டாள். அவனுடைய மனைவியின் வழக்கில் அவன் குற்றவாளி யல்லவெனத் தீர்ப்பளிக்கப் பட்டாலும், மாணிக்கத்தின் கொலை வழக்கில், மாணிக்கத்தைச் சுட்டவன் அப்ரூவராக மாறிவிட்டான். அவனுடைய விசாரணையில் மணிவாசகன் அந்தக் கொலையாளிக்கு ஏராளமாகப் பணம் கொடுத்து, மாணிக்கத்தைச் சுட்டு விடும்படி, தூண்டியதாக அவன் தெரிவித்தானும். அதன் பேரில் வழக்கு மேல் கோர்ட்டுக்கு வந்தது.

ஏராளமான பணத்தை வாரியிறைப்பதன் மூலம் வழக்குச் சாதகமாகலாம் என நினைத்து, ஏராளமான சொத்துக்களை மணிவாசகன் விற்றுவிட்டான். ஆயினும் அவனுக்கு மரண தண்டனையே தீர்ப்பளிக்கப் பட்டது.

இத்தீர்ப்பு எனக்கும் சந்திரனுக்கு மட்டுமல்ல; கோவை ஆலை முதலாளிகளிடையே பெரிய திகிலை உண்டு பண்ணியது. உண்மையிலேயே மணிவாசகன் இவ்விதக் குற்றம் செய்ததாகத் தெரியவில்லை. ஆலைத் தொழிலாள ரிடையே மாணிக்கத்தின் செய்கை கொதிப்பைக் கிளப்பி விட்டது. அதனால் வெகுண்டு எழுந்த மக்கள் அவனைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

ஆனால் புனிதவதியை, அருமையான ஆத்மாவைக் கொடுமைப் படுத்தியதற்குத் தண்டனை தான் இது. புனிதவதி, மாணிக்கம் இருவரும் அகால மரணமடைந் தனர். மணிவாசகனுக்கோ மரண தண்டனை! நிகழ்ச்சிகள் அனைத்தும் எங்களையே சுற்றித் திரிவது போலிருந்தது. மனிதன் உலகில் பிறந்ததுமே அவனைத் துன்பமும், துயர மும், வந்து சூழ்ந்து கொள்ளுகின்றன. சாகும் மட்டும் அவைகள் அவனை விடுவதில்லை. ஒருவன் செய்த நன்மை தீமைகளின் பயன்தான் அவனைத் துன்பமும், ஆனந்த முமாக வந்து சூழ்ந்து கொள்ளுகின்றன என்று எண்ணு கிறேன்.

ஒரு வாரம் கழிந்தது. மங்கைபர்க்கரசி என்னை வங்காளத்திற்கு வரும்படி தந்தியனுப்பி யிருந்தாள். அப்பாவும் என்னைப் போய் வரும்படி வற்புறுத்தினர்.

கல்கத்தா செல்லுவதற்கு எல்லாவித ஏற்பாடும் பூர்த்தியாயிற்று. கடைசியாக சந்திரனிடம் விடை

கேட்டேன். அவன் சொன்னான், "வங்காளத்திலே புதிய புரட்சிச் சக்தி தலை தூக்கியிருக்கிறது. அடிக்கடி அங்கே கொலைகளும், கொள்ளைகளும் மலிவாக நடக்கின்றன. புரட்சி வாதிகளில் அனேகர் தப்பி விடுகின்றனர். அதற்குப் பதிலாக ஸ்தல காங்கிரஸ் காரர்கள் அகப்பட்டுக் கொண்டு தண்டனை யடைகின்றனர். தேவநேசா! ஜாக்கிரதை. மங்கயர்க்கரசியின் தோழிகள் தீவிர புரட்சி வாதிகள். அவர்கள் குடும்பங்களிலே வம்ச பரம்பரையாக புரட்சித் தன்மை பதிந்திருக்கிறது. ஆகையால் தேவைக்கு மேல் அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாதே. எச்சரிக்கையுடன் இருந்து வா!" என்றான்.

மனிதன் என்றுமே தேவனாவதில்லை. ஆனால் அவனுடைய உபதேசத்தில் நூறில் ஒன்றாகிலும் தேவவாக்காகி விடுகிறது. சந்திரனும் ஒரு வேளை தீர்க்கதரிசி தானோ?

கல்கத்தா ஹௌரா ஸ்டேஷனில் போய் இறங்கினேன். மங்கையர்க்கரசியும், ரேணுகா, ஹம்ஸா, விபுலன் முதலியோரும் எனக்கு மாலைகள் போட்டு வரவேற்றனர். ஆகா! அவர்களுடைய உபசரிப்பில் தான் எவ்வளவு குதூகலமும் மகிழ்ச்சியும் கலந்திருந்தது?

எல்லோரும் மர்மார் ஜமீனை அடைந்தோம். ஒரு வாரம் ஆனந்தமாகவும் சந்தோஷமாகவும் பொழுது போக்கினோம். வற்றாத ஜீவ நதி, வங்காளத்தின் தாய்—வங்காளிகளின் உயிரல்லவா கங்கை நதி? அதைப் பார்க்க வேண்டும். அதிலே படகோட்டிச் செல்ல வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அமர கவி பாரதி அந்த ஜீவ நதியைக் குறித்து,

"வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்."

என்று பாடியிருக்கிறு ரல்லவா! இதிகாசங்களில் கூறப்படும் இப்புனித நதியைப் பார்க்க வேண்டியது அவசியமல்லவா? அடுத்த வாரத்தில் எல்லோரும் அங்கே புறப்பட்டுப் போவதென்று முடிவு செய்தோம்.

ஹம்ஸாவும், விபுலனும் ஒரு பக்கமும், நான் ரேணுகா, மங்கையர்க்கரசி மூவரும் ஒரு பக்கமுமாக அமர்ந்தோம். படகுக்காரன் தோணியை அவிழ்த்து விட்டுக் கங்கையில் செலுத்தினன். படகு மிதந்து ஆடி ஆடிச்செல்லும் பொழுது, இதய ஊற்றிலிருந்து இன்பம் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருக்கும்.

எங்கள் படகு கரையோரமாகவே சென்று கொண்டிருந்தது. பக்கத்து கிராமங்களிலிருந்து பெண்கள் கங்கையில் தண்ணீர் எடுக்க வரும் காக்ஷியும், சிறுவர்கள் ஆற்றில் நீந்தி விளையாடுவதும், நடு ஆற்றில் பெரிதும் சிறிதுமான மரக்கலங்கள் ஆடி அசைந்து செல்லுவதும் மனோரம்மியமாய் இருந்தது.

ரேணுகா ஓர் அழகி. முகம் ரோஜாவைப் போல் சிவந்திருக்கும். படகில் செல்லும் பொழுது இனிய காற்று சுருளான அவளுடைய கேசத்தை நெற்றியிலே பறக்கச் செய்யும். அவள் அடிக்கடி அதை ஒதுக்கி விடுவாள். மறுபடியும் அது பறக்கும். அதை ஒதுக்கிவிட கைகளைத் தூக்கும் பொழுது வளையல்கள் குலுங்கி நகைக்கும். அதுவும் ஓர் அழகாகவே எனக்குத் தோன்றியது.

ஹம்ஸா விபுலனிடம் குறும்புத் தனமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள். மங்கையர்க்கரசி இவற்றில் மனம் செலுத்தாமல் எதையோ கற்பனை செய்து கொண்டிருந்தாள். எங்களுடைய படகு யாரையும் லக்ஷியம் செய்யாமல் எங்கேயோ ஓர் அழகான பிரதேசத்திற்கு எங்களைச் சுமந்து செல்லுவது போலத் தோன்றியது.

நாங்கள் சென்ற படகு விபுலனுக்குச் சொந்தம். அதை நாங்களே செலுத்தினோம். படகோட்டியை நடுவிலே ஒரு துறையில் இறங்கிப் போகச் சொல்லி விட்டோம். நானும் விபுலனும் ஒரு முறை துடுப்புத் தள்ளுவோம். மற்றொரு முறை நாங்கள் களைத்து விட்டதாகச் சொல்லி, ஹம்ஸாவும் ரேணுகாவும் படகைச் செலுத்துவார்கள். மங்கையர்க்கரசி நோய் வாய்ப்பட்டிருந்ததால் எங்களுடைய உற்சாகத்தில் அவள் பங்கு கொள்ள முடியவில்லை.

ஹம்ஸாவும் ரேணுகாவும் எங்களைக் கேலி செய்து கொண்டே படகைச் செலுத்தினார்கள். "அடி ஹம்ஸா! இந்த ஆண் பிள்ளைகளை நம்பி ஒரு காரியத்திலும் இறங்கக் கூடாது. அப்படி இறங்கினால் நட்டாற்றில் கைவிட்ட பிழைப்புத்தான். இந்தப் பழமொழியே நமக்காகத் தான் ஏற்பட்டதோ என்னவோ? இவ்விருவரையும் நம்பித் தானே நாம் படகில் ஏறினோம். வீணாகப் படகோட்டியையும் இறக்கிவிட்டு விட்டு, தாங்களே படகைச் செலுத்துவதாகச் சொல்லி, இப்பொழுது கை வலிக்கிறது, களைத்துவிட்டோம் என்கிறார்களே? நாம் இப்பொழுது படகைச் செலுத்துவதாக ஒப்புக் கொள்ளாவிடில் இந்த நதியிலேயே மூழ்கி இறந்து போக வேண்டியது தான்" என்றாள் ரேணுகா.

உடனே ஹம்ஸா அதை ஆமோதித்து "ஆமாம், ரேணுகா! இதே ஆடவர்கள் பெண்களுக்குச் சுதந்திரம் கொடுக்கக் கூடாதென்றும், அடுப்பங் கரையை விட்டு வெளியே வரக்கூடாதென்றும், தடை செய்கிறார்கள். நமக்குச் சுதந்திரமின்றி, நாம் இவர்கள்கூட இப்பொழுது வராமலிருந்தால் இவர்களின் கதி என்னவாயிருக்கும்?"

"அதற்காகவே உங்களை எப்பொழுதும் எங்கேயும் எங்களுடன் கூடவே அழைத்துச் செல்லுகிறோம். நாங்கள் ஈடுபடும் எல்லா வேலைகளிலும் உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறோம். சிற்சில சமயங்களில் உங்களுடைய யோசனைகளும், உதவியும் முக்கியத்துவமடைந்து விடுகிறது" என்றான் விபுலன்.

உடனே ரேணுகா இடைமறித்து "போதும், போதும், நீங்கள் இருவர் மட்டும் எங்கள் மூவருக்கும் சம அந்தஸ்தளித்தால் இந்தியாவின் முப்பத்தைந்து கோடி மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்து விட்டதாக நினைத்து மனப்பால் குடிக்கலாமா? உங்களுடைய சக்தி, காலம், பொருள் அனைத்தையும் பெண்களின் முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கக் கூடாதா?" என்று கேட்டாள்.

அதற்கு விபுலன், "நாம் எடுத்துக்கொண்ட வேலையைச் செய்து முடிக்கவே நமக்குக் காலம் அதிகமாக வேண்டியதிருக்கிறது. இதன் நடுவில் பெண்களின் முன்னேற்றத்திற்கும் எப்படி உழைப்பது?" என்று கேட்டான்.

"ஓய்வு நேரத்தில் அதையும் பார்க்க வேண்டியதுதான்" என்று கூறினாள் ஹம்ஸா.

"ஆனால் அதற்கும் நம்மிடையே ஆள் இருக்கத்தான் செய்கிறது" என்றான் விபுலன்.

"அது யாரண்ணு?" என்று அவசரமாகக் கேட்டாள் ரேணுகா.

"அப்படி நமது சொசைட்டியில் யார் இருக்கிறார்கள்?" என்று ஆவலுடன் கேட்டாள் ஹம்ஸா.

"நமது குரூப்பில் (Group) இன்னும் வேறு யார் இருக்கிறார் ஆண்கள்?" என்று கேட்டாள் மங்கையர்க்கரசி.

"முக்கியமான ஆளை நீங்கள் மறந்து விட்டீர்களே" என்று சிரித்தான் விபுலன்.

"ஆள் யார் என்று சொல் அண்ணு" என்று கெஞ்சினாள் ரேணுகா.

"நமது தேவநேசன் தான்" என்றான் விபுலன். உடனே படகிலிருந்தவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள். படகு அந்த நேரத்தில் சுழன்று திரும்பி ஓர் ஆட்டம் ஆடியது. நல்ல வேளையாக ரேணுகாவின் துடுப்பை நான் வாங்கிக்கொண்டு படகு கவிழ்ந்து போகாமல் பார்த்துக் கொண்டேன்.

"இந்தப் பெண்களுக்கு இதற்காகவே அதிகச் சுதந்திரம் கொடுக்கக் கூடாது என்கிறேன். சமயத்தில் தன் நிலை மறந்து ஆபத்தை இழுத்து விடுவார்கள். இப்பொழுது தான் பாரேன்! கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்திருந்தால் நாம் அனைவரும் கங்கைக்கு இரையாக வேண்டியதுதான்" என்றேன் நான்.

"இவர் கூட அஜாக்கிரதையாகத்தான் இருந்தார். வீணுகப் பழியை எங்கள் மீது சுமத்தாதீர்கள்" என்று விபுலனைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டே கூறினாள் ஹம்ஸா.

"இல்லை, இல்லை. தமிழர்கள் பெண்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கிறார்கள். ஒரு பெண் தன்னுடைய பாதுகாப்புக்கு கணவனின் துணை எவ்வளவு அவசியம் என்று எண்ணுகிறாளோ, அது தவிர முழுச் சுதந்திரம் தமிழ் நாட்டுப் பெண்களுக்கு உண்டு. படிப்பு, குடித்தனம், கைத்தொழில், விவசாயம், ஆலோசனை முதலிய அனைத்திலும் பெண்கள் ஈடுபடவேண்டிய அவசியத்தை அங்கே உண்டாக்கி யிருக்கிறார்கள்,' என்று தமிழனைச் சற்று உயர்த்திப் பேசினான் விபுலன். எங்களுடைய படகும் ஓர் அழகான துறையை அடைந்தது.

"அதோ தெரிகிற கட்டடம் மிகவும் நேர்த்தியாக இருக்கிறது" என்றாள் மங்கையர்க்கரசி ஒரு மாளிகையைச் சுட்டிக் காட்டிக் கொண்டே.

"அதுவும் விபுலனுடையது தான். இதற்குத் தான் என் பெயரை வைத்திருக்கிறார்கள். நேற்றுக் கூடச் சொன்னேனே, உனக்கு ஞாபக மில்லையா? 'ஹம்ஸ நிவாஸ்' என்பது இதுதான்" என்றாள் ஹம்ஸா.

"இங்கேயே உங்கள் இருவருக்கும் விவாகம் நடத்தி விடுகிறோம்" என்றேன் ஹம்ஸாவைப் பார்த்து.

"உங்களால் அது முடியாது பாபு. நமது நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த பின்பே நாங்கள் விவாகம் செய்து கொள்வதாகப் பிரதிக்ஞை கொண்டிருக்கிறோம்" என்றாள் ஹம்ஸா.

"ஆமாம், தேவநேசா! அடிமை இந்தியாவில் மணம் செய்து கொள்ள மனமேயில்லை" என்றான் விபுலன்.

"சுதந்திரத்திற்காக நீங்கள் இதுவரை என்ன தியாகம் செய்திருக்கிறீர்கள்? உங்களுடைய லக்ஷியம் என்ன? அந்த லக்ஷியத்திலே எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

ஹம்ஸா பரபரப்புடன் என்னை நோக்கி "ஒரு அண்ணனை அந்தமான் தீவுக்கும், மற்றொரு அண்ணனை இந்தியாவின் பிரதிபிம்பமான ஏழ்மைக் குடிகளின் நிவாரணத் தொண்டுக்கும் அனுப்பியிருக்கிறேன். இரண்டு ரயிலைக் கவிழ்த்திருக்கிறேன். அவற்றில் ஆறு அன்னியர் களின் உயிர் போய் விட்டது" என்று படபடப்புடன் பேசினாள்.

எனக்கு உடம்பு மயிர்க் கூச்சலால் புல்லரித்து இரத்தம் உறைந்து விட்டது. இவள் செய்கை புரட்சித் தன்மை கொண்டதல்லவா? இதன் மூலமாகவா இவர்கள் சுதந்திரம் அடைய முடியும்? இது வெறும் பகற்கனவு தான். ஆனால் இவர்களுடைய செய்கை எவ்வளவு தேச பக்தியுள்ளதாயினும் கண்டிக்கக் கூடியதாகவே இருக் கிறது. அவளால் கவிழ்த்து விடப்பட்ட இரண்டு ரயிலிலும் எத்தனை இந்தியத் தோழர்கள் உயிர் துறந் திருப்பர்? அம்மாதிரி உயிர் துறந்தவர்களில் எத்தனை தேசத்தியாகிகள் இருந்தனரோ? இந்த ரயிலைக் கவிழ்த்த தால் தான் அவளுடைய அண்ணா அந்தமானுக்குப் போயிருக்க வேண்டும். இவ்வாறு சிந்தனை செய்தவாறே பேசாமலிருந்தேன்.

"என்னைப்போல நம் நாட்டில் பிறந்த ஒவ்வொரு வனும் தன் கடமையைச் செய்ய முன் வந்திருந்தால்.

இந்தியா எப்பொழுதோ சுதந்திரத்தை அடைந்திருக்கும்" என்று மேலும் கூறினாள் ஹம்ஸா.

"போதும் ஹம்ஸா நிறுத்து. உன்னுடைய செய்கையினால் அருமையான உயிர்களைப் பறி கொடுக்கிறோமேயன்றி, சுதந்திரத்தை வெகுதூரம் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறோம். 'எப்படி என்றால் சொல்லுகிறேன் கேள்.

"இன்றைய இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கித்தர உழைக்கும் ஒரே அரசியல் சபை காங்கிரஸ்தான். அதன் தலைவர்தான் மகாத்மா. அவருடைய கொள்கை என்ன? அஹிம்சை தான் அது. இரண்டு ரயிலைக் கவிழ்த்ததும், மக்கள் இறந்ததும் அஹிம்சையா?

"சாத்விகத்தில் நம்பிக்கைகொண்டு, எல்லோரும் மகாத்மாவைப் பின்பற்றுகின்றனர். இடையிடையே உன்னைப் போன்ற இரண்டொருவர்களின் வீண் முயற்சியால் காங்கிரஸ் ஒரு புரட்சி ஸ்தாபனமென்று நமது ஆங்கில அரசாங்கம் அகில உலகத்திற்கும் பறைசாற்றி விடுகிறது. மேலும் நீங்கள் இரண்டொருவர் மட்டும் கூடி ஒரு ரயிலைக் கவிழ்ப்பதாலோ, வெடிகுண்டை வீசுவதாலோ 35 கோடி மக்கள் வாழும் நமது நாட்டிற்குப் பூர்ண சுதந்திரம் கிடைத்துவிடுமென்று நம்புகிறீர்களா? அப்படி உங்கள் போக்கு வெற்றியடைய வேண்டுமானால் இந்தியா முழுவதும் உங்களைப் பின்பற்ற வேண்டும். இல்லையேல் உங்களுடைய முயற்சி வெற்றியடையாது," என்றேன்.

"எங்களுடைய கொள்கைகளைச் சரியாக நீங்கள் அறியவில்லை. உங்களுக்கு அஹிம்சை தான் சரியான

வழி என்று தோன்றினல் தாராளமாக அதைப் பின் பற்றலாம். ஆனல் எங்களுடைய போக்கே எங்களுக்குச் சரி யென்று தோன்றுவதால், எங்களுக்கு அஹிம்சை உபதேசம் வேண்டாம்," என்று கூறினன் விபுலன்.

"அவரவர் கொள்கைகளை எடுத்துச் சொல்ல ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அதன்படி எடுத்துச் சொன்னேன். கேட்டால் கேளுங்கள். இல்லையேல் அதன் பலாபலன் உங்களைத்தான் சேரும்" என்றேன்.

அன்று பகல் ஒரு மணி யிருக்கும். ஹம்ஸாவிடம் விபுலன் ஏதோ ரகசியம் பேசினன். அவள் ரேணுகா விடம் ஏதோ கூறினள். "சரி" என்ருள் ரேணுகா. "புறப் படுவோம்" என்ருள் ஹம்ஸா. "தேவநேசபாபு வரவேண் டாமா ?" என்று கேட்டாள் ரேணுகா.

"அடி! அவர் வழி அஹிம்சா தர்மம் அல்லவா? நமது போக்கு அவருக்குப் பிடிக்காது. ஆகையால் அவர் வராமலிருப்பதே நல்லது," என்ருள் ஹம்ஸா. என்னை விட்டுச்செல்ல ரேணுகாவுக்கு இஷ்டமில்லை. ஆயினும் என்ன செய்வது? அப்பொழுதுதான் சற்று குணமடைந் திருந்த மங்கையர்க்கரசியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தாள்.

இருவரும் என்னிடம் வந்து சீக்கிரம் திரும்பிவந்து விடுவதாகவும் அவசரமாக ஓரிடத்திற்குச் செல்ல வேண்டு மென்றும் கூறினர்கள். நான் மங்கையர்க்கரசியிடம் "உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படியும் இந்தக் கூட்டத்தாரின் பேச்சும் செய்கைகளும் அடியோடு பிடிக்க வில்லை என்ருலும், அவர்கள் என் மீது செலுத்தும் அன்பை மறக்க முடியவில்லை என்றும், இவர்களுடன்

சேர்ந்து போவதால் எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதை யாக நடந்து கொள்ளும்படியும்" சொல்லிப் போய் வரச் சொன்னேன்.

விபுலன் என்னிடம் வந்து "பிரதர், இந்தக் கடிதம் உங்களிடம் இருக்கட்டும். நான் இங்கே வருவதற்குக் கொஞ்சம் தாமதமேற்பட்டு, என்னை யாரேனும் தேடி வந்தால் இதைக் கொடுங்கள். அவரை அனுவசியமாகக் கேள்விகள் கேட்க வேண்டாம். எங்கள் சங்கத்தின் முக்கிய அங்கத்தினன் அவன். காரியதரிசி இல்லா விட்டால் நிர்வாகம் அவனைத்தான் சாரும். ஆகையால் அவன் இங்கேயே இருக்க விரும்பினாலும் இருக்கட்டும். நீங்கள் இந்த உதவியை அவசியம் செய்ய வேண்டும்" என்றான்.

"சரி. கொடுத்துவிட்டுப் போங்கள். வந்து கேட்டால் கொடுக்கிறேன்," என்றேன். அவர்கள் போய் விட்டார்கள்.

மணி இரண்டு அடித்தது, மூன்று அடித்தது, நான்கும் அடித்து விட்டது. இன்னும் போனவர்கள் வர வில்லை. நாலரையும் அடித்துவிட்டது. இன்னும் ஏன் வரவில்லை? சிந்தனைகள் மனதைச் செல்லரித்தன. அடிக்கடி கடியாரத்தைப் பார்த்துக் கழுத்தும் வலித்துவிட்டது. மனதில் ஆயாசம் தோன்றியது. படுக்கையில் போய்ப் படுத்தேன். கடிதத்தின் ஞாபகம் வந்தது. கடிதமும் திறந்த நிரூபம் தான்.

அதிலே விபுலன் என்ன எழுதியிருப்பான்? என் மனம் அதை அறிய ஆவலுற்றது. கடிதம் ஒட்டப்படாம லிருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தேன். இருந்த

போதிலும் கதவு தாளிடப் பட்டிருக்கிறதா என்று பார்க்க வாசற்படிக்கு வந்தேன்.

இதென்ன பயங்கரம்? விபுலன் மட்டும் கைது செய்யப்பட்டு இரு போலீசாரின் நடுவில் நின்று கொண்டிருந்தான். ஒரு இன்ஸ்பெக்டரும், வேறு இரண்டு கான்ஸ்டேபிளும் வீட்டிற்குள்ளே நுழைந்தார்கள். நான் திகிலுடன் விபுலனைப் பார்த்தேன். விபுலன் தன்னுடைய கண் பார்வையாலும், இமையினாலும் ஏதோ ஒன்றை என்னிடம் விளங்க வைக்க முயன்றான். ஆனால் அவனுடைய குறிப்பு எனக்குப் புரியவில்லை.

அதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னைத்தாண்டி நேராக நான் இருந்த அறைக்குள் சென்றார். நான் அவர்கள் பின்னாலேயே சென்றேன். ஆனால் விதியின் போக்கு சமயத்தில் மனிதனின் மதியையும் கெடுத்து விடுகிறது. கதவு தாளிடப் பட்டிருக்கிறதா என்று பார்க்க வந்த நான், கடிதத்தைக் கட்டிலின் மீது வைத்து வந்து விட்டேன். இன்ஸ்பெக்டர் வந்ததும் அவருடைய பார்வை கடிதத்தின் மீதே விழுந்தது. அவர் அதை எடுத்துக்கொண்டே "தேவநேசன் யார்?" என்று கேட்டார்.

பின்னாலேயே வந்த நான் "ஏன் சார்! என்ன விசேஷம்? விபுலன் ஏன் கைது செய்யப்பட்டு இருக்கிறான்?" என்று கேட்டேன்.

"அதை அப்புறம் தெரிந்து கொள்ளலாம். தேவநேசன் நீங்கள் தானே?" என்று கேட்டார்.

"ஆமாம். நான்தான்" என்றேன்.

உடனே அவர் மனம் பொங்கி, "அடபாவிகளா! ஏன் இந்தச் செய்கைகளில் ஈடுபடுகிறீர்கள்? எமதூதர்களாக இங்கே வந்து பிறந்திருக்கிறீர்களோ? அனியாயமாக மக்களின் உயிரை வதைக்கிறீர்களே. இதன் மூலம் நீங்கள் என்ன தான் சாதித்துக் கொள்ள முடியும்?" என்று உருக்கமாகக் கேட்டார்.

"சார்! நீங்கள் சொல்லுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே! நாங்கள் ஏன் மக்களுடைய உயிரை வதைக்க வேண்டும்? எதற்காக இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஓகோ! ஒன்றும் அறியாதவன் மாதிரி பேசுகிறீரே, உமது நடிப்பு நாடகங்களில் நன்ருகச் சோபிக்கும். காங்கிரஸ்காரன் என்று வேஷம் போட்டு, மக்களை ஏமாற்றி, அவர்களையே சதி செய்து கொல்லும் நீங்கள்தாஞ அஹிம்சாவாதிகள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"ஐயா! சத்தியமாக எனக்கு ஒன்றும் தெரியாது. நடந்த விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றேன்.

"ஏனையா! நீர் முழுத்திருடஞக இருக்கிறீரே. இந்தக் கடிதம் இதோ பிரித்துக்கிடக்கிறது. இன்று நடந்த அக்கிரமங்கள் அனைத்தும் அதிலே எழுதப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க போலீஸ்காரனையே கேள்விகள் கேட்க ஆரம்பித்து விட்டீரே?" என்ருர்.

நான் கடிதத்தைப் பிரித்தேன். அதில் என் விலாசமிட்டு எனக்கு விபுலன் ஆங்கில மொழியில் கடிதம் எழுதியிருந்தான்.

"தேவநேசா!

உனக்கு, உன் லக்ஷியம் நிறைவேற ஓர் அழைப்பு இது. நான் விடுக்கும் அழைப்பு. ஆகையால் இதை மறுக்காதே. இன்றைய சந்தர்ப்பம் போனால் மறு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. இன்று நாங்கள் பகல்பூரிலிருந்து மூர்ஷிதாபாத் செல்லும் ரயில் வண்டியைக் கவிழ்க்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அதற்காகவே நாம் இந்த வீட்டிற்கு வந்தோம். உன்னிடம் இதைச் சொன்னால் எங்கே வர மறுத்து விடுவாயோ என்ற பயத்தால், கங்கையையும், எனது மாளிகையையும் பார்த்து வரலாமென்று அழைத்தேன்.

உன் கொள்கை அஹிம்சையைப் பின் பற்றிய தென்றும், எங்கள் போக்கு உனக்குப்பிடிக்காதென்றும், ஆகையால் உன்னை இந்த நடவடிக்கையில் இழுத்துவிட வேண்டாமென்றும் மங்கையர்க்கரசி வேண்டிக்கொண்டாள்.

ஆனால் உன்னையும் எங்களுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றே என் சகாக்கள் விரும்புகின்றனர். சாத்விகத்தில் நம்பிக்கை கொண்டு அஹிம்சையைப் பின்பற்றும் உன்னை, அதிகாரிகளுக்குக் காட்டி, நாங்கள் இந்த நாசவேலைகளில் ஈடுபடுபவர்கள் இல்லை என்று சொல்லலாம். அதன்மூலம் எங்களுக்கு அபயம் அளிக்கும் ஆத்மாவாக விளங்குவாய்.

காட்டு யானைகளைப் பிடிக்க ஆழக்குழி தோண்டி மேலே சிறுகுச்சிகளைப் பரப்பி, யானைகளை ஏமாற்றிப்

பிடிக்கிறார்களல்லவா? அதுபோல உன்னைக்காட்டி, எங்களை மறைத்துக்கொண்டு, அன்னியரை விரட்டும் இந்தச் சதிச்செயல் உன்மூலம் நிறைவேற வேண்டிய திருக்கிறது.

உன்னைப்பார்க்க எங்கள் சங்கத்தைச் சேர்ந்த நிர்மல் கோஷ் மாலையில் வருவார். நீ அவரிடம் நிச்சயம் வாக்குறுதியளித்து எங்களைக் காப்பாற்றி, நமது நாட்டிற்கு எங்களால் செய்யவேண்டிய சேவைகளை இன்னும் அதிகப் படுத்துவாய் என்று நம்புகிறேன்.

குறிப்பு: உன்னிடம் நேரில் கொடுத்தால் நீ என்னைத் தடுத்து விடுவாய் என்று நினைத்தே இந்தக்கடிதத்தை நிர்மல் கோஷிடம் கொடுக்கச்சொன்னேன் அவரிடம் நான் முன்பே தெரிவித்திருக்கிறபடி இந்தக் கடிதத்தையே உன்னிடம் திருப்பிக் கொடுப்பார், ஏற்றுக்கொள்; மறுக்காதே.

உன தன்புள்ள

விபுலன்"

படித்து முடிப்பதற்குள் அருகே நின்ற போலீசார் எனக்கு விலங்கிட்டனர். மறுநாள் நாங்களிருவரும்—விபுலனும் நானும்—மூர்ஷிதாபாத் ஜெயிலிலே அடைக்கப்பட்டோம். நாங்கள் பக்கத்து அறைகளிலே இருந்திருந்தாலும் ஒருவருக் கொருவர் பேசியிருக்க முடியும் ஆனால் என்னையும், விபுலனையும் தனித் தனியாக, வெவ்வேறு அறைகளிலே வைத்திருந்தார்கள். அன்று நடந்த காரியங்கள் அனைத்தும் எனக்குத் தெரியாது. மங்கையர்க்கரசி என்ன வானாள்? மற்ற பெண்களின் நிலைமை என்ன? விபுலன் என்ன சதி செய்தான்? அதன் முடிவு என்ன

வாயிற்று? கேள்விகள் நிமிஷத்திற்கு ஆயிரம் எழுந்தாலும், விடை யறிய முடியாமல், இருட்டறைக்குள்ளே மூச்சு முட்டிச்சாகும் மனிதனின் நிலைமையை அடைந்தேன்.

மறுநாள் மணி பத்து இருக்கும். எனக்கு ஒரு நண்பன் வந்து சேர்ந்தான். அவனும் இந்தச் சதிக் கூட்டத்தைச் சேர்ந்தவன்தானும். வங்காளி; ஆள் எடுப்பாக விளங்கினுன். அவன் முகத்தைப் பார்த்ததும் கவர்ச்சியால் என்மனம் அவனிடம் ஈடுபட்டது. அவன் என்னை பார்த்ததும் முதலில் ஆச்சரியப்பட்டான்.

"நீ மதராஸ் ஆளல்லவா?" என்று ஆங்கிலத்தில் கேட்டான். நான் "ஆம்" என்று தலையசைத்தேன். "நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று ஹிந்தியிலே அழகாகப் பேசினுன். நான் இந்தச் சிறைக்கு வந்த விபரத்தை நன்கு ஹிந்தியிலேயே எடுத்துக்கூறினேன். அவன் மிகுந்த ஆச்சரியப்பட்டான். நீ காங்கிரஸ் காரனுக இருந்த போதிலும் இந்தச் சதிவேலைகளிலும் ஈடு படவேண்டியது தான். வேறு எந்த விதத்திலே நாம் சுதந்திரத்தைச் சம்பாதிக்க முடியும்? உங்கள் மாகாணத்திலே இம்மாதிரி செய்வது கிடையாதோ?" என்று கேட்டான்.

"எங்கள் மாகாணத்தின் போக்கேவேறு. மகாத்மாவின் தலைமைக்குக் கீழ்ப்பட்டு, கட்டுப்பாடாக வேலைசெய்ய தமிழ்நாட்டு மக்கள் தயாராக இருக்கின்றனர். அவர்களுக்கு இந்தச் சதிவேலைகளில் நம்பிக்கை யில்லை. அது போகட்டும். நீ இங்கு வரவேண்டிய காரணமென்ன?" என்று கேட்டேன்.

"நான் பகவத்சிங் குரூப்பில் ஒரு அங்கத்தினன். சிட்டகாங் சதி வழக்கில் ஈடு பட்டவன். அதற்காக இரண்டு வருஷத் தண்டனை அடைந்து நேற்று முன்தினம் விடுதலையானேன்; நேற்று பகல்பூரிலிருந்து மூர்ஷிதாபாத் வரும் வழியில் கைது செய்யப்பட்டேன். உனது நண்பன் என்று சற்று முன்பு சொன்னாயல்லவா—விபுலன்! அவனை எனக்குத் தெரியவேதெரியாது. ஆயினும் நாங்கள் வங்காளிகள்தான். ஒரேதாயின் பிள்ளைகள்தானே! அவன் ரயில்வே பாலத்தின்மீது வெடிவைத்துத் தகர்க்க ஏற்பாடு செய்திருக்கிறான். ஆனால் பாழும் வெடி, வண்டி வருவதற்குள் அரைமணி நேரத்திற்கு முன்பு வெடித்து விட்டதால் வண்டிக்குச் சேதமின்றி அனைவரும் தப்பித்துக் கொண்டனர்.

ஆனால் பக்கத்து ஊரில் உள்ள போலீசார் விசாரணைக்கு ஸ்தலத்துக்கு வந்தபொழுது, எதிரே அகப்பட்ட விபுலனைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். அதே வண்டியில் வந்த என்னையும் போலீசார் கைது செய்தனர். அதற்குக்காரணம், நான் விபுலனுக்குத் தகவல் கொடுத்து இந்த ஏற்பாட்டைச் செய்யச் சொன்னதாக வழக்கைப் போலீசார் ஜோடித்து விட்டனர்" என்றான்.

நிலைமை விபரீதமாகப் போய்விட்டது. நாங்கள் இருவரும் ஒரே வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை அறிந்ததும் உடனே எங்களைப் பிரித்து விட்டனர். எங்களைப் பிரிக்கு முன்பு அந்த வங்காள வாலிபன் வங்காளத்திலே கடந்த சில ஆண்டுகளாக நடந்த சதிச் செயல்களை என்னிடம் சுருக்கமாகக் கூறினான்.

ஏப்ரல் மாதம் 1930-ல் சிட்டகாங்கில் நடந்த பெரிய ஒரு புரட்சியைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதிலே தேசிய சுதந்திரத்தின் ஆர்வத்தால் மனமுவந்து பல வாலிபர்கள் ஈடுபட்டனர். அதில் நானும் ஒருவன். எனக்குச் சதிவேலை என்பதைப்பற்றி ஒன்றும் தெரியாது. எல்லாத் தொண்டர்களையும் அணிவகுத்து நான்கு கோஷ்டிகளாகப் பிரித்து அனுப்பினார்கள்.

ஒரு கோஷ்டி போலீஸ் ஷ்டேஷனை முற்றுகையிட்டு, அதைக் கைப்பற்றிக் கொண்டு, அங்கேயுள்ள பல போலீஸ்காரர்களைப் பலியிட்டது. மற்றொரு பிரிவு "ஆக்சிலரி போர்சு ஆர்மரி"யை வசப்படுத்திக்கொண்டு ஒரு சென்ட்ரி, ஒரு சிப்பாய், ஒரு சார்ஜண்ட், மேஜர் ஆகியோரைச் சுட்டுவீழ்த்தி, பல துப்பாக்கிகளையும், பிஸ்டல்களையும் கைப்பற்றியது. மூன்றாவது பிரிவு டெலிகிராப் ஆபீசைக் கைப்பற்றியது.

நான்காவது பிரிவு மெயில வண்டியையும், கூட்ஸ் வண்டியையும் கவிழ்க்க முயற்சித்தது. இந்த நான்காவது கோஷ்டியில்தான் நான் ஈடுபட்டேன். இரண்டு நாட்களாக சிட்டகாங்குக்கு வெளியிலிருந்து உதவி வரவில்லை.

கடைசியாக பிரிட்டிஷாரின் துப்பாக்கிக்குப் பணிந்தோம். எங்களில் முக்கால் பகுதியினருக்கு மேல் பிடிபட்டோம். நேற்றுத்தான் எங்கள் சதி இயக்கத்தின் தலைவரான சூர்யஜென் பிடிபட்டார். அவருக்கு ஆங்கில அரசாங்கத்தின் தூக்குத் தண்டனை

நிச்சயம் காத்துக் கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். எங்களில் ஒருவன் சமீபத்தில் சந்திர நாகூரில் சுட்டுக் கொல்லப்பட்டான்.

எங்களுடைய சரித்திரம் — பிரசித்தி பெற்ற இந்தப் புரட்சி—அடக்க வொண்ணாத தீவிரமான புரட்சி - வங்காளிகளைத் தட்டி எழுப்பியது. பெண்கள், மாணவர்கள், முதலியோர்கூட இதில் ஈடுபட்டு விட்டனர். அதே வருஷம் ஆகஸ்ட்டு மாதம் கல்கத்தா ஜொரபகன் போலீஸ் ஸ்டேஷனில் வெடிகுண்டு வீச்சு நடந்தது.

அதற்கு அடுத்த நாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலையும், போலீஸ் சூப்பிரண்டண்டையும் டாக்காவில் சுட்டு வீழ்த்தினார்கள். ஆனால் அந்த இயக்கத்தின் தலைவரான நாராயண சந்திர பே கைது செய்யப்பட்டார். டிசம்பர் மாதம் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று வாலிபர்கள் ஜெயில் இன்ஸ்பெக்டரைச் சுட்டு வீழ்த்தினர். அங்கேயே இரு ஆங்கிலேயரைச் சுட்டுக் காயப்படுத்தினர். இதிலே தினேச குப்தா தூக்கிலிடப்பட்டார். இரு தோழர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

1931 வருஷம் ஏப்ரல் மாதம் மிதுனபுரி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் சுடப்பட்டார். ஜூலை மாதக் கடைசியில் அலிபூர் செஷன்ஸ் ஜட்ஜ் ஒரு தீவிர வாதியால் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்பு அந்தத் தீவிர வாதியும் அதிகாரிகளிடம் அகப்படாமலிருக்க விஷத்தைச் சாப்பிட்டு இறந்தார்.

21-8-31ல் டாங்கேயில் கமிஷனர் கேசல்சுவின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. முப்பதாம் தேதியன்று சிட்டகாங்கில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கான்பகதூர் அஷனுல்லா கொலை செய்யப்பட்டார்.

டாக்கா மாஜிஸ்ட்ரேட் டர்னே, ஐரோப்பிய சங்கத் தலைவர் வில்லியர்ஸ் என்பவர்களைக் கொலை செய்ய சூழ்ச்சிகளும் நடைபெற்றன. டிசம்பரில் திப்பரா ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஸ்டீவன்ஸ் என்பவரை பாரத நாட்டு வீரம் செறிந்த இரண்டு பெண் மணிகள் சுட்டுக் கொன்றனர்.

சென்ற வருடம் செப்டம்பரில் சிட்டகாங்கிலுள்ள பஹார்தலி ரயில்வே இன்ஸ்டிடியூட்டை எதிர்த்து முற்றுகையிட்ட கூட்டத்திற்கும் ஒரு பெண்மணியே தலைமை வகித்தாள்.

ஏப்ரல் மாதம் மறுபடியும் மிதுனபுரி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் டக்ளஸ் கொலை செய்யப்பட்டார். ஜூன் மாதம் டாக்கா சப் டெபுடி மாஜிஸ்ட்ரேட் கொல்லப்பட்டதுடன், போலீஸ் சூப்பரின்டண்ட் எலிசன் சுடப்பட்டார். ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை ஆசிரியர் வாட்சனைக் கூட கொலை செய்வதற்கு இரண்டு தடவை முயற்சிக்கப்பட்டது.

இம்மாதிரி பல இயக்கங்கள் நடந்தது. அவற்றை நசுக்குவதில் தோல்வியடைந்த அரசாங்கம் பல சட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்தது. ஆனால் சட்டங்களை மீறி எங்கள் இயக்கம் நன்கு பலம் பெற்று வளர்ந்து வருவதுடன், பலர் வலுவிலே

வந்து இயக்கத்திற்கு உதவியும் ஆதரவும் தரு கின்றனர்.

ஆனல் எங்களுடைய ஒரே நோக்கம் அன்னியர் நமது நாட்டை விட்டு வெளியேறுவதுடன் தேசத் திற்குப் பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டுமென் பதுதான். அதற்காகவே நாங்கள் உயிரையும் வெறுத்துத் தியாகத் தீயில் குதித்திருக்கிரேம்,'' என்று சொல்லி முடித்தான்.

அவனுடைய பேச்சை ஆவலுடன் கேட்டுக் கொண் டிருந்தேன். அவன் கூறிய செய்திகள் எனக்குத் திகிலே யுண்டாக்கியது. இவற்ருல்—இந்தச் சதியால் இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியுமா? இது வீண் முயற்சி யில்லையா? ஹிம்சையும், துவேஷமும் பிராணபயமும் தான் கண்ட பலன்.

அந்தோ! ஒன்றுமறியாத இளைஞர்களும் அநியாய மாக இந்த வழக்குகளில் அகப்பட்டு, வீணுகத் தண்டனே யடைவார்களே! நிரபராதிகள் எத்தனை பேர் தண்டிக்கப் படுவார்கள்? அவர்களே நம்பிப் பிழைக்கும் மனைவிமக்களின் நிலைமைதான் என்ன? இது கொடுமையில்லையா? இதை நினைக்கையில் மகாத்மாவின் சாத்வீகப் போர் நமக்குப் பளிச்சென்று உதயமாகிறதல்லவா!

மகாத்மாவின்கீழ் வேலை செய்வதற்கு, அஹிம்சையில் நம்பிக்கை கொண்டு பயிற்சி பெற்ற ஒரு சிலர் இருந்தால் போதும். ஆனல் இந்தச் சதிக் கூட்டங்களுக்கு நாடு முழுவதும் ஆதரவு வேண்டும். சதி வேலைக்கும் புரட் சிக்கும் நம் நாட்டில் ஆதரவு கிடைக்காது என்பது மகாத்மா இருக்கும் வரையில் நிச்சயம். பின்பு ஏன் இந்தச் சதி?

எங்களில் ஐந்து பேர் இந்த வழக்கில் சம்பந்தப் படுத்தப் பட்டோம். அதில் சிறையிலே சந்தித்த வங்காள வாலிபன் விடுதலையானான், மற்றொரு நண்பனும் விடுதலை செய்யப்பட்டான். 'பகவத்சிங் குரூப்' காரியதரிசியான நிர்மல்கோஷ், விபுலன், நான் மூவரும் 'செஷன்சுக்குக் கமிட்' செய்யப் பட்டோம் ஏற்கனவே நான் இரண்டு தடவை ஜெயில் வாசம் பெற்றிருந்ததாலும், கோயம் பத்தூர் தொழிலாளர் வேலை நிறுத்தக் கலவரமும், விபுலன் எனக்கு எழுதியிருந்த கடிதமும், சாட்சியாகி, நான் சதி செய்தவர்களின் வீட்டில் அந்த நேரத்தில் இருந்ததாலும் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப் பட்டேன். எங்கள் மூவருக்கும் அந்த நீதிபதி மரண தண்டனை விதித்தார்.



பத்திரிகைத் தொழில் எனக்குப் பாரமாகத் தோன்ற வில்லை. அது செவ்வனே நடைபெற்று வந்தது. ஆனால் நண்பர்களின் நிலைமை என்னை அடிக்கடி திகைக்கச் செய்தது. என்ன ஆச்சரியம்! பட்டகாலிலேபடும் கெட்ட குடியே கெடும் என்பார்கள். அதைப்போல என்னையே சுற்றிச் சுற்றி என் நண்பர்களையே விதி ஆட்டி வைக்கிறது.

புனிதவதியோ தற்கொலை செய்துகொண்டாள்; மாணிக்கம் சுடப்பட்டான். மணிவாசகனுக்கோ மரண தண்டனை. இவற்றை நினைக்கையில் வேலையில் எப்படி மனத்தைச் செலுத்த முடியும்? ரயிலிலோ, வண்டியிலோ களைப்புற்றுப் பிரயாணம் செய்யும் மனிதனை மூட்டைப் பூச்சி கடித்துக் கொண்டே யிருந்தால், அவன் எப்படித் தூங்கி ஓய்வு எடுத்துக்கொள்ள முடியும்? என்னுடைய நிலைமையும் அப்படித்தானாகிவிட்டது.

இதே நேரத்தில் கல்கத்தாவிலிருந்து வந்த அவசரத் தந்தியால் மங்கையர்க்கரசியைப் பார்த்துவர தேவநேசன் புறப்பட்டான். அப்பொழுது என்னிடம் வந்து சொன்னான். "மணிவாசகன் எவ்வளவு எதிரியாக இருந்த போதிலும் பரவாயில்லை. அவனுக்கு இந்த ஆபத்தில் உதவி செய்யவேண்டியது நமது கடமை. நமக்குத் தெரிந்த வக்கீல்களைக் கலந்து அவனுடைய அப்பீலுக்கு ஏற்பாடு செய்."

நானும் இதைத்தான் நினைத்திருந்தேன். தேவ நேசனின் வேண்டுகோளை ஏற்று, முதலில் மணிவாசகனை

ஜாமீனில் விடுதலை செய்ய நினைத்தேன். மரணதண்டனை விதிக்கப்பட்ட கிரிமினல் கைதியை எப்படி ஜாமீனில் விடுதலை செய்ய முடியும்? அப்பீலுக்குச் செய்துகொண்ட மனுவை மட்டும் கருணையுடன் ஏற்றுக்கொண்டார் பிரதம நீதிபதி. இந்த வேலைத் தொந்தரவால் சுதேசிக்கொடி சில சமயங்களில் காலம் தாழ்த்தியும் வெளிவந்தது. ஆனால் ஆருயிர் நண்பனின் உயிரைக்காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை.

ஒருயிர் இந்தியாவின் எதிர்காலத்திலே, அதற்குத் தொழிலபிவிருத்தியில் புத்துயிர் உண்டாக்கும் ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியைவிட வேறு என்ன வேலை?

வழக்கும் உடனே எடுத்துக் கொள்ளப் பட்டது. விசாரணையும் ஆரம்பமாயிற்று. ஒரு நாள் பகலில் வீட்டிற்கு உணவருந்த வந்தேன். எதிரே தந்திச் சேவகன் தந்தி ஒன்றை நீட்டினன். அதில், "தேவநேசன் கைது செய்யப்பட்டான். ஹௌரா ஸ்டேஷனில் என்னைச் சந்திக்கவும்—அரசி" என்றிருந்தது.

இருதலைக் கொள்ளி எறும்பும் ஒருவாறுகச் சமாளித்துக் கொள்ளலாம். அதனிலும் மோசமாகிவிட்டது என் நிலைமை. காரியாலயத்தில் என்னை எதிர்பார்த்து தேவநேசனின் தந்தை சுந்தர முதலியார் நின்றார். எனக்கு வந்ததைப்போல் அவருக்கும் தந்தி ஒன்று வந்திருந்தது.

"நீ அவசியம் புறப்பட்டுப் போ. ஏதோ விபரீதம் நடக்கப்போவது போல் என்மனம் அடித்துக் கொள்கிறது. மன நிலை சரியில்லை. கண்கள் அடிக்கடி துடிக்கின்

றன. தந்தியைக் கண்டது முதல் என் உள்ளம் கொதிக்கிறது. போ. நீ சென்று தகவல் அறிந்து எனக்குப் பதில் எழுதும் வரை என்மனம் சாந்தியடையாது. சந்திரா! எனக்கு ஒரே ஒரு மகன்— என்செல்வம்— அரிய பொக்கிஷம் அவன் உயிர் உன்னால்தான் காப்பாற்றப்படவேண்டும், என்று சொல்லிவிட்டு அழுதுவிட்டார்.

ஆஹா! சுந்தர முதலியாரா அழுகிறார்? என்ன ஆச்சரியம். இந்தக் காரியாலயத்துக்கு நான் வந்தது முதல் அவர் அழுதுபார்த்த தில்லை. சிறு குழந்தையைப் போல் அவர் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். நல்ல உற்சாக முள்ள மனிதர்; அறிவும் அனுபவ முதிர்ச்சியும் பெற்றவர்—எவ்வளவு இடுக்கண் வந்தபொழுதும் பொறுமையுடன் கலங்கா நெஞ்சம் படைத்தவர். மௌனம் சாதிக்கும் புண்ணிய மூர்த்தியா அழுகிறார்? அவர் அழுவார் என்று நான் கற்பனையில்கூட நினைக்க வில்லை.

“நீங்கள் என் இப்படித் தைரியத்தை இழக்கிறீர்கள்? அழாதீர்கள். தேவநேசனுக்கு ஒன்றும் நிகழாது. அவன் காங்கிரஸ் இயக்கங்களில் ஈடுபடுவதால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்டிருப்பான். வருந்தாதீர்கள். நான்போய் தகவல் அறிந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன்” என்றேன்.

“சந்திரா! அவன் கைதி யானதற்கு நான் வருந்த வில்லை. அதற்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால் இன்று வங்காளத்திலே நடப்பதென்ன? முற்றிலும் புரட்சி வேலைகள் சதிச் செயல்கள்தான். உத்தியோகஸ்தர்களையும் முக்கியமாக ஆங்கிலேயரையும் அவர்களுடைய தாசர்களையும் சுடுவதும், கைக்குண்டு தயார் செய்து எறி

வதும், ரயில்வே தண்டவாளங்களை நகர்த்துவதும், அன்றாடம் நிகழும் சாதாரண சம்பவங்களாகி விட்டன.

அங்கே இரகசியப் போலீசார் பெருகிவிட்டனர். சந்தேகப்படும் நபர்களைக் கைது செய்து அனியாயமாகத் தண்டித்து விட்டனர். இவற்றைப்பற்றி நமது சுதேசிக் கொடியில் எத்தனை தடவைகள் தலையங்கம் எழுதியிருக்கிறோம்? இவற்றிலே சம்பந்தப்பட்டுத் தண்டனை யடைந்தால் அது சாதாரண தண்டனையாக இருக்காது. தேவநேசனுக்கும் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தால் அவன் என்னுடைய பிள்ளையாகத் திரும்பி வருவான் என்பதை எண்ணவேண்டாம். கடவுளருளால் அவனுக்கு ஒன்றும் நேராதிருக்கவேண்டும்" என்றார்.

வயது அதிகமாகிவிட்ட அவர், உருக்கத்தோடு பேசிய வார்த்தைகள் என்னை—என்மனதைப் பெரிதும் இளகச் செய்து விட்டது. மணிவாசகனை, மகனைப்போல நினைத்து, வக்கீல்கள் வந்து கேட்கும் விஷயங்களுக்குத் தாராளமாகப் பதில் கூறி, வேண்டிய உதவிகளைச் செய்யும்படி அவரிடம் கூறி விட்டு, அன்று மாலையிலேயே ரயில் ஏறினேன். மூன்றாம் நாள் ஹெளரா ஸ்டேஷனை அடைந்தேன்.

மங்கையர்க்கரசி ஸ்டேஷனில் வந்து என்னைச் சந்தித்தாள். வதங்கிப்போன ரோஜா மலரைப்போல அவளுடைய முகம் பொலிவிழந்து காணப்பட்டது. கவலையினால் மெலிந்தவள் போல் காணப்பட்டாள். "உன் தோழிகள் எங்கே?" என்று அவளிடம் கேட்டேன்.

அவள் என் கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை. "அப்பா சௌக்கியமா?" என்று கேட்டாள். சௌக்

கியம்தான், ஆனால் தேவநேசனைப்பற்றிதான் மனமுடைந்து வருந்துகிறார்" என்றேன்.

"என்னுடைய தோழிகளால் வந்த வினை யிது. அண்ணன் கைது செய்யப்பட்ட அன்றைய தினமே அவர்களை விட்டொழித்து, எனக்குத் தெரிந்த ஒரு உபாத்தியாயினி வீட்டில் தங்கியிருக்கிறேன்" என்றாள். தேவநேசன் கைதியான விபரம் அனைத்தும் கூறினாள்.

"அன்று உன்னிடம் இதைப்பற்றிப் பலமாக எச்சரித்திருக்கிறேன். எத்தனையோ தடவை சதிச்செயல்களின் பயங்கர முடிவைப்பற்றி உன்னிடம் அடிக்கடி எடுத்துக் கூறினேன். நீ என்னைப் புறக்கணித்தாய்; என் பேச்சை அலக்ஷியம் செய்தாய்; ஆனால் நீ தப்பித்துக்கொண்டு விட்டாய். எனது அருமை நண்பன், தென்னிந்தியத் திலகம் உனது எதிர்கால வாழ்க்கையின் ஆணிவேர்—அவனையல்லவா அனியாயமாகக் காட்டிக்கொடுத்து விட்டாய். உன்னாலல்லவா அவன் சிறைப்பட்டிருக்கிறான். நீ தான் துரோகியாகிவிட்டாய்" என்றேன்.

"ஐயோ! என்னைத் திட்டாதீர்கள். உள்ளம் குமுறி, வேதனை மனதுடன் உங்களைத்தான் எதிர் நோக்கியிருந்தேன். என்னை மன்னித்து விடுங்கள். நிரபராதியான அண்ணனின் உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்" என்றாள்.

"நிரபராதி என்பதை என்னிடம் நீ சொல்ல வேண்டியதில்லை. நீதிபதியல்லவா அதை உணரவேண்டும். பெண்களுக்கு அதிகச் சுதந்திரம் அளிப்பதின் கதி இதுதான்" என்று சொல்லிவிட்டு நடந்தேன்.

கல்கத்தாவிலே பிரபலமான தேசீய பத்திரிகையின் ஆசிரியரைப் போய்ப் பார்த்தேன். தேவநேசன் விடுதலையாவதற்கு வக்கீல்களுடன் விரிவான யோசனைகள் செய்தோம். மறுநாள் நாங்கள் எதிர்பாராத நிலைமையில் தேவநேசனின் வழக்கு விசாரணைக்குவந்து, அவனும் மற்றுமிருவரும் மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள்.

கல்கத்தாவில் ஒரே நாளில் வெகு சீக்கிரமாக ஒருவழக்கு தீர்ப்பளிக்கப்பட்டது இதுதான் முதல் தடவையாம். தேவநேசனின் தண்டனையைக்கேட்டதும், சம்மட்டிகொண்டு அடிப்பது போலிருந்தது எனக்கு. இந்தத் தண்டனையைக் கேள்வியுற்றதும் மங்கையர்க்கரசி திடுக்கிட்டு, மூர்ச்சையுற்றாள்.

எனக்கு என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. என் மூளை குழம்பி, பித்துப்பிடித்துவிடும் போலிருந்தது. மங்கையர்க்கரசியை சென்னையில் கொண்டு வந்து விடுவதற்கு அழைத்துக்கொண்டு வந்தேன். தேவநேசனைப்பற்றிய செய்தி அறிந்ததும் சுந்தரமுதலியார் திகைப்படைந்தார். அவரைத்தேற்றி ஆறுதல் கூறுவது பெரும் பாடாகிவிட்டது.

மேலே நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி சென்னை வக்கீல்களுடன் கலந்து யோசித்தோம். கல்கத்தா நீதிபதிக்கு அப்பீல் செய்துகொள்ள மனுக்கொடுத்தோம். நீதிபதியும் அப்பீலை ஏற்றுக்கொண்டார்.

மணிவாசகன்தான் புனிதவதிக்குக் குற்றம் செய்தவன். தேவநேசன் என்ன செய்தான்? அவனுக்குத் தண்டனை கிடைப்பது நியாயமா? இது அக்ரமமில்லையா? அநியாயமாகவா நிரபராதியைத் தண்டிப்பது?

இப்பொழுது இரண்டு முக்கியமான வேலைகள் எனக்காகக் காத்திருந்தன. ஒன்று மணிவாசகனின் உயிரைக் காப்பாற்றுவது. மற்றொன்று தேவநேசனின் உயிரைக் காப்பற்றுவது. இரண்டும் இந்தியாவின் இரண்டு பெரியநகரங்களாகிய சென்னையிலும், கல்கத்தாவிலும் தான். இரண்டுபேரும் எனது ஆருயிர்த்தோழர்கள்தான். இவ்விருவரையும் நான் இழந்துவிடுவேனுகில் என் உயிர் மட்டும் இவ்வுலகில் நீடித்திருக்காது. ஆணி வேரற்ற மரமாகிவிடுவேன் நான். முதலில் நான் கவனிக்க வேண்டிய காரியம் எது?

மணிவாசகனுடைய வழக்கின் நிலைமையைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். வழக்கு முடிந்து விட்டதாம். தீர்ப்புக் கூறுவதை இரண்டு வாரங்கள் தள்ளிவைத்திருக்கிறார்களாம், அதற்குள் கல்கத்தாபோய் தேவநேசனின் வழக்கைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். வழக்கு இன்னும் இரண்டு தினங்களில் விசாரணைக்கு வரவேண்டியதிருந்தது.

பத்திரிகையின் பொறுப்பை மறுபடியும் சுந்தர முதலியாரிடம் ஒப்படைத்துவிட்டு கல்கத்தா சென்றேன். பணத்தைத் தண்ணீரைப்போல் செலவு செய்தேன். தேவநேசன் உயிர் காப்பாற்றப்பட்டால் போதும் என்ற ஒரே எண்ணம்தான் என் மனதில் நிலைத்து நின்றது. மங்கையர்க்கரசியும் என்னுடன் வந்திருந்தாள். கடிதங்கள், தந்திகள் முதலியன கோர்ட்டிலே சாக்ஷியாகக் காண்பிக்கப்பட்டன.

அண்ணனின் விடுதலைக்காக அரசியும் பாடுபட்டாள். சென்னையில் மணிவாசகனுக்குத் தீர்ப்புக்கூறும் நாளும்

நெருங்கிவிட்டது. கல்கத்தாவிலும் வழக்கு முடியும் தறுவாய்க்கு வந்துவிட்டது. தந்தியும் தபாலும் தினமும் எனக்கு வந்து குவிய ஆரம்பித்தன. எல்லோரும் தேவ நேசனின் நிலைமையை ஆவலுடன் கேட்க ஆரம்பித்து விட்டனர். மணிவாசகனின் வழக்குத் தீர்ப்புக்கு முதல் நாள் தேவநேசனுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது.

"தேவநேசன் செய்தது இராஜத்துவேஷக் குற்றம். இதற்கு மரணதண்டனைதான் நியாயமான தீர்ப்பு. ஆனால் பிரதிவாதியின் வயதை உத்தேசித்து அவனுக்குத் தீவாந்திர சிக்ஷை விதிக்கிறேன்" என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

தேவநேசனைப் பேட்டி கண்டோம். தான் நிச்சயம் விடுதலையாகி விடலாம் என்று நம்பியிருந்தானும். எங்களைக் கண்டதும் திடீரென்று அழுதுவிட்டான். நாங்களும் பொறுக்கமுடியாத துக்கத்தால் கண்ணீர் விட்டோம். பக்கத்திலே நின்றவர்கள் இந்தக் காக்ஷியைக் கண்டு மெய்மறந்து கண்ணீர் விட்டனர். பேட்டிநேரம் முடிந்ததும் தேவநேசன் எங்கேயோ அழைத்துச் செல்லப்பட்டான். எனது இருதயத்தைப் பிளந்து எதையோ எடுத்துச் செல்லுவதுபோலவே எனக்குத் தென்பட்டது. மங்கையர்க்கரசி அந்த இடத்திலேயே "அண்ணு" என்று கதறிக் கீழே விழுந்தாள். அவன் திரும்பிப் பார்த்தான். முகத்திலே கண்ணீர். அவனுல் என்ன செய்யமுடியும்?

அந்தோ பாவம்! கிழமணிதராகிய சுந்தரமுதலியாருக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? சிறை வாசலிலே "அண்ணு" என்று கூச்சலிட்டு மூர்ச்சித்த மங்கையர்க்கரசிக்கு என்ன தைரியம் சொல்லுவது? தேவநேசனுக்குச் சட்டப்படிதான் தண்டனை—ஆனுல் நியாயம் எங்கே?

வேலைகளை முடித்துக்கொண்டு அன்றே சென்னைக்குப் புறப்பட்டோம். மறுநாள் வழியிலே ஒரு ஜங்ஷனில் இறங்கி டிரங் டெலிபோனில் சென்னை வக்கீலிடம் மணிவாசகனின் தீர்ப்புப்பற்றிக் கேட்டேன். அவர் சொன்னார்,. "எங்களால் முடிந்தவரை முயன்றோம். பயனின்றிப் போய்விட்டது. தண்டனையை ஊர்ஜிதப்படுத்தி வழக்கைத் தள்ளிவிட்டார் நீதிபதி."

"படார்" என்று டெலிபோனை வைத்தேன். என்னுடைய வண்டியில் வந்து ஏறுவதற்குள் தலை சுழல ஆரம்பித்துவிட்டது. என்னால் முடிந்தவரை பாடுபட்டேன். மனிதனால் என்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்தேன். இனி அவர்களுடைய விதி என் கையிலில்லை. ஆனால் என் நிலைமை.........? அருமை நண்பர்கள் மூவரையும் பறிகொடுத்தேன். இனி இந்த வாழ்க்கையை எவ்வாறு சந்தோஷத்துடன் கழிக்க முடியும்?

கல்கத்தாவிலிருந்து சுந்தரமுதலியாருக்குக் கடிதம் எழுதவில்லை. எப்படித்தான் எழுதுவேன்? நேரில் சென்று தகவலைக்கூறி அவரைத் தைரியப்படுத்தலாம் என்று முடிவு செய்தேன். ஆனால் சென்னை தினசரிப் பத்திரிகைகள் என்னை முந்திக்கொண்டன.

முதலில் காரியாலயத்திற்குச் சென்றேன். சுந்தர முதலியார் அங்கேயில்லை. "நேற்று முதல் ஜுரம் ஏற்பட்டு படுத்தபடுக்கையாக இருக்கிறார். டாக்டர் வந்து மருந்துகொடுத்திருக்கிறார்". என்றார்கள். மங்கையர்க்கரசியை உடனே வீட்டிற்கு அனுப்பிவைத்தேன்.

அவள் முகத்தைப்பார்த்தாவது சுந்தரமுதலியார் சிறிது ஆறுதலடைய மாட்டாரா என்று நினைத்தேன்.

அன்றைய தபால்களைப் பார்த்துவிட்டு, சுந்தர முதலியாரைப் பார்க்கப் போகலாமென முடிவு செய்தேன். தபால்காரனை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். எத்தனையோ கடிதங்கள், மணிவாசகன், தேவநேசனை விசாரித்தும், அவர்களுக்குக்கிடைத்த தண்டனைகளுக்காக அனுதாபம் தெரிவித்தும் எழுதப்பட்டிருந்தன. கடைசிக் கடிதம் அரசாங்கத்தாரிடமிருந்து வந்திருந்தது. உடைத்துப் பார்த்தேன்.

"உங்கள் சுதேசிக்கொடியில் ஆக்ஷேபகரமான கட்டுரை யொன்று சென்ற வார இதழில் வெளி வந்திருக்கிறது. இது மக்களுக்குப் புரட்சி மனப்பான்மை உண்டாகும் வழியில், அரசாங்கத்திற்கு எதிராக எழுதப் பட்டிருக்கிறது. பொது ஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் எழுதப் பட்டதை உத்தேசித்து உம்மீது சட்டப்படி ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கேட்கிறோம். மறுபடியும் பத்திரிகையை வெளியிட விரும்பினால் ரூபாய் மூவாயிரம் ஜாமீன் கட்டுக," என்று ஆக்ஞை யிடப்பட்டிருந்தது.

ஓனாய் ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து, கடைசியில் மனிதனையே கடிக்க வந்ததாம். அதைப் போல, நண்பர்களுக்குக் கிடைத்த தண்டனையை ரத்து செய்ய உழைக்கச் சென்ற எனக்கும் இக்கதியா? விதி என்னுடைய வாயிலும் மண்ணைத் தள்ள ஆரம்பித்து விட்டது. ஒரு குரங்கிற்கு பேய் பிடித்து, பயித்தியம் பிடித்து,

தேளும் கொட்டி விட்டால் அதன் நிலைமை என்ன? அதற்கு மேல் என் நிலைமை ஆகிவிட்டது. ஏற்கனவே பல கஷ்டங்களால் நொந்து போயிருந்த என் இருதயப் புண்ணிலிருந்து மள மள வென்று இரத்தம் பெருகுவது போலிருந்தது. அரசாங்கத்தின் இந்த உத்தரவையும் சுந்தர முதலியார் பார்த்து விட்டால் உடனே அவருடைய ஆத்மா பிரிந்து விடலாமென பயப்பட்டேன்.

தேவநேசன் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டான். ஒரு நாள் காலை அதிகாரிகளின் உத்தரவுடன் அவனைக் கப்பலடியிலே பேட்டி கண்டேன். அன்றுதான் தேவநேசன் அந்தமானுக்குக் கப்பலேற்றப் படுகிறான். அன்று தான் காலையில் மணிவாசகனின் மரண தண்டனையை நிறைவேற்றினார்கள். சுதேசிக் கொடிக்கு ரூபாய் மூவாயிரம் ஜாமீனாகக் கட்ட வேண்டிய கடைசித் தவணைநாளும் அன்றுதான்.

தேவநேசன் என்னைக் கண்டதும் இன்று அழவில்லை. முகம் சாந்தி பெற்று மலர்ச்சியுடன் காணப்பட்டது. தந்தையின் உடல் நிலை கேட்டதும் சிறிது வருந்தினான். பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி என்னைக் கேட்டுக் கொண்டான். அவன் மேலும் கூறினான்:—

"சந்திரா! அப்பாவுக்கு நாம் இரு குழந்தைகள். நான் போனால் நீ இருக்கிறாய். ஒரு குறையுமின்றிப் பார்த்துக் கொள்ளுவாய். அதற்காக நான் கவலைப்படவில்லை. மங்கையர்க்கரசியைப் பற்றியும் நான் கவலை கொள்ளவில்லை. அவளை நீயே மணந்து கொள்ளுவாய் என்பதும் எனக்குத் தெரியும். பத்திரிகையை எவ்வளவு இடுக்கண் வந்த காலத்திலும் நிறுத்தி விடாமல் உனது

பாதையிலேயே—லக்ஷியத்திலேயே—கொள்கையைக் காப்பாற்ற நடத்து. எனது தண்டனையைப்பற்றி நான் கவலைப் படவில்லை. நமது நாடு சுதந்திரம் பெற்று விட்டது என்ற ஒரே சொல்லைத்தான் கேட்க ஆசைப்படுகிறேன். இருந்த வரை நாட்டுக்காக உழைத்தேன். இனி என்னுடைய சேவை நாட்டிற்குத் தேவையில்லை போலும். போகிறேன். நம்மைப் போன்ற வாலிபர் அனைவருக்கும் வழிகாட்டியாக உழைத்தேன். சட்டமும், ஆட்சியும் இம்மாதிரி இருக்கும் வரை ஒவ்வொரு வீரனும் அதிகமாகத் தியாகம் செய்ய வேண்டும். எழுது! உன் பத்திரிகையில் தேசிய பக்தியை அதிகரிக்கச் செய்யும் பல விஷயங்களையும் எழுது! எழுத்தாளனால் உலகத்தையே திருப்பிவிட முடியும். கட்டி ஆள முடியும். துணிச்சலுடன் தீரமாக எழுது. எதை மறந்தாலும் சுதந்திரத்தை மறக்காதே,'' என்றான்.

கடைசியிலும் கண்ணீர் வடித்தானில்லை. அவன் மனம் இப்பொழுது எது வந்தாலும் தாங்கும் நிலைமையில் பக்குவப்பட்டு விட்டது. மணிவாசகனின் தண்டனையைக் கேட்டுத்தான் வருந்தினான். உண்மையாக நடந்து கொள்பவர்கள் இந்த அரசாங்கத்தின் நிழலிலே வாழ முடியாது என்றான்.

நேரமாகிவிடவே கண்ணீர் வழியும் முகத்துடன் அவனைப் பிரிந்தேன். எனது உயிரும் நினைவும் அந்தமான் செல்லும் கப்பலிலே பிரயாணம் செய்யும் தேவநேசனிடமே நிலைபெற்று விட்டன. உயிரற்ற உடல் போல நான் மட்டும் காரியாலயத்திலே உட்கார்ந்திருக்கிறேன்.

ஒவ்வொருவருடைய லக்ஷியமும் வெவ்வேறு போக்கில் சென்று ஒவ்வொன்றும் முரண்பாடாகச் சந்தித்து

மோதிக்கொண்டன. முடிவில் நண்பர்கள் என்ன பலனைக் கண்டனர்? நான் சொல்லுவது என்ன தெரியுமா? யார் என்ன செய்த போதிலும் நாம் அடிமைகள் தான் என்பதை மறந்து விடமுடியாது. நாடு அன்னியரால் ஆளப்படுகிறது; அவர்களுடைய சட்டத்தை மீறினல் நமது கதி அதோகதிதான். பின்பு நாம் எப்படிச் சுதந்திரமடைவது?

தேசத் தலைவர்கள் அரசை ஏற்று நடத்தினல்தான் மக்கள் துயரம் நீங்கும். நாட்டிலே செழிப்பு உண்டாகும். வறுமை மறையும்; தொழிற் பெருக்கம் ஏற்படும். நாடு உன்னத நிலையடையும். இதை வற்புறுத்திதான் சுதேசிக் கொடியில் இனி கட்டுரைகள் எழுதப்போகிறேன்.

என் மனம் சிந்தனையில் சென்றது. தனியாக அமர்ந்திருக்கும் பொழுது நிசப்தமான மோன நிலையில் சிந்தனை பலவாருகச் சென்றது. சிந்தனையின் இமைப்பொழுது அலை என்பது ஒரு மின்னல்தான். அந்த மின்னலால் மேலும் இருள் அதிகமாகத் தெரிகிறதேயொழிய, இருள் நீங்குவதில்லை. அதேமாதிரிதான் சிந்தனையிலும் ஒரு புதிய வழி தோன்றினல், அதனல் பிரச்னைகள் மிகவும் பெரியதாகி விடுகின்றன.

மூன்று ஆண்டுகளுக்குள் வாழ்க்கையிலே எவ்வளவு மாறுதல்கள்? அதுவும் என்னைச் சுற்றி, என்னையும் சம்பந்தப்படுத்தி, நண்பர்களுக் குள்ளாகவே நடந்துவிட்டது சம்பவங்கள்.

நிமிர்ந்து பார்த்தேன், சுவற்றிலே ஒரு புகைப்படம். அதிலே நால்வர் உட்கார்ந்திருந்தனர். ஒருவன் மணிவாசகன், மற்ருருவன் தேவநேசன், மூன்ருவது ஆள் மாணிக்கம், நான்காவது ஆள் நான் தான். பள்ளியில்

வாசித்த பொழுது எடுத்த படம் இது. அன்றும்-இன்றும் எவ்வளவு வித்தியாசம் ? வாழ்க்கையின் போக்கு மலையில் ஏறி பள்ளத்தில் இறங்கி மோசமான நிலையிலே சொல்லுகிறது. அதன் போக்கை யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும் ?

மாணிக்கத்தின் லக்ஷியம் மற்ற மூவருக்கும் பிடிக்கவில்லை. மணிவாசகனின் லக்ஷியமோ தேவநேசனுக்குப் பிடித்திருந்தாலும் இன்றைய அடிமை நாட்டிற்கு இது தேவையில்லை என்கிறான். தேவநேசனின் லக்ஷியம் எல்லோருக்கும் பிடித்திருந்தாலும் அது அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் அது அன்னியர்களால் ஆளப்படுவதுதானே! எனது லக்ஷியமோ சிறிது வேகமாகச் சென்றாலும் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்கின்றனர். அவர்களை அனுசரித்தே நாங்கள் பத்திரிகையை நடத்த வேண்டியதிருக்கிறது.

ஆயினும் லக்ஷியப் பாதை அப்படியே யிருக்கிறது. நம் சந்ததியினர் அதிலே நடக்கலாம். ஒருவர் தவறி விட்டாலும் மற்றவர் அதிலே நடந்து லக்ஷியத்தை அடைந்து விடலாம். அந்த நாள் எப்பொழுது வரும் ?



# "வாழ்க்கைத் தோணி"யைப் பற்றிய மதிப்புரைகள்

---

**THE HINDU:** This Tamil Novel follows a new technique in story-telling:

**தினசரி:** காதல் வாழ்க்கைக்கு இன்பம் அளிக்கக் கூடியது தான். ஆனால் அதன் சுகத்தை அனுபவிக்க எல்லோரும் கொடுத்து வைப்பதில்லை. ஆசிரியர், கதையைப் பாத்திரங்கள் வாயிலாகச் சொல்லிக்கொண்டு போகிறார். சமூகப் புண்களை ஆபரேஷன் செய்யவேண்டியது அவசியம் என்றும் அதை இக்கதாசிரியர் அஞ்சாமல் செய்கிறார் என்றும் ஸ்ரீ வ. ரா. முகவுரையில் கூறுகிறார்.

**தினமணி:** கவர்ச்சியைக் காதலென்று நினைத்து, தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்வதால் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை இப்புத்தகம் சித்தரிக்கிறது. விறு விறுப்பான நடை. கதாபாத்திரங்களின் கொந்தளிக்கும் உணர்ச்சிகளை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

**வீரகேசரி (கொழும்பு):** கதையில் சம்பவங்கள் குறைவுதான். ஆனால் சுவாரஸ்யமான பின்னல். ஒவ்வொரு கதா பாத்திரமும் கலையழகோடு சம்பவங்களை நமக்கு வர்ணித்துக் காட்டுகிறார்கள்: கதா பாத்திரங்களைக் கொண்டே சம்பவங்களைச் சொல்லச் செய்திருக்கும் முறையை ஆசிரியர், கதையின் தொடர்பும், ருசிகரமும் கெடாமல் கையாண்டிருக்கிறார். வாழ்க்கையில் குறுக்கிடும் சிக்கல்களை, மனோதத்துவ நுட்பமோடு அழகிய தமிழ் நடையில் சித்தரிக்கும் கதைதான் வாழ்க்கைத் தோணி.

# மதிப்புரை

**ஆனந்த விகடன்:** "வாழ்க்கைத்தோணி" என்பது உயர்ந்த லட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அழகிய காதல் சித்திரம். இதில் வரும் கதா பாத்திரங்கள் தங்கள் வரலாறுகளைத் தாங்களே சொல்லுகிறார்கள். இந்த முறை நூதனமாகவும், மனதைக் கவர்வதாகவும் இருக்கிறது.

**கல்கி:** உண்மை இனிக்குமா? இனிக்காது, கசக்கும். இதற்காகவே சில எழுத்தாளர்கள் தங்கள் கற்பனையிலும் கூடக் கசக்கும் உண்மையைச் சொல்ல அஞ்சுகிறார்கள். ஆசிரியர் ஸ்ரீ க. நாராயணன் அப்படி அஞ்சவில்லை. வாழ்க்கையில் திடசித்தமில்லாதவர்கள் படும்பாட்டை, உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டியிருக்கிறார் உண்மை கசக்குமென்றாலும், ஆசிரியரின் தென்றல் போன்ற ஜிலுஜிலுப்பான நடையிலே இனிக்கத்தான் இனிக்கிறது.

**நவயுவன்:** கதா பாத்திரங்கள் வெளியிடும் வாழ்க்கை மர்மங்களைவிட பாஷை விறுவிறுப்பாக இருக்கிறது.

**கிராம ஊழியன்:** சோர்வு தட்டாமல் சுவாரஸ்யமாகச் செல்லுகிறது கதை. ஆசிரியரின் தமிழ்நடை இனியது, பொழுது போக்குக்கு ஏற்ற இனிய நவீனம்.

**பிரசண்ட விகடன்:** மனித வாழ்க்கை என்ற தோணியானது எவ்வளவு கொந்தளிப்பான கடலிலும், பயங்கரமான புயலிலும் தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தச்சிறு நவீனம் ஒரு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கிறது. காதலின் பாதிப்பால் மனித உள்ளத்தில் வீசிச்சுழலும் சூறாவளிகளை ஆசிரியர் நன்றாகச் சித்தரிக்கிறார். நாவலின் பின்பகுதி மிகவும் நன்றாக இருக்கிறது.

**கலைவாணி:** இனிய நடை. விறு விறுப்புடன் அமைந்திருக்கிறது. கதை சொல்லும் பாணி நன்றாக இருக்கிறது.

# மதிப்புரை

**வீர சக்தி:** மிகமிகக் கவர்ச்சியும், விறு விறுப்பும் நிறைந்த எழுத்து நடை. மூலக் கருத்தும், சம்பவ நிகழ்ச்சிகளின் கட்டுக்கோப்பும் பாராட்டத் தக்கதா[illegible] இருக்கின்றன.

**அணிகலம்:** புதிய போக்கில், சீர்திருத்த நோக்கம் கொண்டு எழுதப்பட்டது இச்சிறு நாவல்.

**தொழிலாளர் உலகம்:** ஆசிரியர் நவீனவாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். பாத்திரங்கள் தம் சரிதைகளைத் தொடர்ச்சியாகச் சொல்லுவது கதையின் போக்கு சிதைவுபடாமல் இருக்கிறது. பின்பு என்ன நடக்கப்போகிறது என்ற ஆவலில் புத்தகத்தை ஒரே மூச்சில் படித்து முடித்துவிடத் தூண்டுகிறது.

**பிலிம் ஸ்டார்:** நாம் அன்றாடம் பார்த்துப் பழக்கப்பட்ட சாமான்ய கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டு, வாழ்க்கையின் ஆசாபாசங்களை நன்கு சித்தரித்து, நமக்கின்பமும் உணர்ச்சியும் ஒருங்கே ஏற்படும்படி இந்திரஜால வித்தை செய்திருக்கிறார், இதன் ஆசிரியர் என்று சொன்னால் மிகையாகாது.

**வசந்தம்:** கதாபாத்திரங்களே கதை சொல்லும் முறையில் எழுதப்பட்டிருக்கும் சுவையான ஒருவாழ்க்கைச் சித்திரம்.

**கலா மோகினி:** கதாபாத்திரங்கள் தங்கள் கதைகளை மற்றவர்களுக்குச் சொல்லும் பாஷையில்தான் என்ன விறு விறுப்பு! அடுத்தபடியாக அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிய ஒரு ஆவலை எழுப்பிக் கொண்டே செல்கிறார் ஆசிரியர்.

---

ரேடியோ நிலையங்களும் பாராட்டியுள்ளன.